S. Arumugam

29/7/49

Professor of Tamil, Teache[rs']
College, Saida[pet]

அன்புள்ள ஐயா,

வணக்கம்.

சென்னை சர்வகலாசா[லை]
இண்டர்மீடியட் வகுப்பு உரைநடை
பாடத் தேர்வுக்காக இதனைத் தங்கட்
அனுப்பியுள்ளோம். இதன் விலையை
மேற்போகாது என்றளவு குறைத்து
விற்கவும் ஒப்புக் கொள்ளுகின்றே

அன்பு,

இராம. அருணாசலம்

27.7.49.

அன்பளிப்பு

சென்னை-20.

# கட்ட பொம்மு

தி. நா. சுப்பிரமணியன்.

நவயுகப் பிரசுராலயம்
காரைக்குடி :: சென்னை.

முதற் பதிப்பு 1940
இரண்டாம் பதிப்பு ஜூலை 1947

விலை ரூ. 2—[illegible]—0

உரிமை பதிவு

Printed at the Vinothan Press G. T. Madras,
for Navayuga Prachuralayam, M. S. 68-R.

# பதிப்புரை

இன்று வெளியேற எண்ணியுள்ள ஆங்கிலேயரை, அன்றே வெளியேற்றப் போராடிய வீரத் தமிழனின் கதையே இது.

தமிழ்நாடு உள்ளளவும், தமிழர் உள்ளளவும், சரித்திரம் உள்ளளவும், நாட்டின் சுதந்தரத்திற்காகப் போராடிய இவ்வீரனின் கதை மங்காது, மறையாது.

1940-ல் முதற் பதிப்பாக வந்த இப்புத்தகம் இப்பொழுது இரண்டாம் பதிப்பாக வெளிவருகிறது. இவ்விரண்டாம் பதிப்புக்கும் வரவேற்பு இருக்கும் என்பது எங்கள் துணிபு.

சரித்திர நூல்கள் பலவற்றைத் தமிழகத்துக்குத் தந்துள்ள ஆசிரியர் தி. நா. சுப்பிரமணியன் அவர்களைத் தமிழ் மக்கள் நன்கறிவார்கள். இதை மீண்டும் வெளியிட உரிமை தந்த அவர்களுக்கு எங்கள் நன்றி.

சென்னை,
24—7—47.

டி. ஆர். அருணாசலம்.

# முகவுரை

சித்திரை மாதம் ஒரு நாள் நள்ளிரவு; நானும் என் உறவினர் ஒருவரும் கட்டை வண்டியில் பிரயாணம் செய்துகொண்டிருந்தோம். பெரிய வண்டியானதால் நாங்கள் இருவரும் சுருண்டு படுத்துத் தூங்கிக்கொண் டிருந்தோம். பொழுது இரண்டு மணி இருக்கும். நான் விழித்துக்கொண்டேன். நிலா பால் போலக் காய்ந்து கொண்டிருந்தது. மாடுகள் மெதுவாகப் போய்க்கொண் டிருந்தன. வண்டிக்காரன் தலைக் கயிற்றைக் கையில் பிடித்து உட்கார்ந்துகொண்டு உல்லாசமாகப் பாடிக் கொண்டிருந்தான். தூக்கம வராமல் இருப்பதற்காகவே அவ்விதம் பாடிவந்தான் போலும்.

நான் படுத்தபடியே பாட்டைக் கேட்டுக்கொண் டிருந்தேன். சாதாரண நாடோடிப் பாட்டு, தேசிங்கு ராஜன் பாட்டைப் போலவே இருந்தது. ஆனல் காதுக்கு இனிமையாகவும், சொல்லமைப்பு அழகாகவும் இருந்தது.

சிறிது நேரத்திற்கெல்லாம் என் உறவினரும் விழித்துக்கொண்டுவிட்டார். அதை அறிந்த வண்டிக்கா ரன் பாட்டை நிறுத்தினன். அவனைத் தொடர்ந்து மேலே பாடச் சொல்லி நான் எவ்வளவோ கேட்டும் அவன் அதனைப் பாடவில்லை.

மறுநாள் பொழுது விடிந்தவுடன், ராத்திரியில் கேட்ட பாட்டைப் பற்றி விசாரித்தேன். அப்பொழுது தான் உண்மை தெரிந்தது. அது பாஞ்சாலங் குறிச்சியினின்றும் ஆண்டுவந்த கட்டபொம்முவைப் பற்றிப் பாடப்பட்ட சிந்து என்று அறிந்துகொண்டேன்.

அந்தப் பாடலைப் பாடக் கூடாதாம்; கேட்டால் போலீசார் பிடித்துக்கொண்டு போய்விடுவார்களாம்.

என் உறவினர் அரசாங்கத்தில் பெரிய உத்தியோகம் வகித்திருந்தார். அதனை வண்டிக்காரன் நன்கு அறிவான். அவர் அடிக்கடி வெளியிடங்களுக்குப் பிரயாணம் செய்யும் பொழுது அவன் வண்டி ஓட்டிப் போவது வழக்கம்.

அதனாலேதான் அவன் மேலே பாடவில்லை.

o o o

மேலே குறிப்பிட்ட சம்பவம் 1922–ஆம் வருஷத்தில் திருநெல்வேலி ஜில்லாவில் நடந்தது. அதற்குப் பிறகு அந்தச் சீமையில் நான் தங்கியிருந்த இரண்டு மாத காலத்தையும் கட்டபொம்முவைப் பற்றிய வரலாற்றையும், அந்தப் பாட்டையும் கேட்பதிலேயே செல விட்டேன்.

கர்ணபரம்பரையாகக் கூறப்பட்டு வந்தவற்றைக் கேட்டேன். சமீபகால நிகழ்ச்சியே யாயினும், உண்மைச் சரித்திரத்திற்கு வேண்டிய ஆதாரங்கள் கிடைக்க வில்லை. தங்களுக்குத் தெரிந்தவற்றைக் கூறுவதற்கே பயப்பட்டார் பலர்.

அப்பால் பதினைந்து வருஷங்கள் சென்றுவிட்டன. இடையில் சரித்திர சம்பந்தமான ஆராய்ச்சிகள் செய்து வந்த பொழுது நான் வாசிக்க நேரிட்ட பல புத்தகங்களினின்றும் பாஞ்சாலங் குறிச்சியைப்பற்றிக் கிடைக்கக் கூடிய விவரங்களைக் கவனித்து வைத்திருந்தேன்.

சுமார் இருபது வருஷ காலமாக நான் சரித்திர சம்பந்தமான ஆராய்ச்சி செய்து கண்ட முடிவுகளைக் கட்டுரைகளாகவும், கதைகளாகவும், தனிப் புத்தகங்களாகவும் வெளியிடுவதென்று சமீபத்தில் எண்ணிய பொழுது கட்டபொம்முவைப்பற்றிய உண்மைச் சரித்திரம் ஒன்றையும்

எழுதவேண்டும் என்று அன்பர் சிலர் கேட்டுக் கொண்டனர்.

சென்னைச் சர்வகலாசாலைத் தமிழாராய்ச்சித் துறைத் தலைவர் (அப்பொழுது தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியராக இருந்த) ராவ்ஸாகிப் ஸ்ரீ. எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் தம்மிடம் இருந்த 'கலியுகப் பெருங் காவியம்' என்னும் நூலைக் கொடுத்து உதவினார்கள். தனிப் புத்தகமாக அவர்கள் வெளியிட இருந்த இந்நூலின் மூலத்தை எனக்கு உதவியது அவர்கள் பெருந்தன்மையை நன்கு விளக்குகின்றது.

கட்டபொம்முவைப் பற்றிக் கர்ணபரம்பரையாகக் கேட்ட செய்திகளுள் சிலவற்றை நான் இவ்விடம் குறிக்கவில்லை. அவற்றை உண்மையென்று நிரூபிப்ப தற்குப் போதிய ஆதாரங்கள் எனக்குக் கிடையாமையே இதற்குக் காரணமாகும். அவ்வித ஆதாரங்கள் இல்லையென்று கூற முடியாது. அவ்வமிசத்தினரிடமோ வேறு வெளியாரிடமோ இருக்கக்கூடும்.

எனக்குக் கிட்டாத ஆதாரங்களை வைத்திருப்பவர்களும், இந்நூலில் காணப்படாத செய்திகளை அறிந்தவர்களும், அவற்றை எனக்கு எடுத்துக் காட்டுவார்களாயின் அவற்றுள் உண்மையென்று தெளியக்கூடிய வற்றை இந்நூலின் இரண்டாம் பதிப்பில் சேர்த்துத் திருத்தி அச்சிட முயல்வேன். நாட்டின் உண்மைச் சரித்திரம் வெளிவர வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இந்த நூல் எழுதப்பட்டிருப்பதால், இவ்வேண்டுகோள் நிச்சயம் பயன்பெறும் என்ற நம்பிக்கை எனக்குப் பூரணமாக இருக்கின்றது.

இந்நூலை நான் எழுதிவந்த பொழுதும், இது அச்சிலிருந்த காலத்திலும், பலர் எனக்கு உற்சாக மூட்டியதுடன், வேறு அரிய உதவிகளையும் செய்திருக்கின்றனர். அவர்

கள் எல்லோருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்நூலை வெளியிடும் நலயுகப் பிரசுராலயத்தார் எடுத்துக்கொண்ட முயற்சியாலேதான் இது மிக்க விரைவினில் இப்பொழுது வெளியாகின்றது. அவர்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள சித்திரங்கள் எல்லாம் பழமையானவை. இப்பொழுது சித்திரகாரர்கள் கற்பனை செய்து எழுதியவையல்ல; கடைசி முறையாகக் கும்பினியாருடன் ஊமைத் துரை நடத்திய போரில் கும்பினித் தளகர்த்தராக இருந்த வெல்ஷ் துரை நேரில் கண்டவாறு எழுதியவையாகும். இவை அவர் வெளியிட்ட போர்க் குறிப்புகளிலிருந்து எடுக்கப்பட்டவை.

கடைசியாகக் கும்பினியாருடன் ஊமைத் துரை நடத்திய போரைப்பற்றி அதிகமாக நான் இந்தப் புத்தகத்தில் கூறவில்லை. பாஞ்சாலங் குறிச்சியாருக்கு உற்ற துணைவராக இருந்து அவர்களுடன் உயிர் துறந்த மருது சகோதரர்களே அந்தப் போரை நடத்தியவர்களாதலின், இவ்விவரங்களை அவர்கள் சரித்திரத்தில் விவரமாக எழுதியிருக்கிறேன். 'மருத பாண்டியர்' என்னும் அந்தப் புத்தகம் விரைவில் வெளிவரும்.

அதே போலக் கும்பினியாருக்கு முதலில் உதவியாக இருந்து, பின்பு, விரோதியாக மாறிய 'கான்சாயபு கும்மந்தான்' ஆகிய யூசப்கான் சரித்திரமும் தனிப் புத்தகமாக வெளிவரும்.

தி. நா. சுப்பிரமணியன்.

# இரண்டாம் பதிப்பின் முன்னுரை

மேலே யுள்ளது முதற் பதிப்பின் முகவுரை; 1940-ஆம் வருஷத்தில் எழுதியது. அதற்குப் பிறகு ஏழு வருஷ காலம் ஓடிவிட்டது.

இந்த இடைப்பட்ட காலத்திலே உலக மகா யுத்தத்தினல் புத்தக வெளியீட்டுக்கு ஏற்பட்ட சிரமங்களை யாவரும் அறிவர். அதனுல் நான் விரும்பிய வண்ணம் 'மருது பாண்டியர்' முதலில் நூல்களை வெளியிட முடியவில்லை. இப்போது யுத்தமும் முடிந்தது. கட்டபொம்மு எந்த லக்ஷ்யத்தை நாடிப் போரிட்டானே, அந்த லக்ஷ்யமான தேச விடுதலையும் நமக்குக் கிட்டி விட்டது. நாட்டிலே புது யுகம் ஆரம்ப மாகிறது.

இந்தப் புது யுகத்திலாவது அந்த நூல்கள் வெளியாவதற்கு ஆண்டவன் அருள் புரிய வேண்டும்.

—தி. நா. சு.

# இந்நூல் எழுதுவதற்கு
# உதவியாக இருந்த புத்தகங்கள்

---

1. "Selections from the records of the Madras Government—some account of the Panjalamcourchy Polegar and the State of Tinnevelly previous to Major Bannerman's Expedition in 1798": Compiled by the Rev. J. F. Kearns; Palamcottah, 1873.

2. "A Political and General History of the District of Tinnevelly in the Presidency of Madras": by the Rt. Rev. R. Caldwell; Madras, 1881.

3. "Narrative of the last outbreak and final subjugation of the Southern Poligars": by George A. Hughes: published in the Madras Journal of Literature and Science; Vol. xiii, 1844.

4. "Military Reminiscences" (Extracted from a Journal of nearly Forty Years' active service in the East Indies) by Colonel James Welsh; London, *1830* (*2* Vols.)

5. "A History of the Military Transactions of the English Nation in Industan" by Robert Orme: 4th Edn. London, *1803* (*2* Vols.)

6. "Historical Sketches of the South of India" by Lieut. Col. Mark Wilks; London. *1810-17*. (*3* Vols.)

7. "A View of the English Interests in India" (in *2* letters) by William Fullarton. *2*nd Edn. London, *1788*.

8. "Castes and Tribes of Southern India" by Edgar Thurstan assisted by K. Rangachariar; Madras, *1909*.

9. "Yusuf Khan, the Rebel Commandant" by S. C. Hill: London, *1914*.

10. "Madras District Gazetteers—Tinnevelly": by H. R. Pate; (Vol. I), Madras, *1917*.

11. "The Travancore State Manual" by V. Nagam Aiya; Trivandrum, *1906* (*3* Vols.)

12. "A General History of the Pudukkottai State" by S. Radhakrishna Aiyar; Pudukkottai, *1916*.

13. "Mysore Gazetteer" Compiled for Government; Edited by C. Hayavadana Rao (New Edition); Bangalore, *1930*.

14. "History of the Nayaks of Madura" (Madras University Historical Series, II): by R. Sathyanatha Aiyar; Madras, *1924*.

15. "Cambridge History of India", Vol. **V**. British India: Edited by H. H. Dodwell. Cambridge, *1929*.

16. "Madura Country" by Nelson.

17. "Manual of Ramnad Samasthanam" by T. Rajaram Row, Madura, *1891*.

18. "History of the French in India"; by Malleson.

19. எட்டயபுரம் எஸ். குருகுஹதாஸப்பிள்ளை எழுதிய திருநெல்வேலிச் சீமைச் சரித்திரம் (பாஞ்சாலங் குறிச்சிச் சண்டைகளுள்பட) சென்னை, 1931.

20. கவிராஜ பண்டிதர் ஜெகவீர பாண்டியனார் எழுதிய பாஞ்சாலங் குறிச்சி வீர சரித்திரம், மதுரை 1939.

21. எஸ். தேவதாஸ் நாயுடு எழுதிய பாஞ்சாலங்குறிச்சி சரித்திரம், கோவில்பட்டி, 1928.

22. கலியுகப் பெருங் காவியம் (அச்சில் வாராதது.)

இவை தவிர, தமிழ்நாட்டில் வழங்கிவரும் சில்லறைப் பாடல்கள் முதலியன.

# பாஞ்சாலங் குறிச்சியார் வமிசாவளி

- (1) வீரபாண்டிய நாயக்கர் 1709—1736
  - (2) பொல்லாப் பாண்டிய நாயக்கர் 1736—1760
    - (3) ஜகவீர கட்டபொம்மு நாயக்கர் 1760—1791
      - (4) ஜகவீர பாண்டிய கட்டபொம்மு நாயக்கர் (கறுத்தையா) 1791-1799
      - (5) குமாரசாமி நாயக்கர் (சிவத்தையா) 1799-1801
      - துரைசிங்கம் சுப்பா நாயக்கர் (ஊமைத் துரை)
      - ஈசுவர வடிவு அம்மாள்
      - துரைக்கண்ணு அம்மாள்
    - சின்னபொம்மு நாயக்கர்
  - சின்ன பொம்மு நாயக்கர்
    - தளவாய் குமாரசாமி நாயக்கர்
      - சிறு குழந்தை (பெண்)
  - பூஞ்சனம்மாள்
    - சுப்பிரமணிய நாயக்கர்
      - நான்கு ஆண்களும் ஒரு பெண்ணும்

## குறிப்பு :

இந்தக் கொடிவழி 9-6-1798-ஆம் தேதி யன்று கலெக்டர் டபிள்யூ. ஸி. ஜாக்ஸன் தயாரித்து அனுப்பியதினின்றும் எடுக்கப்பட்டது. அக்காலத்தில் குமாரசாமி நாயக்கருக்கு 26 வயது என்றும், சுப்பா நாயக்கருக்கு 17 வயது என்றும், ஈசுவர வடிவுக்கு 13 வயது என்றும், துரைக்கண்ணுக்கு 10 வயது என்றும், குறிக்கப்பட்டுள்ளது.

ஜகவீர பாண்டிய கட்டபொம்முவான கறுத்தையாவுக்கு அவர் சிறிய தகப்பன் சின்ன பொம்மு நாயக்கர் முதலில் மந்திரியாக இருந்தான். அவன் தன் அண்ணனை கட்டபொம்முவுக்கும் முதலில் மந்திரியாக இருந்திருக்கிறான்; நைஷ்டிக பிரம்மசாரி என்று தெரிகிறது; சிவபக்தன்; நல்ல கல்விமான்; கும்பினியாரிடம் மிகுந்த அன்பும் நெருங்கிய உறவும் கொண்டவன். அவன் கொள்கையில் வெறுப்பு அடைந்த கறுத்தையா அவனை நீக்கிவிட்டார். அப்பொழுது அவனுக்கு வயது 42 என்று கூறுவர். அவனுக்குப் பிறகு கி. பி. 1797-ஆம் ஆண்டிலிருந்து பூஞ்சனம்மாள் மகனை சுப்பிரமணிய நாயக்கர் மூத்த பிள்ளை குமாரசாமி நாயக்கர் மந்திரியாக இருந்தான். குமாரசாமி அவனுக்கு முன் மந்திரியாக இருந்த சின்னபொம்முவைப் போன்ற பெருந்தன்மை இல்லாதவன் என்றும், மூர்க்க சுபாவம் உள்ள கொடியவன் என்றும் சொல்லப்பட்டுள்ளது; அவன் கும்பினியாரிடம் விரோத பாவம் காட்டிவந்தான்.

இந்தச் சுப்பிரமணிய நாயக்கரின் பெண் ஒருத்தி கறுத்தையாவுக்கு மணம் செய்விக்கப்பட்டிருந்தாள்; அவர்களுக்குச் சந்ததி இல்லை. இவனுடைய இரண்டாம் பிள்ளைக்கு ஈசுவர வடிவு அம்மாளும் மைத்துனன் ஒருவனுக்குத் துரைக்கண்ணு அம்மாளும் விவாகம் செய்யப்பட்டிருந்தார்கள். இவன் 1797-ஆம் வருஷத்தில் இடியுண்டு இறந்துவிட்டான் என்றும் கூறுவர்.

பழைய தஸ்தவேஜிகளிலும், புத்தகங்களிலும், ஊமைத் துரை, சிவத்தையா ஆகிய இருவருடைய வரிசைக் கிரமம் முதலியன முறை பிறழ்ந்து காணப்படுகின்றன.

# பொருளடக்கம்


| எண் | அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பூர்வாங்கம் | ... | 13 |
| 2. | தென்னாட்டுப் பாளையக்காரர்கள் | ... | 18 |
| 3. | பாஞ்சாலங் குறிச்சியாரின் பூர்வோத்தரம் | | 25 |
| 4. | ராஜாங்க மாறுதல்கள் | ... | 32 |
| 5. | முதல் படையெடுப்பு | ... | 38 |
| 6. | குத்தகைத் தகராறு | ... | 47 |
| 7. | யூசப்கானும் பாளையப்பட்டுக்களும் | ... | 55 |
| 8. | உலாந்தாக்காரர் உறவு | ... | 67 |
| 9. | அஞ்ஞாத வாசம் | ... | 72 |
| 10. | புல்லர்ட்டன் படையெடுப்பு | ... | 78 |
| 11. | கும்பினியார் நாடு கொண்டது | ... | 90 |
| 12. | ஜாக்ஸன் சூழ்ச்சி | ... | 97 |
| 13. | ராமநாதபுரம் பேட்டி | ... | 107 |
| 14. | யுத்த முஸ்தீப்பு | ... | 123 |
| 15. | பானர்மன் படையெடுப்பு | ... | 135 |
| 16. | விசாரணையும் தீர்ப்பும் | ... | 149 |
| 17. | ஊமைத் துரை சிறை மீண்டது | ... | 166 |
| 18. | மெக்காலே படையெடுப்பு | ... | 174 |
| 19. | ஆக்னியூ படையெடுப்பு | ... | 181 |
| 20. | ஊமைத் துரையின் முடிவு | ... | 191 |
| 21. | வழிபாடு | ... | 199 |

# அத்தியாயம் 1

# பூர்வாங்கம்

## 'பருந்து பறக்காத பாஞ்சால நாடு'

கோழிச் சண்டை வெகு மும்முரமாக நடக்கின்றது. அதைப் பார்க்க ஒரு பெருங்கூட்டம்; அங்கே கூடியிருப்பவர்களிடையே ஒரு தனி வேகம். அதனை நாம் விவரிக்க இயலாது. அதைப்போன்ற வேகத்தைக குதிரைப் பந்தய மேடை போன்ற இடங்களில்தான் காணலாம். 'அடித்து விட்டது!', 'ஜயித்தது!' என்றெல்லாம் கூச்சல் போடு வார்கள் வேடிக்கை பார்க்கக் கூடியிருப்பவர்கள்.

இந்தக் கோழிச் சண்டையில் ஒரு விநோதம். சண்டை செய்யும் இரண்டு சேவல்களில் ஒன்று நன்கு பயிலுவிக்கப்பட்டது; உருவமும் அதற்குத் தகுந்தது பல சண்டைகள் போட்டுப் பழக்கப்பட்டது. மற்றதோ, சப்பை; அரங்கத்துக்கும் புதிது. சரியான ஜோடியன்று. இதுதான் அந்தச் சண்டைக்கு முக்கியத்தை அளிப்பது. அங்கே இருப்பவர்கள் எல்லோரும், சப்பைக் கோழிதான் கடைசியில் ஜயிக்கும் என்று ஒரே முகமாகக் கூறுகிறார் கள். 'மண்வாசி' தான் அதற்குக் காரணமாம்!

பாஞ்சாலங் குறிச்சி மண்மீது முட்டையிட்டு, அடை காத்துப் பொரிக்கப்பட்ட சேவலாம் அது! அந்த மண் மீதுதான் அது வளர்ந்ததாம். அதனால்தான் அது ஜயிக் குமாம். அந்த மண்மீது உண்டான கோழிகூட ஒரு நாளும் தோல்வியுறுதாம். அந்தக்கோழி பாஞ்சாலங் குறிச்சியைப் பார்த்ததே இல்லை; அந்த ஊர்க் காற்றைச்

சுவாசித்ததும் இல்லை, அவ்விடத்திலிருந்து கொணர்ந்து எங்கோ வைக்கப்பட்டிருந்த மண்மீது வளர்ந்த பெருமை தான் அதற்கு.

இப்படிப்பட்ட நம்பிக்கை இன்றைக்கும் தெற்குச் சீமையில் இருக்கிறது. பந்தயச் சண்டை போடும் பிராணி வளர்ப்பவர்கள் இன்றைக்கும் பாஞ்சாலங் குறிச்சியிலிருந்து மண் எடுத்துச் சென்று, தங்கள் ஊரில் பூமிமீது பரப்பி, அதன்மீது அவற்றை வளர்க்கிறார்கள்.

இந்த நம்பிக்கைக்கு ஆதாரம், அந்த ஊரில் வாழ்ந்து, பெரிய வீரர் என்று பெயரெடுத்து, நாட்டு மக்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட கட்டபொம்மு, அவர் தம்பி ஊமைத்துரை ஆகியவர்களின் வாழ்க்கையேயாகும். அவ்விருவரையும் இன்றைக்கும் திருநெல்வேலிச் சீமைக்காரர்கள் போற்றி வருகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைச் சரிதம், நாடகமாக ஆக்கப்பட்டு, அந்தப் பிராந்தியங்களில் தெருக்கூத்தாக ஆடப்பட்டு வருகின்றது; நாகரிகமான நாடக மேடைகளிலும் நடிக்கப்படுகின்றது.

தவிர, பாமர ஜனங்கள் எளிதில் புரிந்து ரஸிக்கக் கூடிய முறையில் பல பாடல்களும் உள்ளன. அவற்றுள் பெரும்பாலன அச்சில் ஏறவில்லை; வாய்மொழியாகவே பலருக்குப் பாடம் உண்டு. அவை எல்லாவற்றிலும் சிந்து வடிவத்தில் உள்ளது மிகவும் பிரபலமானது; கேட்பவர் உள்ளத்தைப் பரவசப்படுத்துவது; அடங்கிக் கிடக்கும் வீரத்தைத் தட்டி எழுப்பவும் சக்தி வாய்ந்தது.

அதே போல, அந்தப் பாளையக்காரரான கட்டபொம்முவின்மீது பாடப்பட்ட 'பாஞ்சைக் கோவை', கலியுகப் பெருங் காவியம்', 'வீரபாண்டியன் அநுராக மாலை' என்பன போன்ற வேறு நூல்களும் உள.

'கலியுகப் பெருங் காவியம்' என்பது காவிய முறையில் விஸ்தாரமாக எழுதப்பட்ட நூல்; நாலாயிரம் செய்யுட்களுக்கு மேல் கொண்டது: ஆற்றுப் படலம், நாட்டுப் படலம், நகரப் படலம் முதலியவற்றோடு பழைய முறையில் இயற்றப்பட்டது. அந்நூல், கட்ட பொம்முவின் காலத்திலேயே பஞ்சாட்சரக் கவிஞரென்னும் ஒருவரால் இயற்றப் பெற்றது என்று தெரிகிறது. அவர் நமசிவாயக் கவிராயர் என்ற பெயராலும் குறிக்கப் பெறுவர்.

அந்தப் புலவர் தம் காவியத்தின் சரித்திரத்தைத் துவக்குவதும் வேடிக்கையாக இருக்கிறது. அதன் பீடிகையிலும் புராண வாசனையே வீசுகின்றது; பழம் புராணக் கதையைக் கொண்டே அது ஆரம்பிக்கின்றது.

உலகத்தில் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மா, தாமே எல்லாவற்றையும் படைப்பதால், மற்றெல்லாத் தேவர்களைக் காட்டிலும் தாமே உயர்ந்தவர் என்று ஒரு சமயம் எண்ணிக் கர்வத்தை அடைந்தாராம். இதனை அறிந்த அறுமுகக் கடவுள் அவருக்குப் புத்தி புகட்ட வேண்டி,

> ' கந்த மாமலர்க் கடவுள் முக்கண்ணனைக் காண
> வந்த போதினில் வள்ளிதன் கணவனும், '

அவரை வேதத்தின் பொருளைக் கூறும்படி கேட்டான். பிரம்மா சரியாகச் சொல்ல முடியாமல் தவித்த பொழுது குமரன் அவர் தலையில் குட்டி, கற்ப காலத்துக்குச் சிறையிலிட்டான். பிரம்மா போய்விட்டால், அவர் தொழில் நடக்க வேண்டுமே! அதனைக் குமரனே மேற்கொண்டான்.

இளம் ரத்தம் ஓடும் நல்ல காளைப் பருவத்து முருகன் செய்த சிருஷ்டித் தொழிலிலும், அந்தப் பருவக் காற்று வீசிற்று. புதுப் புது ஜீவ வகைகள் சிருஷ்டிக்கப்பட்டன. நான்கு முகங்களையும் எட்டுக் கைகளையும் கொண்டு

பிரம்மா உற்பத்தி செய்தவற்றைவிட மிகவும் அதிகமாக, இவன், ஆறு முகங்களாலும் பன்னிரண்டு கைகளாலும், உண்டாக்கிக் குவித்துவிட்டான்.

காலம் கொஞ்சம் சென்றது. அறுமுகன் நடத்தும் ஆட்சி எவ்விதமாக உள்ளது என்பதை அறிய விரும்பினர் தேவர். அதனுல் தேவர்களும் ரிஷிகளும் அண்டத்தின் நாற்புறங்களிலும் சென்று பார்வையிட்டனர்.

ஆனுல், பூலோகத்தில் அவர்கள் கண்டது என்ன? பல அதிசயங்களுடன்,

'சூரியர் தோற்றம் போலத் தொப்பிமேல் பொற்பூ மேவ
வார்தரு பரிவே டம்போல் மார்பினில் பணிதி தோன்ற
பார்செறி துரைமார் வெள்ளப் பாற்கடல் போல மேவச்
சீர்தரு தேவர்க் கெல்லாஞ் சிந்தையில் துணுக்க மேவ'
'கார்செறி மேகங் கள்போற் கடியபீ ரங்கி தோன்ற'
'....................வெண்ணிறம் பெருகிய பேர்கள்
கன்ன மூலமுங் காசினிக் ககனகோ ளகையுஞ்
சின்ன பின்னஞ்செய் கபாத்தினைக் கண்ணுற்றார் தேவர்!'

அம்மட்டிலோ? அந்தப் பீரங்கிச் சப்தத்தைக் கேட்டு அவர்கள் நடுங்கிப் போய்விட்டார்கள். எல்லோரும் பயந்து ஓட்டமெடுத்துக் குமரன் காலில் விழுந்து தங்களைக் காப்பாற்றும்படி வேண்டிக்கொண்டனராம். அவர்கள் ஒவ்வொருவரும் வருவது வெகு அழகாக வருணிக்கப்பட்டுள்ளது.

'தும்பொத்த சங்கிஞெத்த தொகுத்தகார் நிறத்தை யொத்த
செப்புற்ற பொன்னையொத்த சட்டைகள் தொப்பி சேர்த்துக்
குப்பத்தி லனேகமான வெண்ணிறங் குழுமித் தோன்று
முப்பத்து மூவர் மேலா முனிப்பிரு கென்போன் வந்தான்'

என்று, பிருகு முனிவர் பயந்து வெள்ளைக்காரரைப் போல உடையணிந்து வந்தது குறிக்கப்படுகின்றது.

இவ்விதம் இவர்கள் பயந்து நிற்கையில், கலகப் பிரிய ரான நாரதர் எழுந்து நின்று வணங்கி,

'செந்திலம் பதிவாழ் கந்தா! நின் திரு வுளத்தால் வந்த
பைந்தமிழ்ப் பாஞ்சை மன்னன் பராக்கிரம மகிமை யாலே
யந்நல் லுகங்கள் போல வமர்அடங் கிடும்!'

என்று ஓதிப் பாஞ்சாலங் குறிச்சி மன்னனுடைய சரித் திரத்தைக் கூறத் தொடங்குகின்றார். அங்ஙனம் நாரதர் கூறும் முறையில் அமைந்துள்ளது அந்தக் காவியம்.

கவி இந்தப் பீடிகையை அழகாகச் சித்திரிக்கிறார். அவருடைய காவியம் இலக்கியத் துறையில் உயர்ந்த நூல் என்று கூற முடியாவிட்டாலும், எளிய நடையில் பலரும் புரிந்து கொள்ளக்கூடிய முறையில், மிடுக்குடன் எழுதப் பட்டுள்ளது.

இவ்விதம் புகழ் வாய்ந்த பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக்காரர்கள், இன்றைக்குச் சுமார் நூற்று நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து வந்தார்கள். அவர்களில் கட்டபொம்மு, ஊமைத்துரை ஆகிய இரு சகோதரர்களு டைய பெயர்கள்தாம் பிரபலமானவை. அவர்கள் ஊரான பாஞ்சாலங் குறிச்சி, திருநெல்வேலி ஜில்லாவில், ஒட்டப் பிடாரம் என்னும் ஊருக்குப் பக்கத்தில் இருந்தது.

அவர்களுடைய சரித்திரத்தை நன்கு அறிந்து அனுப விப்பதற்கு அக்காலத்திலே தென்னாட்டில் இருந்த பாளை யப்பட்டுகளின் நிலைமையை முதலில் தெரிந்துகொள்ள வேண்டுவது அவசியம்.

# அத்தியாயம் 2

# தென்னாட்டுப் பாளையக்காரர்கள்

'துரைகள் வந்தனர் * சோசர் வந்தனர்து பாகி
வந்ததுபீ ரங்கியும்
விரைவில் வந்தனது லுக்கர் சோனகர்மி குத்த
வார்கள்பல வந்தன
வரைகள் கொண்டுவரி வரிய தாகியுயர் மாட
கூடமும ருங்கெலாம்
திரைகொள் பாளையமும் நாள்கள் தோறுமே செழித்த
பாளையம திட்குளே.'

— கலியுகப் பெருங் காவியம்.

---

மத்திய காலத்திலே தமிழ்நாட்டைப் பெரும் புகழுடன் ஆண்டு வந்த சோழர்களும் பாண்டியர்களும் வலிகுன்றி, அவர்கள் அரசாங்கங்களும் இறந்தொழிந்தன. விஜயநகரத்தில் ஒரு சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்துத் தக்ஷிண இந்தியாவை ஆண்டுவந்த மன்னர்கள், கொஞ்சங் கொஞ்சமாகத் தமிழ்நாடு முழுவதையும் கைக்கொண்டு அரசு செலுத்தி வந்தார்கள். அவர்கள், நாட்டைப் பல மண்டலங்களாகப் பிரித்து, ஒவ்வொரு மண்டலத்துக்கும் ஒவ்வோர் அதிபதியை நியமித்து வந்தார்கள். காலக்கிரமத்தில் அந்த மண்டலாதிபத்தியம் ஒரே பரம்பரையில் வந்து, அதிபதிகள் 'கர்த்தாக்கள்' என்ற பட்டத்துடன் சிற்றரசர்கள் பதவியை அடைந்தனர். இவ்விதம் பதினாறும் நூற்றாண்டின் முற்பகுதியில் ஏற்பட்டது மதுரை நாயக்க வமிசம்.

---

*சோசர் — போர்வீரன்- Soldier

அவ்வமிசத்து முதல் அரசரான விசுவநாத நாயக்கருக்கு அரியநாத முதலியார் என்பவர் தளவாயாகவும் பிரதானியாகவும் இருந்தார். அவர் மிகுந்த சாமர்த்தியசாலி. தென்னாட்டுப் பாளையப்பட்டுகளும், அவற்றைப் பரிபாலித்து வந்த பாளையக்காரர்களின் ஆதிக்கமும் அவருடைய சிருஷ்டிகளே என்று சரித்திர ஆசிரியர் கருதுவர்.

விசுவநாத நாயக்கர், விஜயநகரத்தை விடுத்து மதுரைக்கு வந்து அரசாங்கத்தை ஏற்றுக் கொண்ட பொழுது, அவரைச் சார்ந்தவர்கள் பலர் அவருடன் கூடத் தமிழ் நாடு வந்தார்கள். நாயக்கர் அவர்களுக்கு ஏதாவது பொருளும் பதவியும் அளித்துத் திருப்தியுண்டாக்க வேண்டியிருந்தது. அவர் வருவதற்கு முன்பு புராதன காலத்திலிருந்து பாண்டி மண்டலத்தை ஆண்டு வந்த ராஜ வமிசத்தினர் வேறு இருந்தனர். வலியிழந்திருந்தாலும், நாட்டில் அவர்களுக்குச் செல்வாக்கிலும் மரியாதையிலும் குறைவில்லை. அன்றி விசுவநாதனைப் போலவே முன்னமேயே பாண்டி நாட்டுக்குள் புகுந்து முக்கியமான இடங்களைக் கைப்பற்றியிருந்த தெலுங்கு, கன்னட வீரர்களும் இருந்தார்கள்.

நாட்டில் அமைதி நிலவ வேண்டுமாயின் இவ்வளவு பேர்களையும் திருப்தி செய்ய வேண்டும். அவர்களும், எப்பொழுதும் நாயக்கர் பாலும், அவருடைய சந்ததியார் பாலும் விசுவாசமுள்ளவர்களாக நடந்துகொள்ள வேண்டும். இந்நிலைமையைச் சமாளித்துக்கொள்ளவே பாளையப்பட்டு முறை சிருஷ்டிக்கப்பட்டது.

மதுரைக்குச் சொந்தமாக எழுபத்திரண்டு கோட்டைகள் இருந்தன. அவற்றில் ஒவ்வொன்றும் ஒவ்வொருவருக்குக் கொடுக்கப்பட்டது. அந்த அந்தக் கோட்டைகளுக்கும், அவற்றைப் பரிபாலித்து வர நியமிக்கப்பட்டவர்

களுடைய அந்துஸ்துக்கும் ஏற்ப, அவர்களுக்குக் கிராமங்கள் அளிக்கப்பட்டன.

கோட்டையையும் அதைச் சுற்றியிருந்த கிராமங்களையும் பெற்றுக்கொண்டவர்கள், அரசனுக்கும் அவனுடைய சந்ததியாருக்கும் எப்பொழுதும் கீழ்ப்படிந்து விசுவாசம் உள்ளவர்களாக இருக்கவேண்டும். அன்றியும், அரசாங்கத்துக்கு வருஷந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கப்பமாக அளிக்கவேண்டும். தம்முடைய நாட்டில் அமைதியை நிலைநிறுத்துவதுடன் அவரவர் தகுதிக்குத் தக்கபடி அரசனுக்குச் சேனையைக் கொடுத்து உதவவும் வேண்டும். மேற்கொண்டும் அரசன் விரும்பும்போது அவன் விரும்புமளவு படையையும் உடனே சேகரித்து அனுப்பவேண்டும். இந்தக் காரியங்களை அவர்கள் சரிவரச் செய்து விட்டால், அரசன் பாளையக்காரர்களுடைய வியவகாரங்களில் தலையிடமாட்டான். பாளையங்களுக்குள் நியாய விசாரணை செய்வது, குற்றவாளிகளைத் தண்டிப்பது முதலிய உரிமைகளையும் அதிகாரங்களையும் பாளையக்காரர்களே செலுத்தி வந்தார்கள்.

மதுரை நாயக்க மன்னர்கள் அரசுபுரிந்த பிரதேசம் முழுவதும் பெரியனவும் சிறியனவுமாகப் பல பாளையங்களால் நிறைந்திருந்தது. பெரிய பாளையப்பட்டுகள் செலுத்தவேண்டிய கப்பப் பணத்தைச் சரிவரச் செலுத்தமாட்டா. ஈட்டிமுனையில்தான் அந்தப் பணத்தைப் பல தடைவைகளில் பெறவேண்டியிருக்கும். உதாரணமாக, இராமநாதபுரம் சேதுபதி கப்பமே செலுத்தியதில்லை. சிறு சிறு பாளையங்கள் பல ஒன்று சேர்க்கப்பெற்றுப் பெரிய பாளையக்காரர் ஒருவர் மேற்பார்வையில் விடப்படுவதும் உண்டு. ஒவ்வொரு பாளையப்பட்டிலுமுள்ள நகரங்கள் கோட்டை கொத்தளங்களால் காக்கப்பட்டு வந்

தன. பீரங்கிப் படையும் குதிரை வீரர்களும் உள்ளிட்ட சைனியமும் நிறுவப்பட்டிருந்தது. பார்க்கப் போனால், அந்தப் பகுதியிலுள்ள ஆண்மகன் ஒவ்வொருவனும், திட சரீரியாக உள்ள வரையில், சேனையைச் சேர்ந்தவனாகவே கருதப்பட்டு வந்தான். வேறுநாட்டின்மீது படை எடுத்தல், தங்கள் பிரதேசத்தின் மீது பிறர் படையெடுத்து வருவதைத் தடுத்தல் முதலிய சந்தர்ப்பங்கள் நேர்ந்த பொழுதெல்லாம் அவர்கள் சைனியத்தில் சேர்ந்து போர் புரிய வேண்டும். மற்றக் காலங்களில் அவர்கள் தத்தம் பயிர்த் தொழில் முதலிய வேலைகளைக் கவனித்து வரலாம்.

இவ்விதம் பாளையப்பட்டில் வசித்து, வேண்டும் பொழுது சேனையில் சேர்ந்து போர் புரியும் வீரர்களுக்குத் தேவையான நிலம் வரியில்லாமல் விடப்பட்டிருக்கும். அதனை அவர்கள் உழுது பயிர் செய்து ஜீவித்து வரவேண்டும். சண்டைக்குப் போகும் பொழுது அவர்களுக்கு ஆகாராதிகள் கவனித்து அளிக்கப்படும்; வேறு சம்பளம் இல்லை. இந்த முறையால் அத்தகைய படைகளைப் பா பாலிப்பதற்கு அதிகச் செலவு பிடிக்காது; வேண்டும் பொழுது பெரும் படை திரட்டவும் கூடும்.

ஆனால், இவ்விதம் பாளையக்காரர்கள் வைத்திருந்த படைகளிடம் ஒரு பெருங் குறை உண்டு. படையினர் சாதாரணமாகக் குடியானவர்களே; போரையே தொழிலாக மேற்கொண்டவர்கள் அல்லர். அவர்களுக்கு வேண்டிய பயிற்சி அளிக்கப்பட்டிருக்காது. படைத் தலைவன், பாளையப்பட்டார் ஆகியவர்கள் எவ்வளவுக் கெவ்வளவு ஊக்கத்துடன் போரில் கலந்துகொள்ளுகிறார்களோ, அவ்வளவுக் கவ்வளவு படையும் முனைந்திருக்கும். எந்தப் பாளையக்காரரேனும், வேறொருவர் மீதுள்ள பொறாமை

யாலோ, அரசன் தமக்கு உரிய மரியாதை அளிக்க வில்லை என்றோ, அல்லது தம்மை நன்கு மதிக்கவில்லை என்ற காரணத்தாலோ, சண்டையிலிருந்து விலக ஆரம்பித்தால், அவ்வளவுதான்—படுதோல்வி நிச்சயம். 'வெண்ணெய் திரளும் சமயத்தில் தாழி உடைந்தது' என்பது போல, வெற்றி கிடைக்கும் சமயத்திலும் இங்ஙனம் நேரக்கூடும். இதனால் மன்னன் எப்பொழுதும் ஜாக்கிரதையாகவே இருப்பான். எந்தப் பாளையத்தையும் விரோதித்துக்கொள்ள மாட்டான்.

ஆகவே பாளையக்காரர்கள் தங்களை அடக்குவாரின்றி வளர்ந்து வந்தனர். பாளையக்காரர்கள் தங்கள் பாளையங்களில் வாழ்ந்துவந்த மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். கிராமங்களில் வசித்தவர்களை மட்டுமின்றி, அந்தப் பக்கங்களிலும், பெரு வழிகளிலும் செல்லும் பிரயாணிகளையும் தீங்கு நேராவண்ணம் காவல் புரிந்து வந்தனர்; திருடர்கள் புகுந்து கொள்ளையிடாதபடி தடுத்து வந்தார்கள்.

இவ்விதம் காவல் புரிந்து வந்ததற்காகப் பாளையக்காரர்கள் இருவகை வரிகளை வசூலித்து வந்தார்கள். ஒன்று 'தலம் காவல்' எனப்படுவதாகும்; மற்றொன்று 'தேசகாவல்' என்பது. பின்னதைத் 'திசை காவல்' என்றும் குறிப்பர் சில ஆசிரியர்.

'தலம் காவல்' ஆதிநாள் முதல் வசூலிக்கப் பட்டு வந்தது. அந்த அந்தக் கிராமங்களிலுள்ள தலையாரி முதலிய காவற்காரர்களை நிறுவுவதற்காக வசூலிக்கப்பட்டது அந்த வரி. 'தேசகாவல்' என்பது முற்காலத்திலிருந்தே வசூலிக்கப்பட்டு வந்ததா என்பதை நாம் நிச்சயமாகக் கூற முடியாது. மத்திய காலத்தில், சோழ பாண்டிய அரசர்

கள் வலியிழந்து நாட்டில் கலகங்கள் ஏற்பட்ட காலத்தில் இருந்து இது வழக்கிலிருந்திருக்கிறது. அந்த அந்த மக்கள் வாழும் சீமையைக் காவல் புரிவதற்காக, அதற்கு வேண்டிய சைனியத்தைப் பரிபாலிக்க, இது வசூலிக்கப்பட்டது. பிற்காலத்தில் நாட்டில் கலகங்கள் அதிகமாகப் பெருகவே, 'தேசகாவல்' வரியும் கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்தப்பட்டு வந்தது என்று புகார் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த வரிப் பணம், ரொக்கப்பணமாக மட்டுமன்றி' தானியம், ஆடு மாடு முதலிய பலவகைப் பொருள்களாகவும் பெறப்பட்டது. பதினெட்டாம் நூற்றுண்டில் பணக்கஷ்டம் அதிகமாகிவிடவே, இதனை வசூலிப்பதும் கஷ்டமாகிவிட்டது. பாளையக்காரர்கள் வரி வசூலுக்கென்றே யமகிங்கரர்களைப் போன்ற வேலையாட்களை உத்தியோகத்தில் வைத்திருந்தார்களாம். அவர்கள் குடிமக்களிடம் வரியைக் கிட்டிகட்டி வசூலித்தனர். இதனைத் தவிர, வரி வசூலிக்க வருபவர்களுக்கு வண்டிச்சத்தம், படி என்பன போன்ற வேறு தண்டச் செலவுகளையும் கிராமத்தார்களே பொறுக்க வேண்டியிருந்ததாம்.

இந்தக் காவல் வரிவசூல் உரிமையே பின்னல் தென்னுட்டுப் பாளையக்காரர்களுக்கு யமனுக முடிந்தது. பாளையப்பட்டுக் கிராமங்களுக்கு நடு நடுவே அவர்களைச் சேராத கிராமங்களும் இருந்தன. அவற்றுள் சில, பக்கத்துப் பாளையக்காரர்களைச் சார்ந்தனவாக இருக்கும். வேறு சில, பாளையங்களைச் சாராமல், சர்க்கார் கிராமங்களாகவும் இருக்கும். அந்தக் கிராமங்களிலும் இவர்கள் வரி வசூல் செய்துவிடுவார்கள். இதனுல் பக்கத்துப் பாளையக்காரர்களுக்கும் இவர்களுக்கும் அடிக்கடி மனத்தாங்கல் நேரிடும்.

பல சமயங்களில் பாளையக்காரர்கள் சர்க்கார் கிராமங்களில் அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய வரி வசூலைக் குத்தகை எடுத்துக்கொள்வார்கள். மறு குத்தகை அவர்களுக்குக் கிடைக்காமல் வேறு மனிதர் கையில் போய்விட்டால், கலகம் நடக்க ஏதுவுண்டு. வரி வசூல் சரிவர நடக்காது. சில சமயங்களில் பாளையக்காரர்கள், தங்கள் பாளையங்களில் உள்ள கிராமங்களில் குடிவார பாத்தியதை கொண்டாடி, குடிகளை அப்புறப்படுத்தவும் செய்வார்கள்.

இங்ஙனம் தென்னாட்டில் இருந்த பல பாளையப்பட்டுகளுக்குள் பாஞ்சாலங் குறிச்சியும் ஒன்று. கும்பினியாருக்கும் பாஞ்சாலங் குறிச்சியாருக்கும் நேர்ந்த பகைக்கு ஆதிகாரணமாக இருந்தது இந்த வரி வசூல் விஷயமே. இதனை நன்கு அறிய அந்தக் காலத்து அரசாங்க முறையை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். முதலில் பாஞ்சாலங் குறிச்சியின் பூர்வ சரித்திரத்தைக் கூறிவிட்டு, பதினெட்டாம் நூற்றாண்டில் தென்னாடு இருந்த நிலையைப் பிறகு கூறுவோம்.

# அத்தியாயம் 3

# பாஞ்சாலங் குறிச்சியாரின் பூர்வோத்தரம்

'காலந் தவறாமல் மாரி பொழிந்திடுமே
காலங் கழிக்கின்றார் கம்பளங்கள்'

---

பாஞ்சாலங் குறிச்சிப் பாளையம் எப்பொழுது ஏற்பட்டது என்பதை நாம் நிச்சயமாகக் கூற முடியாது. ஏனெனில், சரித்திர சம்பந்தமான ஆதாரங்கள் சரியாகக் கிடைக்கவில்லை. கர்ண பரம்பரைச் செய்திகளோ ஒன்றுக்கொன்று மாறுபட்டுள்ளன.

பாஞ்சாலங் குறிச்சியார் தெலுங்கர்; கம்பளத்தார் வகுப்பைச் சேர்ந்தவர்; தொட்டியர்கள் என்றும் கூறப்படுவர். இப்பொழுது மதுரை, திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களில் தொட்டியர் எனப்படும் ஒருவகைச் சாதியினர் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் பாண்டி நாட்டுப் பாளையக்காரர்களைச் சேர்ந்தவர்களே என்று பொதுவாகக் கூறப்பட்டு வருகின்றது.

கம்பளத்தாரில் இரண்டு பிரிவுகள் உண்டு. ஒரு பிரிவினர் வேளாண் மக்கள்; சிறு ஜமீன்தார்கள். மற்றவர் இழி தொழில் செய்தும், பிச்சை யெடுத்தும் வயிறுவளர்ப்போர். நம் நாட்டில் காணப்படும் குடுகுடுப்பைக்காரர் போன்ற பிச்சைக்காரர்களும் கம்பளத்தார்களே. தெற்குச் சீமையிலிருந்து வருஷ வாரியில் தங்கள் ஆடு மாடுகளை ஊரூராக ஓட்டிச் சென்று மேய்த்து, நிலங்களில் கிடை

வைத்து வயிறு வளர்க்கும் இடையர்களிற் பெரும்பாலோரும் கம்பளத்தார்களே. தமிழ் நாட்டிலுள்ள கம்பளத்தாரின் இருவகையினரும் தெலுங்கு நாட்டிலே உள்ள கொல்லர் (Gollas), யெர்ர கொல்லர் (Yerra Gollas) என்று வழங்கப்படும் இரு வகுப்பாரையும் ஒப்பர் என்றும் சிலர் கூறுகின்றனர்.

இவை உண்மையாக இருக்கலாம். ஆனால், தமிழ் நாட்டிலே பாளையங்களைப் பெற்று ஆதிக்கம் செலுத்திய பாளையக்காரர்களும் வேளாண் மக்களும் கொண்ட பிரிவினருக்கும், பிச்சையெடுக்கும் மற்றக் கம்பளத்தார்களுக்கும் எத்தகைய உறவு இருந்தது என்பதை நாம் அறியோம். அவர்கள். ஒரே பாஷை பேசி, ஒரே நாட்டினின்றும் வந்தவர்களாக இருக்கலாம். அதற்காக அவர்கள் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று நாம் இப்பொழுது கூறுவதற்கில்லை.

'கம்பள ரத்தினம் இருக்க, ரத்தின கம்பளம் விரிக்க' என்னும் பிற்காலத்துப் பழமொழியை ஒட்டி, இந்த ஜாதியைச் சேர்ந்தவன் பஞ்சாயத்துக் கூடிப் பேசும் பொழுது கீழே கம்பளம் விரித்து அதன்மீது உட்காருவது வழக்கமாதலால் அவர்களுக்குக் கம்பளத்தார் என்ற பெயர் உண்டாயிற்று என்றும் கூறுவர். இது பொருத்தமாகக் காணப்படவில்லை.

அவர்கள் வடக்கே துங்க பத்திரை நதி தீரத்தில் உள்ள கம்பிலி என்னும் ஊர்ப்பக்கத்தார்கள். அவர்களும் தங்கள் முன்னோர் பல்லாரி ஜில்லாவைச் சார்ந்தவர் என்று கூறிக்கொள்ளுகிறார்கள். தெற்குச் சீமையிலும் பாளையக்காரர்களிடம் சேவகம் செய்தோர்களும், அவர்களுக்குக் கீழ்ப்பட்டிருந்தவர்களும் பொதுவாகக் 'கம்பளம்' என்ற பெயராலே குறிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள்.

இவற்றை நாம் கவனித்தால், பாளையப்பட்டை அடைந்த முக்கியஸ்தர்கள் வடநாட்டுக் கம்பிலியைச் சேர்ந்தவர்கள்; அவர்களும் அவர்களுடன் தங்கள் நாடுவிட்டுத் தமிழ்நாடு போந்த எல்லோருமே பொதுவாகக் 'கம்பிலியார்' அல்லது 'கம்பளத்தார்' என்ற பெயரால் குறிக்கப்பட்டு வந்தனர் என்று எண்ண வேண்டியிருக்கிறது.

கம்பளத்தாரில் கொல்லவர், சில்லவார், தோகலவார் என்பன போன்று ஒன்பது பிரிவுகள் உண்டு. இந்தப் பெயர்களெல்லாம் அவர்கள் ஆடுமாடுகளை யுடையவர்கள் என்பதையே உணர்த்துகின்றன. வெள்ளாடுகளை வைத்திருந்தவர் ஒரு வகுப்பினர்; செம்மறியாடுகளை வைத்திருந்தவர் மற்றொரு வகையினர்; பசுமாடுகளை வைத்திருந்தவர் வேறொரு பிரிவினர். இவ்விதமான வகுப்புக்களுள் பாஞ்சாலங் குறிச்சியார் தோக்கலவார், அதாவது பசுமாடுகளை யுடையார் என்னும் வகுப்பைச் சேர்ந்தவர். இந்தப் பெயரே தமிழில் 'தொக்கலவார்' என்று வழங்கலாயிற்று.

பாண்டி நாட்டுப் பாளையப்பட்டாருள் பெரும்பகுதியினர் இவ்வொன்பது பகுதிகளுள் ஏதாவதொன்றைச் சார்ந்தவராக இருப்பர். இவற்றை நாம் கவனித்தால், அவர்கள் தமிழ் நாட்டில் வழங்கும் பிரிவினருள் இடையர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லலாம்.

கம்பளத்தார் தெலுங்கு நாட்டை விட்டுத் தமிழ்நாடு வந்ததற்குக் கர்ணபரம்பரையான கதை ஒன்று உண்டு: அந்தக் காலத்திலே அவர் நாட்டுக்குப் பக்கத்தில் முகம்மதிய அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவனுக்குக் கலியாணம் ஆகாமல் இருந்தது. தனக்குத் தகுதியான பெண் ஒருத்தியை அவன் பார்த்து வந்தான். அப்படிப்பட்ட பெண் கம்பளத்தாரிடம், அதாவது பாஞ்சாலங் குறிச்சிப்

பாளையக்காரர்களின் முன்னோர் வழியில், இருந்தாள். அரசன் அவளை மணந்து கொள்ள விரும்பிப் பரிசம் பேசினான். கம்பளத்தார்களுக்குத் தங்கள் பெண்ணை அவனுக்குக் கொடுக்க விருப்பமில்லை. அவன் கோரிக்கையை மறுத்து எதிர்க்கவும் முடியவில்லை. அதனால் அவர்கள், தங்கள் ஆடு மாடுகளையும், பிற சொத்துக்களையும் கடத்திக்கொண்டு, தெற்கு நோக்கிப் புறப்பட்டு, ஊர் ஊராகத் திரிந்து, கடைசியில் திருநெல்வேலிச் சீமையை அடைந்தார்கள். தங்கள் வலியாலும் சக்தியாலும் அங்கே நிகழ்ந்து வந்த பல இடையூறுகளை நிவர்த்தித்து, நாட்டு மக்களுக்கு நன்மை புரிந்தார்கள். மன்னன் அவற்றை அறிந்து, அவர்கள் மீது அன்பும் மதிப்பும் கொண்டு, அவர்களுக்கு நிலங்களையும் பாளையத்தையும் அளித்துக் கௌரவித்தான். இங்ஙனம் உண்டான பாளையம், ஏழு நூற்றாண்டுகள் வரை விளங்கியிருந்து, பின்னால் அழிவுற்றது.

இந்தக் கதை சிற்சில மாறுதல்களுடன் பல இடங்களில் காணப்படுகின்றது. அவர்கள் தமிழ் நாடு போந்தது கி. பி. 1101-ஆம் ஆண்டு (கொல்லம் 276) என்று கூறுவர். இவ்வழி வந்தவர்கள் நாற்பத்தெட்டுத் தலைமுறைகள் அரசாண்டனர் என்றும் சொல்லுவர். இக்கூற்றுக்களை நிரூபிக்கத் தக்க ஆதாரங்கள் கிடையா. அவர்கள் தமிழ்நாடு போந்தது, கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருக்குமானால், அவர்கள் ஊரை விட்டுக் கிளம்பியதற்குக் காரணமாகக் காட்டப்படும் கதை ஒருகாலும் உண்மையாக இருக்க முடியாது. அந்தக் காலத்தில் தக்ஷிண தேசத்தில் முகம்மதியர் ஆட்சி நிறுவப் பெறவில்லை. முகம்மதியர் விந்திய மலைக்குத் தெற்கேயுள்ள நாட்டைக் கைப்பற்றி ஆளவேண்டும் என்ற எண்ணத்தை அடைந்ததே கி. பி. பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில்தான்.

ஆனால், தக்ஷிணத்திலே முகம்மதியர்கள் அரசு நிலைத்துப் புகழ்பரவ ஆட்சி செய்ய ஆரம்பித்த காலத்தில் கம்பிலி தன் பழம் பெருமையை இழந்துவிட்டது. அந்தக் காலத்திலெல்லாம் விஜயநகரம் பெருஞ் ஜோதியுடன் விளங்கியது. விஜயநகரம் ஏற்படுவதற்கு முந்திய காலத்தில் தான் கம்பிலி ஒரு முக்கிய நகரமாக இருந்தது. அதனால் கம்பிலி நகரத்தார் என்று கூறப்படும் கம்பளத்தார் விஜயநகரம் உண்டாவதற்கு முன்பே தமிழ் நாட்டிற்கு வந்தவர்களாக இருத்தல் வேண்டும். முதலில் அவர்கள் தங்கள் மாடுகளை மேய்க்க வந்து, பிற்காலத்தில் சௌகரியமான காலம் நேர்ந்த பொழுது, அரசியலைக் கைப்பற்றியிருத்தல் கூடும். ஒருகால் அவர்கள் விஜயநகர மண்டலாதிபதியாக வந்த விசுவநாத நாயக்கருடன் வந்தவர்களாகவும் இருத்தல் கூடும். இதனை இப்பொழுது நாம் நிச்சயிக்க முடியவில்லை.

விசுவநாத நாயக்கர் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பாளையங்களில் பாஞ்சாலங் குறிச்சியின் பெயர் காணப்படவில்லை என்றும், அதனால் அது பின்னால் உண்டாகியிருக்கவேண்டும் என்றும் மற்றொரு சாரார் கூறுவர். அங்ஙனம் கூறுவோர்க்கு ஆதாரமாகவுள்ள கதை வருமாறு :

விசுவநாத நாயக்கர், விஜயநகரத்துச் சக்கரவர்த்தியின் மண்டலாதிபதியாக, மதுரையில் அமர்ந்து அரசு புரியத் தொடங்கியவுடன், பழைய பாண்டிய ராஜ வமிசத்து மன்னனுடைய காமக் கிழத்தியின் மக்கள் சிலர் மனத்தாங்கல் அடைந்து கலகம் செய்துவந்தனர். 'கர்த்தாக்கள்' ஆன நாயக்கர், தம்முடைய தளவாய் அரியநாத முதலியாரை அனுப்பி, அவர்களை அடக்க ஏற்பாடு செய்தார். எட்டையபுரத்தாருடைய உதவியைக் கொண்டு,

அவர்களை அடக்கி அழித்துவிட்டார். எனினும் பின்னல் கர்த்தாக்கள், அவர்களுடைய சந்ததியாரிடம் கருணை பூண்டு, பாஞ்சாலங் குறிச்சிப் பாளையத்தை அவர்களுக்கு வழங்கி ஆதரித்து வந்தார்கள். பிற்காலத்தில் அவர்களுக்குச் சந்ததியில்லாமையாலோ, கர்த்தாக்களுக்கு அவர்களிடம் அன்பு குறைந்ததாலோ, அவர்கள் ஒழிந்தனர். அப்பொழுது அங்கே தலம்காவல் பார்த்து வந்த தொக்கலவார் வகுப்பைச் சேர்ந்த ஒருவர், அந்தப் பதவியைக் கைப்பற்றி, அவர்கள் பட்டப் பெயரான 'ஜகவீரன்' என்ற பெயரையும் தரித்துக்கொண்டு, கோட்டை கொத்தளம் கட்டி, நகரம் கண்டு, பாளையத்தை ஆளத் தொடங்கினர். அங்ஙனம் நடந்தது பதினெட்டாம் நூற்றுண்டின் முதலில்தான். அதிக நாள் ஆகவில்லை. எனவே பழம் பெருமை அவர்களுக்கு இல்லை.

இது எப்படியாயினும், கி. பி. பதினெட்டாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் பாஞ்சாலங் குறிச்சிப் பாளையம் இருந்து வந்தது. 1709-ஆம் ஆண்டு முதல் அதனை ஆண்டு வந்தவர்களின் பெயர் வரிசை நமக்குத் தெரிகின்றது.

பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக்காரர் ஒவ்வொருவருக்கும் 'ஜகவீர பாண்டியன்' என்ற பட்டம் இருந்து வந்தது. அவர்களில் பட்டத்துக்கு வந்தவன் பொதுவாகக் 'கட்டபொம்மு' என்றே வழங்கப் பெறுவான். பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக்காரர் ஒவ்வொருவரும் 'கட்டபொம்மு' என்று குறிக்கப் பெறுவதால், சரித்திர ஆசிரியர்கள் சிலசமயங்களில் ஒருவரை வேறொருவராக எண்ணி மாறுபாடாக எழுதிவிட நேர்ந்திருக்கிறது.

கி. பி. 1709-ஆம் ஆண்டில் ஆளத் தொடங்கிய கட்டபொம்மு நாயக்கர், 27 வருஷங்கள் அரசு செலுத்தி,

கி. பி. 1736-ஆம் ஆண்டில் உயிர் துறந்தார். அவரைப் பற்றிய செய்திகள் அதிகமாகத் தெரியவில்லை.

அவருக்குப் பின் பட்டமெய்தி, கி. பி. 1760-ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தவர் காலத்திலேதான் கும்பினியார் பாஞ்சாலங் குறிச்சியின் மேற் படையெடுத்துத் தாக்கி அதனைக் கைப்பற்ற முடியாமல் திரும்பி யிருக்கின்றனர். அவரும் அவருக்குப் பின் வந்தவர்கள் எல்லோரும் கும்பினியாரிடம் நல்லுறவு கொள்ளவில்லை ; பகைமையே பாராட்டி வந்தார்கள்.

இந்தப் பகைமைக்குக் காரணத்தையும், கும்பினியார் எப்படி அந்தப் பிரதேசத்தில் புகுந்தனர் என்பதையும் அறிவதற்கு உதவியாக அக்காலத்துத் தேச நிலைமையைக் கூறுவோம்.

# அத்தியாயம் 4

# ராஜாங்க மாறுதல்கள்

' பந்தமறக் கோட்டைக்குள்ளே
படைகள் வெட்டி நிற்பாரோ ? '

—ஸ்ரீ. தேசிகவிநாயகம் பிள்ளை

---

பதினேழாம் நூற்றாண்டின் கடைசியிலே கர்நாடகம் மொகலாய சாம்ராஜ்யத்தைச் சேர்ந்திருந்தது. மொகலாய சக்கரவர்த்தி அவ்வளவு பெரிய சாம்ராஜ்யத்தைத் தம்மால் நேரில் ஆள முடியாமையால், அதைப் பல சுபாக்களாகப் பிரித்து, ஒவ்வொரு சுபாவையும் ஒவ்வொரு சுபேதார் வசம் ஒப்புவித்திருந்தார். அதேபோல, ஒவ்வொரு சுபாவும் பல நவாபிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு நவாபியும் ஒவ்வொரு நவாபு வசம் ஒப்புவிக்கப் பட்டிருந்தது. இவ்விதமான அமைப்பில் கர்நாடகம் நைஜாம் சுபாவைச் சேர்ந்திருந்தது. நவாபுகள் சாம்ராஜ்யத்திற்கு உரிய கப்பங்களை வசூலித்துச் சுபாவிற்கு அனுப்பிவிட வேண்டியது. சுபேதாரும் அவற்றை முறையே சேர்த்துச் சக்கரவர்த்திக்குச் செலுத்திவர வேண்டியது. ஆனால் இந்தத் திறைப் பணம் ஒரு பொழுதும் கிரமமாகப் போய்ச் சேருவது இல்லை; எப்பொழுதும் வாள் வலியாலேயே பெறப்படும்.

அந்த நூற்றாண்டின் கடைசியிலேயே தமிழ்நாடு, பெயரளவில் மொகலாயரின் ஏகாதிபத்தியத்தை ஒப்புக்கொண்டு, கப்பம் செலுத்தி வரவும் உடன்பட்டது. தஞ்

சை திருச்சி ராஜாங்கங்கள் ஆர்க்காட்டு நவாபின் கீழ் அடங்கியிருந்தன.

திருச்சிராப்பள்ளியிலிருந்து ஆண்டுவந்த மதுரை நாயக்க மன்னரான விஜயரங்க சொக்கநாத நாயக்கர் என்பவர் கி. பி. 1732-ஆம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் இறந்துபோனார். அவருக்குப் பின் சிங்காதனம் ஏறுவதற்கு ஆண் சந்ததி இல்லாததால், அவருடைய தேவி ராணி மீனாக்ஷி, அரசியாகப் பட்டம் கட்டப் பெற்றாள். அவள் அந்த நாயக்க வம்சத்தின் சின்னதுரை எனப்படும் மற்றொரு பிரிவைச் சேர்ந்த விஜயகுமாரன் என்பவனை ஸ்வீகாரம் செய்துகொண்டாள். இந்த விஜயகுமாரனுடைய தகப்பனான பங்காரு திருமலை அப்பொழுது சிவகாசிப் பாளையக்காரனாக இருந்தான்.

வெகு சீக்கிரத்தில் மீனாக்ஷிக்கும் பங்காரு திருமலைக்கும் விரோதம் ஏற்பட்டது. அந்த விரோதத்துக்குக் காரணம் நன்கு புலப்படவில்லை; எனினும் நாட்டை யார் ஆளுவது என்பது பற்றி உண்டானதாகவே இருக்கவேண்டும். மூத்த பரம்பரையில் ஆண் சந்ததி யில்லாவிட்டால் அரசு இளைய பரம்பரைக்கே போகவேண்டும் என்று பங்காரு திருமலை சொன்னான். மீனாக்ஷியோ தானே முறைப்படி அரசாங்கத்தை நடத்துவதற்கு உரியவள் என்றாள். மீனாக்ஷிக்கு அவளுடைய சகோதரன் வேங்கடப் பெருமாள் நாயக்கன் என்பவன் உதவியாக இருந்தான். பங்காருவின் பக்கத்திலோ, தளவாய் வேங்கடாசாரியன் சேர்ந்துகொண்டான். நாடு இவ்விரு கட்சிகளுக்கும் இடையில் அகப்பட்டுக்கொண்டு தவித்தது.

அப்பொழுது ஆர்க்காட்டுக்கு நவாபாக இருந்த தோஸ்த் அலீ என்பவர், தம் பிள்ளையான சப்தர் அலீயையும், மாப்பிள்ளையான சந்தா சாகிபையும் பதினாயிரம்

குதிரைகள் கொண்ட ஒரு பெரும் படையுடன் தெற்கு நோக்கி அனுப்பிவைத்தார். கர்நாடக நவாபுக்குச் சேர வேண்டிய கப்பங்களை வசூல் செய்வதற்காகவே அவர்கள் புறப்பட்டுச் சென்றார்கள் என்று காரணம் கூறப்பட்டது. ஆனால் உண்மை வேறு. மீனாக்ஷிக்கும் பங்காரு திருமலைக்கும் இடையில் ஏற்பட்டிருந்த சண்டையில் ஒரு கட்சி தோஸ்த் அலீயைத் தனக்கு உதவி செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொண்டது. தஞ்சையிலிருந்த மகாராஷ்டிர மன்னர் மீனாக்ஷிக்கு உதவியாக இருந்ததால், பங்காருவே நவாபின் உதவியை வேண்டி யடைந்தான் என்று தெரிகிறது.

சப்தர் அலீயும் சந்தா சாகிபும், திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டுப் பிடிக்க முடியாது என்பதை உணர்ந்து, இருதரத்தாருக்கும் சமாதானம் செய்து வைப்பதாகக் கூறினார்கள். சப்தர் முன்னதாகவே பங்காருவிடம் அவன் பக்கமாகத் தீர்த்து வைக்க முப்பது லக்ஷம் ரூபாய் பெறுவதாகப் பேசியிருந்தார். மீனாக்ஷியோ அவர்கள் ஏற்பாட்டுக்கு இணங்கவில்லை. இந்த ஏற்பாட்டை நிறைவேற்றிவைக்கப் போதிய தைரியம் இல்லாததாலோ, வேறு காரணத்தாலோ, மற்ற விஷயங்களைச் சந்தா சாகிபைப் பார்த்துக் கொள்ளும்படி விட்டுவிட்டு, சப்தர் அலீ உடனே ஆர்க்காட்டுக்குத் திரும்பி விட்டார்.

ராணி மீனாக்ஷி இந்தத் தீர்ப்பை மாற்றிவிட முயன்றாள். அவள் சந்தா சாகிபுக்கு ஒரு கோடி ரூபாய் கொடுப்பதாக ஆசை காட்டினாள். சந்தா சாகிப் பேராசை கொண்டான். அவனுடைய நோக்கம் வேறாக மாறியது. தனக்கெனத் தனி ராஜ்யம் ஒன்றை நிர்மாணித்துக் கொள்ள அவன் விரும்பினான். அதற்கு இதுவே தக்க சமயம் என்று ராணியின் வேண்டுகோளுக்கு இணங்கி

ஞன். ஆயினும் அதனை நிறைவேற்றிவைக்க இஷ்டப்பட வில்லை. ஒரு செங்கல்லை வைத்து, அதைச் சித்திரிக்கப் பட்ட மகமல் துணியால் போர்த்தி, அது தன்னுடைய வேதப் புத்தகமான குர்ஆன் என்று கூறி ஏமாற்றி, அதன்மீது சத்தியம் செய்து கொடுத்தான். அதைக் கண்டு ராணி ஏமாந்து போனுள்.

சந்தா சாகிப் ராணியின் பெயரால் பங்காருவைத் தாக்கி அழித்து, பின்னல் ஆர்க்காட்டு நவாபின் பெயரைக் கொண்டு மீனுக்ஷியைத் தொலைத்து, மெள்ளத் தஞ்சையை யும் கைப்பற்றித் தன் ராஜ்யத்தை நிறுவ எண்ணினுன். இவ்விதம் நடந்திருக்குமாயின் அவனை அசைக்க ஒருவரா லும் முடிந்திராது. ஆனுல் அவ்வாசை கைகூடவில்லை. எல்லாம் மனக் கோட்டைகளாகவே முடிந்தன.

பங்காருவும் மீனுக்ஷியும், தங்களுக்குள்ளேயே சமா தானம் செய்துகொண்டார்கள். நாட்டை இரு கூருகப் பிரித்து எடுத்துக்கொண்டார்கள். சந்தா சாகிப் அப் பொழுதும் விடுவதாக இல்லை; ஆர்க்காட்டுக்குத் திரும்பிச் சென்று, மறு வருஷம் பெரும் படையுடன் திரும்பி வந் தான். அவன் திருச்சியைக் கைக்கொண்டான். ராணி மீனுக்ஷியிடம் காட்டிவந்த மரியாதையெல்லாம் பறந்து விட்டது. அரசாங்கத்தை அவனே ஏற்றுக்கொண்டான். ராணியை அவள் வீட்டிலேயே சிறை வைத்தான். ராணி யும் அதைப் பொறுக்காமல் தற்கொலை செய்துகொண் டாள்.

சந்தா சாகிபின் வெற்றி ஆர்க்காட்டு நவாபின் மனத் தில் சந்தேகத்தை உண்டாக்கியது. அதை வெளிக்காட்ட வும் அவரால் முடியவில்லை. சந்தா சாகிபு, திருச்சிக் கோட்டையைப் பலப்படுத்தியதுடன், தன் சகோதரர்கள்

இருவரை மதுரை திண்டுக்கல் ஆகிய இடங்களின் அதிகாரிகளாக நியமித்தான்.

இனிப் பொறுத்தால் தங்களுக்கு ஆபத்து உண்டாகும் என்று பயந்து, தஞ்சை மன்னரும் பங்காருவும் சேர்ந்து சதாராவிலிருந்த மகாராஷ்டிரர்களுடைய உதவியைக் கோரினார்கள். அவர்களும் சந்தா சாகிபைத் தாக்க எப்பொழுது சமயம் வரும் என்று எதிர்பார்த்திருந்தார்கள். அதனால் அவர்கள் உடனே ஒரு படையைத் திரட்டித் தெற்கே அனுப்பினார்கள். 1740-ஆம் ஆண்டில் அவர்களுடன் நேர்ந்த போரில் நவாப் தோஸ்த் அலீ இறந்துபோனதால் சப்தர் அலீ நவாபாகப் பட்டத்தை அடைந்தார்.

சப்தர் அலீயின் வேண்டுகோளுக் கிணங்கி, மகாராஷ்டிரர்கள் அடுத்த ஆண்டு திருச்சியைத் தாக்கி முற்றுகையிட்டு, சந்தா சாகிபின் உதவிக்கு வந்த அவன் சகோதரர்களைக் கொன்று, கடைசியாகச் சந்தா சாகிபையும் சிறை செய்தனர்.

1742-ஆம் ஆண்டில், சப்தர் அலீயை அவர் சிற்றப்பன் மகன் முர்தஜா அலீகான் கொலைசெய்து நவாபியைக் கைக்கொண்டான். அவனும் அதிக நாள் ஆளமுடியவில்லை. அவனுக்கு விரோதமாக நடந்த கலகங்கள் அதிகமாகிவிடவே, அவன் இரவோடு இரவாகப் பெண்பிள்ளை போல வேஷம் தரித்துத் தப்பி ஓடிவிட்டான். சப்தர் அலீயின் மகன் முகம்மது ஸய்யிது நவாபாகப் பட்டம் அடைந்தான்.

அடுத்த ஆண்டில், நைஜாமுல் முல்க் கர்நாடகத்திற்கு வந்து தம் ஆதிக்கத்தை நிலைநிறுத்தினார். கடைசியாக அன்வர் உத்தீன் கான் என்பவரை ஆர்க்காட்டு நவாபாக 1744-ஆம் ஆண்டில் நைஜாம் நியமித்தார்.

மகாராஷ்டிரர்களால் சிறைபிடித்துச் செல்லப்பட்ட சந்தா சாகிப் சதாரா சிறையினின்றும் 1748-ஆம் வருஷத்தில் விடுதலை யடைந்தான். தன்னுடைய பழைய ராஜ்யங்களைக் கைப்பற்றி முன் ஸ்திதியை அடையலாம் என்ற எண்ணத்துடனே, அவன் தெற்கு நோக்கிப் புறப்பட்டு வந்தான். அக்காலத்திலே தக்ஷிணத்தில் நைஜாம் பதவிக்கு நாஜர் ஜங்கும், முஜபர் ஜங்கும் போட்டி போட்டுக் கொண்டிருந்தார்கள். சந்தா சாகிப் முஜபர் ஜங் கட்சியில் சேர்ந்துகொண்டான். 1749-ஆம் வருஷம் ஆம்பூரில் நடந்த சண்டையில் ஆர்க்காட்டு நவாப் அன்வர் உத்தீன் கொல்லப்பட்டார். அவர் புதல்வர் முகம்மது அலீ திருச்சிராப்பள்ளிக்கு ஓடிச் சென்று தம்மை ஆர்க்காட்டு நவாபாக முடி சூட்டிக் கொண்டார். முஜபர் ஜங் ஆர்க்காட்டு நவாபியைச் சந்தா சாகிபுக்குக் கொடுத்தான். புதுச்சேரியிலிருந்த பிரெஞ்சுக்காரர்களுடைய கவர்னர் டூப்ளே அவர்களுடன் சேர்ந்துகொண்டார். முகம்மது அலீ கட்சியில் நாஜர் ஜங்கும் சென்னையிலிருந்த ஆங்கிலேயர்களும் சேர்ந்துகொண்டார்கள். இவ்விருதரத்தாருக்கும் நடந்த பெரும் போர் சரித்திரப் பிரசித்தமானது. ஆதலால் அதனை நாம் இங்கே அதிகமாக விவரிக்க வேண்டியதில்லை.

## அத்தியாயம் 5

# முதல் படையெடுப்பு

'வார்வெடித் தொனிப்புக் கேட்பப் பீரங்கி வாய்விட் டார்ப்பப்
போர்புரி மாற்றலர்கள் புரிசைவாய் வீதிகிற்ப...'

—கலியுகப் பெருங் காவியம்

---

மதுரை நாயக்க மன்னர்களின் ஆட்சி வீழ்ந்த பிறகு, தமிழ்நாட்டைக் கைப்பற்றியிருந்த ஒவ்வொருவரும் திருநெல்வேலிச் சீமையின் திறைப் பணத்தை வசூலிக்கத் தங்கள் அதிகாரிகளை நியமித்து வந்தார்கள். மகாராஷ்டிரர்கள் தங்கள் அதிகாரிகளை நியமித்திருந்தனர். 1744-ஆம் ஆண்டில் அன்வர் உத்தீன் கர்நாடக நவாபாக ஆக்கப்பட்டவுடன் அவரும் தம் அதிகாரிகளை அனுப்பிவைத்தார்.

அவ்வதிகாரிகள், அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய பணத்தை வசூலித்து அனுப்புவதுடன், நியாய விசாரணை செய்வது, குற்றவாளிகளைத் தண்டிப்பது முதலிய எல்லா அதிகாரங்களையும் பெற்றிருந்தார்கள். அவர்கள் பாளையக்காரர்கள் செலுத்தவேண்டிய கப்பத்துடன் சர்க்கார் கிராமங்களின் வரியையும் வசூல் செய்யவேண்டும். பல சமயங்களில், அவர்கள் அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய தொகை இவ்வளவு என்பது மொத்தமாக நிர்ணயிக்கப்பட்டு வந்தது.

ஆம்பூர்ச் சண்டையில் நவாப் அன்வர் உத்தீன் இறக்க, முகம்மது அலீ நவாபாகப் பட்டம் ஏறிய காலத்

தில், திருநெல்வேலிப் பாளையக்காரர்கள் அதனை எதிர்க்கவில்லை. ஒப்புக்கொள்வதாகப் பாவனை செய்தாலும், அது விஷயமாகக் கவலை கொண்டதாகக் காண்பிக்கவில்லை. திறைப்பணம் எப்பொழுதும் போலப் பாக்கி விழுந்து கொண்டே இருந்தது.

அதனால், முகம்மது அலி 1751-ஆம் ஆண்டில், திருநெல்வேலிச் சீமை விஷயத்தை ஒழுங்கு செய்யத் தம் சகோதரன் அப்துல் ரஹீம் வசம் ஒரு படையைத் திரட்டிக் கொடுத்தனுப்பினார். ஆயினும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. சைனியத்துக்குச் சம்பளம் சரிவரக் கொடுபடவில்லை என்று அவர்கள் கலகம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

பாளையக்காரர்களின் கிஸ்திப் பணம் பாக்கியிருப்பதை வசூலிக்க மார்க்கம் தெரியவில்லை. சந்தா சாகிபோ, பாளையக்காரர்கள் தன்னுடன் சேர்ந்துகொண்டால், பழைய கிஸ்தியை வஜா செய்து அவர்களுடைய சைனியத்தின் சம்பளப் பாக்கியையும் தீர்த்துவைப்பதுடன், போர் செய்வதால் அவர்களுக்கு ஏற்படும் எல்லாச் செலவையும் தானே ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்து, அடிக்கடி தூதர்களை அனுப்பி ஆசை காட்டி வந்தான்.

இதற்கிடையில் சந்தா சாகிபினிடம் முன்னம் வேலை பார்த்துவந்த ஆலம் கான் என்பவன், தஞ்சை மன்னனிடம் தான் ஏற்றுக்கொண்டிருந்த பதவியை உதறித்தள்ளிவிட்டு, தன்னுடைய பழைய எஜமானனுடன் சேர்ந்து கொண்டான். அவன் தெற்குச் சீமையின் மத்திய பாகமாகிய மதுரையைப் பிடித்துக்கொண்டு, திருநெல்வேலிப் பாளையக்காரர்களிடம் திறை வசூல் செய்யவும் ஆரம்பித்தான்.

1755-ஆம் ஆண்டில் முகம்மது அலீ, தமக்கு ஆதரவாக இருந்த கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தார் எனப்படும் ஆங்கிலக் கும்பினியாருடைய உதவியைக் கொண்டு, மற்ெருரு படையைத் திரட்டி, தம் தமையனுன மாபூஜ் கான் வசம் ஒப்புவித்து, அவனைத் திருநெல்வேலிச் சீமைக்கு அனுப்பினுர். அந்தப் படைக்குக் கர்னல் ஹீரான் என்ற ஆங்கிலேயரும், யூசுப்கான் என்ற தமிழ் நாட்டு முஸல்மானும் அதிகாரிகளாக விளங்கினர். நவாபே நேரில் அந்தப் படையை மணப்பாறை வரையில் நடத்திச் சென்று திரும்பினுர்.

கும்பினிச் சிப்பாய்களுக்குக் *கும்மந்தானுக நியமிக்கப்பட்டிருந்த யூசுப்கானுக்குச் சர்வாதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. பாளையக்காரர்கள் கொடுக்கவேண்டிய கப்பத் தொகை அதிகமாக ஏறிவிட்டபடியால், முழுமையும் வசூலிக்க மார்க்கமில்லை என்பது வெளிப்படை. எனினும் முக்கியஸ்தர்களான சிலரைத் தாக்கி உபத்திரவித்தால் அவர்கள் செலுத்தவேண்டியவற்றைக் கொடுக்கக்கூடும் என்பதுடன், மற்றையோர் பயந்து அடங்கிவிடுவார்களாதலால் பிற்காலத்தில் கப்பம் வசூலிப்பதற்குக் கஷ்டமிராது என்றும் எண்ணினுர்கள். அதனுல் பாளையக்காரர்களுடைய கிஸ்தியை வசூலிக்கவோ, சமயத்துக்குத் தக்கபடி வஜா செய்யவோ, அதனைக் கூட்டவோ குறைக்கவோ, அவ்வாறே பாளையப்பட்டுகளுள் அடங்காமல் தனியாக இருந்த சர்க்கார் கிராமங்களில் தீர்வைகளை நிர்ணயம் செய்யவோ, எல்லாப் பொறுப்புக்களும் யூசுப்கானுக்கு அளிக்கப்பட்டிருந்தன.

இந்தப் படையெடுப்புக்கு மற்ெருரு காரணமும் உண்டு. முன்பு சந்தா சாகிபுக்காகத் தெற்குச் சீமையைப்

* Commandant - சேனைத்தலைவன்

பிடித்துக்கொண்டிருந்த ஆலம்கான், 1752-ஆம் ஆண்டில் சந்தாசாகிப் திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்ட பொழுது, மதுரையை விட்டு, அவனுடைய உதவிக்கு விரைந்து வந்தான். அவன் திருநெல்வேலிச் சீமையை மூன்று பட்டாணியர்களிடம் விட்டுவந்தான். அவர்களில் ஒருவன் மியாளு என்றும், மற்ருெருவன் மூடேமியா என்றும் பொதுவாகக் குறிக்கப்படுவார்கள்.

இந்தப் பட்டாணியர்கள் பிறகு முகம்மது அலீயைக் கர்நாடக நவாபாக ஒப்புக்கொண்டாலும், அவருக்கு அடங்கி நடப்பதாக உத்தேசிக்கவில்லை; தங்கள் சுயநலத்தையே பெரிதாகக் கருதி அதனை உத்தேசித்தே தங்களிஷ்டப்படி காரியங்களை நடத்தி வந்தனர். பணத்தாசை பிடித்து, வந்த கப்பத்தைக் கைப்பற்றினர். கைமேல் பணம் கிடைக்குமாயின் கோட்டைகளையும் பிரதேசங்களையும் விற்கவும் தலைப்பட்டனர். அவ்விதமே மூடேமியா எனபவன் களக்காட்டிற்கும் கன்னியாகுமரிக்கும் மேற்கேயுள்ள முப்பது மைல் பிரதேசத்தைத் திருவாங்கூர் மன்னருக்கு விற்றுவிட்டான். அந்தப் பிரதேசத்திலுள்ள கோட்டை கொத்தளங்கள் யாவும் அக்காலத்தில் திருவாங்கூர் மன்னராக இருந்த மார்த்தாண்டவர்மன் வசமாயின.

கும்பினியாரின் படை வருகிறது என்னும் செய்தியைக் கேட்டவுடன், பட்டாணியர் மூவரும் அதனை எதிர்த்து நின்று போர்புரிய எண்ணம் கொள்ளவில்லை.

கர்னல் ஹீரான் நடத்திச்சென்ற படை முதலில் மதுரையைப் பிடித்துக்கொண்டு, பக்கத்துப் பாளையக்காரர்களிடம் கப்பம் வசூல் செய்தது. மதுரையைக் காத்துவந்த மியாளு அதைக் கைவிட்டுத் திருநெல்வேலிச் சீமைக்கு ஓடி ஒளிந்துகொண்டான். சந்தாசாகிபுடனும் அவனுக்கு உதவியாக இருந்த மைசூராருடனும் சேர்ந்துகொண்டு

முகம்மது அலீக்கு விரோதமாக இருந்த பாளையக்காரர்களைக் கும்பினியார் மன்னித்தனர். பிறகு படை திருநெல்வேலிக்குப் புறப்பட்டுச் சென்றது. திருநெல்வேலிச் சீமையில் திறைப் பணம் வசூலிக்க நியமிக்கப்பட்டிருந்தவர்கள் முகம்மது அலியின் ஆணையை மேற்கொண்டனர்; காணிக்கை செலுத்தினர். ஆனல் பாளையக்காரர்களில் பெரும்பாலோர் இணங்கவில்லை; சாக்குக் கூறிக் காலம் கடத்தினர்.

திருநெல்வேலிச் சீமையைக் கிழக்கிலும் மேற்கிலுமாக இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். கிழக்குப் பக்கத்திலுள்ள பாளையங்களில் பாஞ்சாலங் குறிச்சி முக்கியமானது. அதைப் போன்றதே மேற்குப் பகுதியில் நெற்கட்டுஞ் செவ்வல் (இப்பொழுது சங்கரநயினர் கோயில் தாலூகாவில் ஆவுடையாபுரம் என்று வழங்கப்பெற்று வருவது). கிழக்குப் பக்கத்துப் பாளையக்காரர்களில் அநேகமாக எல்லோரும் தெலுங்க நாயக்கர்கள். மேற்குப் பகுதியிலோ வன்னியர்களான சிவகிரி, அழகாபுரி ஆகிய இரண்டு பாளையக்காரரைத் தவிர மற்றப் பாளையத்தையுடையவர்கள் யாவரும் பறவர்கள். எல்லாப் பாளையக்காரர்களும் பல வீரர்கள் அடங்கிய படையை வைத்திருந்தார்கள்.

பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக்காரர் கட்டபொம்மு என்று கூறப்படுவதைப் போல, நெற்கட்டும் செவ்வல் பாளையக்காரர் பூலித் தேவர் என்று சொல்லப்படுவர். இவ்விருவரையும் அடக்கிவிட்டால், இவர்களை வழிக்குக் கொணர்ந்துவிட்டால், திருநேல்வேலிச் சீமையே அடங்கி விடும்.

இவ்விதம் எண்ணிய மாபூஜ்கான் படையினர் முதலில் பாஞ்சாலங் குறிச்சியைத் தாக்கப் புறப்பட்டார்கள்.

அதற்குக் கும்பினியார் படையிலிருந்து இருநூறு ஐரோப்பியர்களும், ஐந்நூறு சிப்பாய்களும் இரண்டு பீரங்கிகளுடன் சென்றனர். பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்திலுள்ள முக்கியமான கோட்டையான எல்லைநாயக்கன் பட்டியை அவர்கள் அடைவதற்குள், செய்தி பாஞ்சாலங் குறிச்சிக்கு எட்டிவிட்டது. அக்காலத்தில் அந்தப் பாளையத்தை ஆண்டுவந்த கட்டபொம்மு பொல்லாப் பாண்டிய நாயக்கர் நவாபுக்கு விரோதமாகப் போர்செய்ய இசையவில்லை. அதனால் அவர் தாம் செலுத்த வேண்டிய கப்பத்தைச் செலுத்திவிடுவதாகவும், ஆனால் உடனே செலுத்த முடியாது என்றும் கூறி, சிறு தொகையை அனுப்பினார். அப்பொழுது நடந்த பேச்சு வார்த்தையின் முடிவாகப் பாக்கிப் பணத்திற்காக அவர் ஆள் ஜாமீன் கொடுப்பதாக ஒப்புக் கொண்டார். அவர் ஒப்புக்கொண்ட அந்த ஜாமீன் பணம் முழுவதையும் கொடுக்கும் வரையில் தமக்கு வேண்டிய முக்கிய மாணவர்களில் சிலரைக் கும்பினியாரிடம் பணயமாக ஒப்படைத்து வைத்து, அந்தப் பணத்தைச் செலுத்தி அவர்களை மீட்டு வருவதாகும்.

இதே போலப் படையின் மற்றொரு பகுதி சீமையின் வேறு பாகத்துக்கு அனுப்பப்பட்டது. அது முதலில் நத்தக் கோட்டையைத் தாக்கிப் பிடித்துக் கொண்டது. களக்காட்டுச் சீமையில் திருவாங்கூர் மன்னர் ஒரு படையை வைத்திருந்தார். அது உயர்ந்த பயிற்சியைப் பெற்றிருந்தது. அதைப் பயிற்றுவித்தவன் பெல்ஜிய நாட்டிலுள்ள பிளாண்டர்ஸ் என்ற பாகத்தைச் சேர்ந்த தெலனய் (De Lanoy) என்ற உத்தியோகஸ்தன். கும்பினிப் படை நத்தக் கோட்டையைத் தாக்கிப் பிடித்த செய்தியைக் கேட்டதும், அந்தத் திருவாங்கூர்ப் படை களக்காட்டுக் கோட்டையை உதறிவிட்டுத் தன் நாட்டுக்குத் திரும்பி

விட்டது. இதற்குப் பின், மற்றச் சில்லறைப் பாளையக்காரர்களும் அவரவர்கள் கொடுக்கவேண்டிய தொகையில் சிறு பகுதிகளைக் கொடுத்தார்கள். மொத்தத்தில் எழுபதினாயிரம் ரூபாய்கள் கூடத் தேறவில்லை. அது சைனியத்தின் செலவுக்கே காணவில்லை.

அதற்குள்ளாக அந்தப் படையை உடனே திருச்சிராப்பள்ளிக்குத் திரும்பிவிடுமாறு உத்தரவிட்டனர் கும்பினியார். அதனால் அவர்கள், பாக்கிப் பணத்தைச் செலுத்திப் பணயம் வைத்துள்ளவர்களை மீட்டுச் செல்லுமாறு பாஞ்சாலங் குறிச்சியாருக்குக் கடிதம் எழுதினார்கள். 'பணத்தைக் கொடுக்காவிட்டால் என்ன செய்யப் போகிறார்கள்? உடனே திரும்பி வரும்படி என்னவோ அவர்களுக்கு உத்தரவு வந்து விட்டது! எப்படியும் அவர்கள் திரும்பிப் போகவேண்டியவர்களே. பணம் செலுத்தினாலும் செலுத்தாவிட்டாலும் பணயக்காரர்களைத் தாமே விட்டுவிட்டுப் போகிறார்கள்,' என்று எண்ணினர் பாளையக்காரர். அதனால், பணம் கிடைக்கவில்லை யென்றும், அதற்காகவே முயன்று வருவதாகவும், கிடைத்தவுடனே அனுப்பிவிடுவதாகவும் பதில் தெரிவித்துக் காலதாமதம் செய்துவந்தனர்.

கும்பினியார் பெற்ற ஜாமீன் ஆட்களை விடவில்லை. அவர்களையும் உடன் அழைத்துக்கொண்டு சைனியம் திரும்பியது. கர்னல் ஹீரான் நேராகத் திருச்சிக்குச் செல்லவில்லை. திருநெல்வேலிச் சீமையில் நவாபின் பிரதிநிதியாக இருந்த அவர் சகோதரன் மாபூஜ்கான், நெற்கட்டும் செவ்வலையும் தாக்கி, பூலித் தேவரையும் அடக்க வேண்டும் என்று ஹீரானைக் கேட்டுக் கொண்டான்.

கர்னலும் அவ்விதமே பூலித்தேவர் கோட்டையை முற்றுகையிட்டார். அவர் அதிக நாள் அங்கே தங்க முடி

யாது என்பதையும், கோட்டையைத் தகர்க்க வேண்டிய பீரங்கிகள் அவரிடம் இல்லை என்பதையும் ரகசியமாகக் கர்னலின் துபாஷ் மூலம் தேவர் அறிந்துகொண்டார் அதனால் அவர் கர்னல் முற்றுகையிட்டபோது கீழ்ப்படியாமல் தீவிரமாக எதிர்த்தார். கர்னல் ஸ்வரம் இறங்கி இருபதினாயிரம் ரூபாய் கொடுத்தால் தாம் திரும்பிப் போய்விடுவதாகச் செய்தி அனுப்பினார். தேவரோ, தம்முடைய பாளையப்பட்டு முழுவதிலும் வசூலித்தாலும் அந்தத் தொகை தேறாது என்றும், பணத்தின் அருமை தமக்குத் தெரிந்திருப்பதுபோல மற்றவர்களுக்குத் தெரிந்திருந்தால் கும்பினியார் தம்மை அப்படிக் கேட்டிருக்க மாட்டார்கள் என்றும், தமக்கு ஒரு ரூபாய் கூடக் கொடுக்கச் சக்தியில்லை என்றும் பதில் அளித்துவிட்டார். சைனியமும் கலகஞ் செய்ய ஆரம்பித்துவிட்டது. அதனால் கர்னல் ஹீரான் அப்படியே பின்வாங்கித் திருச்சிராப்பள்ளி போய்ச் சேர்ந்தார்.

இந்த அத்தியாயத்தை முடிப்பதற்கு முன் நாம் கூற வேண்டுவது ஒன்று உண்டு. கர்னல் ஹீரான் திருநெல்வேலிச் சீமையில் இருந்தபொழுது அவரும் மாபூஜ்கானும், பாளையக்காரர்களிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் ஏராளமான வெகுமதிகளைப் பெற்றுக்கொண்டார்கள். அவை நவாபுக்காகக் கும்பினியர் வசூலிக்க வந்த கப்பத்துக் கணக்கைச் சேரவில்லை. ஹீரான், மாபூஜ்கான் ஆகிய இருவரும் அவற்றைத் தாங்களே எடுத்துக்கொண்டார்கள்.

நாட்டின் வருமானம் மிகவும் குறைந்துவிட்டது என்றும், கப்பம் வசூலிப்பது மிகவும் கஷ்டம் என்றும் இருவருமாகச் சேர்ந்துகொண்டு தெரிவித்துவிட்டார்கள். அதன் பயனாக மதுரை திருநெல்வேலி ஆகிய இரண்டு

சீமைகளும் வருஷவாரியில் பதினைந்து லக்ஷம் ரூபாய்களுக்குக் கட்டுக்குத்தகையாக மாபூஜ்கானுக்கே விடப்பட்டன.

திருச்சிராப்பள்ளி திரும்பிய கர்னல் ஹீரானைக் கும்பினியார் கூடிய சீக்கிரம் சென்னைக்கு வரவழைத்து விசாரித்து அவர் மீது சாட்டப்பட்ட குற்றங்களுக்காக வேலையை விட்டு நீக்கிவிட்டார்கள்.

இவ்விதம் கர்னல் ஹீரான் பாஞ்சாலங் குறிச்சி மீது படையெடுத்துச் சென்றதே முதலாவதாகும். இதற்குப் பிறகு, கும்பினியார் அடிக்கடி அங்கே சேனையை அனுப்பிக்கொண்டிருக்க நேர்ந்தது. அவற்றையும் முறையே கூறுவோம்.

## அத்தியாயம் 6

# குத்தகைத் தகராறு

'கதிர திர்ந்தன ககனமு மதிர்ந்தன வொன்னார்
பதிய திர்ந்தன பற்றல ரதிர்ந்தனர் விண்மீன்
உதிரி டும்படி யதிர்ந்தன வுடுவினா டுதிசெய்
மதிய திர்ந்தன மன்னவன் வாட்கொண்டபோதே!'

—கலியுகப் பெருங் காவியம்

---

கும்பினிப் படை திருநெல்வேலிச் சீமையை விட்டுச் சென்றதும் பாளையக்காரர்கள் பழைய வழிக்கே திரும்பி விட்டார்கள். மாபூஜ்கானை நவாபின் பிரதிநிதியாக அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. அவர்களுடைய சேவகர்கள் வெளிக் கிளம்பி நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று திறைப் பணம் வசூல் செய்தார்கள்.

மூடேமியா திருவாங்கூருக்குச் சென்று களக்காட்டைத் திரும்பவும் பிடித்துக்கொள்ளுமாறு மன்னரை உற்சாகப்படுத்தினான். திருவாங்கூர்ப் படை வந்தவுடன் அதனுடன் சேர்ந்துகொண்டு நாட்டைப் பிடித்துக்கொள்ளப் பூலித்தேவரும் தயாரானார்.

கர்னல் ஹீரானுடன் மதுரைக்குத் திரும்பிச் சென்ற மாபூஜ்கானுக்கு இச் செய்தி எட்டியதும் அவன் திருநெல்வேலிக்கு விரைந்து சென்றான். கும்பினியார் விட்டுச் சென்ற ஆயிரம் சிப்பாய்களையும், நவாபினிட மிருந்து வந்த அறுநூறு குதிரை வீரர்களையும் தவிர அவனும் ஒரு பெரும் படை திரட்டினான். ஆயினும் அவனுக்குப் போரை நடத்துவதற்கு வேண்டிய திறமை போதவில்லை

மாபூஜ்கான் வருவதற்குள்ளாகத் திருவாங்கூர்ப்படை களக்காட்டுக்குச் சமீபம் வந்துவிட்டது. பூலித்தேவரும் அதனுடன் சேர்ந்துகொண்டார். அங்கே நடந்த போரில் நவாபின் படை முறியடிக்கப்பட்டது. போர் வீரர்கள் திரும்பி ஓட்டம் எடுத்தனர். மிஞ்சிய முந்நூறு பேர்களும், தாங்கள் தாங்கிச் சென்ற துப்பாக்கிகள் ஓடுவதற்குத் தடையாக இருப்பதை யறிந்து அவற்றை எறிந்துவிட்டு ஓடினர்; எதிரிகள் அவற்றைப் பொறுக்கி எடுத்துக்கொண்டனர்.

உடனே மூடேமியா நவாபின் வசம் இருந்த களக்காட்டுக் கோட்டையைத் தாக்கினான். வெற்றி தங்களுக்கே நிச்சயமாகி இருந்தும் திருவாங்கூர்ப் படையினர் தாமதிக்கவில்லை; தம் நாட்டுக்குத் திரும்பிவிட்டனர். அவர்கள் திருவாங்கூரிலே தங்களுக்கு அவசர வேலை இருக்கிறது என்று சாக்குக் கூறினர். ஆனால் மாபூஜ்கானுக்கு உதவியாக அவனது குதிரைப்படை வருவதை யறிந்து அதற்கு எதிராக நின்று போர் புரிய விரும்பவில்லை என்பதே முக்கியமான காரணம்போலும்.

மூடேமியாவும் அப்படையுடன் போய்விட்டான். பூலித்தேவரும் நெற்கட்டுஞ் செவ்வலுக்குத் திரும்பி விட்டார். மாபூஜ்கான் உள்நாட்டுக் கலகத்தை அடக்கி விட்டதாக மனப்பால் குடித்திருந்தான். ஆனால் அமைதி நிலைத்திருக்கவில்லை.

மூடேமியா திருவாங்கூர்ப் படையுடன் மறுபடியும் வந்து களக்காட்டைத் தாக்கிக் கைப்பற்றினான். நவாபின் படை முன் தடவையைக் காட்டிலும் அதிகமாக அடிபட்டது. இருநூறு குதிரைகளும் ஐந்நூறு சிப்பாய்களும் சிறைப்பட்டனர்.

அது அறுவடைக் காலம். திருவாங்கூரார் நாட்டைக் கைக்கொண்டதன்றிக் கிஸ்தியையும் வசூல் செய்துகொண்

டார்கள். மாபூஜ்கான் பெரு நஷ்டம் அடைந்தான். சாப்பாட்டுக்கே சரியாகக் கிடைக்கவில்லை. அதனால் உணவுப் பொருள்களை வெளியிலிருந்து வரவழைக்க வேண்டியதாயிற்று. வழியில் கள்ளர்கள் அவற்றைக் கொள்ளையிட்டுச் செல்லாமல் காத்துச் செல்லக் கும்பினி யார் பட்டாளத்துடன் வந்தனர். வந்தும், பூலித்தேவர் அப்பொருள்களைக் கொள்ளையிட்டுச் சென்றார்,

மாபூஜ்கான் நெற்கட்டுஞ் செவ்வலை முற்றுகையிட்டான். ஒன்றும் பலிக்கவில்லை. பட்டாளத்தின் சம்பளப் பாக்கியைத் தீர்க்கப் பணம் இல்லை. பெருந்தொகை கொடுப்பவரும் இல்லை. நிலங்களை ஒற்றிவைத்தாவது அவற்றின் மீது கடன் வாங்கலாம் என்ற எண்ணத்துடன் அவன் திருநெல்வேலி திரும்பினான்.

இதற்கிடையில், தங்களுக்குக் கிடைத்த வெற்றியினால் சந்தோஷமும் தைரியமுங் கொண்ட பூலித்தேவர், மூடேமியா முதலானோர் தங்கள் பக்கத்தைப் பலப்படுத்திக்கொள்ள முயன்றனர். வடகரை முதலிய மேல்படாகைப் பாளையப்பட்டுகள் எல்லாம் ஒன்று சேர்ந்தன.

கீழ்ப்படாகைப் பாளையப்பட்டுகளையும் தங்களுடன் சேர்த்துக்கொள்ள முயன்றார் பூலித்தேவர். கிழக்குப் பக்கத்துக்குத் தலைமை பூண்ட பாஞ்சாலங் குறிச்சியாரை அங்ஙனமே வேண்டிக்கொண்டார். ஆனால் கட்டபொம்மு அதற்கு இணங்கவில்லை. அவரும் எட்டையபுரத்தாரும் இஸ்தி பாக்கிக்கு ஜாமீனாகக் கொடுத்திருந்த நபர்கள் திருச்சிராப்பள்ளியில் சிறைப்பட்டிருந்தார்கள்; நவாபுக்கு விரோதமாகப் பூலித் தேவருடன் சேர்ந்துகொண்டால் அவர்களை மீட்க வழியில்லாமல் போய்விடும் என்பதே அவ்வாறு இணங்காததற்கு முக்கிய காரணம் ஆகும்.

மூடேமியா மதுரைச் சீமைப் பாளையக்காரர்களையும் தன்னுடைய கட்சியில் சேர்த்துவிட்டான். அவர்கள் முதலில் மதுரையைத் தாக்கிப் பிடித்துவிடுவது என்று தீர்மானித்திருந்தார்கள்.

இச்செய்தி திருச்சிராப்பள்ளியிலிருந்த நவாபுக்கும் சென்னையிலிருந்த கும்பினியாருக்கும் எட்டியது. நவாபின் சகோதரனை மாபூஜ்கான் திறமை வாய்ந்தவன் அல்லன் என்பதே கும்பினியாரின் அபிப்பிராயம். ஆயினும் இது வரையில் அவர்கள் அதை வெளியிட்டுக் கூறத் துணியவில்லை. இப்பொழுது சமயம் நேர்ந்தது. அவர்கள் அதனை நவாபுக்கு நன்கு எடுத்துணர்த்தினர். நாட்டை அவனிடமிருந்து பிடுங்கித் தங்கள் மேற்பார்வையில் வேறொருவரிடம குத்தகைக்கு விடலாம் என்று எண்ணினர்.

திருநெல்வேலி தளவாய் முதலியார் பரம்பரையில் அப்பொழுது இருந்த தீத்தாரப்ப முதலியார் என்பார் அந்தச் சீமையைக் குத்தகைக்கு எடுத்துக்கொள்வதாகக் கூறிச் சென்னைக்கு வந்தார். அவர் அதற்கு முன்பு பல வருஷ காலம் மதுரை திருநெல்வேலிச் சீமைகளைக் குத்தகைக்கு எடுத்துப் பழக்கப்பட்டவர். ஒவ்வோர் ஊரையும் அறிவார். அவர் மதுரையை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. திருநெல்வேலியை மூன்று வருஷங்களுக்கு வருஷவாரி பதினொரு லக்ஷத்துக்குக் குத்தகை எடுத்துக்கொள்ளுவதாக ஒப்புக்கொண்டார். அந்த ஒப்பந்தப் பிரகாரம் நாட்டின் காவலின்பொருட்டுக் கும்பினியார் வைத்திருக்கும் சேனைக்கு வேண்டிய செலவுகளை அவரே கொடுக்க வேண்டும்.

இவ்வித ஒப்பந்தத்தை முடிக்கச் சம்பிரதாயமாகச் செய்யவேண்டிய காரியங்கள் முடிவு பெறவில்லை. அவை

முடியும் வரையில் பாளையக்காரர்களை அப்படியே விட்டு வைத்திருந்தால் பின்னால் பெரும் கெடுதி விளையும் என்று எண்ணிய கும்பினியார் உடனே அவர்களை அடக்க வழி தேடினர். ஆங்கிலப் படை ஒன்றும் கைவசம் இல்லை. ஆதலால் ஒரு சுதேசப் படையைத் தயாரித்து யூசுப்கான் வசம் ஒப்புவித்து அனுப்பினர்.

இந்தப் படை வருவதற்குள்ளாகப் பூலித்தேவரும் அவரைச் சேர்ந்தவர்களும் நடு மண்டலத்துள் நுழைந்து ஸ்ரீவில்லிபுத்தூர்க் கோட்டையைத் தாக்கினார்கள். அதனைக் காத்துவந்தவர்கள் நவாபின் சகோதரன் அப்துல் ரஹீம், நவாபின் உறவினனான ஒருவனான அப்துல் மஆலி ஆகிய இருவரும் ஆவர். மாபூஜ்கானுடைய குதிரைப் படை அவர்களுக்கு உதவியாக இருந்தது. அவர்கள் மிகுந்த கர்வம் பிடித்தவர்களாக இருந்தபடியால், போரை மேற்கொண்டு நடத்தும்படி தங்கள் தலைவர்களைத் தூண்டினார்கள். நவாபின் சேனையிலிருந்தவர்களுக்குச் சம்பளம் சரிவரக் கொடுக்கப் படாமையால் அவர்கள் முணுமுணுக்கலாயினர். பலர் எதிரிகளுடன் சேர்ந்துகொண்டார்கள். பாளையக்காரர்கள் கோட்டையைத் தாக்கிக் கைப்பற்றியவுடன் அவ்விரண்டு அதிகாரிகளும் தப்பி ஓடிவிட்டனர்.

பூலித் தேவருடைய வெற்றி மதுரைப் பாளையக்காரர்களுக்கு உற்சாக மூட்டியது. அவர்கள் முன்னம் வாக்குக் கொடுத்திருந்தபடி இவர்களுடன் சேர்ந்துகொண்டார்கள். அவர்கள் வசம் மொத்தம் ஆயிரம் குதிரைப் படை கொண்ட இருபத்தையாயிரம் ஆட்கள் இருந்தனர். எல்லோருமாகச் சேர்ந்து மதுரையை நோக்கிப் புறப்படாமல் முதலில் திருநெல்வேலியைத் தாக்க எண்ணினார்கள். அவ்விதமே புறப்பட்டுச் சென்றார்கள்.

பூலித் தேவரை எதிர்த்து நின்று போர் புரிய விரும்பிய மாபூஜ்கான் தன் பலத்தைப் பெருக்கிக்கொள்ள முயன்றான். கிழக்குப் பட்டாளைப் பாளையப்பட்டுகளைத் தன் வசமாக்க எண்ணினான். அவர்களுள் முக்கியஸ்தரான பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக்காரரைத் தன்னுடன் சேர்ந்துகொள்ளும்படி கேட்டுக்கொண்டான். அவர் விரும்பியபடி பக்கத்துக் கிராமங்கள் சிலவற்றை அவருக்குக் கொடுத்தான். அவர் ஆள் ஜாமீன் கொடுத்துச் சிறையில் அவதிப்படுபவர்களை மீட்டுவர உதவி புரிவதாகவும் வேறு பல சாதகங்கள் செய்து கொடுப்பதாகவும் வாக்களித்தான். பணயம் கொடுத்த ஆட்களை மீட்டு வருவதையே நோக்கமாகக் கொண்டிருந்த கட்டபொம்முவும் மாபூஜ்கானுடன் சேர்ந்துகொண்டார்.

பூலித்தேவருக்கும் கட்டபொம்முவுடன் கூடிய மாபூஜ்கானுக்கும் திருநெல்வேலியிலிருந்து ஏழு மைல்களுக்குள்ளாகப் பெரும் போர் நிகழ்ந்தது. அது நிகழ்ந்த காலம் 1756-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 21-ஆம் தேதி. இருதரத்தாரும் தீவிரமாக யுத்தம் செய்தார்கள். முடிவில் மூடேமியா சண்டையில் இறந்துவிட்டான். அவர்களுடைய சேனை சிதறுண்டது. பூலித்தேவர் தம்முடைய கோட்டைக்கு ஓடி ஒளிந்துகொண்டார். இங்ஙனம் பாஞ்சாலங் குறிச்சியாரால் மதுரை திருநெல்வேலி ஆகிய இரண்டு சீமைகளும் நவாபினிடமிருந்து செல்லாமற் காப்பாற்றப்பட்டன.

இந்தச் செய்தி சண்டை நடந்த மூன்றும் நாள் அதாவது 24-ஆம் தேதி, திருச்சிராப்பள்ளிக்கு எட்டி விட்டது. அப்பொழுது யூசுப்கான் அவ்விடத்தினின்றும் கிளம்பவில்லை; புறப்படுவதற்குத் தயாராக இருந்தான்.

ஜாமீன் விடுதலைப் பேச்சும் வெற்றி யடைந்தது. கட்டபொம்மு எட்டையபுரத்தார் ஆகிய இருவரும் கொடுக்கவேண்டிய கப்பத் தொகையைப் புதுக்கோட்டை மன்னராகிய தொண்டைமானிடம் சேர்த்து விடவேண்டும் என்றும், கும்பினியார் பணயம் கொண்ட ஆட்களை அவரிடம் விட்டுவிடுவர் என்றும், புதுக்கோட்டை அரசர் மத்தியஸ்தராய் இருந்து காரியத்தைத் தீர்த்து வைப்பார் என்றும் முடிவு செய்யப்பட்டது. யூசுப்கானும் அவ்விதமே ஜாமீன் ஆட்களுடன் தெற்கு நோக்கிப் புறப்பட்டான்.

யூசுப்கான் நவாபின் சகோதரனை மாபூஜ்கானைக் கயத்தாற்றில் சந்தித்தான். மாபூஜ்கான் சண்டையில் வெற்றி பெற்றிருந்தும் கவலையே உருவெடுத்தாற்போல விளங்கினான். நவாபுக்குச் சேரவேண்டிய குத்தகைப் பாக்கியைச் சரிவரச் செலுத்த முடியவில்லை. கும்பினிப் பட்டாளத்துச் செலவையும் கொடுக்க முடியவில்லை. தன்னுடைய சொந்தப் படையின் செலவைக்கூடச் சரிக்கட்ட முடியவில்லை. அதனால் அவன் நிர்வாகமே பாழாகக் கிடந்தது. யூசுப்கானாலும் பணம் சேகரிக்க முடியவில்லை. பாளையக்காரர்களுடைய உபத்திரவத்தால் சேதமடைந்த கிராமத்தார்கள் வரி செலுத்த முடியாமல் தவித்தனர். இந்த நிலைமையை நன்கு பயன்படுத்திக்கொண்ட சிலர் தங்கள் நஷ்டத்தை ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கியும் காட்டினர்.

கயத்தாற்றிலிருந்து யூசுப்கான் எட்டையபுரம் பக்கம் சென்றான். கட்டபொம்முவும் எட்டையபுரத்தாரும் அவனை எதிர் சென்று பார்த்தனர். பாஞ்சாலங் குறிச்சியாரின் பணய ஆட்கள் அதற்கு முன்பே திரும்பி வந்து விட்டனர். எட்டையபுரத்தாரின் ஆட்கள் மட்டும் வர

வில்லை. அவர் பணம் கொடுப்பதற்கு ஆலசியம் செய்து வந்தார். தேசம் உள்ள நிலையில் அவருடன் விரோதம் செய்துகொள்ள வேண்டாம் என்று எண்ணிய யூசுப்கான் சும்மா திரும்பிவிட்டான்.

அங்கிருந்து யூசுப்கான் முக்கியமான பாளையப்பட்டு ஒவ்வொன்றுக்கும் சென்று கப்பத்தை வசூல் செய்து கொண்டும், பாளையப்பட்டார் கொடுக்க மறுத்தால் கோட்டையைத் தாக்கி வெற்றிகொண்டும், ஸ்ரீவில்லிபுத்தூரை அடைந்தான். தந்திரம் வாய்ந்த பூலித் தேவரும் தம்முடைய பிரதிநிதியை அனுப்பிச் சமாதானம் செய்து கொண்டார். மாபூஜ்கான் உடனே ஆர்க்காட்டுக்குத் திரும்பிவிட்டால், நவாபு தமக்குச் சேரவேண்டிய குத்தகைப் பாக்கியைத் தள்ளிவிடுவார் என்றும், சேனைக்குச் சேரவேண்டிய சம்பளப் பாக்கியையும் கொடுப்பார் என்றும் சமாதானப்படுத்தி, அவனைத் திரும்பிச் செல்லுமாறு சொல்லிவிட்டு ஆகஸ்டு மாதம் 10 - ஆம் தேதி திருநெல்வேலி சேர்ந்தான் யூசுப்கான்.

## அத்தியாயம் 7

# யூசுப்கானும் பாளையப்பட்டுகளும்

''சாற்றுறு இங்கிரீ சென்னுஞ் சார்புள்ளார்
ஆற்றல்சேர் கும்பினி அரசென் றோதுவார்'
—கலியுகப் பெருங் காவியம்

---

திருநெல்வேலிச் சீமையின் நிலைமை குழப்பமாக இருக்கும்பொழுது கும்பினியார் சீமையின் குத்தகையைப் பதினொரு லக்ஷம் ரூபாய்க்குத் தளவாய் முதலியார் பரம்பரையைச் சார்ந்த அழகப்ப முதலியாருக்குக் கொடுத்து விட்டார்கள். முச்சலிக்கை எழுதி முடிந்ததும்,முதலியார் தம்முடைய ஏஜண்டுகளை நாட்டின் பல பாகங்களுக்கும் அனுப்பி, பயிரிடப்பட்ட நிலங்களில் எல்லாம் கும்பினி யாரின் கொடியை நாட்டும்படி ஏற்பாடு செய்தார். ஆனால் மாபூஜ்கானே தானே குத்தகைதாரன் என்று கூறிவந்தான். அவனுடைய பிரதிநிதியான மீர்ஜாபர், முதலியாரை அலட்சியம் செய்து தன் காரியத்தைப் பார்த்துவந்தான்.

கட்டபொம்முவையும் பூலித்தேவரையும் விரோதம் செய்துகொண்டால் தம்முடைய ஸ்திதி மோசமாகிவிடும் என்பதை முதலியார் நன்கு அறிவார். அதனால் பாளையக் காரர்களுடன் சிநேக பாவத்துடனே பழகி வந்தார். சீமையைத் தாம் குத்தகைக்கு எடுத்திருப்பதைத் தெரிவித்துப் பாளையக்காரர்களைத் திருநெல்வேலிக்கு வந்து போகவேண்டும் என்று வரவழைத்தார். கட்டபொம்முவும் இன்னம் ஒன்றிரண்டு பேர்களும் நேரில் வரவில்லை. தங்கள் பிரதி

நிதிகளையே அனுப்பிவைத்தனர். மற்றவர்கள் எல்லோ ரும் நேரில் வந்திருந்தனர். திருநெல்வேலியே குதூகலத் துடன் விளங்கியது.

அந்தக் குதூகலம் அதிக நாள் நீடிக்கவில்லை. கும் பினிப் பட்டாளத்துக்கும் பாளையக்காரர் சேனைக்கும் சண்டை உண்டாகிவிட்டது. பக்கத்துக் கிராமங்களைக் கொள்ளையிட்டார்கள் என்று கும்பினியார் பாளையப்பட் டுச் சேனையைச் சேர்ந்தவர் பலரைப் பிடித்துத் தண்டித்து விட்டார்கள். அவ்வளவுதான். கும்பினிச் சிப்பாய்களு டைய சாமான்களே சூறையாடப்பட்டன. அவர்களுக்கு என்ன செய்வது என்பது புரியவில்லை. பாளையப்பட்டுச் சேனையை ஒன்றும் செய்ய முடியவில்லை. அதனால் தங்கள் கோபத்தை யெல்லாம் முதலியார் பக்கம் திருப்பினார்கள்.

கும்பினியாருக்கும் குத்தகைதாரருக்கும் இடையே ஏற்பட்ட பிளவு விரிந்துகொண்டே வந்தது. ஒப்பந்தப் படி குத்தகைதாரர் தாம் நியமித்துள்ள கும்பினிச் சிப்பாய் களுக்கே சம்பளம் கொடுக்கவேண்டும். யூசுப்கான் அதனை வேறு விதமாக எண்ணிக்கொண்டான். அந்தப் பிரதேசத் திற்குள் சிப்பாய்கள் யாரால் எங்கே நியமிக்கப் பட்டிருந் தாலும் அவர்களுடைய சம்பளத்தையும் குத்தகைதாரரே கொடுக்கவேண்டும் என்று தீர்மானித்தான். அத்தப் படைக்கு முன்னம் கொடுக்க வேண்டிய இரண்டு மாதச் சம்பள பாக்கியையும் கேட்டான். முதலியார் மறுத்து விடவே யூசுப்கானுடைய உதவிக்கு வந்திருந்த ஜமால் சாயபு, முதலியாரைச் சிறை செய்து காவலில் வைத்த துடன், பூலித்தேவர் முதலிய பாளையக்காரர்களை உடனே திருநெல்வேலியை விட்டு வெளியே போய்விடுமாறும் கட்டளையிட்டான்.

இதனைப் பாளையக்காரர்கள் தங்களுக்கு இழைத்த அவமதிப்பு என்றே கருதினர். அவர்கள் தங்கள் தங்கள் பாளையங்களுக்குப் போகாமல் மேலே நடக்கவேண்டியதைப் பற்றிக் கூடிப் பேசினர். கட்டபொம்முவின் உதவியை நாடினர்.

இந்தச் சமயத்தில் திருவாங்கூரார் தங்கள் படையை அனுப்பிக் களக்காட்டை மறுபடியும் கைக்கொண்டனர். எஞ்சிய பட்டாணியர் இருவரும் அவர்களுடன் சேர்ந்துகொண்டார்கள். பர்க்கத்துல்லா என்பவனுக்குக் கும்பினியாரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்வது பிடிக்கவில்லை. பூலித்தேவரும் அவர்களுக்கு உதவி செய்ய முன்வந்தார். எல்லோரும் நவாபின் பிரதிநிதியாக இருந்துவந்த மாபூஜ்கானை நெருங்கி ஆசை வார்த்தைகள் கூறினர். அவனும் ஒப்புக்கொண்டான்.

பாளையக்காரர் பக்கம் பதினாயிரம் பேர் கொண்ட ஒரு பெரும் படை திரண்டது. அவர்கள் திருநெல்வேலியைக் குறிவைத்துச் சென்றனர். ஆனால் திறந்த வெளியின் வழியாகச் செல்லவில்லை. பாஞ்சாலங் குறிச்சிப் பாளையத்துள் நுழைந்தனர். அவ்விடத்தில் உள்ள காடுகள் அவர்கள் நடமாட்டத்தை மறைத்தது. பாளையக்காரர்கள் ஆழ்வார்திருநகரியைத் தாக்கப் போகிறார்கள் என்று கேள்விப்பட்டுக் கும்பினியாரிட மிருந்து விடுதலை யடைந்திருந்த முதலியார் தம்முடைய படையுடன் அங்கே சென்றார். ஆனால் பாளையக்காரர்களோ எந்தப் பக்கம் செல்கிறார்கள் என்பதைப் பிறர் அறியா வண்ணம் திருநெல்வேலியை நெருங்கினார்கள். அதனைச் சுலபமாகப் பிடித்துக்கொண்டு இரண்டு நாட்கள் ஊரைச் சூறையாடினர். முதலியாரும் இதைக்கேட்டு ஓடிவந்தார். மதுரை சென்றிருந்த யூசுப்கானும் விரைந்து வந்தான். கங்கைகொண்டானுக்குச் சமீபத்தில் இருதரத்தாருக்கும் நடந்த சண்

டையில் கும்பினியார் வெற்றி கொண்டனர். பாளையக்காரர்கள் மூலைக்கொருவராக ஓடிக் காட்டிற்குள் ஒளிந்து கொண்டார்கள்.

பாளையக்காரர்களும் மாபூஜ்கானும் வேறு ஓர் ஏற்பாட்டையும் செய்ய நினைத்தார்கள். அக்காலத்தில் திண்டுக்கல்லைப் பிடித்துக்கொண்டிருந்த மைசூர் தளவாய் ஹைதர் அலீயுடன் சேர்ந்துகொள்வதாகப் பேச்சுவார்த்தை நடத்தினர். பூலித்தேவர் ஐந்து லக்ஷம் ரூபாய் வசூலித்துக் கொடுப்பதாகவும், மாபூஜ்கானுடைய ஜமேதார் சோழவந்தான் சீமையைக் கொடுத்துவிடுவதாகவும், அவற்றிற்குப் பதிலாக மைசூரார் பாளையக்காரர்கள் கும்பினியாருடன் போர் புரிந்து வெற்றி கொள்ளும்படி உதவிபுரிய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர். வெற்றி கொண்டபின் மதுரைச் சீமையைத் தங்களில் ஒருவரும் எடுத்துக் கொள்ளாமல், சிவகங்கையில் வசித்துவந்த பழைய மதுரை நாயக்க வமிச பரம்பரையைச் சேர்ந்த விஜயகுமாரனுக்குக் கொடுத்து விடுவதென்றும் மாபூஜ்கான் அந்தஸ்திற்கு ஏற்றவாறு மைசூரார் தங்கள் நாட்டில் அவருக்கு ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

இதனை அறிந்த கும்பினியார் மதுரையைக் காப்பாற்ற விரைந்தனர். யூசுப்கானும் குத்தகைதாரராகிய முதலியாரும் சென்றனர். அவர்கள் பூலித் தேவரைத் தங்களுக்கு உதவி செய்யும்படி கேட்டுக்கொண்டார்கள். பூலித்தேவர் எதையும் ஒரு பொழுதும் மறுத்தவரல்லர். செய்வதாகக் கூறிக் காலம் கடத்தி வருவது அவர் வழக்கம். அவ்விதமே அவர் கும்பினியாருக்கு உதவி செய்வதாகக் கூறினாரே ஒழிய இருந்த இடத்தை விட்டு நகரவில்லை. அதற்குப் பதிலாகத் தம் பிரதிநிதியை ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அனுப்பிக் கும்பினியாரின் நடவடிக்கைகளைக் கவனித்துவர

ஏற்பாடு செய்தார். அவ்விடத்தில் ஏதோ திருடினார்கள் என்ற குற்றத்துக்காக யூசுப்கான் அவர்களில் ஐந்து மறவர்களைப் பிடித்துப் பீரங்கி வாயில் வைத்துச் சுட்டுவிட்டான்.

இது பூலித் தேவருக்குப் பின்னும் அதிகமாக ஆத்திர மூட்டியது. அதனால் அவர் பார்க்கத்துல்லாவுடனும் மாபூஜ்கானுடனும் பேசி, நல்ல காலம் பிறக்கும் வரையில் மாபூஜ்கான் தம்மிடமே தங்கி யிருக்கலாம் என்று ஆசைகாட்டி, அவனை நெற்கட்டுஞ் செவ்வலுக்கு அழைத்துச் சென்றார். மாபூஜ்கான் தம்முடைய கோட்டைக்குள் உயிருடன் இருக்கும் வரையில் கும்பினியார் தம்மை ஒன்றும் செய்யமாட்டார்கள் என்ற எண்ணமே இதற்குக் காரணம்.

யூசுப்கான் திருநெல்வேலிச் சீமையைத் தாண்டியது தான் தாமதம்; மாபூஜ்கானே நவாபின் பிரதிநிதி, குத்தகைக்காரர் என்று விளம்பரம் செய்யப்பட்டது. நாட்டின் பல பாகங்களிலும் பாளையக்காரர்கள் கப்பம் வசூல் செய்யக் கிளம்பினர். மாபூஜ்கான் மறுபடியும் திருவாங்கூராருடன் களக்காட்டுச் சீமையை அவர்களுக்கே கொடுத்துவிடுவதாகப் பேரம் பேசினான். ஆனால் அவர்களையே முற்றும் நம்பி யிராமல் கும்பினிப் படையாருடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தி வந்தான்.

கும்பினிப் படையின் பெரும் பகுதி மதுரைக்குப் போய் விட்டவுடன், மாபூஜ்கானின் படை நாட்டைக் கொள்ளையிட ஆரம்பித்தது. பாளையங் கோட்டையைக் கைப்பற்ற அதனைத் தாக்கியது. கும்பினியாருக்காக அதனைக் காத்து வந்த சிப்பாய்த் தலைவன் வசவப்ப நாயக்கன் என்பவனால் அதனை எதிர்க்க முடியவில்லை. நாட்டின் நிலைமையில் அவனுக்கு உதவி செய்யக் கூடியவர் பாஞ்சாலங் குறிச்சியார் ஒருவரே. அதனால் அவன் கட்ட பொம்மு

வைத் தனக்கு உதவிக்கு வரும்படி வேண்டிக் கொண்டான். அவருடைய பாளையத்தை ஒட்டிய கிராமங்கள் சிலவற்றை அவருக்கு வழங்கி அவர் உதவியைப் பெற்றான். கட்ட பொம்முவும், எட்டையபுரம் சேனையுடன் வந்து, பாளையங் கோட்டையை முற்றுகை யிட்டிருந்த மாபூஜ்கான் படையை முறியடித்துக் கோட்டையை விடுவித்தார்.

அம்மட்டிலோ! கட்டபொம்மு தம் படையை நடத்திச் சென்று மதுரையைக் கைப்பற்றுவதற்காக அதனை முற்றுகையிட்டிருந்த கும்பினிப் படைக்குப் பெரிதும் உதவி செய்து அதனை மீட்கலானார். இவ் விதம் கட்டபொம்முவின் உதவியாலேதான் அந்தக் காலத்தில் நவாபுக்குச் சாதகமான நிலைமை ஏற்பட்டது. அதன் பயனாக அவருக்கும் பல கிராமங்கள் கிடைத் தன.

யூசுப்கான் மறுபடியும் மதுரையிலிருந்து திரு நெல்வேலிக்குத் திரும்பிவந்த பொழுது மாபூஜ்கான் கட்சி வலுத்து நின்றதைக் கண்டான். நவாபுக்கு விரோதமாக மேல்படாகைப் பாளையக்காரர்கள் ஒன்று சேர்ந்து மாபூஜ்கான் பக்கலில் நின்றனர். களக்காடு முதலிய பாகங்கள் திருவாங்கூரார் வசம் இருந்தன. நாட்டின் பெரும் பகுதியில் நவாபு கும்பினியார் முதலி யோருடைய செல்வாக்குக் குறைந்துவிட்டது. பாளையங் கோட்டை என்றைக்கு அவர்கள் கையில் விழுந்து விடுமோ என்று பயப்படக்கூடியபடி இருந்தது.

குத்தகைதாரரான தளவாய் முதலியார் தம்முடைய கடமையைச் சரிவரச் செலுத்த முடியாமல் கஷ்டப்பட்டு வந்தார் அதனால் நாட்டின் நிர்வாகத்தை யூசுப்கானே நேரில் நடத்திவர நேர்ந்தது. மாபூஜ்கான் திருநெல் வேலிச் சீமையில் இருக்கும் வரையில் நாட்டில் அமை

தியை நிலைநிறுத்த முடியாது என்பதைக் கண்டு அவன் அந்தச் செய்தியைக் கும்பினியாருக்குத் தெரிவித்தான். கும்பினியார் அதை நவாபுக்குக் கூற அவரும் ஒப்புக்கொண்டு தம் சகோதரனைத் திருப்பி அழைக்க ஒரு தூதனை அனுப்பினர்.

மாபூஜ்கானும் பாளையக்காரர்களும் அக்காலத்தில் ஆங்கிலேயக் கும்பினிக்கு விரோதமாக இருந்த பிரெஞ்சுக்காரர்களுடைய உதவியை எதிர்பார்த்திருந்தார்கள். கும்பினியாருக்கும் தங்கள் படையைத் திருநெல்வேலிக்கு அனுப்ப வேறு பயம் ஒன்றும் இருந்தது. மைசூர் தளவாய் ஹைதர்அலீ திண்டுக்கல்லைப் பிடித்து அவ்விடத்தில் தங்கியிருந்தான். அவன் கும்பினியாரிடம் விரோத பாவம் கொண்டவன். அவன் எப்பொழுது மதுரையைத் தாக்கிக் கைப்பற்றுவானோ என்ற பயத்தால் கும்பினியார் தங்கள் படையை அவ்விடத்திலேயே நிறுத்திவைக்க வேண்டியிருந்தது. ஹைதர் அதிக நாள் அவ்விடம் நிற்கவில்லை. திரும்பிப் போய்விட்டான் என்ற செய்தியை அறிந்த யூசுப்கான் கவலை நீங்கியவனாகத் தன் படையைத் திருநெல்வேலிக்கு நடத்திச் சென்று பாளையக்காரர்களை அடக்கத் தலைப்பட்டான்.

நவாபின் தூதனால் மாபூஜ்கானைச் சமாதானம் செய்து அழைத்துப் போக முடியவில்லை. அரச குடும்பத்தைச் சேர்ந்த தன்னுடைய நிலைக்கேற்ற ஸ்தானத்தை வகிப்பதற்கு அந்தச் சீமையைப் போக விருத்தியாக, ஜாகீராகக் கொடுக்கவேண்டும் என்று கேட்டான் மாபூஜ்கான். அவன் பாளையக்காரர்களிடம் அகப்பட்டு 'எடுப்பார் கைப் பிள்ளை' போல் ஆடினான்.

இந்த நிலையில் பிரெஞ்சுக்காரர், கும்பினியாரின் தலைநகரான சென்னையை முற்றுகையிட்டிருந்தார்கள். அதனால் யூசுப்கான் உடனே சென்னைக்குத் திரும்ப அழைக்கப்பட்டான்.

பிரெஞ்சுக்காரர் கும்பினியாரைத் தாக்கிப் பெற்ற சிறு வெற்றிகள் தென்னாட்டுப் பாளையக்காரர்களுக்குத் தைரியத்தை அளித்தன. பிரெஞ்சுக்காரர்களுடைய துருப்புக்கள் வரும் என்பதை எதிர்பார்த்துப் பாளையக்காரர்கள் மாபூஜ்கானுக்குப் பட்டம் சூட்டி நவாபுக்குரிய சகல மரியாதைகளையும் செய்தார்கள். ஆனால் அவனுக்கு உண்ண உணவில்லை; பூலித் தேவர் கொடுத்தால்தான் உண்டு.

பாஞ்சாலங் குறிச்சியை ஆண்டு வந்த கட்டபொம்முவான பொல்லாப் பாண்டிய நாயக்கர், நாட்டின் மேலதிகாரம் யாரைச் சேர்ந்தது என்பது நிச்சயப்படாமல் தத்தளிக்கும் இச்சமயத்தில், கி. பி. 1759–60-ஆம் வருஷத்தில் இறந்து விட்டார். அவருக்குப் பிறகு அவருடைய மூத்த குமாரரான ஜகவீர பாண்டிய நாயக்கர் பட்டம் எய்தினர்.

இறந்து போனவராவது கும்பினியாரிடம் விரோதம் பாராட்டி வந்தாலும் தமக்கு லாபம் கிடைக்கக் கூடிய பொழுதெல்லாம் அவர்களுக்கு உதவி செய்து வந்தார். புதிதாகப் பட்டத்துக்கு வந்தவரோ அப்படிப்பட்டவரல்லர். கும்பினியாரைக் கண்டாலே அவருக்குப் பிடிக்காது. அதே போல அவர்கள் ஆதிக்கத்திற் குட்பட்ட நவாபின் குத்தகைக்காரர்களையும் அவர் வெறுத்து வந்தார். முக்கிய காரணம் அவர்கள் கட்டபொம்மு செலுத்த வேண்டிய கப்பத்தைக் கணக்குப் பிசகாமல் வசூலிக்க முயன்றதேயாகும்.

சென்னையிலிருந்து யூசுப்கான் திரும்பி வருவதற்குப் பத்து மாதங்கள் ஆயின. திருநெல்வேலியின் நிலைமையில் ஒருவித மாறுதலும் காணப்படவில்லை. முன் போலவே மாபூஜ்கானைப் பொம்மையாக வைத்துக் கொண்டு பூலித்தேவரும் வடகரைப் பாளையக்காரரும் முக்கியஸ்தர்களாக ஆடிவந்தனர்.

யூசுப்கான் பாளையக்காரர்களை அடக்கும் வேலையை மறுபடியும் துவக்கினான். கொல்லங் கொண்டான், கோலார்பட்டி முதலிய கோட்டைகளைத் தாக்கி அழித்தான். பாஞ்சாலங் குறிச்சியார் அந்தப் பாளையங்களுக்கு உதவி செய்ய வருவதாக இருந்தது. யூசுப்கான் தன் படையை எட்டையபுரம் காட்டுக்குள் அனுப்பிப் பாஞ்சாலங் குறிச்சியாரையும் எட்டையபுரத்தாரையும் அவர்கள் உதவிக்குச் செல்ல முடியாதபடி தடுத்து விட்டான். இந்தச் செய்தியைக் கேட்டதும் மாபூஜ்கானுக்குப் பயம் உண்டாகி விட்டது. அதனால் அவன் தன்னுடைய நிலைக்கேற்றவாறு ஏதாவது ஒரு ஜாகீரைக் கொடுத்தால் தான் விலகிக் கர்நாடகத்துக்குப் போய் விடுவதாகச் சொல்லியனுப்பினான். அன்றியும், பாளையக்காரர்கள் தன்னை விடமாட்டார்களாதலால் தன்னை அழைத்துப் போகத் தகுந்த துணை அனுப்பினால் உடனே புறப்பட்டுத் திருநெல்வேலி வந்து சேர்ந்து விடுவதாகவும் தெரிவித்தான்.

பாளையக்காரர்களுக்கு முக்கிய உதவியளித்து வந்த திருவாங்கூராரையும் உதவியளிக்க முடியாதபடி தடுத்து விட விரும்பினான் யூசுப்கான். திருவாங்கூர் எல்லையை அடுத்திருந்தது வடகரை என்ற சொக்கம்பட்டிப் பாளையம். வடகரையார் அடிக்கடி திருவாங்கூர் எல்லைக்குள் புகுந்து அந்தப் பிரதேசங்கள் தம்மைச் சார்ந்தவை என்று கூறித் திறைப் பணம் வசூலித்தும், பணம் கொடுக்காவிட்டால் கொள்ளையடித்தும் போவர். வட

கரையைத் தாக்கி அடக்கத் தான் உதவி அளிப்பதாகவும் யூசுப்கான் திருவாங்கூராருக்குத் தெரிவித்தான்.

அவ்விதமே இருவரும் சேர்ந்து வடகரையைத் தாக்கிப் போர் நிகழ்த்தினர்கள். அதற்குப் பதினயிரம் போர் வீரர்கள் வந்திருந்தார்கள். வடகரையார் அதிக நாள் எதிர்க்க முடியாமல் இரவோடு இரவாகக் கோட்டையை விட்டு நெற்கட்டுஞ் செவ்வலுக்கு ஓடி விட்டனர்.

அஞ்சா நெஞ்சம் படைத்த வடகரையாரே நிற்க முடியாமல் ஓடிவந்தது பூலித் தேவருக்கு அச்சத்தை விளைவித்தது. எனினும், கும்பினிப் படை வந்தவாசியில் தோல்வியடைந்த செய்தியும், கர்நாடகத்துச் சண்டை முடிந்தவுடன், பிரெஞ்சுப் படையை அனுப்பித் திருநெல்வேலிச் சீமையில் உள்ள கும்பினிப் படையை வென்று, முகம்மது அலீக்குப் பதிலாக மாபூஜ்கானை நவாபாக நியமிப்பதாகத் தைரியம் கூறித் துப்ளே எழுதிய கடிதமும் இந்தச் சமயத்தில் வந்து சேர்ந்தன.

பூலித் தேவர் இக்கடிதத்தைத் திருவாங்கூராருக்கு அனுப்பிக் கும்பினிப் படையை விட்டுத் தங்கள் கட்சியில் சேர்ந்து பலனை அடையும்படி கேட்டுக்கொண்டார். திருவாங்கூரார் இந்தக் கடிதத்தைக் கொண்டு கும்பினி யாரைப் பயமுறுத்த முற்பட்டார். கும்பினியார் அனுப்பிய பீரங்கிகள் வந்து சேராமல் தவித்துக் கொண் டிருந்த யூசுப்கான், வேறு வழியில்லாமல் திருவாங் கூராருக்கு இணங்கி அவர் விரும்பியபடி களக்காட்டுச் சீமையை அவருக்குக் கொடுத்து விட்டான். அவன் அந்த வேண்டுகோளை மறுத்திருந்தால் திருவாங்கூரார் பாளையக் காரர்களுடன் சேர்ந்திருப்பர். அங்ஙனமாயின் அவர் களுடைய வலிமை மிகவும் அதிகமாகியிருக்கும். ஆகவே கும்பினியாரும் இதனை அங்கீகரித்தனர்.

யூசுப்கானும் திருவாங்கூராரும் முதலில் பூலித் தேவர்மேல் படையெடுத்துச் செல்லத் தீர்மானித்தார்கள். அங்ஙனமே, மேற்குமலைத் தொடர்ச்சிக்கு மூன்று மைல் தூரத்தில் உள்ள வாசுதேவ நல்லூர் என்னுமிடத்தில் அமைந்த அவர் கோட்டையை முற்றுகை யிட்டனர். அது மண் கோட்டைதான் எனினும் மலைப் பக்கத்தே இருந்த படியால் அரண் வலி கொண்டது. பாளையக்காரர்கள் அந்தக் கோட்டையை நன்கு காத்து வந்தனர். கும்பினிப் படை ஒரு மாத காலம் காத்திருந்தும், பீரங்கி கொண்டு தாக்கியும் கோட்டையைத் தகர்க்க முடியவில்லை.

பூலித் தேவர் நெற்கட்டுஞ் செவ்வலிலிருந்து புறப் பட்டு வந்து யூசுப்கானைப் பின்புறமாகத் தாக்கினார். இதை அறிந்து கோட்டைக்குள் ளிருந்தவர்களும் தாக்கி னார்கள். இரு புறங்களிலும் தாக்குண்டு நிலைமையைச் சமாளிக்க முடியாமல் யூசுப்கான் பின்னடைந்தான். திரு வாங்கூரார் தங்கள் நாட்டிற்குத் திரும்பினர். யூசுப் கான் திருநெல்வேலிக்குச் சென்றான்.

இனி, கும்பினியாரிடமிருந்து பீரங்கி முதலிய உதவி கள் வந்து சேரும்வரையில் பாளையக்காரர்கள் மீது படையெடுத்துச் செல்வது சாத்தியமில்லை என்பதை உணர்ந்த யூசுப்கான் அவற்றின் வருகையை எதிர்பார்த் திருந்தான். திண்டுக்கல் பிரதேசத்தில் ஹைதர் அலீயுடன் கும்பினியாருக்கு மீண்டும் போர் ஏற்பட்ட தால் அவர்களிடமிருந்து உதவி உடனே வருவதற்கும் இடம் இல்லை. இடைக்காலத்தில் அவன் செய்யக் கூடியது, பாளையக்காரர்கள் கொட்டம் அதிகமாகாமல் பார்த்துக்கொண்டிருப்பது ஒன்றுதான். அதே போல அவன் திருநெல்வேலியில் தங்கிப் பாஞ்சாலங் குறிச்சி யாரும் எட்டையபுரத்தாரும் அதிகவலிமையும் ஆதிக்க மும் பெறுமலும், அவர்கள் பக்கத்துக் கிராமங்களில்

புகுந்து கொள்ளையிடாமலும் கவனித்து வந்தான். தன் படையின் முக்கியமான பகுதி ஒன்றை அனுப்பி அவ் விதமே மேல்படாகைப் பாளையங்களைக் கவனித்து வர ஏற்பாடு செய்தான்.

பாளையக்காரர்களும், மாபூஜ்கான் திரும்பி வருவதை எதிர்பார்த் திருந்தார்கள். அண்ணனுக்கும் தம்பிக்கும் சமாதானம் ஏற்படாது என்றும், அதனால் அவன் மறுபடியும் திரும்பித் தங்களிடம் வருவான் என்றும் அவர்கள் நம்பியிருந்தனர். அவன் வருகையை எதிர்பார்த்துத் தங்கள் கட்சியைப் பலப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதனால் இடையில் சிறு கலகங்களைக் கிளப்பிவிடவும் அவர்கள் விரும்பவில்லை.

# அத்தியாயம் 8

## உலாந்தாக்காரர் உறவு

'காசுரைச் சட்டையர் கனகத் தொப்பியர்
மாசறு கலிங்கவார் மலிந்த மேனியர்'

—கலியுகப் பெருங் காவியம்.

---

இந்தச் சமயத்தில், கி. பி. 1760–ஆம் ஆண்டில், திருநெல்வேலிச் சீமையில் ஆங்கிலக் கும்பினியாருக்கு எதிர்பாராத புதிய விரோதிகள் தோன்றினார்கள். அவர்கள் உலாந்தாக்காரர் எனப்படும் டச்சுக்காரர்கள். பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியவர்களைப் போலவே இந்திய மக்களுடன் வியாபாரம் செய்து லாபம் அடையும் எண்ணத்துடனே பறங்கியர் எனப்படும் போர்த்துகீசியர்களும் உலாந்தாக்காரர் எனப்படும் டச்சுக்காரர்களும் வந்திருந்தனர். டச்சுக்காரர்கள் தங்கள் தலைமை ஸ்தானத்தை இந்தியாவில் வைத்துக் கொள்ளவில்லை. அது கிழக்கிந்தியத் தீவுகளில் உள்ள படேவியாவில் இருந்தது. இந்தக்காலத்திற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னால், கி. பி. 1658-ஆம் ஆண்டில், அவர்கள் தூத்துக்குடியைப் போர்த்துகீசியர்களிடமிருந்து கைப்பற்றியிருந்தனர். அதற்கு முன்பிருந்த போர்த்துகீசியர்களைப் போல டச்சுக்காரர்கள் அந்தப் பிரதேசத்தில் குடியிருந்த பரவர்கள் மீது கடுமையான ஆதிக்கியம் செலுத்தவில்லை. தங்கள் லாபத்துக்குப் பாதகம் ஏற்படாத வரையில் அவர்களுடைய சமூக வாழ்க்கையில் டச்சுக்காரர்கள் தலையிடவில்லை.

டச்சுக்காரர்கள் தென்னாட்டிலிருந்த தங்கள் பிர தேசங்களை மூன்று பகுதிகளாகப் பிரித்திருந்தனர். பழவேற்காட்டைத் தலைமை ஸ்தானமாக உடைய சோழ மண்டலக் கரைப் பகுதி, கொச்சியையுடைய மலையாள தேசப்பகுதி, தூத்துக்குடியை முக்கியமாகக் கொண்ட மதுரைப் பகுதி என்பவை அவை மூன்றும். தூத்துக் குடியில் அவர்கள் ஒரு சிறு கோட்டை கட்டி அதில் ரெஸிடெண்டு என்னும் அதிகாரி ஒருவனை வைத்தார்கள். அவர்கள் சிறிது சிறிதாக அந்நாட்டுத் துணி வியாபார உரிமை முழுவதையும் கைக்கொண்டனர். ஏற்றுமதி யாகும் துணிகளுக்கு அவர்கள் அனுமதி அவசியமாக இருந்தது. அதனுடன் அவர்கள் அந்தக் கரையில் முத்துக் குளிக்கும் பாத்தியதையையும் அனுபவித்து வந்தனர். எதிர்க்கரையான இலங்கைத் தீவும் அவர்கள் கையில் இருந்தது அவர்களுக்குச் சௌகரியமாக இருந்தது. துணி வியாபாரத்திற்காக அவர்கள் கடற்கரை ஓரமாக வேம்பார், வைப்பாறு, புன்னைக்காயல், பழையகாயல், மணப்பாடு, குமரி முதலிய இடங்களிலும் கிட்டங்கிகள் ஏற்படுத்தினர். உள்நாட்டில் ஆழ்வார்திருநகரி அவர் களுடைய ஆதிக்கத்தில் இருந்தது.

தென்பாண்டி நாட்டிலே கர்நாடக நவாபும், அவர் சார்பாக ஆங்கிலேயக் கும்பினியாரும் ஆதிக்கம் நடத்தி வருவது பாளையக்காரர்களுக்கும் திருவாங்கூராருக்கும் உறுத்தலாக இருந்தது. இவ்விருவரும் கும்பினியின் ஆதிக்கத்தை எவ்விதத்திலாவது ஒழித்துவிடுவது என்றிருந்தனர். கும்பினியாருடைய விரோதிகள் இவர் களுடைய நண்பர்கள்; அதே போல அவர்களுடைய நண்பர்களை இவர்கள் விரோதிகளாகவே பாவித்து வந்தனர்.

தூத்துக்குடியில் இருந்த உலாந்தாக்காரர்களுக்கும் ஆங்கிலக் கும்பினிக்கும் இடையில் அதிக நட்பு இல்லை. அதனால் உலாந்தாக்காரர்களைத் தங்கள் வசம் சேர்த்துக் கொண்டால் அது பெரிய அனுகூலமாக இருக்கும் என்பதை உணர்ந்த பாளையக்காரர்களும் திருவாங்கூராரும் டச்சுக்காரர்களுடைய உதவியை நாடினர்.

ஐரோப்பியக் கும்பினிக்காரர்கள் தென்னாட்டுக் கரையோரங்களில் தங்கிய காலத்திலிருந்தே நம் நாட்டு மன்னர்களிடமிருந்து பல வகை உரிமைகளைப் பெற்று வந்தனர். பேரரசுகள் வலிகுன்றிச் சிறு ராஜ்யங்களும் பாளையங்களும் ஏற்பட்ட பின், கும்பினிகள், அந்த அந்தச் சிற்றரசுகளின் வலிமைக்குத் தக்கபடி, உரிமைகளை அனுபவிக்கும் பாத்தியதையைப் புதுப்பித்துக் கொண்டோ பழைய பாத்தியதையைக் கொண்டாடித் தங்கள் உரிமைகளை வற்புறுத்தியோ வந்தன.

அவ்விதமே மதுரை நாயக்க மன்னர்களின் ஆட்சி க்ஷீண தசை அடைந்த பின், திருநெல்வேலிக் கரை ஓரமாக வியாபாரம் நடத்தும் பாத்தியதையையும் முத்துக் குளிக்கும் பாத்தியதையையும் பாளையக்காரர்கள் தங்களுடையவை என்று கொண்டாடினார்கள். தூத்துக்குடி டச்சுக்காரர் அவ்வித உரிமைகளை அனுபவிக்கப் பாஞ்சாலங்குறிச்சியார் அனுமதியளித்து வந்தனர். பாஞ்சாலங்குறிச்சி பெரிய பாளையமாக இல்லா விடினும், வலிமை மிகுந்திருந்ததால் டச்சுக்காரர்களும் ஒருவிதமாக அவர்களுக்கு அடங்க ஒப்புக்கொண்டிருந்தனர்.

திருநல்வேலிச் சீமையில் ஆங்கிலக் கும்பினியார் ஆதிக்கியம் ஏற்படுவதை டச்சுக்காரர்களும் விரும்பவில்லை; அதனால் தங்கள் வியாபாரம் படுத்துப் போகும் என்று பயந்தார்கள்; கும்பினியாரை விரட்டச் சமயம்

பார்த்திருந்தார்கள். பாளையக்காரர்கள் தங்களுடைய உதவியை நாடிய இந்தச் சந்தர்ப்பத்தை அவர்கள் கை நழுவ விடவில்லை.

அந்தச்சமயத்தில் இலங்கைக்குப் படேவியாவிலிருந்து ஐரோப்பியத் துருப்புக்கள் ஏராளமாக வந்திருந்தன. தூத்துக்குடியினின்றும் கொழும்புக்கு அனுப்பப்பட்ட வேண்டுகோளின்படி அந்தப் பட்டாளத்தின் ஒரு பகுதி புறப்பட்டுத் தூத்துக்குடிக்கு வந்தது. கூடாரம், பீரங்கி முதலிய எல்லாக் கருவிகளுடனும் இருநூறு ஐரோப்பியர்கள் வந்திறங்கினர். அதேபோல மற்றொரு பகுதி மணப்பாட்டில் வந்திறங்கியது. வேறொரு பட்டாளம் திருவாங்கூருக்குச் செல்வதற்காகக் கொச்சிக்குச் சென்றது. "இன்னம் ஏராளமான துருப்புக்கள் படேவியாவிலிருந்து வந்து கொண்டிருக்கின்றன" என்றும் அவர்கள் கூறினார்கள்.

பாளையக்காரர்கள் ஒன்றும் அறியாதவர்களைப்போல நடித்து இதைக் கண்டு பயந்தார்கள். யூசுப்கானுக்கும் இது பீதியை உண்டு பண்ணியது. உடனே அவன் தூத்துக்குடிக்கு ஆள் அனுப்பி ரெஸிடெண்டு துரையிடம் இதற்குக் காரணம் என்னவென்பதைத் தெரிவிக்கும்படி கேட்டான். ஆனால் அவனோ ஒன்றும் கூறமுடியாது என்று மறுத்து விட்டான்.

டச்சுப்படை உள்நாட்டுக்குள் புகுந்து ஆழ்வார் திருநகரியைப் பிடித்துக் கொண்டது. பாளையக்காரர்களும் தங்கள் தலையைத் தூக்கிக் கும்பினியாருக்கு விரோதமாக நின்றார்கள். யூசுப்கான் பாளையக்காரர்களை அடக்குவதை விட்டுத் தன் வசம் உள்ள நாலாயிரம் துருப்புக்களையும் சேர்த்து ஆழ்வார்திருநகரி, தூத்துக்குடி முதலிய இடங்களை நோக்கிப் புறப்பட்டான். கும்பினிப் படையை

எதிர்த்து நின்று போர் புரியக்கூடிய நிலையில் இல்லை டச்சுப் படை. அன்றியும் போர் புரிந்து தனக்கே சேதம் உண்டுபண்ணிக் கொள்ளவும் விரும்பவில்லை. அதனுல் அப்படை வாய் திறவாமல் வந்த வழியே திரும்பிக் கொழும்பு போய்ச் சேர்ந்தது.

இந்தப் படையெடுப்பு எவ்வளவு சீக்கிரமாகக் கிளம்பியதோ அவ்வளவு சீக்கிரமாகவே அடங்கி விட்டது.

# அத்தியாயம் 9

# அஞ்ஞாத வாசம்

'தொண்டைக் குழியிலே சீவ னிருந்தாலும்
தோக்கல வார்வீரம் போய்விடுமோ!'

---

மாபூஜ்கான் திருநெல்வேலிக்குத் திரும்பி வர வில்லை. கும்பினியார்கள் புதுச்சேரியையே முற்றுகை யிட்டுவிட்டார்கள். பிரெஞ்சுக்காரர்கள் ஆதிக்கம் குறைந்துவிட்டது. அதனால் அவர்களிடமிருந்து இனி உதவியை எதிர்பார்ப்பது பிரயோசனமில்லை என்பதைக் கண்டுகொண்டார்கள் பாளையக்காரர்கள். ஆகவே, அவர்கள் கொஞ்சம் அடங்கியே இருந்தார்கள்.

**1761**-ஆம் ஆண்டில் யூசுப்கான் திருநெல்வேலிச் சீமையை நான்கு வருஷங்களுக்கு வருஷவாரி ஏழுலக்ஷம் ரூபாய்களுக்குக் குத்தகை எடுத்துக்கொண்டான். ஒரு காலத்தில் தங்கள் செல்லப் பிள்ளையாகக் கருதிய யூசுப்கான் ஆதிக்கம் பெற்று வருவதைக் கண்டு நவாபும் கும்பினியாரும் கதிகலங்கினர். அதன் பயனாக விரோதம் உண்டாயிற்று. அவர்களிடையே ஏற்பட்ட அந்த விரோதம் நாளுக்கு நாள் விருத்தியாகியது. கடைசியில் கும்பினியார் **1764**-ஆம் ஆண்டில் யூசுப்கானைப் பிடித்துத் தூக்கிவிட்டனர். அது வேறு கதை.

யூசுப்கானுக்குப் பிறகு, திருநெல்வேலிச் சீமையின் குத்தகை தளவாய் அழகப்ப முதலியாருக்குச் சிறிது காலம் கொடுக்கப்பட்டிருந்தது. அவருக்குப் பிறகு ராஜா ஹுகுமத்ராம் என்பவர் **1765**-ஆம் ஆண்டிலிருந்து குத்தகைதாரர் ஆனார்.

களக்காட்டுச் சீமைத் தகராறு முடியும் வரையில் திருவாங்கூராருடன் போர் புரியக் கும்பினியார் விரும்ப வில்லை. மலைக்குக் கிழக்கே உள்ள நாடுகளை நவாபுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்று கும்பினியார் ராஜீ பேசினார்கள். இந்த ஏற்பாடு 1766-ஆம் ஆண்டில் முடிந் தது. அதற்குப் பிறகு அவர்கள் உபத்திரவம் நீங்கியது.

பாளையக்காரர்களோ பழையபடி கப்பம் கொடுக்க வில்லை. காவல் பணங்களைத் தங்களிஷ்டம் போலக் குடி மக்களைத துன்புறுத்தி வசூல் செய்து வந்தனர். கொடாத வர்களுடைய சொத்துக்கள் சூறையாடப் பட்டன. பாளையக்காரர்களுடைய படை இருபதினாயிரம் துருப் புக்களைக் கொண்டிருந்தது.

பாளையங்கோட்டையிலிருந்த கும்பினிச் சேனாதிபதி காப்டன் பிரிஷ்மன் (Frischman) என்பவன், நவாபின் சேனாதிபதியான பக்ஷி என்பவன் வசம் நாலாயிரம் வீரர்கள் கொண்ட ஒரு படையை அனுப்பிப் பாஞ்சாலங் குறிச்சியைப் பிடிக்க ஏற்பாடு செய்தான்.

நவாபின் படை ஒன்றும் செய்ய முடியவில்லை. கோட்டையைத் தாக்க முடியவில்லை. கோட்டைக்கு வெளியே காத்திருந்துவிட்டுச் சும்மா திரும்பியது. அக்கா லத்தில் கும்பினிப் படை என்றும் நவாபு படை என்றும் தனித் தனிப் படைகள் இருந்தன. ஒவ்வொன்றுக்கும் தனித் தனி அதிகாரிகளும் இருந்தனர்.. அவர்களுக்குள் உண்டான போட்டியே அக்காலத்தில் இவ்விதமான நிகழ்ச்சிகள் ஏற்பட்டதற்கு முக்கிய காரணம். ஆயிரம் குதிரைகளையும் பீரங்கிகளையும் கொண்ட அந்தப் படை ஒன்றும் செய்ய முடியாமல் திரும்பியது பாளையக்காரர் களுடைய மதிப்பை அதிகமாக்கியது.

கும்பினியார் அதற்கடுத்த வருஷம் மறுபடியும் பாஞ்சாலங் குறிச்சியைத் தாக்கினர். அதற்கு மேஜர் பிளிண்ட் (Flint) என்பவர் தலைமை வகித்துச் சென்றார். கும்பினியார் இந்தப் படையெடுப்பை நடத்தப் பலமாக முன்னேற்பாடுகள் செய்திருந்தனர். கனமான பீரங்கிகள் பல கொண்டுவரப்பட்டன. அதற்கு முன்பாகச் சிறு பாளையக்காரர்கள் கோட்டைகளைக் கூடப் பிடிக்க முடியாமல் இருந்தமையால் கும்பினியார் இழந்திருந்த கௌரவத்தை நிலைநிறுத்தவே இவ்வேற்பாடுகள் செய்யப்பட்டன. அதனால் அவர்கள் சில்லறைக் கோட்டைகளை விட்டுக் கிழக்குப் படாகைக்குத் தலைமையாயுள்ள பாஞ்சாலங் குறிச்சியைத் தாக்க எண்ணினார்கள்.

கும்பினிப் படையினர் பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டைக்கு முன்பு பாடி யிறங்கினர். பாளையக்காரர்களும் உள்ளிருந்துகொண்டு வெளியே உள்ள தங்கள் எதிரிகளை எதிர்த்தனர். கும்பினியார் பெரிய பீரங்கி கொண்டு காலையிலிருந்து பகல் முழுவதும் குண்டு போட்டுக் கோட்டையைத் தகர்க்க முயன்றனர்; முடியவில்லை. அந்தப் போரில் கும்பினியார் பக்கம் எட்டு ஐரோப்பியர்கள் உள்பட மொத்தம் 92 பேர்கள் இறந்தனர்.

அதனால் மேற்கொண்டு கோட்டையைத் தாக்குவதைக் காட்டிலும் அதனை முற்றுகையிட்டால் உள்ளிருப்பவர்கள் அவதிப்பட்டுப் பணிந்துவிடுவார்கள் என்று எண்ணி, அவ்விதமே கோட்டையைச் சுற்றித் துருப்புக்களை அணிவகுத்து நிறுத்தினர் கும்பினியார். ஆனால் பாளையக்காரரோ இரவோடு இரவாகத் தப்பித்துக்கொண்டு ஓடிவிட்டார்கள். சிலர் தூத்துக்குடிக்கு ஓடினார்கள். வேறு சிலர் வைப்பாற்றுக்குச் சென்றனர். இங்ஙனமாக அவர்

கள் யாவரும் டச்சுக்காரர்களிடம் அடைக்கலம் புகுந்தனர்.

சீமையின் நிலைமை மோசமாகிக்கொண்டு வருவதைக் கவனித்த கும்பினியார் அதனைச் சீர்செய்யக் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ள விரும்பினர். நவாபுக்கும் அதனை அறிவித்துவிட்டுக் கர்னல் காம்பெல் என்பவரைப் பொறுக்கி அனுப்பினார்கள். அவரும் நல்ல படையுடன் புறப்பட்டு வந்து, சேத்தூர், சிவகிரி, வாசுதேவநல்லூர் முதலிய கோட்டைகளைக் கைப்பற்றி அவற்றைத் தரை மட்டமாக இடித்துத் தள்ளிவிட்டார்.

இவ்விதம் அடிக்கடி சண்டை சச்சரவுகள் நடந்து வந்தமையால், குடிமக்கள் உழுதொழிலைக் கைவிட்டனர். நிலங்கள் பயிர் செய்வாரின்றித் தரிசாகக் கிடந்தன. அப்படியிருந்தால் கும்பினியாருக்குப் பணம் எப்படி வசூலாகும்? ஆதலின், குடிமக்களைத் திருப்பி அழைத்து வந்து நிலங்களைப் பயிர் செய்விக்க விரும்பினர் கும்பினி யார். அதற்குப் பாளையக்காரர்களுடன் ராஜி பேசி நாட்டில் கொள்ளை யடிக்காமலிருக்க அவர்களைச் சமாதானம் செய்யவேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடு களையும் செய்தனர்.

கர்னல், பாளையக்காரர்களின் வக்கீல்களை, அதாவது காரியஸ்தர்களை வரவழைத்து அவர்களிடம் தம்முடைய கோரிக்கைகளைத் தெரிவித்துக்கொண்டார். முன்பு நீக்கப்பட்டிருந்த வடகரைப் பாளையக்காரருக்கு அவருடைய பாளையத்தின் பாகம் ஒன்றைக் கொடுத்து அவரைச் சாந்தப்படுத்தித் தம் பக்கத்துக்கு அழைத்துக் கொண்டார்.

ஆனால் கும்பினியாருக்குப் பாஞ்சாலங் குறிச்சி, சிவகிரி ஆகிய இரண்டு பாளையக்காரர்கள் மீதிருந்த

கோபம்மட்டும் தணியவில்லை. அதனால் அவர்களுடைய தூண்டுதலால் நவாபின் குத்தகைதாரரான ராஜா ஹுகுமத் ராம் அவ்விருவர்களையும் தேசப் பிரஷ்டம் செய்துவிட்டார்.

தேசப் பிரஷ்டம் செய்யப்பட்ட பாஞ்சாலங் குறிச்சியார் ராமநாதபுரத்துக்கு ஓடிச் சேதுபதியை அடைந்தனர். ஹைதர் அலீயும் இதனை யறிந்து தென்னாட்டுப் பாளையக்காரர்களைத் தன்னுடன் சேர்ந்துகொள்ளும்படிக்கும், அவ்விதம் செய்தால் அவர்கள் தன்னுடைய படையின் உதவியைக் கொண்டு நவாபு கும்பினியார் இருவரையும் துரத்திவிடலாம் என்றும் ஆசைகாட்டி அவர்களுக்குக் கடிதங்கள் எழுதினான். ஆனால் அந்த நோக்கம் கைகூடவில்லை.

ஓடிப்போன பாளையக்காரர்கள் வழக்கம்போலத் தங்கள் பாளையங்களிலிருந்து திறைப்பணத்தை வசூல் செய்து தான் வந்தார்கள். பழைய பாளையக்காரர்களுடைய காரியஸ்தர்கள் குடிமக்களிடையே கலகங்களைக் கிளப்பி வந்தனர்.

ராஜா ஹுகுமத் ராமுக்குப் பிறகு குத்தகைதாரராக வந்த சையது முகம்மது கான் 1771–ஆம் ஆண்டில் பாஞ்சாலங் குறிச்சியிலிருந்து முன்னம் விரட்டிவிடப்பட்ட பாளையக்காரருக்குப் பதிலாக வேறொருவனை நியமித்தார். ஆனால் புதிய பாளையக்காரனால் நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை.

எப்படியும் பாளையம் தமக்குத் திரும்பி வந்து விடும் என்று எண்ணியிருந்த கட்டபொம்முவுக்கு இது பெரிய ஏமாற்றத்தையும் ஆத்திரத்தையும் உண்டாக்கியது. அவ்விதம் பாளையத்தை ஏற்றுக்கொண்டவன் அவருடைய தாயாதிகளுள் ஒருவனாக இருந்தான் என்றால் அது

அவருக்கு எவ்விதமாக இருந்திருக்கும் என்பதை ஊகித்துப்பார்க்க வேண்டியதுதான்.

இது பொறுக்காமல் ராமநாதபுரத்தில் ஒளிந்திருந்த கட்டபொம்மு 1776–ஆம் ஆண்டின் கடைசியில் திரும்பி வந்துவிட்டார், அவர் வந்துவிட்டதை யறிந்த நாட்டு மக்களும் அவர் பக்கம் சேர்ந்துகொண்டு கலகம் செய்தார்கள். புதிய பாளையக்காரனைப் பிடித்துக் கொன்றுவிட்டார்கள். கட்ட பொம்மு பழையபடி தம்முடைய பதவியை அடைந்தார்.

தம்முடைய ஸ்திதியை உத்தேசித்து அவர் நவாபினிடம் விரோதம் பாராட்டக் கூடவில்லை. கொஞ்சக் காலமாவது அவருடைய நட்பு அவசியம் என்பதை உணர்ந்து அவருடன் சேர்ந்துகொண்டார். அதற்கடுத்த வருஷம் கும்பினியார் சிவகிரியாருடைய கோட்டையைத் தாக்கிய பொழுது பாஞ்சாலங் குறிச்சியாரும் நவாபுக்கு உதவி செய்ததினின்றும் இது நன்கு விளங்கும்.

# அத்தியாயம் 10

## புல்லர்ட்டன் படையெடுப்பு

*சென்னலுங் கத்தி கட்டிச் சேவித்து நின்று தங்கள்
நன்னய மரபுக் கேற்ற நல்லுப சாரஞ் செய்து
மன்னவர் மன்னீ யென்றும் கனமகன் துரைநீ யென்றும்
சொன்னவார்த் தையுமேன் மேலும் துலங்கிய பாஞ்சை நாடு'

— கலியுகப் பெருங் காவியம்

---

திருநெல்வேலிச் சீமையின் நிலைமையில் மாறுதல் ஏற்படவில்லை. பாளையக்காரர்கள் கும்பினியாருக்கு அடங்கா திருந்துவந்தனர். தூத்துக்குடியில்இருந்த டச்சுக் காரர்கள் அவர்களுக்குப் பெரிதும் உதவி புரிந்தனர். ஹைதர் அலீ பாளையக்காரர்களுக்கு ஆசை வார்த்தைகள் கூறிவந்தான். திருநெல்வேலிச் சீமையில் நவாபின் குத்தகைதாரரும் ரகசியமாக ஹைதருடன் சேர்ந்துகொண்டு உதவி செய்துவந்தார். டச்சுக்காரர்கள் ஆங்கிலேயர்களுடன் ஹைதருக்கு விரோதமாக வெளியில் நடித்துவந்தாலும் உண்மையில் ஆங்கிலேயர்களுக்கு விரோதமாகவே இருந்தனர்; தூத்துக்குடியிலிருந்த தங்கள் கோட்டையைப் பலப்படுத்தினர்.

பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக்காரர்கள் டச்சுக் காரருடன் சேர்ந்துகொண்டனர். அவர்கள் கோட்டையில் டச்சுக்காரர் கொடியைப் பறக்கவிட்டிருந்தனர். சிவகிரிப் பாளையக்காரரும் கும்பினியாருக்கு விரோதமாகக் கிளம்பிக் கலகம் விளைத்து வந்தனர்.

---

*சென்னல் - சேனைத் தலைவன் - General.

கும்பினியாருக்கு ஹைதருடன் போர் செய்து வெற்றி பெறுவதிலேயே நோக்கம் சென்றது. திருநெல்வேலிச் சீமையின் தொந்தரவு இல்லாமல் இருக்க வேண்டி அதனைக் கைகழுவ நினைத்தார்கள். அந்தச் சீமையை டச்சுக்காரர்களுக்கே கொடுத்து விடலாம் என்றும் எண்ணினார்கள். கும்பினியார் ஹைதருடன் போர் புரிவதற்கு டச்சுக்காரர்கள் ஆயிரம் ஐரோப்பியத் துருப்புக்கள், இருநூறு பீரங்கிப் பட்டாளம், ஆயிரம் மலயா பட்டாளம் ஆகியவற்றை உதவினால், அவர்களுடைய செலவைக் கும்பினியாரே ஏற்றுக்கொள்வதுடன் அந்த உதவிக்காகத் திருநெல்வேலிச் சீமையை அவர்களுக்குக் கொடுத்து விடுவதாகவும் தீர்மானித்தார்கள். டச்சுக் காரர்கள் கர்நாடக நவாபுக்கு அந்தச் சீமை மீதுள்ள மேலதிகாரத்தை ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும், கும்பினியார் தங்கள் உரிமைகளை டச்சுக்காரர்களுக்கு மாற்றுவதை நவாபு ஒப்புக்கொள்வதாக அவரிடம் கையெழுத்து வாங்கிக் கொடுப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இந்தக் கோரிக்கை நவாபாலும் சென்னை அரசாங்கத்தாராலும் ஒப்புக்கொள்ளப்படவில்லை. உடன்படிக்கையின் நகலை மேலே அனுப்பாமல், இந்த விஷயத்தை இங்கிலாந்தில் உள்ள தங்கள் டைரக்டர்களுக்குத் தெரிவித்து அவர்கள் அனுமதி கோரினார்கள். ஆனால் கூடிய சீக்கிரம் டச்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் போர் மூண்டதால் இந்த ராஜிப் பேச்சு அப்படியே விடப்பட்டது.

தென்னாட்டின் நிர்வாகம், நவாபு கும்பினியார் ஆகிய இருவர்களுக்கும் உட்பட்டதாக இரட்டையாட்சி முறையில் நடந்து வந்தமை இருதரத்தாருக்கும் கெடுதலையே விளைவித்தது என்பதைக் கும்பினியார் கண்டு கொண்

டார்கள். அதனால் அவர்கள் நவாபுடன் கி. பி. 1781–ஆம் ஆண்டுக் கடைசியில் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார்கள். அதன்படி நவாபு திருநெல்வேலிச் சீமையின் வரி வசூல் நிர்வாகத்தைக் கும்பினியாரிடம் ஒப்படைத்தார்; மொத்த வருமானத்தில் ஆறில் ஒரு பங்கைத் தம்முடைய சொந்தச் செலவுக்காக அவர்கள் கொடுத்து விடவேண்டும் என்றும், மீதியைத் தாம் கும்பினியாருக்குக் கொடுக்கவேண்டிய பணத்திற்கும், அப்புறம் ஏற்படும் செலவுக்கும் வரவு வைத்துக்கொள்ளவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கும்பினியாரும் அதன்படியே திருநெல்வேலிச் சீமையின் நிர்வாகத்தைத் தாங்களே ஏற்றுக்கொண்டு இப்பொழுது கலெக்டர் என்று கூறக்கூடிய ஹோதாவில் உள்ள ஐரோப்பிய அதிகாரிகளை நியமித்தனர். அவர்கள் குத்தகைதாரரைத் தங்கள் அதிகாரத்தின் கீழ்க் கொணர்ந்தனர். நவாபும் அவ்விடத்தில் இருந்த தம்முடைய பௌஜ்தார் அமல்தார் முதலியவர்களுக்குக் கும்பினியார் நியமிக்கும் புதிய அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி உத்தரவு அனுப்பினர்.

ஆங்கிலேயர்களுக்கும் டச்சுக்காரர்களுக்கும் போர் மூண்டுவிடவே பாளையங்கோட்டையிலிருந்த கும்பினிப் படை தூத்துக்குடியைத் தாக்கி அதனைக் கைப்பற்றியது. அவ்விடத்திலிருந்த டச்சுக்காரர்கள் சிறை செய்யப்பட்டனர். அந்தக் காலத்தில் அவர்களுக்கு உதவியாகப் பாஞ்சாலங் குறிச்சியைச் சேர்ந்தவர்கள் இருநூறு பேர்கள் வந்திருந்தார்கள். கும்பினியார் படை கோட்டையைப் பிடிக்கப்போகிறது என்பதைக் கேட்டு அவர்கள் ஓடி விட்டனர். புன்னைக் காயல், மணப்பாடு ஆகிய இடங்களில் இருந்த டச்சுக் கோட்டைகள் அழிக்கப்பட்டன.

இதற்குள் கும்பினியாரின் முதல் கலெக்டராக வந்த ப்ராக்டர் துரைக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் அபிப்பிராயபேதம் ஏற்பட்டுவிட்டது. குடிகளும் ப்ராக்டர் மீது குறை கூறினார்கள். அதனால் கும்பினியார் இர்வின் என்பவரை அனுப்பினார்கள். அந்தச் சீமையின் நிலைமையை நன்கு பரிசோதித்துத் தங்களுக்கு அறிவிக்கும்படியும் அவர்பால் திட்டம் செய்தார்கள்.

அவர் பார்த்தபொழுது திருநெல்வேலியில் பாளையக்காரர்கள் வசம் ஒரு லக்ஷம் படையிருந்தது. கும்பினியாரின் கஜானா காலி; பணம் இல்லை. பாளையக்காரர்களின் கப்பம் பாக்கியாகவே கிடந்தது. கும்பினியாரின் படையினருக்கு உண்ணச் சோறும் உடுக்கத் துணியும் நல்லவைகளாகக் கிடைக்கவில்லை. அவர்களைப் பயிற்றுவிக்கத் தக்க தலைவர்களும் இல்லை. கிராமங்கள் பல பாழாகக் கிடந்தன. குடிமக்கள் வீடு வாசல்களைத் துறந்து வெளியேறிவிட்டனர்.

பாளையக்காரர்கள் ஆதிக்கம் இருக்கும் வரையில் தங்களுடைய ஆட்சி நடைபெறாது என்பதைக் கண்டு கொண்டனர் கும்பினியார். அதனால் அவர்கள் 1783-ஆம் ஆண்டில் கர்னல் புல்லர்ட்டன் (Col. Fullarton) தலைமையில் ஒரு படையை அனுப்பினார்கள். புல்லர்ட்டனும் முதலில் பாஞ்சாலங் குறிச்சியைத் தாக்கி அழிக்கத் தீர்மானித்தார். அக்காலத்தில் திருநெல்வேலிப் பாளையக்காரர்களில் பாஞ்சாலங் குறிச்சியார் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொக்கம்பட்டியை முற்றுகையிட்டிருந்தார்கள்; டச்சுக்காரர்களும் உதவியாக இருந்தனர். கட்டபொம்மு சொக்கம்பட்டியிலிருந்து திரும்பி வருவதற்குள் பாஞ்சாலங் குறிச்சியைப் பிடித்துவிட விரும்பினார் புல்லர்ட்டன்.

மதுரையிலிருந்து புறப்பட்ட புல்லர்ட்டன் வேறு வழியாகப் போக்குக் காட்டிவிட்டு, சிவகங்கையிலிருந்து நான்கே நாட்களில் நூறு மைல்கள் நடந்து பாஞ்சாலங் குறிச்சியை அடைந்தார். கோட்டைக்குப் பக்கத்தில் பாடி யிறங்கிக் கோட்டையிலிருப்பவர்களுக்குக் கொடி போட்டு அனுப்பினார்; கோட்டை வாயிலைத் திறந்து தங்களை உள்ளே விடும்படியும் மேலே நடத்த வேண்டியதை இருவரும் கலந்து யோசிக்கலாம் என்றும் தெரிவித்தார். ஆனால் பாளையக்காரர்கள் இணங்கவில்லை.

கோட்டையைக் காக்க ஆயிரக்கணக்கான துருப்புக்கள் கூடிவிட்டன. தாமதம் செய்வதில் பலனில்லை. சொக்கம்பட்டியில் பாடி யிறங்கியுள்ள கட்டபொம்மு திரும்பி வந்துவிட்டால் நிலைமையைச் சமாளிக்கக் கும்பினிப்படையால் முடியாது. முன்புறம் கோட்டைக்குள்ளிருப்பவர்கள் பின்புறம் சொக்கம்பட்டியிலிருந்து வந்துள்ள கட்டபொம்முவின் படை; இவ்விதம் இரு படைகளுக்கும் இடையில் அகப்பட்டுக்கொண்டு தவிக்க வேண்டும். அதனால் அவர்கள் கட்டபொம்மு வருவதற்குள் கோட்டையைத் தகர்த்துவிட உடனே ஏற்பாடுகள் செய்தனர். அவசரமாகப் பீரங்கி மேடு ஒன்றை நிறுவினர். ஒரு குளக்கரை மறைவில் பீரங்கிப் படையை நிறுத்தினர். மூன்று மணி நேரத்திற்குள் எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்தனர்.

மேலே நிகழப் போகும் யுத்த விவரங்களை நன்கு அறிந்துகொள்வதற்கு அந்தக் கோட்டையின் அமைப்பைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். அதனால் அதை இவ்விடத்திலே கூறிவிடுவோம்.

பாஞ்சாலங் குறிச்சி திருநெல்வேலி ஜில்லாவிலே கோவில்பட்டித் தாலுக்காவில் உள்ள ஒட்டப்பிடாரம்

என்னும் ஊருக்கு வடக்கே இரண்டு மைல் தூரத்தில் இருந்தது. ஊரின் மத்தியிலே கோட்டை கட்டப்பட்டிருந்தது. கோட்டைக்குத் தெற்கு வாசல்தான் பிரதான வாசல். அதற்கு முன்னாலேதான் திருவாங்கூர்ப் பக்கத்திலிருந்து ராமேசுவரம் சென்ற பழைய சாலை இருந்தது. சாலையின் தென்புறம் பிராமணர்கள் வீடுகள் இருந்தனவாம். கோட்டைக்குக் கிழக்கேதான் வேளாளரும் மற்றோரும் குடியிருந்தனர்.

கோட்டை பார்வைக்கு அழகாக இராது. அதனைக் கண்ணுற்ற ஐரோப்பியப் போர் வீரர்கள் அதை மிகவும் பரிகசித்துள்ளார்கள். அது சுமார் ஐந்நூறு அடி நீளமும் முந்நூறு அடி அகலமும் உள்ளதாக இருந்தது. சுவர்கள் மண்ணால் கட்டப்பட்டவை; செங்கல்லைவிட உறுதி வாய்ந்தவை; கீழே அகலமாகவும், மேலே போகப்போகச் சரிவாகவும் சுமார் 12 அடி உயரம் உள்ளவை. அடிப்பாகத்தின் அகலம் சுமார் பதினைந்து அடியிருக்கும். உச்சியில் மூன்று அடியிருக்கும். இரட்டைச் சுவராகக் கட்டப்பட்டு நடுவில் கம்பு, உமி, வரகு வைக்கோல் முதலியவற்றை அடைத்திருப்பார்கள். இதனால் சுவரை எளிதில் உடைக்க முடியாது. சுவர் வெளிப்புறம் சரிவில்லாமலும் உள்புறம் அதிகச் சரிவாகவும் கட்டப்பட்டிருக்கும். போர்க் காலங்களில் உள்ளிருப்பவர் மதில்மேல் ஏறிச் சண்டை செய்யும்படியும், வெளியில் உள்ளவர்கள் சுவரின் மேல் ஏற முடியாதபடியும் அமைந்திருந்தது.

கோட்டையின் நான்கு மூலைகளிலும் கொத்தளங்களும் நடுவில் அலங்கங்களும் இருந்தன. நடு நடுவே சிறு சிறு கொத்தளங்களும் இருந்தன. கொத்தளங்களின் மேலே செல்வதற்குச் சுமார் இரண்டு அடி அகலமுள்ள படிகள் உண்டு. அவற்றைச் சுற்றிச் சிறு மதில்களும்

உண்டு. அவற்றில் உள்ள திட்டி வாசல் வழியாகவே கொத்தளங்களுக்கு ஏறிச் செல்லவேண்டும்.

அலங்கம் கிளிக்கூட்டு அலங்கம்; சிறு துவாரங்களை யுடையது. உள்ளிருப்பவர்கள் வெளியே யுள்ளவர் களைப் பார்க்கவும், யுத்த காலங்களில் துப்பாக்கி ஈட்டி முதலியவற்ருல் தாக்கவும் சௌகரியமாக அமைந்தது. வெளியில் உள்ளவர்கள் உள்ளிருப்பவர்களைக் காண முடி யாது; அவர்கள் என்ன செய்கிருர்கள் என்பதையும் அறிய முடியாது.

சுவர்களின் உச்சியில் ஜனங்கள் நடமாடக்கூடிய படி சிறு பாதையும் அதற்குக் கைப்பிடியும் இருந்தன.

இந்த வெளிக்கோட்டைக்கு உள்ளே ஒரு காரைக் கோட்டை இருந்தது. அது பார்வைக்கு அழகாக இருந் தது என்று கூறப்படுகின்றது.

இந்தக் கோட்டை சமவெளியில் கட்டப்பட்டிருந்தா லும் பக்கத்தில் அகழி இல்லை. கோட்டைக்குப் பாது காப்பு அதனைச் சுற்றிப் போடப்பட்டிருந்த இலந்தை முள்வேலிதான். அப்படிப்பட்ட வேலி ஒன்று ஊரைச் சுற்றியும் இருந்தது.

அந்தக் கோட்டையின் உள்ளே பாளையக்காரரின் அரண்மனை இருந்தது. அவருடைய குடும்பத்தார்கள் வசிக்கச் சிறு சிறு கட்டிடங்களும் கோட்டை முழுவதும் கட்டப்பட்டிருந்தன. அவர்கள் குலதெய்வமாகிய சக்க (ஜக)தேவியின் கோயில் கஜப்ருஷ்ட ஆகிருதியாக—அதாவது குதிரைக் குளம்புபோல—வட்ட வடிவமாகக் கட்டப்பட்டிருந்தது. இன்னும் நெல் களஞ்சியம் முதலி யனவும் இருந்தன.

கோட்டையையும் ஊரையும் சுற்றிப் பல குளங்கள் இருந்தன. கோட்டைக்கு வெளியில் ஒரு சிவன் கோயிலும் இருந்தது.

கர்னல் புல்லர்ட்டன் முதலில் கோட்டைக்குள் இருப்பவர் வெளியில் ஓடிவிடாமலும், வெளியாரிட மிருந்து உதவி பெருமலும் தடுப்பதற்காகத் தம்முடைய படையை நான்கு புறங்களிலும் நிறுத்தி வைத்தார். வாசல்களை நன்கு பாதுகாக்க ஏற்பாடு செய்தார். பிறகு வடகிழக்கு மூலையிலிருந்த கொத்தளத்தை இடிக்க ஆரம்பித்தார். ஆனல் அது கனமாக இருந்ததால் முடியாமற்போகவே அந்த எண்ணத்தை விட்டுப் பக்கத்தில் உள்ள அலங்கத்தை உடைக்க ஆரம்பித்தார். பகல் முழுவதும் பீரங்கி கொண்டு இடித்தும் முழு வேலையும் முடியவில்லை. அதனல் சந்திரோதயம் வரையில் அதை நிறுத்திவிட்டுக் கோட்டையைச் சுற்றியுள்ள வேலியை அப்புறப்படுத்தினர்.

இரவு பத்துமணிக்குச் சந்திரோதயம் ஆனபிறகு மறுபடியும் பீரங்கி கொண்டு குண்டுமாரி பொழிந்தார். கும்பினியார் அலங்கத்தை உடைத்துச் சுவர்மீது ஏறினர். ஆனல் அங்கே ஆட்கள் நின்று போர் புரியப் போதுமான இடம் இல்லை. உள்ளே இறங்கவும் முடியவில்லை. உள்ளிருப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருந்தது. அவர்கள் துப்பாக்கி வல்லயம் முதலியவற்றைக் கொண்டு கும்பினியாரைத் தீவிரமாகத் தாக்கினர். நிலைமையைச் சமாளிக்க முடியாமல் கர்னல் பின்னடைய நேரிட்டது. இருபுறங்களிலும் பெருத்த சேதம் உண்டாயிற்று.

ஆயினும் கர்னல் சும்மா விட்டுவிடவில்லை. மறுபடியும் தாக்க ஆரம்பித்தார். இதனைக் கண்ட பாளையப்பட்டார் அதைரியம் அடைந்தனர். போரை நீடித்து நடத்த

விரும்பாமல் அவர்கள் உடனே கிழக்கு வாசலை நோக்கிப் புறப்பட்டனர். இவ்விடத்தில் காவல்புரிந்த கும்பினிப் பட்டாளத்தார் முதல் நான்கு நாட்களாகச் சிறிதும் தங்காமல் வழி நடந்த இளைப்பால் அயர்ந்து விட்டனர். அதனால் பாளையக்காரரும் அவரைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலோரும் தப்பி ஓடிவிட்டனர்.

எதிர்ப்பு இல்லாமல் போகவே கும்பினியார் கோட்டைக்குள் புகுந்தனர். உடைப்பு ஏற்பட்ட இடம் முழுவதும் பிணங்களால் நிரப்பப்பட்டிருந்தது. அங்கே துப்பாக்கி, குண்டு, கத்தி, பீரங்கி முதலிய யுத்த தளவாடங்கள் ஏராளமாகக்குவிந்திருந்தன. கும்பினியார் அவற்றைக் கைக்கொண்டனர். கோட்டைக்குள்ளிருந்த மற்றவர்களைக் கைது செய்தனர். அவ்விதம் அகப்பட்டவர்களுள் டபொம்முவின் பெண்ணும் ஒருத்தி.

கோட்டைக் கஜானுவில் நாற்பதினுயிரம் வராகன் பணம் இருந்தது. அதனைக் கைப்பற்றிய பட்டாளத்தார் அதைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டார்கள்.

எல்லாவற்றைக் காட்டிலும் கும்பினியாருக்குக் கிடைத்த முக்கியமான பொருள் கட்டபொம்மு டச்சுக்காரர்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் மூலப்பிரதியாகும்.

பாஞ்சாலங் குறிச்சியை விடுத்த கட்டபொம்மு நேராகச் சிவகிரிக்குச் சென்று ஒளிந்துக்கொண்டார். சிவகிரிப் பாளையக்காரரும் கும்பினியாரை வெறுத்து வந்தவர். அவர் அதற்கு முன்பு அவ்விடம் படையெடுத்து வந்த கும்பினிக் காப்டனைக் கொலைசெய்து அவர் படையைச் சின்னபின்னப்படுத்தி அனுப்பியிருந்தார். அவர் தங்களுக்கு உதவியாக வரவிருந்த டச்சுக்காரர்களுக்காக வேண்டிய யுத்த தளவாடங்கள் சேகரித்துவைத்திருந்தார். அந்தக் காலத்தில்

திருநெல்வேலிச் சீமையிலே கும்பினியாருக்கு விரோதமாக இருந்தவர்களில் பாஞ்சாலங் குறிச்சியாருக்கு அடுத்தபடியாகச் சிவகிரியாரைத்தான் கூறவேண்டும்.

அதனல் புல்லர்ட்டன் நேராகச் சிவகிரியை அடைந்து கோட்டையை முற்றுகையிட்டார். பாளையக்காரர்கள் கோட்டையை விட்டுப் பக்கத்திலிருந்த கோம்பையை, அதாவது முட்கட்டை வேலி சூழ்ந்த காட்டை, அடைந்துவிட்டனர். கர்னல் காட்டைச் சூழ்ந்துகொண்டு அவர்கள் உடனே பணிந்துவிடவேண்டும் என்றும், திருநெல்வேலிச் சீமையில் உள்ள முப்பத்திரண்டு பாளையக்காரர்களும் தங்கள் பழைய பாக்கிகளைத் தீர்த்துவிட ஏற்பாடு செய்யவேண்டும் என்றும், தங்கள் பாக்கிக்காக மட்டில் லக்ஷத்து இருபதினயிரம் பவுனைக் கொடுக்கவேண்டும் என்றும், இதற்கு அவர்கள் இணங்கி வந்தால் வரி வசூல் செய்யும் அதிகாரிக்கு அறிவித்து அவர் ஒப்புக்கொண்டவுடன் அவர்களை மன்னித்து முற்றுகையைக் கைவிடுவதாகவும், இல்லாவிட்டால் உடனே தாக்கப்போவதாவும் அறிவித்தார். பாளையக்காரர்கள் கர்னலுடன் நேரில் கலந்து பேச விருப்பப்பட்டார்கள். ஆயினும் பழைய கும்மந்தார்களுடன் அவர்களுடைய உறவு நல்ல முறையில் நடந்தேருததை நினைத்துக் கும்பினியாரிடம் நேரில் வர அச்சம் கொண்டனர். அதனல் கர்னலே பாளையக்காரர்கள் தங்கியிருந்த காட்டின் வேலியண்டை தனியாக வந்து பேச ஒப்புக்கொண்டார்.

கட்டபொம்மு, சிவகிரிப் பாளையக்காரர், சொக்கம்பட்டியில் பாளையக்காரராக இருந்து நீக்கப்பட்டவர் ஆகியவர்கள் தங்கள் பரிவாரங்களுடன் காட்டின் வேலிப் பக்கம் வந்து புல்லர்ட்டனுடன் பேசிக்கொண்டிருந்தனர். ஆனல் பேச்சு முடிவதற்குள் இருட்டிவிட்டது. அப்

பொழுது எங்கிருந்தோ ஒரு வெடிச் சத்தம் கேட்டது. கும்பினிப் படை அது கர்னலை நோக்கிச் சுட்டதென்று கலகம் செய்ய ஆயத்தமாயிற்று. அதனால் புல்லர்ட்டன் மற்ற விஷயங்களை மறுநாள் தெரிவிக்கும் படிக் கூறி, பாளையக்காரர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு போனார். மறுநாள் பாளையக்காரர்கள் பதிலே அனுப்ப வில்லை.

அதனால் கும்பினியார் காட்டைத் தாக்க ஆரம்பித் தனர். பிறர் நுழைய முடியாத அந்தக் காட்டைப் பாளை யக்காரர்கள் நன்கு காத்து வந்தனர். இருபுறங்களிலும் குண்டுமாரி பொழியக் கும்பினியார் மலையுச்சியை அடைந் தனர். பாளையக்காரர்கள் காட்டின் உட்புறம் சென்று விட்டனர். முன்புறத்திலிருந்து காட்டிற்குள் புக முடி யாது என்பதை அறிந்து, கர்னல் பின்னடைந்து மேல் புறத்திலிருந்து நுழைய எண்ணினர். அதற்குப் போக வழியில்லாதபடியால், மூன்று மைல் நீளத்துக்குச் சாலை அமைக்க நேர்ந்தது. எண்ணுயிரம் பாளையக்கார வீரர்கள் குண்டுகளை வீச, கும்பினியார் அதற்கு மத்தியில் சாலையை அமைத்துக் காட்டுக்குள் புகும் பொழுது, பாளையக்காரர்கள் பின்னடைந்து தப்பிவிட்டனர். கும் பினியார் காட்டைக் கைப்பற்றி அதில் சேமித்து வைக்கப் பட்டிருந்த யுத்த தளவாடங்களை எடுத்துக் கொண்ட னர்.

இதற்கிடையில் திண்டுக்கல் பிரதேசத்தில் கும்பினி யாருக்கு மைசூராரைப் பற்றிய பயம் நீங்கவில்லை. அதனால் அவர்கள் புல்லர்ட்டனைத் திரும்பி வந்துவிடும்படி உத்தர விட்டார்கள். ஆகவே, அவர் பாளையக்காரர்களுடைய வக்கீல்களை ( துபாஷ்களை ) வரவழைத்து ராஜி பேசினர். பாளையக்காரர்கள் கும்பினியாருக்குப் பணிந்து கப்பப்

பணத்தைச் செலுத்தா விட்டால் தாம் திரும்பி வந்து அவர்களை நிர்மூலமாக்கிவிடுவதாகச் சிவபெருமான் மீது ஆணையிட்டுக் கூறினர். ஐரோப்பியக் கிறிஸ்தவரான அவர் சிவபெருமான் மீது ஆணையிட்டது பாளையக்காரர்களிடையே பயத்தை உண்டு பண்ணியது. அவரும் இதையே விரும்பினர்.

சிவகிரியாரும் கட்டபொம்முவும் பழைய பாக்கிக்காகத் தலைக்கு முப்பதினயிரம் சக்கரமும் கோட்டைகளைத் திரும்பவும் பெறப் பதினையாயிரம் வராகனும் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்கள். அதற்குள் புல்லர்ட்டன் மதுரைக்குத் திரும்பிவிட்டார். வரி வசூல் செய்யும் கும்பினி அதிகாரி இந்த ராஜி முடிவை அவருக்குத் தெரிவித்த பொழுது அவர் திருமங்கலத்தில் தங்கியிருந்தார். அவர் அந்த முடிவை ஒப்புக்கொண்டு பாஞ்சாலங் குறிச்சிப் பாளையப்பட்டார் கோட்டை காவலைத் தகர்த்து விடவேண்டும் என்றும் யுத்த தளவாடங்கள் சேகரிக்கக் கூடாது என்றும், ஏற்கெனவே அவர்களிடம் உள்ளவற்றைப் பாளையங்கோட்டையில் இருக்கும் கும்பினி அதிகாரியிடம் சேர்த்து விடவேண்டும் என்றும் நிபந்தனை விதித்தார். பாளையங்கோட்டைச் சிறையிலிருந்த பாளையக்காரரின் உறவினர் விடுவிக்கப்பட்டனர். பாளையக்காரர்களும் தங்கள் சொத்துக்களை மீண்டும் அடைந்தனர்.

இப்படையெடுப்பின் பயனுகப் பாளையக்காரர்கள் சிறிது காலம் அடங்கி யிருந்தார்கள். டச்சுக்காரர்கள் தூத்துக்குடிக்குத் திரும்பிவந்தால் அவர்கள் கட்டபொம்முவுடன் சேர்ந்து கொள்ளாதவாறு தடுத்துவிடவேண்டும் என்றும் கும்பினியார் தீர்மானித்திருந்தார்கள்.

## அத்தியாயம் 11

# கும்பினியார் நாடு கொண்டது

'பூட்டும் வாளினர் திண்புலி மீசையைக்
கேட்ட போதிலுங் கிட்டுமென் றீகுவார்
நாட்டை வென்றுய்யும் ராச்சியங் கட்கொரு
தாட்டி கத்த ளிவனெனச் சாற்றுவார்.'

— கலியுகப் பெருங் காவியம்

நாட்டின் நிலைமை இவ்விதம் சீர்ப்பட்டு வரும் காலத்தில், அதாவது 1785-ஆம் ஆண்டில், முன்னம் கும்பினியாருக்குக் கொடுத்திருந்த நாடுகளின் நிர்வாகத்தை ஆர்க்காட்டு நவாபு திரும்பவும் கைக்கொண்டார். அங்ஙனம் அவர் எடுத்துக்கொண்ட நாடுகளில் திருநெல்வேலிச் சீமையும் சேர்ந்திருந்தது. கும்பினியார் அதனைப் பலமாக ஆட்சேபித்துப் பார்த்தார்கள். 'நாடுகளைத் திரும்பவும் ஒப்பித்தால் நிர்வாகம் சீர்கேடு அடைந்துவிடும்; பாளையக்காரர்கள் பழைய வழிக்குத் திரும்பிவிடுவார்கள்; திறைப் பணம் சரிவர வசூலாகாது' என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் அவை ஒப்புக்கொள்ளப்பட வில்லை. கும்பினியாரின் வரி வசூல் அதிகாரிகள் திரும்பிச் சென்றனர்.

நவாபுக்கோ எப்பொழுதும் பணத்தட்டு. அதனால் அவர் பின்னால் வரப்போகும் வரிப் பணத்தை எதிர்பார்த்துக் கடன் வாங்கவும், குத்தகைக்காரர்களிடம் முன்பணம் பெறவும் தலைப்பட்டார். கும்பினியாரின் செல்வாக்குக் குறைவதைக் கண்ட பாளையக்காரர்கள் சந்தோஷப்பட்டார்கள்; திறைப் பணத்தைச் செலுத்துவதை நிறுத்திவிட்

டார்கள். ஆனால் அக்காலத்தில் நவாபின் அதிகாரிகளுக்கும் பாளையக்காரர்களுக்கும் இடையில் பெருங் கலகம் ஒன்றும் ஏற்படவில்லை.

தெற்குச் சீமையை முன்போலவே தங்கள் ஆதிக்கத்தில் கொண்டுவரக் கும்பினியார் முயன்று பார்த்தார்கள். நவாபு அதற்கு இணங்கவில்லை. அதனால் 1790-ஆம் ஆண்டில் கும்பினியார் ஒரு விளம்பரத்தை வெளியிட்டு விட்டு அந்தச் சீமையின் நிர்வாகத்தைத் தாங்களே ஏற்றுக் கொண்டார்கள். திருநெல்வேலியில் இருந்த நவாபின் பட்டாளம், சம்பளம் கொடுக்கப்படாமலும், மேற்பார்வையிடத்தக்க அதிகாரி இல்லாமலும் இருந்தது. ஆனால் கும்பினியார் அந்தப் பட்டாளத்தைத் தங்களுடன் சேர்த்துக் கொண்டார்கள்.

இவ்விதம் நாட்டின் நிர்வாகத்தைக் கும்பினியார் ஏற்றுக்கொண்ட சமயத்தில், பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக்காரராக இருந்த ஜகவீர பாண்டிய நாயக்கர் இறந்து போனார். அவருக்கு நான்கு மனைவிகள். அவர்கள் முறையே ஆறுமுகத்தம்மாள், பொம்மு அம்மாள், போடம்மாள், காந்திமதியம்மாள் எனப் பெயர் பெறுவர். முதல் மனைவியாகிய ஆறுமுகத்தம்மாளுக்குச் சடானனி, சண்முகக்கனி என்ற வேறு பெயர்களும் உண்டு. அவளுக்கு மூன்று பிள்ளைகளும், இரண்டு பெண்களும் பிறந்திருந்தனர். மூத்த மகனுக்கு வீர பாண்டியன் என்று பெயர். அவர் கறுத்தையா என்றே பொதுவாகக் குறிக்கப்படுவார். அவருக்கு அடுத்த தம்பிக்குக் குமாரசாமி என்று பெயர். அவர் சிறந்த போர்வீரராதலால் தளவாய் குமாரசாமி என்றும் சிவத்தையா என்றும் குறிக்கப்படுவார். மூன்றாமவர் துரைசிங்கம் என்ற பெயருடைய பிள்ளை. அவரை ஊமைத்துரை என்றே அழைப்பார்கள்.

இரண்டு பெண்களும் முறையே ஈசுவர வடிவு துரைக் கண்ணு என்ற பெயர்களை உடையவர்கள். அவர்கள் முறையே அந்த வமிசத்தில் பிறந்த பூஞ்சனம்மாள் என்னும் பாஞ்சாலியம்மாளின் மகன் சுப்பிரமணிய நாயக்கரின் இரண்டாவது குமாரருக்கும், அந்தச் சுப்பிரமணிய நாயக்கரின் மைத்துனருக்கும் வாழ்க்கைப்பட்டிருந்தார்கள். மூத்தவரான கறுத்தையா சுப்பிரமணிய நாயக்கரின் புதல்வியான வீர சக்கம்மாள் என்பவளை மணந்திருந்தார்.

தந்தைக்குப் பின் முறைப்படி மூத்தவரான கறுத்தையா வீரபாண்டிய கட்டபொம்மு என்ற பட்டத்துடன் பதவியை அடைந்தார். அவருக்கு அப்பொழுது வயது முப்பது என்று கூறுவர். ஆனால் பார்வைக்கு நல்ல கட்டு வாய்ந்தவராக இருந்தபடியால் இன்னும் குறைந்த வயதுள்ளவராகவே தோன்றுவார். அவருக்குச் சிவசுப்பிரமணிய பிள்ளை என்பவர் முக்கியக் காரியஸ்தராக, தானாபதியாக அமைந்திருந்தார்.

கும்பினியார் ஏற்றுக்கொண்ட நாடுகளைத் திரும்பப் பெற வழியில்லாமல் நவாபு 1792-ஆம் ஆண்டில் அவர்களுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டார். அதன்படி, கும்பினியார் தங்கள் சொந்தப் பொறுப்பில் பாளையக்காரர்களுடைய கப்பப் பணத்தை வசூல் செய்துகொள்ளலாயினர். செலவு போக மிகுதிப் பணத்தை நவாபு கும்பினியாருக்குக் கொடுக்க வேண்டிய பணத்துக்காக வரவு வைத்துக்கொள்ளவேண்டும் என்றும், முழுப் பணமும் செல்லாகிவிட்டால் நாட்டைத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

கும்பினியார் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டதும் பல அதிகாரிகளை நியமித்துத் தங்கள் கவனத்தை முதலில்

பாளையக்காரர்கள்மீது திருப்பினர். அடங்காத பாளையக் காரர்களை அடக்க எண்ணினர். அன்றி, பாளையங்களின் உரிமைகளை நிர்ணயித்துப் பாளையக்காரர்கள் அவற்றை ஒட்டியே நடக்கவேண்டும் என்றும் திட்டம் செய்ய விரும்பினர். இவ்விதம் பாளையக்காரர்களுடைய காரி யங்களைக் கவனிக்கக் கும்பினியாரின் தளகர்த்தரான கர்னல் மாக்ஸ்வெல் (Col. Maxwell) என்பவருக்குப் பூரண அதிகாரம் கொடுக்கப்பட்டது. கலெக்டர் பல சமயங்களில் அவருடைய வார்த்தைக்கு அடங்கியே நடக்கும்படி நேரிட்டது. கர்னல் மாக்ஸ்வெல் பாளையங் களின் எல்லைகளை நிர்ணயிக்கும்போது பாஞ்சாலங் குறிச்சிப் பாளையத்தைச் சேர்ந்த இரண்டு கிராமங்கள் எட்டையபுரத்துக்குக் கொடுக்கப்படவேண்டும் என்று முடிவு செய்தார். அருங்குளம், சுப்பலாபுரம் என்னும் ஊர்களே அவை என்று கூறுகிறார்கள். ஆனால் பாஞ் சாலங் குறிச்சியார் அந்தக் கிராமங்களை எட்டைய புரத்துக்குக் கொடுக்கச் சம்மதிக்கவில்லை.

அந்த இரண்டு கிராமங்களும் எட்டையபுரத் தாருக்கு மாற்றப்பட்டனவென்று அறிவிக்கப்பட்டதி லிருந்து எட்டையபுரம் பாஞ்சாலங் குறிச்சி ஆகிய இரு பாளையக்காரர்களுக்கும் துவேஷம் உண்டாயிற்று. பாஞ்சாலங் குறிச்சியார் எப்பொழுதும் கும்பினியா ருக்கு விரோதமானவர். அதனால் அதற்கு முன்பு அவ ரைப் போலவே விரோதமாக இருந்த எட்டையபுரத்தார் கும்பினியாருடன் சேர்ந்துகொண்டார். அவர் தம்மைப் பற்றி அடிக்கடி கும்பினியாரிடம் புகார் செய்துவருவ தாகவும் கட்டபொம்முவுக்குத் தெரியவந்தது.

கும்பினியார் பாளையக்காரர்களை அடக்க வழி தேடினர். 'பாளையக்காரர்கள் படை திரட்டியும் யுத்த தளவாடங்கள் சேகரித்தும் வைத்திருப்பதால்தானே

அடங்காமல் திரிகிறார்கள்? அவர்களிடம் உள்ள படைகளைக் கலைத்து ஆயுதங்களைப் பிடுங்கிவிட்டால் அப்புறம் அவர்கள் என்ன செய்யக்கூடும்?' என்று எண்ணினார்கள். அதற்குத் தகுந்த வழியும் தென்பட்டது.

நாட்டில் வரி வசூல் செய்யும் பாத்தியதையை நவாபு கும்பினியாருக்கு அளித்துவிட்டார். அவருக்கு நாட்டின் நிர்வாகத்தை நடத்தப் பட்டாளமும் இல்லை. பட்டாளமும் வரிப் பணமும் போய்விட்டால் அவருக்கு என்ன இருக்கிறது? பெயரளவில்தானே அவர் அரசர் என்று ஒப்புக்கொள்ளவேண்டும்! ஆனால் பெயரளவிலாவது அவர் அரசர் என்று இருப்பதாலேதான் பாளையக்காரர்கள் கும்பினியார்களுக்குக் கீழ்ப்படியவில்லை. ஆகவே அந்த வெறும் உபசாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானாலும் நவாபு கும்பினியாருடைய இஷ்டத்துக்கு இணங்க வேண்டியிருந்தது.

'பாளையக்காரர்கள் செலுத்தவேண்டிய கப்பப் பணத்தைக் கும்பினியார் குறையாமல் கணக்கெடுத்துத் தங்கள் பாக்கிக்கு வரவு வைப்பதாக ஒப்புக்கொண்டார்கள். அதை வசூல் செய்வதற்கு வேண்டிய செலவையும் அவர்களே பொறுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் பாளையப்பட்டுக்களின் கப்பப் பணம் சரிவர வருவதில்லை. பாளையக்காரர்கள் படைதிரட்டி வைத்திருப்பதால் பல சமயங்களில் கப்பத்தை வசூல்செய்யப் பெரும் போர் நிகழ்த்தவேண்டியிருக்கிறது. அந்தச் செலவும் அதிகமாகிறது. அவர்கள் படையினர் பக்கத்துக் கிராமங்களுள் புகுந்து அக்கிரமங்கள் செய்கின்றனர். அவர்களைப் பிடித்துத் தண்டிக்கக் கும்பினியாருக்கு அதிகாரமில்லை. அதனால் குடிமக்கள் தங்கள் சொத்துக்களை விடுத்து ஓடிவிடுகிறார்கள். நிலங்கள் பயிரிடுவாரின்றிப் போய்விடுகின்றன. பஞ்சமும் நோயும் அதிக

ரிக்கின்றன. இவ்வித நிலைமையில் கும்பினியாருக்குப் பணம் எப்படி வசூலாகும்?

'அதனால் நவாபு தாம் பாளையக்காரர்கள் மீது செலுத்திவந்த உபசார பூர்வமான வெறும் அதிகாரத்தை விட்டுக் கொடுக்கவேண்டும். அதனைக் கும்பினியார் ஏற்றுக்கொள்ளவேண்டும். பாளையக்காரர்களும் தங்கள் ஆயுதங்களைப் பரிகரிக்கவேண்டும். இவ்வித ஏற்பாட்டுக்கு நவாபு இணங்காவிட்டாலும் கும்பினியார் இதனை நிறைவேற்றி விடவேண்டும்.'

இவ்விதம், 1795-ஆம் வருஷம் ஜூன் மாதம் 10-ஆம் தேதி முடிவு செய்தனர் இங்கிலாந்திலிருந்த டைரக்டர்கள் (Court of Directors).

கும்பினியாரும் மேற்கண்ட தீர்மானத்தை நிறைவேற்ற முற்பட்டனர். பாஞ்சாலங் குறிச்சியார் அதற்குச் சிறிதும் இணங்கி வரவில்லை. அந்த நூற்றாண்டின் மத்தியில் பூலித்தேவர் எப்படிக் கும்பினியாரை எதிர்த்து நின்றாரோ அப்படியே இப்பொழுது நின்றார் கட்ட பொம்மு.

அக்காலத்திலிருந்த சிவகிரிப் பாளையக்காரருக்கும் அவருடைய மகனுக்கும் ஏதோ தகராறு ஏற்பட்டது மகன் தந்தையை விலக்கிப் பாளையத்தைக் கைக் கொள்ள நினைத்தான். மகனுக்கு உதவியாக 'மாப்பிள்ளை வன்னியர்' என்று கூறப்படும் அவர் மாப்பிள்ளையும், சங்கரலிங்கம் பிள்ளை என்பவரும் இருந்தனர். கர்னல் மாக்ஸ்வெல் முன்பு பாளையக்காரர்களின் உரிமைகளை நிர்ணயம் செய்த காலத்தில் சங்கரலிங்கம் பிள்ளையை வேலையை விட்டு நீக்கி விட்டார். அவரை எந்தப் பாளையக்காரரும் வைத்துக் கொள்ளக்கூடாது என்றும் பகிஷ்கரித்திருந்தார். இத்தனை செய்திருந்தும், கட்ட பொம்மு சங்கரலிங்கம்

பிள்ளை முதலியோருக்கு உற்ற துணையாக இருந்து சிவகிரியைத் தந்தையிடமிருந்து கைப்பற்றி மகனுக்கு அளித்துவிட்டார். ஆனால் அதை அறிந்த கும்பினியார் சிவகிரியின் மீது படையெடுத்துச் சென்று அதனைக் கைப்பற்றித் தந்தையை மறுபடியும் பாளையக்காரராக அமர்த்தினர். சங்கரலிங்கம் பிள்ளையைப் பிடித்துத் தேசப்பிரஷ்டம் செய்து ஸுமத்திரா தீவில் உள்ள பென் கூலன் (Benkulen) என்னுமிடத்திற்கு அனுப்பி விட்டார்கள். பாளையக்காரர் மகனோ மலையில் சென்று ஒளிந்து கொண்டான்.

கட்டபொம்மு சிவகிரியாரின் மகனுக்கு உதவி செய்ததுடன் நிற்கவில்லை. கும்பினியாருக்கு விரோத மாக இருந்தவர்களிட மெல்லாம் அவர் நட்புக்கொண் டிருந்தார். ராமநாதபுரத்தில் 1797-ஆம் ஆண்டில் நிகழ்ந்த கலகத்தில் கட்டபொம்மு முக்கிய ஸ்தானம் வகித்திருந்தார். கிஸ்தி செலுத்தாமல் மறுத்து வந் தார். அடுத்த வருஷம் அவருடைய ஆட்கள் ஆழ்வார் திருநகரி, ஸ்ரீவைகுண்டம் முதலிய இடங்களுக்குச் சென்று பணத்தைத் திரட்டி வந்தனர். பணம் கொடுக் காதவர்களைக் கட்டித் தூக்கி வந்துவிட்டனர். இவ்விதம் கும்பினியாருக்கு அவரால் ஏற்பட்ட உபத்திரவம் பொறுக்க முடியாதிருந்தது.

அவரை எப்படியாவது பிடித்து அடக்கிவிட வேண்டும் என்று எண்ணினர் கும்பினியார். அதற்கு முக்கிய காரணகர்த்தராக இருந்தவர் தென்னாட்டுப் பாளையங்களின் பேஷ்குஷ் (கப்பப்) பணத்தை வசூலிக் கும் அதிகாரியாக ராமநாதபுரத்தில் இருந்த டபிள்யூ. ஸி. ஜாக்ஸன் (W. C. Jackson) என்பவராகும். அதனை நிறைவேற்றக் கும்பினியார் எடுத்துக்கொண்ட நட வடிக்கைகளை மேலே விவரமாகக் கூறுவோம்.

## அத்தியாயம் 12

# ஜாக்ஸன் சூழ்ச்சி

பாஞ்சாலங் குறிச்சிதான்
'இந்தக் கலகக்காரர்களின் *ஜிப்ரால்டர்.'
—கர்னல் வெல்ஷ்

---

கும்பினியாருக்குக் கட்டபொம்முவின் மீது புகார்கள் வந்த வண்ணமாகவே இருந்தன. அவரும் அவரைச் சேர்ந்தவர்களும் கும்பினி உத்தியோகஸ்தர்களை மதிக்கவில்லை யென்பதும், அவர்களுடைய உத்தரவுகளை நிறைவேற்றவில்லை யென்பதும், கிஸ்திப் பணத்தைச் சரிவரச் செலுத்தவில்லை யென்பதும் அவற்றுள் முக்கியமானவை. இவை சம்பந்தமாக ராமநாதபுரம் தென்னாட்டுப் பேஷ்குஷ் கலெக்டரான ஜாக்ஸன் துரை பாஞ்சாலங் குறிச்சிக்குப் பல கடிதங்கள் எழுதினார்.

1798-ஆம் வருஷம் ஜனவரி மாதம் 30-ஆம் தேதி யன்று ஆழ்வார்திருநகரியில் காப்டன் ஹாமில்டன்

---

*ஜிப்ரால்டர்: இது ஐரோப்பாவில் அத்லாந்திக் மகா சமுத்திரத்திலிருந்து மத்தியதரைக் கடலுக்குப் பிரவேசிக்கும் வாயிலில் இருக்கும் துறைமுகம். இதிலுள்ள கோட்டை இயற்கையாகவே குன்றுகளால் அமையப்பெற்றது. இதற்கு இணையான வலிமையுள்ள கோட்டை உலகில் வேறு இல்லை. கடலிலிருந்து இதனுள் எவ்விதத்திலும் பிரவேசிக்க முடியாதபடி பெரும் பாறைகள் தடுத்து நிற்கின்றன. பாஞ்சாலங் குறிச்சியைப் பாளையக்காரரின் ஜிப்ரால்டர் என்று வீரர் வெல்ஷ் கூறியது அங்கு அமைந்திருந்த கோட்டையின் வலிமையை மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டுவதாகும். ஒருவர் ஜிப்ரால்டரைப் பிடித்துவிட்டால் மத்திய தரைக் கடல் முழுதும் அவர் ஆதிக்கத்தில் வந்துவிடும். அதேபோலப் பாஞ்சாலங் குறிச்சியைப் பிடித்தால்தான் திருநெல்வேலிச் சீமை கைவசமாகும் என்பதையும் இந்த உபமானம் குறிப்பிடுகின்றது.

இருந்த வீட்டைப் பாஞ்சாலங் குறிச்சியைச் சேர்ந்தவர் கள் வளைத்துக்கொண்டு, துரையைப் பலவிதமாக அவ தூறு செய்தார்களாம். தூத்துக்குடியிலிருந்த பட்டா ளத்து அதிகாரி காப்டன் டேவிஸன் வேண்டிய ஆடுகளைக் கொடுக்கும்படி அனுப்பிய உத்தரவைக் கட்டபொம்மு நிறைவேற்றி வைக்கவில்லை. கிஸ்திப் பாக்கியையும் கட் டாமலே காலம் கடத்தி வந்தார். இவற்றைக் குறித்து ஜாக்ஸன் பிப்ரவரி மாதம் 3–ஆம் தேதி கட்டபொம்மு வுக்கு ஒரு கடிதம் எழுதினர்.

முதல் தவணை கிஸ்திப் பாக்கியையும் இரண்டாவது தவணை செலுத்தவேண்டிய தொகையையும் கொடுக்கா மையாலும், மூன்ருவது தவணை நெருங்கிவிட்டதாலும் அவற்றை வசூல் செய்யக் கலெக்டர் துரை வைகுண்டம் பிள்ளை என்பவரை ஏப்ரல் மாதம் 28–ஆம் தேதி அனுப் பினர். அதனுடன், பணத்தை உடனே கொடுக்காவிட் டால், முன்பு பல தடவைகளில் தெரிவித்தபடி புறப்பட்டு ராமநாதபுரத்திற்கு நேரில் வந்து தம்மைப் பார்க்கவேண் டும் என்றும் கண்டிப்பாக எழுதியிருந்தார்.

அதற்கும் தகுந்த பதில் கிடைக்கவில்லை. கிஸ்தித் தொகை ஏறிக்கொண்டே போயிற்று; ஆருயிரம் சக்கரங் கள் வரை பாக்கி விழுந்துவிட்டது. நவாபின் ஆட்களும் திரு நெல்வேலியிலிருந்த கும்பினி வர்த்தக அதிகாரியும் வேறு பலரும் கட்டபொம்முவின் மீது குறை கூறிவந்தார்கள். கும்பினிக்குத் துணி நெய்து கொடுத்து வந்தவர்களைப் பாளை யக்காரர் கலைத்து வந்தனராம். இந்தச் செய்திகளையெல் லாம் தெரிவித்துக் கலெக்டர் மே மாதம் 23-ஆம் தேதி ஒரு கடிதம் எழுதினர். அதில், அந்தக் குற்றங்களுக்குப் பதில் கூறுவதற்காகப் பதினைந்து நாட்களுக்குள் ராமநாதபுரம் வரவேண்டும் என்று கட்டளை யிட்டிருந்தார். அவர் வருவ

தற்கு மறுத்தால் அவருடைய பாளையத்தைப் பறிமுதல் செய்து, சர்க்காருக்குச் சேர்த்துக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்படும் என்று பயமுறுத்தியதுடன், அவரைக் கைப் பிடியாகப் பிடித்து வருமாறு அந்தக் கடிதத்தை எடுத்துச் சென்றிருந்த அரிக்காரனுக்குக் கட்டளையிட்டிருப்பதாக வும் தெரிவித்திருந்தார்.

இந்தக் கடிதம் கலெக்டர் எதிர்பார்த்த பலனைக் கொடுக்கவில்லை. கட்டபொம்மு பணம் செலுத்தவும் இல்லை; ராமநாதபுரம் வரவுமில்லை. ஆனால், இந்தக் கடி தமே பின்னால் யாரும் எதிர்பாராத விபரீதத்தை விளை வித்தது.

கலெக்டர் இந்த விஷயத்தைக் குறித்து ரிவினியூ போர்டுக்குப் பல கடிதங்கள் எழுதினார். கட்டபொம்மு தம்மீது உள்ள குற்றங்களுக்குப் பதில் சொல்ல ராமநாத புரம் வருவதைத் தட்டிக்கழித்து மறுதளித்து வருவதாக வும், சர்க்கார் கிராமங்களினின்றும் அடுத்தவருஷத்துத் தேசகாவல் பணத்தை நிர்ப்பந்தப்படுத்தி வசூலித்து வருவ தாகவும் விண்ணப்பம் செய்தார்.

'அவரைப் பாஞ்சாலங்குறிச்சியிலே விட்டுவைத்தால் இக்குறைகள் நிவர்த்தியாகா; அவர் திருந்தமாட்டார். அவரை உடனே ராமநாதபுரத்திற்கு அழைத்து வந்துவிட வேண்டும். அவர் வர மறுத்தால் அவரைப் பிடித்துவருவ துடன் பாளையம் பறிமுதல் செய்துவிடப்படும், இல்லையெ னில், அவருடைய தாயாதி வழிக்குக் கொடுக்கப்பட்டு விடும் என்று அவரைப் பயமுறுத்த வேண்டும். அவ்வி தம் செய்வதற்கு வேண்டிய அதிகாரத்தை எனக்கு அளிக்கவேண்டும்' என்று அந்த விண்ணப்பத்தில் கேட்டி ருந்தார்.

பாஞ்சாலங் குறிச்சிப் பாளையத்தின் கிஸ்திப் பாக்கி யைத் தவிர அந்த எல்லைக்குள் வசிக்கும் தறிநெய்பவர்க ளுக்கு முன்பணமாகக் கும்பினியார் கொடுத்திருந்த தொகைக்குக்கூட ஆபத்து வரும் என்றும் எடுத்துக் காட் டினார். பாளையக்காரரின் உத்தரவுக்குக் கீழ்ப்படியா விட் டால் தங்கள் சொத்துக்கள் கொள்ளை போய்விடும் என்று நெசவாளிகள் பயப்படுவதால் வியாபாரத் துறையில் கும்பினிக்கு அதிக நஷ்டம் ஏற்படக்கூடும்.

இவ்விதமான காரணங்களால் பாளையங்கோட்டையி லிருந்த படைத் தலைவர் மேஜர் ஸ்மார்ட் (Major Smart) என்பவருக்கு ஒரு படையை அனுப்பிக் கட்டபொம்மு வைப் பிடித்துவர உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சர்க்கார் இந்த வேண்டுகோள்களை அனுமதிக்கவில்லை. 'கலெக்டர் அனுப்பிய எல்லாக் கடிதங்களும் எச்சரிக்கை களும் முறைப்படி கட்டபொம்முவிடம் சேர்ந்தனவா அல் லது அவருடைய விரோதிகளால் கைப்பற்றப்பட்டுச் சேரா மற்போயினவா' என்பதை அறிய விரும்பினார்கள்.

கடைசியாகப் பணவசூல் செய்வதற்குப் பாஞ்சாலங் குறிச்சி சென்றிருந்த தாசில்தாரை உடனே திரும்ப அழைப்பதென்றும், கடிதம் கண்ட பதினைந்து தினங்களுக் குள் பாளையக்காரர் புறப்பட்டுவந்து கலெக்டர் கச்சேரி யில் ஆஜராகவேண்டும் என்ற ஓர் உத்தரவை அனுப்புவ தென்றும் முடிவு செய்யப்பட்டது. அவர் அவ்விதம் வரா மல், அந்த உத்தரவை அலட்சியம் செய்தால் அதற்குப் பிறகு சமயோசிதம் போல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள ஜாக்ஸன் துரைக்கு அதிகாரம் அளிப்பதென்றும் தீர்மா னிக்கப்பட்டது.

[stamp]

அந்தப் பிரகாரமே கலெக்டர் தாசில்தாரைத் திருப்பி அழைத்துவிட்டுக் கட்டபொம்முவுக்கும் ஒரு கடிதம் எழுதினர். கடிதம் எழுதப்பட்டது ஆகஸ்டு மாதம் 18-ஆம் தேதி யன்று. பாளையக்காரர் ஸெப்டம்பர் மாதம் 5-ஆம் தேதிக்குள் கலெக்டருடைய கச்சேரியில் ஆஜராக வேண்டும்; இல்லாவிட்டால் அவருடைய அழிவு நிச்சயம் என்பதே கடிதத்தின் சாராம்சம்.

இந்தக் கடிதத்தைக் கட்டபொம்மு அலட்சியம் செய்யவில்லை யென்றே தெரிகிறது. அவர் கலெக்டரைக் காணப் புறப்பட்டு வந்தார்.

மேலே நாம் கூறியபடி கலெக்டரைப் பேட்டி காண அவர் புறப்பட்டதற்கான காரணம் அரசாங்கத் தஸ்தவேஜுகளில் காணப்படுவதாகும். இந்தப் பேட்டியைப் பற்றிச் சர்க்கார்க் கடிதங்களில் காணப்படும் விவரங்களுக்கும் கர்ணபரம்பரைச் செய்திகளுக்கும் மிகுந்த வேறுபாடுகள் உண்டு. பேட்டிக்குக் கர்ணபரம்பரையாகக் கூறப்படும் காரணமே வேறு. அது வருமாறு:

கும்பினியின் பிரதிநிதியாகப் பாளையங்கோட்டையில் வந்திருந்த அதிகாரியை அந்தச் சீமைப் பாளையக்காரர்கள் எல்லோரும் வந்து கண்டு அளவளாவிச் சென்றனர். கட்டபொம்மு மாத்திரம் போகவில்லை. ராஜாங்க ஸம்பிரதாயப்படி பாளையக்காரர்கள் வெளியே போய்ப் பிறரைப் பேட்டி காணுவது முறையன்று; அதனுல் வரிவசூல் செய்ய வந்த கலெக்டரே முதலில் தம்மை வந்து காணவேண்டும் என்று அவர் விரும்பினர். கலெக்டரோ, மற்றப் பாளையக்காரர்கள் தம்மை வந்து கண்டு போயிருக்கப் பாஞ்சாலங் குறிச்சியார் மட்டும் வராமையால், அவர் மிகவும் கர்வம் கொண்டவர் என்று எண்ணினர். வந்த பாளையக்காரர்களிலும் கட்டபொம்முவுக்கு

விரோதிகளா யிருந்தவர்கள் அவர்மீது வீண்பழிகளைச் சுமத்திக் கலெக்டர் மனத்தைக் கலைத்தார்கள். கடைசியாகத் தம்மை நேரில் வந்து கண்டு பேசும்படி கலெக்டரே பாஞ்சாலங் குறிச்சிக்கு ஒரு கடிதம் எழுதியனுப்பினர். அதைக் கண்டபின்னும் கட்டபொம்மு உடனே புறப்பட்டு வரவில்லை. ஒரு வாரத்தில் வந்து காண்பதாகப் பதில் அனுப்பிவிட்டுப் பிறகுதான் புறப்பட்டுச் சென்றார்.

எவ்வாறாயினும், கடைசியில் கட்டபொம்மு ஜாக்ஸனைப் பேட்டிகாணப் புறப்பட்டார். அப்பொழுது அவருக்கு உடம்பு சௌக்கியமாக இல்லை. எனினும் மேற்கொண்டு தாமதித்தால் காரியம் கெட்டுவிடும் என்று பயந்தே புறப்பட்டார் போலும். அவர் தம்பிகளும், மந்திரி, வக்கீல் எனப்படும் தானாபதியான அரசாங்கக் காரியஸ்தர், மொழிபெயர்ப்பாளர், மெய்க்காப்பாளர், மற்றும் எடுபிடி சிப்பந்திகள் முதலிய பெரிய பரிவாரத்தாரும் அவருடன் கிளம்பினர்கள்.

அவர்கள் நேரே ராமநாதபுரம் செல்லவில்லை. ஏனெனில்,கலெக்டர் அங்கில்லை. அவர், பதினைந்து தினங்களில் தம்மைக் கச்சேரியில் வந்து பேட்டிகாண வேண்டும் என்பதாகக் கட்டபொம்முவுக்குக் கடிதம் அனுப்பிய மூன்று நாட்களுக்கெல்லாம், திருநெல்வேலிச் சீமையைப் பார்வையிடப் புறப்பட்டுச் சென்றிருந்தார். அவர் வந்து செல்லும் திசையை நன்கு விசாரித்து அறிந்த கட்டபொம்மு நாயக்கர், ஆகஸ்டு மாதம் 31-ஆம் தேதி கலெக்டரைத் திருக்குற்றாலத்தில் கண்டுபிடித்தார்.

குற்றாலத்தில் கலெக்டர் பாளையக்காரருக்குப் பேட்டி அளிக்கவில்லை. கட்டபொம்முவும் அவருடைய வக்கீலும்

கலெக்டரின் துபாஷ் விசுவநாத பிள்ளையைப் பார்த்தார்கள். கலெக்டரோ, அவர்களை அவ்விடத்தில் பார்க்க முடியாது என்றும், ராமநாதபுரத்தில்தான் அவர்களுக்குப் பேட்டி அளிக்க முடியும் என்றும் கூறிவிட்டார். அன்றியும், அவர் கட்டபொம்மு தம்மைப் பின் தொடர்ந்து ராமநாதபுரத்துக்கு வரவேண்டும் என்று விரும்புவதாகவும், மறுத்தால் பாளையம் பறிமுதல் செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

பாளையக்காரர் இதற்கு இணங்கவில்லை. தமக்கு உடம்பு குணமாயில்லாததால் ஊருக்குப் போய்ச் சிகிச்சை செய்துகொண்டு, கலெக்டர் ராமநாதபுரம் திரும்புங்கால் வந்து பேட்டி காணுவதாகத் தெரிவித்தார். ஆனால் கலெக்டர் அதற்குச் சம்மதிக்கவில்லை. கட்டபொம்மு போனால் திரும்பி வரமாட்டார் என்று அவர் பயப்பட்டிருத்தல்கூடும். இருதரத்தாருக்கும் வெவ்வேறு யோசனைகள் ஏற்பட்டமைக்குக் காரணமுண்டு.

பாளையக்காரரை எப்படியாவது திருநெல்வேலிச் சீமையை விட்டு அப்பால் ராமநாதபுரம் கொண்டுபோய் விடவேண்டும் என்பதும், அவர் திருநெல்வேலிச் சீமையில் இருக்கும் வரையில் தம்முடைய அதிகாரம் ஒன்றும் ஓங்காது என்பதும் கலெக்டர் எண்ணங்கள். சீமை எல்லையைத் தாண்டிவிட்டால் பாளையக்காரரது செல்வாக்குக் குறைவது இயற்கையே. கும்பினியாரின் ஆதிக்கியமுள்ள ராமநாதபுரத்திற்குக் கொணர்ந்து விட்டால் பயமின்றிக் கலெக்டர் தம் இஷ்டப்படி பாளையக்காரரை நடத்தலாம். குற்றாலத்திலோ வேறு இடங்களிலோ கட்டபொம்முவுக்குப் பேட்டி யளிக்க முடியாது என்று கண்டிப்பாகக் கூறிவிட்டால் அவர் ஒருகால் பாஞ்சாலங் குறிச்சிக்கே திரும்பிப்

போய்விடக்கூடும். அங்ஙனமின்றி, ஒவ்வோர் ஊராகக் குறிப்பிட்டு, ஆங்காங்கு வேலை மிகுதியால் பார்க்க இணங்காதென்று பலவிதமான சாக்குப் போக்குகளைக் கூறிப் பேட்டியை ஒத்திப் போட்டுக்கொண்டே போனால் தொடர்ந்து வரக்கூடும் என்று கலெக்டர் எண்ணினர் போலும்.

கட்டபொம்முவோ கலெக்டரை எப்படியாவது திருநெல்வேலிச் சீமையிலேயே பேட்டி காண விரும்பினர். பேட்டி முடிந்துவிட்டால், உடனே ஊருக்குத் திரும்பிவிடலாம். அல்லாமல் ராமநாதபுரம் போனல் அவ்விடத்தில் தமக்கு என்ன கெடுதல் நேருமோ என்று பயப்பட்டார். கலெக்டர் ஜாக்ஸன் தம்மை எப்படியாவது அகப்படுத்திக்கொள்வது என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிருர் என்பதே அவருடைய துணிபு. அதனல் தம் செல்வாக்குள்ள எல்லையைத் தாண்டி மற்றவருடைய ஆதிக்கியமுள்ள இடத்திற்குப் போய்ச் சேர அவர் விரும்பவில்லை.

இவர்களுக்கிடையில் பாஞ்சாலங் குறிச்சி வக்கீல் தாஞபதி சுப்பிரமணிய பிள்ளையும், கலெக்டர் துபாஷ் விசுவநாத பிள்ளையும் தங்கள் எஜமானர் விருப்பத்தை நிறைவேற்ற முனைந்திருந்தார்கள்.

"எப்படியாவது நீங்கள் மனம் வைத்துக் கலெக்டரிடம் சொல்லி இந்த ஊரிலேயே பேட்டியை முடித்து எங்களை ஊருக்கு அனுப்பி விடவேண்டும்" என்று தாஞபதி துபாஷியைக் கேட்பார். "துரை இப்பொழுது வெகு கோபமாக இருக்கிருர்; அதனல் இங்கே பேட்டி காண்பது நன்மையாக முடியாது. அடுத்த முகாமில் உங்கள் காரியத்தைக் கட்டாயம் பூர்த்தி செய்துவிடலாம்" என்று கலெக்டரின் துபாஷ் பதில் சொல்வார். இத்தகைய

பேச்சுக்கள் அடிக்கடி நிகழ்ந்தனவே தவிரக் காரியம் முடியவில்லை.

இவ்விதமாகக் கட்டபொம்மு கலெக்டரைப் பேட்டி காண்பதற்காக, அவர் பின்னால் சொக்கம்பட்டி, சேற்றூர், ஸ்ரீவில்லிபுத்தூர், பேறையூர், பாவாலி, பள்ளிமடை, கமுதி முதலிய இடங்களுக்கெல்லாம் சென்றார். எந்த இடத்திலும் பார்க்கமுடியாமல் போகவே கடைசியாக வேறுவழியில்லாமல் ராமநாதபுரத்தை அடைந்தார்.

ஜாக்ஸன் தம் சூழ்ச்சியில் வெற்றி பெற்றார். தம்மை ஸெப்டம்பர் மாதம் 5-ஆம் தேதியாவது அதற்கு முன்பாவது கச்சேரியில் வந்து காணவேண்டும் என்று பாளையக்காரருக்கு உத்தரவு அனுப்பியிருந்தாரே ஒழிய ராமநாத்புரத்திற்குத்தான் வரவேண்டும் என்று அதில் தெளிவாகக் குறிப்பிடவில்லை. கட்டபொம்மு ராமநாதபுரத்தில் தம்மை வந்து பார்க்க வேண்டும் என்று விரும்பியிருந்தால், அவர் அந்தத் தினம் வரையில் அங்கேயே தங்கியிருந்திருப்பார். அவ்விதமின்றி, அந்தக் கடிதத்தை எழுதிய மூன்று தினங்களுக்கெல்லாம் அவர் திருநெல்வேலிப் பாளையங்களைப் பார்வையிடக் கிளம்பியதற்குக் காரணம் கட்டபொம்முவை எப்படியாவது மடக்கவேண்டும் என்னும் எண்ணமே என்று தெரிகிறது. மேலும் பேட்டிக்குக் குறிப்பிட்டிருந்த தினத்திற்குள்ளாக அவர் ராமநாதபுரம் திரும்பிவரவில்லை. ஒன்பதாம் தேதி மாலையில்தான் அவரும் பிற உத்தியோகஸ்தர்களும் ராமநாதபுரம் வந்து சேர்ந்தார்கள்.

கலெக்டரைப் பின்தொடர்ந்து செல்வதைப் பாளையக்காரர் விரும்பவேயில்லை; கலெக்டர் தம்மீது வர்மம் கொண்டிருக்கிறார் என்பதையும், அதை ராமநாதபுரம் போய்ச் சேர்ந்தவுடன் நிறைவேற்றப் போகிறார் என்பதை

யும் கண்டுகொண்டார். பின்னல் அவர் கும்பினியாருக்கு எழுதிய கடிதத்தில் கலெக்டர் வஞ்சகமாகத் தம்மை அடுத்த ஊரில் பார்ப்பதாகக் கூறி ஏமாற்றி ஒவ்வோர் ஊராக அழைத்துச் சென்றதாகவும், தம்மை எப்படியா வது அவர் ராமநாதபுரம் அழைத்துச் சென்று பழிவாங் கச் சிறைசெய்யப் போகிருர் என்னும் வதந்தியை வழி நெடுகிலும் தாம் கேட்டதாகவும் தெரிவித்திருக்கிருர் அன்றி, கலெக்டர் பின்னல் போவது அவருக்குக் கௌர வக் குறைவாகவும் இருந்திருக்க வேண்டும்.

கலெக்டரோ, கண்டிப்பாக வெளியிடங்களில் அவ ரைப் பார்க்க முடியாது என்றும், ராமநாதபுரத்தில்தான் பேட்டி அளிக்கப்படும் என்றும் பாளையக்காரருக்குத் தெரி வித்ததாகவும், அங்ஙனம் தெரிவித்தும் அவர் தாமாகவே உடன்வந்ததாகவும் எழுதியிருக்கிருர்.

# அத்தியாயம் 13

## ராமநாதபுரம் பேட்டி

*' மானம் பொழியுது பூமி விளையுது
மன்னவன் காணிக்கு ஏது கிஸ்தி ?'

---

பாளையக்காரர் ராமநாதபுரம் வந்து சேர்ந்த மறு நாள் கலெக்டர் கட்டபொம்முவுக்குப் பேட்டி அளிப்பதாகத் தெரிவித்தார். இந்தச் செய்தியைத் தலைமை அரிக்காரரான ராகவையா வந்து கூறினன். ஆனால் கோபால ஐயர் என்றொருவர் அன்றிரவே வந்து கலெக்டர் அவரைப் பிடிக்கச் சூழ்ச்சி செய்திருப்பதாக ரகசியமாகத் தெரிவித்துச் சென்றார் என்று கூறப்படுகின்றது. பாளையக்காரர் கலெக்டர் சொல்லி அனுப்பிய பிரகாரம் மறுநாள், அதாவது 1798—ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10—ஆம் தேதி காலை பத்து மணிக்கு அவரைப் பார்க்கப் புறப்பட்டுச் சென்றார். அவருடன் அவருடைய தம்பியர், மைத்துனர், மந்திரி முதலானேரும் மற்றும் பரிவாரங்களும் புறப்பட்டனர்.

புறப்படுவதற்கு முன்பு கட்டபொம்மு தம்முடன் வந்தவர்களிடம் கலந்து ஆலோசித்து ஒரு முடிவிற்கு வந்திருந்தார். ஜாக்ஸன் கட்டாயம் தமக்குத் தீங்கிழைக்கப் போகிறார் என்று எண்ணிய பாளையக்காரர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தாம் திரும்பி வரவில்லையானல் தமக்கு ஏதோ தீங்கு நேரிட்டு விட்டது என்று மற்றவர்கள் நிச்சயித்துக்கொள்ளலாம் என்பதையும் அதற்குப் பிறகு

---

* ராமநாதபுரம் சந்திப்பில் கட்டபொம்மு இப்படிச் சொன்னரென்பது கர்ணபரம்பரைச் செய்தி.

அவர்கள் தம்மைக் காப்பாற்றவும், தாங்கள் தப்பிக் கொள்ளவும் எவ்விதம் நடந்து கொள்ளவேண்டும் என்பதையும் குறிப்பிட்டிருந்தார்.

அவர்கள் கோட்டைக்குள்ளே அரண்மனையில் உள்ள மெத்தை வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். பாளையக்காரர் தாம் கலெக்டரை வழக்கமாகப் பேட்டி காணுவது அரண்மனை வடபால் உள்ள 'ராமலிங்க விலாசம்' என்னும் சிங்கார மாளிகையிலேதான் என்றும், அங்ஙனம் இல்லாது தம்மை மெத்தை வீட்டிற்கு அழைத்துச் சென்றது வதந்தியைப் பலப்படுத்தியது என்றும் பின்னுல் தெரிவித்திருக்கிருர். கலெக்டரோ பாளையக்காரர்களுக்குத் தம்முடைய கச்சேரியில்தான் பேட்டியளிப்பது வழக்கமென்றும், கச்சேரியின் கீழ்ப்பாகம் பழுதடைந்திருந்தமையால் மேல்பாகமான மெத்தையை உபயோகித்ததாகவும் கூறியிருக்கிருர். காரணம் எதுவாக இருந்தாலும் பேட்டி அரண்மனை மெத்தை வீட்டில் நடந்தது.

பாளையக்காரரும் அவருடன் வந்தவர்களும் கட்டிடத்தை அடைந்ததும், அவ்விடம் காவல் புரிந்துவந்த சேவகர்கள் அவர்களை அணுகிப் பாளையக்காரர், அவருடைய தம்பிமார், மந்திரி ஆகியோரை மட்டும் வரச் சொல்லிக் கலெக்டர் உத்தரவு அளித்திருக்கிருர் என்பதைத் தெரிவித்து அவர்களை மட்டும் உள்ளே செல்ல அனுமதித்தார்கள். மற்றவர்களை உள்ளே விடவில்லை. அதனுல் பாளையக்காரருடைய பரிவாரமும், மைத்துனர் முதலியோரும் வெளியிலேயே தங்கும்படி நேரிட்டது.

கலெக்டர் பாளையக்காரரை முகமலர்ச்சியுடன் வரவேற்ருர். தம்முடைய உள்ளத்தில் கிடந்தவற்றை முகத்தில் காட்டிக்கொள்ளவில்லை. பாளையக்காரருடைய க்ஷேமலாபங்களை விசாரித்துவிட்டுத் தம்முடைய உத்தரவுப் பிர

காரம் புறப்பட்டு வந்ததைப் பற்றிச் சந்தோஷப்படுவதாகவும், அவ்விதம் வந்ததால் கஷ்டங்கள் யாவும் நீங்கிவிட்டன என்றும் கூறினர். பாளையக்காரரும் சம்பிரதாயமாகப் பதிலுக்குத் தம்முடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டார். தம்முடைய தாயாருக்கு உடம்பு அசௌகரியமாக இருந்ததால்தான் அதுகாறும் தாமதம் ஏற்பட்டது என்பதையும் அறிவித்தார்.

பேச்சு கும்பினியாருக்குப் பாளையக்காரர் மீது ஏற்பட்ட வருத்தத்தையும் அதன் காரணங்களையும் பற்றித் திரும்பியது. கிஸ்திப் பாக்கியைப் பற்றி விசாரித்த பொழுது பாளையக்காரர் தாம் செலுத்தவேண்டிய தொகை முழுவதையும் கொணர்ந்திருப்பதாகக் கூறினர். சர்க்கார் கிராமங்களில் குழப்பம் ஏற்படுத்தி வருவதாகக் கூறப்பட்டிருந்த புகாரைப் பற்றிக் கேட்டதற்குத் தாம் அவ்விதம் ஒன்றையும் செய்யவில்லை என்றும், தம்மால் துன்பம் அடைந்ததாகக் குறை கூறிக் குடி மக்கள் ஏதாவது வாக்கு மூலங்கள் கொடுத்திருந்து அவற்றைக் கும்பினியார் காண்பிப்பார்களானல் தாம் அவற்றின் பொறுப்பை ஏற்றுக் கொள்வதாகவும் பதில் சொன்னர்.

கும்பினியார் கட்டபொம்முவின் மீது ஆயாசம் கொண்டதைப்பற்றித் தாம் மிகவும் வருத்தப்படுவதாகத் தெரிவித்தார் கலெக்டர். கும்பினியாரிடமிருந்து மறு உத்தரவு வரும் வரையில் பாளையக்காரர் ராமநாதபுரத்திலேயே தங்கியிருக்கவேண்டும் என்பதையும் குறிப்பிட்டார். பாளையக்காரர் தங்குவதற்கு என அவர் ஒரு கட்டிடத்தையும் தயார் செய்திருந்தார். அது கோட்டைக்குள்ளேயே இருந்தது. கலெக்டர் கட்டளையிடும் இடத்தில் தங்கியிருப்பதற்குத் தமக்கு ஆட்சேபமில்லை யென்றும், ஆனல் கோட்டைக்குள் அப்பொழுது வைசூரி பரவி யிருந்ததாலும் தமக்கு உடம்பு

அஸௌகரியமாக இருந்தது அப்பொழுதுதான் சுகப்பட்டு வருவதாலும் தாம் கோட்டைக்கு வெளியிலேயே தங்கியிருக்க அனுமதி கொடுக்கவேண்டும் என்றும் கட்டபொம்மு வேண்டிக்கொண்டார். ஊருக்குத் திரும்பிப் போகலாம் என்று கலெக்டருடைய அனுமதி கிடைக்கும் வரையில் அவ்விடத்திலேயே காத்திருக்கச் சம்மதிப்பதாகவும் கூறினர்.

கலெக்டருக்கோ அவரைக் கோட்டைக்குள்ளேயே நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று எண்ணம். அவருடன் ஆயுதபாணிகளாகப் பலர் வந்திருக்கிருர்கள்? அவ்வளவு வீரர்களுடன் அவரைக் கோட்டைக்கு வெளியிலே விட்டு வைத்திருத்தல் ஆபத்தாக முடியலாம்? அன்றி, தமக்கு அவர் மீதுள்ள பிடிப்பைத் தளர்த்தக் கூடாது என்றும் எண்ணிஞர் போலும். கட்டபொம்மு கூறியது உண்மை தானு என்பதை அறியவிரும்பினர் கலெக்டர். ஒருவேளை பாளையக்காரர் தம்மை ஏமாற்றுவதற்காகவே அங்ஙனம் கூறிஞரோ என்று அவர் சந்தேகப்பட்டிருக்கலாம். தவிர வைசூரி என்ருல் ஆங்கிலேயர்களுக்கும் கொஞ்சம் கலக்கம் தான். கோட்டைக்குள் வைசூரி பரவியிருக்கிறது என்ற செய்தி அவருடைய உள்ளத்தையும் கலக்கி யிருக்கக் கூடும். ஒருகால் பாளையக்காரர் கூறியது உண்மையாக இருந்தால் தாமும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்றும் அவர் எண்ணியிருக்கலாம்.

கலெக்டர் கட்டபொம்முவைப் பார்த்து அவருடைய தந்தைக்கு வைசூரி போட்டியிருந்ததா என்று கேட்டார். கட்டபொம்மு தம்மைப்போலவே தம்முடைய தந்தையும் வைசூரியைக் கண்டு பயப்படுவார் என்றும், கடைசியில் அவர் வைசூரி போட்டியே இறந்து போனுர் என்றும் கூறி, வைசூரிக்குத் தாம் பயப்படுவதையும் அறிவித்தார்.

இதற்கிடையில் கலெக்டர் அவ்விடத்திலிருந்த கோட்டை அதிகாரியான கர்னல் மார்டின்ஸ் (Col. Martinz) என்பவரைக் கோட்டைக்குள் வைசூரி பரவியிருக்கிறதா என்று வினவினர். கர்னல் அவ்விதம் இருப்பதாகத் தமக்குத் தெரியவில்லை என்று கூறிவிடவே, கலெக்டர் பாளையக்காரரைத் தாம் திட்டம் செய்த இடத்திலேயே தங்கச்செய்யவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார். ஆனால் அதனை அவரிடம் சொல்லாமல் பேச்சை நடத்திக்கொண்டே போனர்.

நாட்டுச் சரிதங்களில் ரஸமான சம்பவம் ஒன்று இவ்விடம் கூறப்படுகின்றது.

கலெக்டரைப் பேட்டி காணச் செல்லுங்கால் வழி நெடுக முக்கியமான இடங்களில் எல்லாம் போர் வீரர்கள் ஆயுதபாணிகளாக நிறுத்தப்பட்டிருப்பதைக் கட்டபொம்மு பார்த்துக்கொண்டே போனர். அவ்வாறே கலெக்டர் உட்கார்ந்திருந்த ஆசனத்திற்குப் பின்புறமும் ஒரு போர் வீரன் நின்றுகொண்டிருந்தான். தம்மைப் பிடிப்பதற்காகவே இவ்வளவு பந்தோபஸ்துகளும் செய்திருப்பதாகப் பாளையக்காரர் எண்ணிவிட்டார்.

பேட்டி நடந்துகொண்டிருக்கும்பொழுதே கலெக்டர் மேஜையினின்றும் ஒரு துண்டுக் காகிதத்தை எடுத்து அதில் ஏதோ எழுதி வெளியில் அனுப்பினராம். அது கோட்டைக்குள் வைசூரி பரவியிருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள அனுப்பிய கடிதமே போலும். ஆனல் பாளையக்காரரோ வேறு விதமாகக் கருதிவிட்டார் என்று தெரிகிறது.

நாட்டுச் சரிதங்களில் அது கோட்டை அதிகாரிக்கு எழுதப்பட்ட கடிதம் என்றும், கலெக்டர் அவரைத் தம்முடைய படைகளை நடத்திக் கோட்டையைச் சூழ்ந்து

கொள்ள வேண்டிக்கொண்டார் என்றும் கூறப்படுகின்றது. 'கில்லேதார்' முதலில் அதற்கு இணங்க மறுத்து விட்டார் என்றும், பிறகு கலெக்டர் வற்புறுத்தலின் பேரில் ஒப்புக்கொண்டு தம் படையைக் கொண்டுவந்து கோட்டையை வளைத்துக்கொண்டார் என்றும் சொல்லப் படுகின்றது.

இது உண்மையாயின் கலெக்டர் முன்னேற்பாடாகச் செய்ததே போலும்.

இவ்வளவு தூரம் நிகழ்ந்த பிறகு கலெக்டர் தாம் பாளையக்காரருக்கு எழுதிய கடிதங்களில் எல்லாவற்றிற்கும் பதில் வராமையால், அவை யாவும் கிரமமாக அவருக்குக் கிடைத்தனவா என்று வினவினார். பாளையக்காரர் தமக்குப் பல கடிதங்கள் வந்தன என்றும், அவற்றுள் உரியவற்றுக்குத் தாம் பதில் எழுதியிருப்பதாகவும், மற்றவற்றிற்குப் பதில் அவசியமில்லையென்று எண்ணியதாகவும் கூறினார். ஆனால் கலெக்டர் அனுப்பிய எல்லாக் கடிதங்களும் தமக்கு வந்து சேர்ந்தனவா என்பது நிச்சயமாகச் சொல்ல இயலாது என்பதையும் தெரிவித்தார்.

அதன்மீது கலெக்டர் 'ஜவாப் நவீஸ்' (இப்பொழுது Interpreter-அதாவது பதிலைக் கேட்டுச் சொல்பவர்-என்னும் உத்தியோகஸ்தரை யொத்த) அதிகாரியைக் கூப்பிட்டுத் தாம் கட்டபொம்முவுக்கு எழுதிய கடிதங்கள் எல்லாவற்றையும் படித்துக் காட்டும்படி உத்தரவிட்டார்.

ஜவாப் நவீஸும் அவ்விதமே ஒவ்வொரு கடிதமாகப் படித்துக் காட்டிக்கொண்டே வந்தார். கட்டபொம்முவும் கேட்டுக்கொண்டிருந்தார். அந்த வருஷம் மே மாதம் 23-ஆம் தேதி பாளையக்காரர் உடனே ராமநாதபுரம் வந்து தம்மைப் பார்க்கவேண்டும் என்றும், அந்தப் படியே அவரை அழைத்துவரக் கடிதம் கொண்டுவரும்

அரிக்காரனுக்குக் கட்டளை இடப்பட்டிருக்கிறது என்றும், அப்படி வராவிட்டால் பாளையம் பறிமுதல் செய்யப்படும் என்றும் தெரிவித்துக் கலெக்டர் எழுதியிருந்த கடிதம் வாசிக்கப்படும் வரையில் ஒன்றும் நடைபெறவில்லை. ஆனால், இந்தக் கடிதத்தைப் படிக்கக் கேட்டவுடன் கட்டபொம்முவின் தோற்றத்தில் ஒரு மாறுதல் உண்டாயிற்று; அவருடைய உள்ளக்கிளர்ச்சி முகத்தில் தென்பட்டது.

'கட்டபொம்முவுக்குக் கூட இவ்விதம் எழுத ஒருவருக்குத் தைரியம் உண்டா?' என்று அக்கடிதத்தை எழுதிய கலெக்டர்மீது அவருக்குப் பிரமாதமான கோபம் வந்தது. மேற்கொண்டு அங்கே தங்கினால் தமக்கு ஏதேனும் தீங்கு உண்டாகும் என்று நினைத்து 'இனி ஒரு க்ஷணமும் இவ்விடம் தங்கக்கூடாது' என்று தீர்மானித்தார். அதனால் அவர் ஜலபாதை கழித்து வரச் சிறிது வெளியிற் செல்லவேண்டும் என்று கலெக்டரிடம் அனுமதி கேட்டார்.

கலெக்டர் காட்டும் ஒரு சமிஞ்ஞையின் பேரில் அவருக்குப் பின்னால் நின்ற போர்வீரன் பாளையக்காரரின் மீது பாய்ந்து அவரைப் பிடித்துக்கொள்ள வேண்டும் என்று ஏற்பாடு ஆகியிருந்ததாக நாட்டுச் சரிதங்கள் கூறும். ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை.

அவருடைய உள்ளக் கிளர்ச்சியைக் கலெக்டரும் கண்டுகொண்டார். சிறிது வெளியிற் சென்று வந்தால் அந்தக் கோபம் தானே ஆறிப்போய்விடும் என்று எண்ணினார். ஆயினும் கட்டபொம்மு அந்தக் கட்டிடத்தை விட்டு வெளியே செல்ல அவர் சம்மதிக்கவில்லை. அதனால் அவர் பாளையக்காரரைக் கச்சேரியை அடுத்துள்ள தோட்டத்திற்குள் சென்றுவர அனுமதி கொடுத்தார்.

கட்டபொம்மு தோட்டத்திற்குள் செல்லவில்லை. மேல்மெத்தையினின்றும் படிக்கட்டுகள் வழியே கீழே இறங்கித் தோட்டத்திற்கு எதிர்புறமாக இடது கைப் பக்கத்து வாசல் வழியாக வெளியில் செல்ல முற்பட்டார். அவர் அவ்விதம் சென்றதற்குக் கூறப்படும் காரணம் பின்வருமாறு :

அவர் மெத்தையினின்றும் இறங்கி வந்தபொழுது அரிக்காரர்களும் சிப்பாய்களும் ஏலம் போட்டுக்கொண்டிருப்பதைக் கண்டார். அவருடைய உடைமைகள்,— வெள்ளிப் பாத்திரங்கள், பித்தளைப் பாத்திரங்கள், குதிரை, பல்லக்கு, குடை, சாமரம், விருதுகள் போன்ற மற்றச் சாமான்கள், கிஸ்திப் பாக்கிக்காகக் கொண்டு வந்திருந்த பணமுடிப்பு ஆகிய எல்லாம் கோட்டை வாயிலில் ஏலம் போடப்பட்டன. அவருடைய சொத்துக்கள் யாவும் கொள்ளையிடப்பட்டும் பறிமுதல் செய்யப்பட்டும் போய்விட்டன. இதன்பின் அவ்விடம் தங்கக்கூடாது என்று நினைத்துப் பயந்து அவர் வெளியே ஓடிவிட்டார்.

அவர் வெளியில் செல்வதைப் பார்த்துக்கொண்டிருந்த பால்போர் (Balfour) என்னும் துரை கலெக்டரை அழைத்து இச்செய்தியைத் தெரிவித்தான். கலெக்டரும் மெத்தையின் முன்புறத்தில் இருந்த அறையை அடைந்து வெளியில் எட்டிப் பார்த்தார். கட்டபொம்மு சென்றுகொண்டிருப்பதைக் கவனித்து அவரைப் போகவேண்டாம் என்று தடுத்தார். கட்டபொம்மு அதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை. இரண்டாவது வாசலையும் தாண்டி மைதானத்தை அடைந்துவிட்டார். வெளியில் காத்துக்கொண்டிருந்த பரிவாரங்கள் அவரைச் சூழ்ந்துகொண்டன. இருவர்

கைலாகு கொடுக்க அவர்கள் தோள்மீது கைவைத்துக் கொண்டு கோட்டை வாயிலை நோக்கி விரைந்து சென்றார்.

கலெக்டர் உடனே பட்டாளத்துக்கு ஆளனுப்பினார். கிளார்க் (Lieut. Clarke) என்னும் ஓர் உதவித் தளகர்த்தருக்குத் தெரிவித்துக் கோட்டை வாயிலை மூடி விடும்படியும் வேண்டிக்கொண்டார்.

கட்டபொம்மு கோட்டை வாயிலை அடைந்தார். என்ன ஆச்சரியம்! அவர் வருவதற்கு முன்பே கோட்டை வாயில் அடைக்கப்பட்டுப் போர்வீரர் அதனைக் காவல் புரிந்து நின்றதைக் கண்டார். கலெக்டர் தம்மை உள்ளே விட்டவுடனே தாம் வெளியே போய் விடாதபடித் தடுப்பதற்காக, அதனைக் காத்துவர ஏற்பாடு செய்திருந்தார் என்று எண்ணினார். காவலை மீறி எப்படி வெளியே செல்வது? தளகர்த்தர் கிளார்க் பாளையக்காரரைத் திரும்பிக் கச்சேரிக்கே சென்றுவிடுமாறு கேட்டுக்கொண்டார்; அதே சமயத்தில் அவரை வெளியில் விடாதபடி காத்து வரும்படிச் சிப்பாய்களுக்கும் உத்தரவிட்டார். பாளையக்காரர் மீறி வெளியே செல்ல முயன்றால் தடுக்க வேண்டுமென்றும், அம்முயற்சியில் அவருடைய உடலுக்குத் தீங்கு நேராமல் கவனிக்க வேண்டுமென்றும் கூறினார்.

சிப்பாய்கள் துப்பாக்கிகளுக்கு மருந்து போடுவதற்குக்கூட அவகாசம் கிடைக்கவில்லை. பாளையக்காரரோ விரைவில் வெளியில் செல்வதற்காகக் கோட்டை வாயிலைத் தாக்கினார். அச்சமயத்தில் ஆசாரவாசல் சாத்தித் தாழிட்டுச் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தது. ஆனால், கன்னி வாசல் சாத்தப்பட்டிருந்ததே ஒழியத் தாழிடப்படவில்லை. அதனைக் கண்ட பாளையக்காரர் அதையே இலக்காகத்

தாக்கிக் கதவைத் திறந்துகொண்டு வெளியே போய்விட்டார்.

இவ்விதம் ஏதாவது நடக்கும் என்று எதிர்ப்பார்த்தோ, அல்லது பாளையக்காரரின் முன்னேற்பாட்டாலோ அவருடைய வீரர்களும் கோட்டைக்கு வெளியில் ஆயுதபாணிகளாகக் காத்திருந்தனர். சுமார் நாலாயிரம் பேர் அவ்விதம் கூடியிருந்தனர். கும்பினியாருக்கும் பாளையக்காரருடைய வீரர்களுக்கும் கோட்டை வாயிலில் பெரும் போர் மூண்டது. இருதரத்தாரும் பல தடவைகள் குண்டுகளைப் பொழிந்தனர். இரண்டு கட்சிக்கும் சேதம் அதிகம். சண்டையில் கும்பினித் தளகர்த்தர் கிளார்க் ஓர் உடைவாளால் வெட்டுண்டு உயிர் துறந்தார்.

அவ்விதம் கிளார்க் துரையைக் குத்திக் கொன்றது பாளையக்காரரான கட்டபொம்முவே என்று கலெக்டர் ஜாக்ஸன் தீர்மானித்தார். ஆனால், பின்னால் விசாரணையில் அது ருஜுவாகவில்லை. பாளையக்காரரின் பரிவாரங்களுள் ஒருவனாலேதான் கிளார்க் கொல்லப்பட்டார் என்று தீர்மானிக்கப்பட்டது.

இந்தச் சண்டையில் பாஞ்சாலங் குறிச்சியார் பக்கத்தில் போர் புரிந்தவர்களுள் வெள்ளையத் தேவன் எனப்படும் பாதர் வெள்ளை முக்கியமானவன் என்று நாட்டுச் சரித்திரங்கள் கூறும். அவன் பாளையக்காரரின் வளர்ப்பு என்றும் அஞ்சா நெஞ்சம் படைத்தவன் என்றும் தெரிகின்றது. அவனது வீரத்தைக் கண்டு மெச்சிய கட்டபொம்மு அவனுக்குப் 'பகதூர்'ப் பட்டத்தை அளித்துக் கௌரவித்திருந்தார். அவன் பொதுவாகப் (பகதூர் வெள்ளை )பாதர் வெள்ளை என்றே வழங்கப்பெறுவான் அவன் பாளையக்காரருக்குப் பக்க பலமாகவே இருந்திருக்

கிறுன். ஜெளார்க்கைக் கொன்றவன் அவனே என்றும் கூறுவர் ஒரு சாரார்.

பாளையக்காரருடன் அவருடைய தம்பியரும் தப்பி விட்டனர். அவருடைய மைத்துனர் இருவரும் வேறு உற வினர் இருவரும் போரில் மடிந்துவிட்டனர். அவருடைய வக்கீலும் தானுபதியுமான சுப்பிரமணிய பிள்ளை என்பவர் மட்டும் கோட்டைக்குள்ளே அகப்பட்டுக்கொண்டார். கும்பினியார் தானுபதிப் பிள்ளையை விடவில்லை. அவ ரைச் சிறைசெய்து விலங்கிட்டனர். அவரைப் பலவித மாகத் துன்புறுத்தினர் என்றும் சொல்லப்படுகிறது. கடைசியில் அவர் தக்க பந்தோபஸ்துடன் திருச்சிராப்பள் ளிக்கு அனுப்பப்பட்டார். பாஞ்சாலங் குறிச்சிப் பாளை யத்தின் பிரதம காரியஸ்தரான சுப்பிரமணிய பிள்ளை பிடி பட்டதைக் கட்டபொம்முவே பிடிப்பட்டது போல மதித்து மகிழ்ந்தனர் கும்பினியார்.

ராமநாதபுரத்தை விட்டு வெளியேறிய கட்டபொம்மு நேராகப் பாஞ்சாலங் குறிச்சியை அடைந்தார். வழியில் எவ்விடத்திலும் தங்கவில்லை. ஆயினும் அவருடைய பரி வாரத்தைச் சேர்ந்தவர்கள் எதிர்ப்பட்ட சர்க்கார் கிராமங் களை எல்லாம் சூறையாடிக் கொண்டே சென்றனர்.

கலெக்டர் ஜாக்ஸனும் உடனே இந்த நிகழ்ச்சியைச் சர்க்காருக்கு அறிவித்துப் பின்கண்டவாறு சிபாரிசு செய் தார்: 'கட்டபொம்மு இனிமேல் கும்பினியாருக்குப் பணிந்து நடப்பார் என்று எண்ணவே இடமில்லை. அவரை அடக்கச் சிறு சிறு பட்டாளங்களை அனுப்பினால் போதாது. எதிர்பாராத விதத்தில் அவரைப் பிடிக்கவும் முடியாது. ஆகவே அவரை அடக்கவேண்டுமானால் இரண்டு பெரிய பீரங்கிகளும், குதிரைப்படையும்கொண்ட ஒரு பட்டாளம் தேவை. பாளையத்தைக் கட்டாயம் பறி

முதல் செய்துவிடவேண்டும். அன்றியும் பாளையக்கார ரைப் பிடித்துக் கொடுப்பவருக்குச் சுமார் ஐயாயிரம் ரூபாய் வரையில் வெகுமதி யளிக்கலாம்.'

சுமார் முப்பது வருஷகாலம், நவாபுக்கும் கும்பினி யாருக்கும் உழைத்து, கடமையை நிறைவேற்றுகையில் உயிர்துறந்த தளகர்த்தர் கிளார்க் மூன்று குழந்தைகளை யும் மனைவியையும் விட்டுச் சென்றிருப்பதாயும், அக் குழந்தைகளும் அவர்கள் தாயும் வாழ்க்கையை நடத்தக் கும்பினியார் உதவியளிக்கவேண்டும் என்றும் கலெக்டர் கேட்டுக்கொண்டிருந்தார்.

ராமநாதபுர நிகழ்ச்சிகள் கும்பினியாருக்குப் பெரிய கலக்கத்தை உண்டுபண்ணின. கட்டபொம்முவை அப் படியே விட்டு வைப்பது அவர்களுடைய கௌரவத்திற்கு இழுக்காகும்; செல்வாக்கும் குறைந்து விடும். இதனால் மற்றப் பாளையக்காரர்களும் கலகம் செய்ய ஆரம்பிப்பார் கள். இங்கிலையில் கும்பினியார் கொண்ட கருத்து நிறை வேருது.

எனவே சென்னைச் சர்க்கார் 1798-ஆம் வருஷம் அக் டோபர் மாதம் 3-ஆம் தேதி ஒரு பிரகடனத்தை வெளி யிட்டனர். அதன்படி அவர்கள் கட்டபொம்மு ராமநாத புரம் கலெக்டரிடமாவது திருச்சிராப்பள்ளியிலிருந்த சேனுபதி மேஜர் ஜெனரல் பிளாய்ட் (Major General-Floid) என்பவரிடமாவது தம்மை உடனே ஒப்படைத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இவ்விதம் செய்தால் அவருடைய நடவடிக்கையைப் பட்ச பாதமின்றி விசாரித்து அவருக்கு உரிய நியாயம் வழங்கு வதாகவும் வாக்களித்தார்கள். அவர் மறுத்தால் சர்க்கார் தங்கள் அதிகாரத்தை நிலை நாட்ட நேரிடும் என்றும் எச் சரித்தனர்.

இச்செய்தி அடங்கிய கடிதத்தைக் கன்னையன், சுப்ப ராயன் என்ற இரண்டு அரிக்காரர்கள் பாஞ்சாலங் குறிச் சிக்கு எடுத்துச் சென்றார்கள். அவர்கள் 12-ஆம் தேதி கோட்டையை அடைந்து தங்கள் வரவைத் தெரிவித்தார் கள். அவர்கள் யாவர் என்பதையும் எதற்காக வந்திருக் கிறார்கள் என்பதையும் கட்டபொம்மு வினவவே விவரத் தைச் சொல்லியனுப்பினார்கள். உடனே அவர்களைக் கோட்டைக்குள் விட உத்தரவு கொடுக்கப்பட்டது. அரண்மனையை அடைந்ததும் பாளையக்காரரே நேரில் வந்து அவர்களையும் கலெக்டரையும் க்ஷேமம் விசாரித்தார். பிறகு அரண்மனைக்குள் அழைத்துச் சென்று கலெக்டர் அனுப்பிய கடிதத்தைக் காண்பிக்கும்படிக் கேட்டார். அந் தக்காலத்திலே இவ்விதம் அனுப்பப்படும் கடிதம் ஒவ் வொன்றுக்கும் இரண்டு இரண்டு பிரதிகள் எடுத்து அனுப்புவது வழக்கம். ஒன்று அசல், மற்றது நகல். தூதர் முதலில் நகலைத்தான் எடுத்துக்காட்டுவர். வேண்டும் போதுதான் அசலைக் காட்டுவார்கள். அதேபோலக் கலெக் டர் கடிதத்தின் நகலைக் காண்பித்ததும், பாளையக்காரர் அசலையும் வாங்கிக்கொண்டார். முதலில் அரிக்காரர்கள் அசலைக் கொடுக்க அஞ்சினார்கள். பாளையக்காரர் அவற்றை வாங்கிக்கொண்டு உள்ளே சென்று மூன்று மணி நேரம் பொறுத்து வெளியே வந்தார். உடனே அசல் நகல் இரண்டையும் பல்லக்கில் வைத்து ஊர்வலம் செய்து வந்து நகலை வைத்துக்கொண்டு அசலைத் திருப்பிக் கொடுத் துவிட்டார். அரிக்காரர்கள் தாங்கள் புறப்பட்டுப் போக வேண்டும் என்றும், பதில் கொடுத்தால் அதனைக் கொண்டு செல்வதாகவும் தெரிவித்தார்கள். ஆனால் கட்டபொம்மு பதில் கொடுக்கவில்லை. அவர்கள் புறப்படுவதற்கு முன்பு ஒவ்வொருவருக்கும் ஒரு முண்டாசு கொடுத்து மரியாதை செய்துவிட்டு, ஓர் ஓலை எழுதித் தம்முடைய சொந்த ஆள்

வசம் கொடுத்தனுப்பினர். அந்த ஓலையில் தம் மீது தவறே கிடையாது என்றும் எல்லாம் கலெக்டருடைய பிசகுதான் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

கலெக்டர் கூறியதைச் சர்க்கார் அப்படியே முழுதும் நம்பிவிடவில்லை. கட்டபொம்மு தப்பியோடியவுடன் நாலாயிரம் ஆட்கள் கோட்டையை வளைந்து நின்றனர் என்பதைக் கவனித்தால், பாளையக்காரர் முன்னதாகவே தீர்மானித்துப் போர்வீரர்களைத் தயாராக வைத்திருந்தார் என்று ஏற்படுவதாகக் கலெக்டர் கருதினர். சர்க்கார் அவ்விதம் கருதவில்லை. கலெக்டருடன் கூடவே பேட்டியை எதிர்பார்த்து ஊரூராகச் சுற்றிவந்த பாளையக்காரருடன் நாலாயிரம் வீரர்கள் இருந்தனர் என்பது ரகசியமாக இருக்க முடியுமா?

ராமநாதபுரம் சேர்ந்து கோட்டைக்குள் கலெக்டரைப்பேட்டி காண வந்த பாளையக்காரர் எதையும் கவனியாது திடீரென்று ஓடி விட்டார் என்றால் அதற்கு ஏற்ற ஒரு காரணம் இருக்கவேண்டும் அல்லவா?

மே மாதம் 23-ஆம் தேதி கலெக்டர் எழுதிய கடிதம் முன்னமேயே அவருக்குப் போயிருந்தால் கடிதத்தை வாசிக்கக் கேட்டவுடன் அவர் உள்ளக் கிளர்ச்சி அடைவதற்கு மார்க்கமே இல்லை. கலெக்டர் தாம் எழுதிய ஒவ்வொரு கடிதமும் பாளையக்காரருக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறதா என்பதை அறிய ஒவ்வொன்றையும் அவருக்கு வாசித்துக் காட்டுவதைவிட, பாளையக்காரரிடம் இருந்த எல்லாக் கடிதங்களையும் கொண்டுவரச் செய்து பார்த்து அவருக்குப் போய்ச் சேராத கடிதங்கள் எவை என்பதை அறிந்திருக்கலாம் என்று கருதிக் கும்பினியார் கலெக்டர் செய்கையைக் கண்டித்தார்கள்.

எது உண்மை என்பதை அறிவதற்காகக் கும்பினியார் பிரௌன், ஓரம், ஜான் காஸாமேஜர் என்ற ராணுவ அதிகாரிகள் மூவர் கொண்ட விசாரணைச் சபை ஒன்றை நியமித்தார்கள். அவர்கள் விசாரித்துத் தங்கள் முடிவைச் சர்க்காருக்குத் தெரிவித்தார்கள். அவர்கள் முடிவு வருமாறு :

'கலெக்டர் கட்டபொம்முவைத் தம்முடன் ஊரூராக அழைத்துச் சென்று அலைக்கழித்தது பாளையக்காரருடைய கௌரவத்தைக் குறைவுபடுத்தியதாகும். மற்றச் சிறு பாளையக்காரர்கள் முன்பு அது அவருக்கு அவமானத்தை உண்டுபண்ணியிருக்கும். பேட்டியின் பொழுது கலெக்டரின் நடத்தை ஒழுங்கானதென்று கருத முடியாத நிலையில் கடுமையாகவே இருந்தது. இக்காரணங்களால் பாளையக்காரர் தம் உயிருக்குப் பயந்து தப்பி ஓடியது இயற்கையே. கோட்டை வாயிலில் நடந்த சண்டை முன்னரே ஆலோசித்துத் திட்டம் செய்யப்பட்டது என்று கூற முடியாது. குறித்த சந்தர்ப்பத்திற்குத் தகுந்தாற்போல் ஏற்பட்ட நிகழ்ச்சியேயாகும். சண்டையில் இறந்த கிளார்க் பாளையக்காரருடைய பரிவாரத்தாரில் ஒருவனாலேயே கொலையுண்டார்.'

இவ்வாறு விசாரணையின் முடிவில் பாளையக்காரர் குற்றவாளியாகக் கருதப்படாமல் விடுவிக்கப்பட்டார். எனினும், அவருடைய பரிவாரத்தின் செயலுக்கும் அவரே பொறுப்பானவராதலாலும், தளகர்த்தர் கிளார்க் தம்முடைய கடமையை நிறைவேற்றுகையில் கொலையுண்டதாலும், அவருடைய மனைவி குழந்தைகளுடைய ஜீவனாம்சத்திற்காக அவர் இதற்குமுன் பெற்றுவந்த சம்பளத்திற்கு ஈடான தொகையைப் பாளையக்காரர் கொடுக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பிற்காலத்தில் அவர் மனைவி சர்க்காரிடமிருந்து மாதவாரி 73 வராகன் 19 பணம் 20 காசு ஜீவனும்சம் பெற்று வந்தாள்.

கர்ணபரம்பரையாகக் கட்டபொம்முவே தம்முடைய உடைவாளால் கிளார்க்கைக் குத்திக்கொன்ருர் என்று கூறப்பட்ட போதிலும் இவ்விசாரணை அவருக்குச் சாதகமாக முடிந்தது. இவ்விஷயத்தில் அவருக்குப் பெரிதும் துணையாக இருந்தவர் அக்காலத்தில் தூத்துக்குடியில் கும்பினியின் அதிகாரியாக இருந்த டேவிஸன் என்பவராகும். அவர் ஜாக்ஸன், கட்டபொம்மு ஆகிய இருவரின் நடத்தையைப்பற்றியும் திருச்சிராப்பள்ளிக்குச் சென்று அங்கிருந்த அதிகாரிகளிடம் நிலைமையை விளக்கிக் கூறியிருந்தார்.

மேற்கூறிய சம்பவங்களின் விளைவாகக் கலெக்டர் ஜாக்ஸன் பதவியினின்றும் நீக்கப்படவே, அவருக்குப் பதிலாக லூஷிங்டன் (S. R. Lushington) என்பவர் நியமிக்கப்பட்டார். இவரே பிற்காலத்தில் சென்னையில் கவர்னராக இருந்திருக்கிருர். பாளையக்காரருடைய வக்கீல் சுப்பிரமணிய பிள்ளையும் சிறையினின்றும் விடுவிக்கப்பட்டுப் பாஞ்சாலங் குறிச்சியை அடைந்தார்.

பாளையக்காரர் ராமநாதபுரத்தில் முன்பு ஏலம் போடப்பட்ட தம் பல்லக்கு, தண்டிகை முதலியவற்றைத் தமக்குத் திருப்பிக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கும்பினியாரைக் கேட்டுக்கொண்டார். அன்றியும் 'சார்மஹால்' பிரதேசத்துத் தேசகாவல் வரியை வசூலிக்கத் தமக்கு உரிமை உண்டு என்றும், அதனுல் வருஷ வாரியில் தமக்கு மூவாயிரம் சக்கரம் கிடைக்கும் என்றும், முந்திய வருஷத்தில் தாம் அவ்விதம் வசூல் செய்வதைக் கலெக்டர் தடுத்துவிட்டார் என்றும், அதனுல் தம்முடைய உரிமையை அங்கீகரித்து உத்தரவு அளிக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## *அத்தியாயம் 14*

# யுத்த முஸ்தீப்பு

*'மானை யெய்யென்று மன்னவன் சொல்லுமுன் வலியோர்*
*யானை யெய்தன மென்றசொல் செவிப்புலம் பாயக்*
*கான வேங்கையைக் கைச்சமு தாடொடுங் கலந்து*
*கோனைக் காணவே கூசுவர் கோளரி யிலாதால்.'*

*—கலியுகப் பெருங் காவியம்.*

---

தென்னாட்டுப் பாளையக்காரர்களின் கப்பத்தை வசூலிக்கும் கலெக்டராக ஜாக்ஸன் துரைக்குப் பதிலாக வந்த லூஷிங்டன் என்பவர் 1799-ஆம் ஆண்டின் முதலில் பதவி ஏற்றுக்கொண்டார். அவர் பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக்காரருக்கு மார்ச்சு மாதம் 16-ஆம் தேதி ஒரு கடிதம் எழுதி அனுப்பினார். அதில், விசாரணைக் கமிட்டியின் முடிவுப்படி கும்பினியார், கிளார்க் துரையைக் கொலை செய்தார் என்று சாட்டப்பட்ட குற்றத்தினின்றும் கட்டபொம்முவை விடுதலை செய்து அவருடைய பாளையத்தை அவருக்கே திருப்பிக் கொடுத்துவிட்டார்கள் என்பதைத் தெரிவித்திருந்தார். அத்துடன் இறந்துபோன கிளார்க்கின் குடும்பத்தாருக்குக் கொடுக்கவேண்டிய ஜீவனாம்சத் தொகையை உடனே நிர்ணயம் செய்யவேண்டியிருப்பதாலும், பாளையத்தை ஒப்பித்தல் சம்பந்தமான சர்க்கார் உத்தரவுகளை நிறைவேற்ற வேண்டியிருப்பதாலும், பாளையக்காரர் செலுத்தவேண்டிய கிஸ்தி பாக்கியுடன் உடனே ராமநாதபுரம் வந்து தம்மைப் பேட்டிகாண வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பாளையக்காரர் அதற்கு 19-ஆம் தேதியிலேயே பதில் எழுதிவிட்டார். அது கலெக்டருக்கு 21-ஆம் தேதி வந்து சேர்ந்தது. அந்தப் பதில் மிகுந்த பணிவுடன் எழுதப்பட்டிருந்தது. அதில் கும்பினியார் தம்மைக் குற்றவாளி அல்லர் என்று கருதிப் பாளையத்தைத் திருப்பி அளித்ததற்கு நன்றி தெரிவித்தார்; நான்கு மாத காலமாகத் தாம் திருச்சிராப்பள்ளிக்கும் ராமநாதபுரத்துக்கும் போய் வந்துகொண்டிருந்து கடந்த ஒரு மாதமாகத்தான் பாஞ்சாலங் குறிச்சியில் தங்கியிருப்பதாகவும், மழை பெய்யாததால் நிலங்களைத் தரிசாகப் போட்டுவிட்டு வேறிடங்களுக்குப் போய்விட்ட குடிமக்களைத் தாம் அப்பொழுதுதான் கொஞ்சங் கொஞ்சமாகத் திரும்பி அழைத்துவருவதாகவும், அவர்கள் எல்லோரும் வந்து சாகுபடி செய்ய ஆரம்பித்தவுடன், கும்பினியாருக்குச் செலுத்தவேண்டிய பணத்தைச் சேகரித்துக்கொண்டு நல்ல நாளில் புறப்பட்டு வருவதாகவும் எழுதியிருந்தார். அதனுடன் ராமநாதபுரத்தில் தம்மிடமிருந்து கொள்ளையிடப்பட்ட விருது முதலியவற்றைத் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்றும், சார்மஹால் பிரதேசத்துத் திசை காவல் வரியை வசூல் செய்ய உத்தரவு அளிக்கவேண்டும் என்றும் கேட்டிருந்தார். கடைசியில் கும்பினியார் தம்மை அவர்களின் வளர்ப்பாகவே கருதவேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார்.

கும்பினியார் வேண்டியது பணம்; வெறும் வார்த்தைகள் அல்ல. கட்டபொம்முவோ பணத்தைக் கொடுப்பதாகக் காணவில்லை. பதிலாக அவர் தமது கோரிக்கைகளைப் பெற்றுவரத் தம்முடைய காரியஸ்தர் பொன்னப்ப பிள்ளை என்பவரையும் ராமநாதபுரம் அனுப்பி வைத்தார்.

பாஞ்சாலங் குறிச்சியில் நிலைமை இவ்விதமிருக்க, ராமநாதபுரம் சீமையில் கலகம் உண்டாயிற்று. அதற்கு முன்பு சேதுபதியாக இருந்த முத்துராமலிங்க சேதுபதி யென்பவர் கும்பினியாருக்கு விரோதமாக இருந்தார் என்பதுபற்றி 1795-ஆம் ஆண்டில் அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு நாடு கடத்திச் சென்னைக்குக் கொண்டுபோகப்பட்டார். அவருக்குப் பிறகு, பட்டத்திற்கு வாரிசு யார் என்பது நிர்ணயிக்கப்பட்டு, நாட்டை அவரிடம் ஒப்பிப்பதற்கு எட்டு வருஷ காலம் பிடித்தது. இடைப்பட்ட அந்தக் காலத்தில், ராமநாதபுரம் சீமையைக் கும்பினியாரே நேரில் நிர்வகித்து வந்தார்கள். பட்டத்தை முறைப்படி அடையவேண்டியவர் தாங்களே யென்று சில பேர்கள் கிளம்பிக் கலகமிட்டு வந்தார்கள். இப்பொழுது ஏற்பட்டதும் அப்படிப்பட்ட கலகங்களுள் ஒன்றே. திருநெல்வேலிச் சீமைப் பாளையக்காரர்கள் இந்தக் கலகத்தில் கலந்துகொண்டார்கள்.

நிலைமை கட்டுக் கடங்காமற் போய்விடுமோ என்று பயந்த கலெக்டர் பட்டாளத்தின் உதவியைக் கோரினார். பாளையங்கோட்டையிலிருந்த சைனியத்தின் ஒரு பகுதியைத் தமக்கு உதவியாக வரும்படிக் கேட்டுக் கொண்டார். சைனியம் வரும் வழியிலுள்ள முதுகுளத்தூர், கமுதி, அபிராமம் முதலிய இடங்களின் அமல்தார்களுக்கும் சேனைக்கு வேண்டிய உதவியளிக்கும்படி எழுதினார்.

பாஞ்சாலங் குறிச்சியார் இந்தக் கலகத்தில் கலக்காதிருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய விரும்பினார் கலெக்டர். அதற்குக் கட்டபொம்முவை ராமநாதபுரத்திற்கு அழைத்துவந்து தம்முடன் நிறுத்திக்கொள்ளுவதே தக்க உபாயம் என்றும் எண்ணினார். அதனால் கலெக்டர்

பாளையக்காரர் புறப்பட்டு வராமல் காலங் கடத்து வதைப்பற்றி அவருடைய வக்கீலிடம் அடிக்கடி வற்புறுத் திச் சொன்னார். வக்கீலும் பாளையக்காரர் புறப்பட்டு வருவதற்கு நல்ல நாள் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்று சால்ஜாப்புச் சொல்லிவந்தார். கடைசியில் தொந் தரவு பொறுக்க முடியாமல் கட்டபொம்மு ஏப்ரல் மாதம் 29-ஆம் தேதி புறப்பட்டு வருவதாக அவர் தெரி வித்துவிட்டார்.

ஆனால் கட்டபொம்மு வரவில்லை. இடையிலோ சார் மஹால் தாசில்தாரிடமிருந்து பாளையக்காரரின் சேவகர் கள் தம்முடைய பிரதேசத்தில் புகுந்து குடிமக்களை இம் சித்துப் பண வசூல் செய்கிறார்கள் என்ற புகார்கள் வந்த வண்ண மிருந்தன. கலகப் பிரதேசங்களுக்குத் தாமே நேரில் சென்று பார்வையிட்டுக் கலகத்தை அடக்கவேண்டு மென்ற எண்ணத்துடன் கலெக்டர் ஜாக்ஸன் ராமநாத புரத்தை விட்டுக் கமுதிக்கு வந்து சேர்ந்தார். அதனுடன் கட்டபொம்முவிற்கு ஒரு கடிதம் எழுதி அவர்மீது வந் துள்ள புகார்களுக்குச் சமாதானம் கூறும்படியும் கேட் டார். இந்தக் கலகத்திற்கு முக்கிய உதவியாக இருந்தவர் நாகலாபுரம் பாளையக்காரரென்றும் கட்டபொம்மு அவ ருக்குப் பக்க பலமாக இருந்தாரென்றும் கூறப்படுகிறது.

கடைசியாக மே மாத முடிவில் கட்டபொம்மு பாஞ் சாலங் குறிச்சியிலிருந்து புறப்பட்டு வடக்கு நோக்கி வரு கிறார் என்ற செய்தி கலெக்டருக்கு எட்டியது. ஆனால், அவர் சென்றது ராமநாதபுரத்தை நோக்கியல்ல; சிவகங் கையை நோக்கியே. அவர் புறப்பட்டுச் சென்றது கலகக் காரரிடம் சேர்ந்து கொள்ளுவதற்காகவே யென்று கும் பினியார் கருதினர். ஆனால், கட்டபொம்முவோ முன்பு தம்முடன் சண்டை போட்டுக்கொண்டு சிவகங்கைக்குச்

சென்று விட்ட தம் சிற்றப்பன் சின்ன பொம்முவைச் சமா தானம் செய்து அழைத்து வருவதற்காகவே சென்றதா யும், முதலில் தாம் அவரைப் பாஞ்சாலங் குறிச்சிக்கு அனுப்பிவிட்டுப் பின்னல் ராமநாதபுரம் வரலாமென் றிருந்ததாகவும் சொன்னர்.

அவர் கமுதிக்குச் சமீபமாக வந்த செய்தியை அறிந்த கலெக்டர் ஜூன் மாதம் 4-ஆம் தேதி அவருக்கு ஒரு கடி தம் எழுதினர். அதில் பாளையக்காரர் பெரும் படை யுடன் இவ்விதம் புறப்பட்டு வருவது ஒழுங்கன்று என் பதையும், தாம் இருக்கும் இடத்திற்குப் பத்துமைல் தூரத் திற்குள் மூன்று நாட்கள் தங்கியிருந்தும் தம்மைப் பேட்டி காணும் உத்தேசமே இல்லாதிருந்தாரென்பதையும் குறிப் பிட்டு, அந்தக் கடிதம் கண்ட ஐந்து மணி நேரத்திற்குள் தம்மைக் காண வேண்டுமென்றும் உத்தரவிட்டிருந்தார்.

அந்தக் கடிதத்தை எடுத்துச் சென்ற அரிக்கார ஸிடம் பாளையக்காரர், வெயில் அதிகமாயிருப்பதாலும் தமக்குச் சிரமமாகவிருப்பதாலும் உடனே புறப்பட முடி யவில்லை யென்பதைத் தெரிவித்து, மாலையில் 3-மணிக்கு மேல் புறப்பட்டு வருவதாகச் சொன்னர். ஆனல், உட னிருந்த தானபதி சுப்பிரமணிய பிள்ளை கலெக்டரை முதன் முதல் பேட்டி காணுவதற்கு அன்றைத் தினம் நாள் நல்லதாக இல்லையென்று கூறியதால் பாளையக்காரர் மறுநாள் வருவதாகத் தெரிவித்தார். கலெக்டர் அதனை நம்பாமல் பஞ்சாங்கத்தைப் பார்த்து அதன் உண்மையைத் தெரிந்து கொண்டார். அதன்மீது பாளையக்காரருக்குத் தாம் மறுநாள் காலை 7-மணி வரையில் காத்திருப்பதாக வும், குறிப்பிட்ட காலத்தில் 30 பேர்களுக்கு மேற்படாத பரிவாரத்துடன் தம்மை வந்து காணவேண்டு மென்றும் சொல்லியனுப்பினர். கட்டபொம்மு அதற்குச் சம்மதிக்க

வில்லை. 'மாமூல்'படி தம்முடைய முழுப் பரிவாரங்களுடன் வந்து பார்க்க உத்தரவு அளிக்கவேண்டுமென்று கோரினர். அதனைப் பெறுவதற்குத் தம்முடைய வக்கீலையும் அனுப்பினர். கலெக்டர் இணங்கவில்லை. பாளையக்காரரும் வரவில்லை. குறித்த காலமும் கடந்து போய் விட்டது. அதனால் கலெக்டர் மிகுந்த கோபங்கொண்டு தம்முடைய தலைமை அரிக்காரன் அப்துல் ரஹிமான் என்பவனை அனுப்பி வைத்தார். அவனுடன் கஜான்ஜி லக்ஷ்மண ராவ், ஜவாப் நவீஸ் சுந்தரராவ், முன்ஷி பீர் மஹமது ஆகியவர்களையும் அனுப்பியிருந்தார்.

பாளையக்காரர் தம்முடைய உத்தரவுப்படி வந்து தம்மைப் பேட்டி காணவிட்டால் கஜான்ஜி லக்ஷ்மணராவிடம் கிஸ்திப் பாக்கியைச் செலுத்திவிட வேண்டுமென்றும் கலெக்டர் கேட்டிருந்தார். பாளையக்காரரோ தாம் இதற்கு முன்பு கலெக்டர் சேனைபதிகள் முதலியோரைப் பேட்டி காணும்பொழுதெல்லாம் தம்முடைய முழுப் பரிவாரங்களுடனும் வந்துதான் காணுவது வழக்கமென்றும், அவர்கள் அதற்கு முன்பு 'கவுல்' கொடுப்பது வழக்கமென்றும், தாம் இப்பொழுதும் அதையே பின்பற்ற விரும்புவதாகவும் தெரிவித்துவிட்டார். கிஸ்திப் பாக்கியைப்பற்றித் தாம் முன்னமேயே தெரிவித்திருப்பதாகவும், ஊருக்குத் திரும்பியவுடன் கூடிய சீக்கிரம் வசூல் செய்து அனுப்பி விடுவதாகவும் சொன்னர்.

இவ்வளவு தூரம் வந்து கலெக்டரைப் பேட்டி காணமல் போவது தம்முடைய கௌரவத்திற்குக் குறைவாதலால் வழக்கப்படிப் பேட்டிகாண அனுமதிக்கும்படி வேண்டிக்கொண்டார் பாளையக்காரர். கலெக்டரும் தமது பிடியை விட்டுக் கொடுக்க விரும்பவில்லை. ஜூன் மாதம் 6–ஆம்தேதி பகல் மூன்றரை மணிக்கு, தம்மை இரண்டு

மணி நேரத்திற்குள் வந்து பார்க்க வேண்டுமென்றும் இல்லாவிட்டால் உடனே ஊருக்குத் திரும்பிச் சென்று சர்க்கார் உத்தரவு வரும் வரையில் அவ்விடத்திலேயே காத்திருக்கவேண்டுமென்றும் பாளையக்காரருக்கு இறுதியாகத் தெரிவித்துவிட்டார். கட்டபொம்மு எப்படியாவது பேட்டியை முடித்துக்கொண்டு போகவேண்டுமென்று விரும்பி வக்கீல் சங்குப்பிள்ளையைக் கலெக்டரிடம் அனுப்பினர். கலெக்டர் தம்முடைய உத்தரவை மாற்ற இணங்கவில்லை; அன்றிரவு 8—மணிக்கு, கட்டபொம்மு உடனே தம்முடைய பாளையத்திற்குச் செல்லவேண்டுமென்று ஒரு தாக்கீதையும், அவரை அழைத்துச்செல்ல அரிக்காரனேயும் அனுப்பிவிட்டார். பாளையக்காரரும் கலெக்டரைப் பேட்டி காணுமல் ஊருக்குத் திரும்பிச் சென்றுர்.

கும்பினியாருக்குச் சேரவேண்டிய பணம் வந்தபாடில்லை. பாளையக்காரர் அனுப்புவதாக எண்ணங்கொண்டிருக்கிறுரென்பதும் தெரியவில்லை. பாஞ்சாலங்குறிச்சிக்குப் பக்கத்திலுள்ள பாளையக்காரர்களிடமிருந்து கட்டபொம்முவின் மீது அடிக்கடி புகார் வந்து கொண்டிருந்தது.

இது இவ்விதமிருக்க, சிவகிரிப் பாளையக்காரருக்கும் அவருடைய பிள்ளைக்கும் இடையிலிருந்த விரோதம் முற்றிக் கலகம் உண்டாகும் நிலையிலிருந்தது. பிள்ளையின் கட்சியில் மாப்பிள்ளை வன்னியரும் சேர்ந்து கொண்டார். அவர்கள் பாளையத்தைக் கைப்பற்றிக் கிராமங்களுக்கு மணியக்காரர் முதலியோர்களை நியமித்துப் பணம் வசூல் செய்ய ஆரம்பித்தார்கள். அவர்களுக்கு உதவியாகப் பாஞ்சாலங் குறிச்சியார் இரண்டாயிரம் வீரர் கொண்ட ஒரு படையை அனுப்பியிருந்தார். ஏழாயிரம்பண்ணை, நாகலாபுரம், காடல்குடி, குளத்தூர் ஆகிய பாளையக்கா

ரர்களும் அவர்களுக்கு உதவியா யிருந்தார்கள். சிவகிரிப் பாளையக்காரரான கிழவரோ கும்பினியாரின் தயவைப் பெற்றவர்; பாஞ்சாலங் குறிச்சியாருக்கு விரோதமாக விருந்த எட்டையபுரம், ஊற்றுமலை முதலிய பாளையக் காரர்களுக்கு வேண்டியவர். அதனால் அவர்களுடைய உதவியைக் கோரினார் கிழவர். ஊற்றுமலைப் பாளையக் காரரும் பாஞ்சாலங் குறிச்சியார் செய்யும் அக்கிரமங் களை யெடுத்துக் கூறிச் சிவகிரியாருக்கு உதவி செய்ய அனுமதியளிக்க வேண்டுமென்று கும்பினியாரைக் கேட் டுக்கொண்டார்.

கமுதியில் கட்டபொம்முவிற்குப் பேட்டியளிக்காமல் அவரைத் திருப்பியனுப்பிய கலெக்டர் ஜாக்ஷன் தென் னாட்டுப் பாளையங்களின் ஸ்திதியைப் பற்றி விவரமாகச் சென்னைக்கு ஒரு கடிதம் எழுதினார். நாகலாபுரத்தாரை யும், பாஞ்சாலங் குறிச்சியாரையும் முதலில் அடக்க வேண்டுமென்றும், அவ்விதம் செய்தால்தான் நாட்டில் அமைதி நிலவுமென்றும், அப்படிச் செய்வதற்கு ஒரு சிறிய படை போதாதென்றும் அவ்விதம் சிறிய படையை அனுப்பினால் அது தோல்வியுற்று அதனால் கும்பினியார் கௌரவத்திற்கே ஹானி ஏற்படக் கூடுமென்றும், பெரும் படை திரட்டிப் போர்புரிவதே சாத்தியமா என்பது ஆரா யத் தக்கதென்றும் குறிப்பிட்டிருந்தார்.

சென்னையில் கவர்னரும்* மற்ற அதிகாரிகளும் கலந்து ஆலோசித்து ஒரு பெரும் படை திரட்டி அனுப்பு வதே உசிதம் என்று முடிவு செய்தார்கள். அந்தப் படை

* இந்தக் காலத்தில் சென்னையில் கவர்னராக இருந்தவர் முன்னால் இந்தியாவில் ஆங்கில அரசாங்கத்துக்கு அடிகோலிப் பெரும் புகழ் பெற்ற லார்டு கிளைவ் என்பவரின் புதல்வர். அவரும் தந்தையின் பெயரையே தாங்கியிருந்தார். அவர் பின்னால் அடைந்த உயர்ந்த பதவிப் பெயரான எர்ல் பொவிஸ் (Earl Powis) என்ப தால் குறிக்கப் பெறுவர்.

யின் தலைமைப் பதவி பாளையங்கோட்டையில் இருந்து அனுபவம் வாய்ந்த மேஜர் பானர்மன் (Major Bannerman) என்பவருக்கு அளிக்கப்பட்டது. அந்தப் படையெடுப்பு சம்பந்தமான சர்வாதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்பட்டது. அவருக்கு வேண்டிய உதவியை அளிக்கவேண்டுமென்று கலெக்டருக்கும் மற்றக் கும்பினி அதிகாரிகளுக்கும் உத்தரவுகள் அனுப்பப்பட்டன. நாட்டில் அமைதி ஏற்பட்டுவிட்டது என்று அவர் தெரிவிக்கும் வரையில் கலெக்டர் முதலியோர் அந்தப் பிரதேசத்தில் எவ்வித நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளாமல் அவற்றை மேஜரின் தீர்ப்புக்கே விட்டுவிடவேண்டும் என்று கூறிவிட்டார்கள்.

கும்பினியார் இந்தத் தீர்மானத்தை அடைந்ததற்கு முக்கிய காரணமாக நாட்டுச் சரித்திரங்களிலும் கர்ண பரம்பரையாகவும் கூறப்படும் வரலாறு பின்வருமாறு:

திருச்சிராப்பள்ளிச் சிறையிலிருந்து விடுதலை அடைந்து வந்த தானாபதி சுப்பிரமணிய பிள்ளை தம்முடைய மகன் வெள்ளைச்சாமி என்பவனுக்கு மணம் செய்துவைக்க ஏற்பாடு செய்தார். அந்தக் கலியாணத்தைச் சிறப்பாக நடத்திவைக்க வேண்டிய செலவை ஏற்றுக்கொள்ளப் பாளையக்காரர் ஒப்புக்கொண்டார். ஆயினும், கலியாணத்தை விமரிசையாகச் செய்வதற்குப் போதிய பொருள்கள் சரிவரக் கிடைக்கவில்லை. முக்கியமாக நல்ல நெல் கிடைப்பது அரிதாகிவிட்டது.

அக்காலத்தில் கும்பினியார் வரி வசூலைத் தானியங்களாகவும் வசூலித்து வந்தனர். சில இடங்களில் விளைபொருள்களில் வாரமும் பெற்று வந்தனர். அவ்விதம் வசூலிக்கப்பட்ட நெல்லைப் பாளையங்கோட்டை, ஸ்ரீ வைகுண்டம், ஆழ்வார்திருநகரி போன்ற இடங்களில்

சேமித்துவைத்துத் தக்க விலை வந்த காலத்து விற்றுவந்த னர். இவ்விதக் களஞ்சியங்களுக்குப் 'பிற்கட்டு' என்பவர் காவல் மேலதிகாரியா யிருந்தார்.

இங்ஙனம் கும்பினியார் சேர்த்து வைத்திருந்த நெல்லின்மீது சுப்பிரமணிய பிள்ளை நாட்டங்கொண்டு ஒருநாள் இரவோடு இரவாகப் புறப்பட்டு ஸ்ரீவைகுண்டத்தை அடைந்தார். பகற்பொழுது காத்திருந்து இரவு வந்ததும் நெற் களஞ்சியங்கள் இருக்குமிடத்தை யடைந்து கொள்ளையிட்டார். காவற்காரர்கள் அதனைத் தடுத்தனர். இருதரத்தாருக்கும் போர் மூண்டது. முடிவில் கும்பினியாரின் தலைமைக் காவற்காரன் இறந்து விட்டான். அவன் மனைவி பாளையங்கோட்டைக்குச் சென்று அழுது முறையிட்டாள்.

கும்பினியின் காவல் மேலதிகாரியான பிற்கட்டுதுரை அவளைச் சமாதானஞ் செய்தனுப்பிவிட்டு, நேரில் சென்று எல்லாவற்றையும் பார்வையிட்டார். விவரத்தைச் சென்னையிலுள்ள அதிகாரிகளுக்குத் தெரிவித்து விட்டு, அதைப்பற்றிப் பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக்காரருக்கும் ஒரு கடிதம் எழுதினர். தானுபதி நடத்திய இக்கொள்ளை கட்டபொம்முவுக்கு முன்னமே தெரியாது; 'பிற்கட்'டின் கடிதத்தைப் பார்த்துத்தான் அறிந்து கொண்டார். தானுபதியைக் கூப்பிட்டு விசாரித்த பொழுது, அவர் தாம் நெல்லை விலைக்கு வாங்கவே சென்றதாகவும், அவ்விடத்திலுள்ள காவலாளிகள் தம்மை இகழ்ந்து பேசியதால் கலகம் ஏற்பட்டதென்றும், தாம் நெல்லைக் கொள்ளையடிக்கவில்லை யென்றும் சொல்லி விட்டார்.

பாளையக்காரரிடமிருந்து உடனே பதில் வராததால் பிற்கட்டு துரை நேரில் புறப்பட்டுப் பாஞ்சாலங் குறிச்

சிக்குச் சென்றார். அவர் நெல்லைக் கொள்ளையடித்தவரை யும் அதன் கிரயத்தையும் தம்மிடம் ஒப்பிக்கும்படிக் கட்டபொம்முவைக் கேட்டுக்கொண்டார். பாளையக்காரர் பணத்தைக் கொடுக்கச் சித்தமாயிருந்தார்; ஆனால் தானு பதியை ஒப்பிக்க விரும்பவில்லை. 'பிறகட்டு' அதனால் கோபங்கொண்டு பாளையங்கோட்டைக்குத் திரும்பிச் சென்று, பாளையக்காரருடைய கொடுமைகளைப் பற்றிக் கும்பினியாருக்கு இடைவிடாது எழுதிவந்தார்.

நாட்டுச் சரிதங்களில் ராமநாதபுரம் பேட்டிக்குப் பிறகு தானுபதி சுப்பிரமணிய பிள்ளைக்கும் கட்டபொம்மு வுக்கும் இடையில் மனவேற்றுமை ஏற்பட்டு விட்டது என்று கூறப்படுகின்றது. பாளையக்காரர் முயன்றிருந் தாரானால் தமக்குத் திருச்சிராப்பள்ளிச் சிறை கிட்டி யிராது என்றும், ராமநாதபுரத்திலிருந்தே விடுதலை அடைந்திருக்கலாம் என்றும் தானுபதி நினைத்தார். அவ ருடைய உறவினர் அவரைத் தாங்கள் இழந்ததாகவே நினைத்துவிட்டனர். ஆதலின் அவர் கட்டபொம்முவைப் பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்று நினைத்தே ஸ்ரீவைகுண்டத்தில் சேமித்துவைக்கப்பட்டிருந்த கும்பினி நெல்லைக் கொள்ளையிட்டார். கட்டபொம்முவோ தானு பதி உள்ளக்கிடக்கையை அறியாமல் அவரைக் காப்பாற்றி வந்தார். இவ்வாறு சொல்லுகிறது கர்ணபரம்பரைச் செய்தி.

இது எவ்வாறாயினும், தானுபதியின் அடாத செய் கையைக் கட்டபொம்மு கண்டித்திருக்கவேண்டும். தானு பதியும் பாஞ்சாலங் குறிச்சியை விட்டுச் சிலகாலம் ஸ்ரீவைகுண்டத்துக்குப் பக்கத்திலிருந்த ஆற்றூரிலேயே போய்த் தங்கியிருந்தார் என்பதற்கு இதுவே காரணமா யிருக்கலாம்.

மேஜர் பானர்மன் இந்தப் படையெடுப்பின் தலைமை யதிகாரியாக நியமிக்கப்பட்டது 1799-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் 14-ஆம் தேதியிலாகும். அவர் என்ன என்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றிக் கும்பினியார் விவரமான ஓர் உத்தரவையும் அனுப்பியிருந்தார்கள். பாளையக்காரர்களில் முக்கியமானவர்கள் பிடிபட்டால் அவர்களைத் தக்க பந்தோபஸ்துடன் சென்னைக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று தெரிவித்திருந்தார்கள். மேஜர் பானர்மன் இவ்விதம் ஸர்வாதிகாரம் வகிக்கும் செய்தியைத் திருநெல்வேலிச் சீமையில் ஒரு பிரகடனம் விட்டும் அறிவித்தார்கள். பானர்மனும் தம்முடைய சைனியத்தைத் திரட்டிக்கொண்டு பாஞ்சாலங் குறிச்சிக்குப் புறப்படத் தயாரானார்.

# அத்தியாயம் 15

# பானர்மன் படையெடுப்பு

'நூறுக் கெழுதி முடித்த பிரமன்
ஆறுக் கெழுத வானே அழித்து?
போருக்கு வந்தவர் பாருக் கிரையாகப்
பொன்றி — வென்று புகழ் கொள்ளுவேன்.'
—கட்டபொம்மு சண்டைக் கும்மி.

---

மேஜர் பானர்மன் கும்பினியார் தம்மைக் கேட்டுக் கொண்டபடியே, சண்டை போடாமல் நாட்டிலே அமைதியை நிலைநிறுத்துவதற்கான வழியை முதலில் தேடினார். சமாதானமாகக் கட்டபொம்முவைப் பிடித்துச் சென்னைக்கு அனுப்பியோ, அவர் தீங்கிழைக்கா வண்ணம் வேறு விதமாகத் தடுத்து வைத்துவிடவோ எண்ணினார். அதனால் அவரை எப்படியாவது பாஞ்சாலங் குறிச்சியிலிருந்து அழைத்துவர விரும்பினார். அங்ஙனமே ஒரு தூதுவரைப் பாஞ்சாலங் குறிச்சிக்கு அனுப்பி அவரை அழைத்துவர ஏற்பாடு செய்தார்.

பாளையக்காரரோ தாம் பாளையங்கோட்டைக்கு வந்து மேஜரைப் பேட்டி காணுவதற்குச் சித்தமாக இருப்பதாகவே தெரிவித்தார். ஆனால் உடனே புறப்பட முடியாது என்றும் நல்ல நாள் பார்த்துப் புறப்பட்டு வருவதாகவும் கூறி, வந்த தூதரைத் திருப்பி அனுப்பிவிட்டார். தாம் பாளையங்கோட்டைக்குச் சென்றால் கும்பினியார் தம்மைப் பிடித்துக் காவலில் வைத்து விடுவார்கள் என்பதைக் கட்டபொம்மு நன்கு அறிந்திருந்தார். அதனால் அவர் அங்கே போக விரும்பவில்லை.

அதற்குப் பதிலாக அவர் உடனே தூத்துக்குடிக்குப் புறப்பட்டுச் சென்றார். அவ்விடத்திலிருந்த காப்டன் டேவிஸன் கட்டபொம்முவுக்கு வேண்டியவர். அவருடைய உதவியாலேதான் ராமநாதபுரம் நிகழ்ச்சி சம்பந்தமான விசாரணையில் கலெக்டருடைய நடத்தை கண்டிக்கத் தக்கது என்று கும்பினியார் முடிவு செய்தார்கள். கட்டபொம்மு டேவிஸனைக் கண்டு நிலைமையை விளக்கி மேலே செய்யவேண்டியதைப்பற்றி ஆலோசனை கேட்டார். காப்டனோ கட்டபொம்முவை உடனே பாளையங்கோட்டைக்குச் சென்று மேஜரைப் பேட்டி காணும்படிக் கேட்டுக் கொண்டார். ஆனால் பாளையக்காரர் அதற்கு இசையவில்லை. அவருடன் கூடச் சிவகிரி மாப்பிள்ளை வன்னியரும் சென்றிருந்தார். டேவிஸனுடைய சாதுரியமான பேச்சினால் மாப்பிள்ளை வன்னியர் டேவிஸனுடன் பாளையங்கோட்டைக்குச் செல்வதென முடிவு செய்யப்பட்டது. கட்டபொம்முவின் சார்பாகப் பேசுவதற்காகவே அவர்கள் போனது. ஆனால், அதன் முடிவு மாப்பிள்ளை வன்னியரைப் பானர்மன் கைது செய்ததேயாகும்.

மேஜர் இனிக் காத்திருப்பதால் பயன் இல்லை என்று தீர்மானித்துப் பாஞ்சாலங் குறிச்சியைத் தாக்க எண்ணம் கொண்டார். 1799—ஆம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 4-ஆம் தேதி பாளையங்கோட்டையினின்றும் கும்பினிப் பட்டாளத்துடன் புறப்பட்டுப் பாஞ்சாலங் குறிச்சியை நோக்கிச் சீவலப்பேரி மார்க்கமாக விரைந்து சென்றார்.

கும்பினிப் படை வரும் செய்தியைக் கட்டபொம்முவின் ஒற்றர்கள் அறிந்து முன்னதாகவே ஓடிச் சென்று அறிவித்தனர். அவ்விதம் சொன்னவர்களுள் நவாபு நாயக்கன் என்பவன் முக்கியமானவன். அவன் நவாபு தீரன் என்றும் குறிக்கப்படுவன். அப்பொழுது நள்ளிரவு.

கட்டபொம்முவும் பொழுது விடிவதற்குள் வெளியில் சென்றிருந்த தம் வீரர்களையும் மற்றோரையும் கோட்டைக்குள் வரவழைத்துவிட விரும்பிப் பேரிகை கொட்டச் செய்தார்.

மறுநாள் விடியற்காலையில் கும்பினிப் படை பாஞ்சாலங் குறிச்சியை அடைந்துவிட்டது. கோயில்பட்டியிலும் கயத்தாற்றிலும் வைக்கப்பட்டிருந்த பட்டாளங்களும் வந்து சேர்ந்தன. கும்பினிப் படை இவ்வளவு சீக்கிரம் வந்துவிடும் என்று பாளையக்காரர் எதிர்பார்க்கவில்லை.

சைனியம் கோட்டையைச் சூழ்ந்துகொண்டது. முன்புறத்தில் குதிரைப் படையினரும் அதற்குப் பின்னால் காலாட்களும் நின்றனர். லெப்டினன்ட் டல்லாசு (Lieut. Dallas) அவர்களுக்குத் தலைவனாக நின்றான். கோட்டைக்கு வெளியிலிருந்த பாளையக்காரரைச் சேர்ந்த சிலர் முற்றுகையிட்டிருக்கும் கும்பினிப் படையை உடைத்துக்கொண்டு உள்ளே செல்ல முயன்றனர். ஆனால் அது முடியவில்லை.

பாளையக்காரரைச் சேர்ந்தவர் பலர் கோட்டைக்கு வெளியில் இருந்தனர். தானாபதி சுப்பிரமணிய பிள்ளை ஸ்ரீவைகுண்டத்துக்குப் பக்கத்தில் ஆற்றூரில் தங்கியிருந்தார். அவருடைய தம்பி வீரபத்திர பிள்ளை மட்டும் இவ்விடம் இருந்தார். கட்டபொம்முவின் தம்பியரான சிவத்தையாவும் ஊமைத்துரையும் திருச்செந்தூரில் இருந்தனர்.

பாஞ்சாலங் குறிச்சியார் தங்கள் குலதெய்வமான சக்கம்மாள் என்றும் சக்கதேவி என்றும் கூறப்படும் ஜக்கதேவியை அன்றி, திருச்செந்தூரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் முருகக் கடவுளிடத்தும் குன்றாத பக்தியை உடையவர்கள். தங்கள் கோட்டையின் மத்தியி

லும் முருகனுக்கு ஓர் ஆலயம் அமைத்து வழிபட்டு வந்தனர். திருச்செந்தூரில் நடக்கும் முக்கிய உத்ஸவங்களுக்கெல்லாம் அவர்கள் சென்று வந்தனர். அப்படியே அந்த வருஷம் நடைபெற்ற ஆவணித் திருவிழாவிற்காகக் கட்டபொம்முவின் தம்பிமார் இருவரும் திருச்செந்தூர் சென்றிருந்தனராம்.

இங்ஙனம் வெளியிலிருந்தவர்கள் பாளையக்காரர் பேரிகை கொட்டித் தெரிவித்த அபாய அறிவிப்பைக் கேட்டு நாலு பக்கங்களிலிருந்தும் விரைந்து ஓடிவந்தனர். அப்படி வந்து கோட்டைக்குள் நுழைந்துவிட்டனர் சிலர். அவர்களுள் முக்கியமானவன் சிவத்தையா நாயக்கன் என்பவன். (இவன் கட்டபொம்முவின் தம்பியான சிவத்தையா அல்லன்.)

கும்பினிப் பக்கத்தில் காப்டன் ஓரீலி (O'Reilly), ப்ரூஸ் (Bruce), லெப்டினன்ட் டல்லாசு, காலின்ஸ் (Collins), டக்ளஸ் (Douglas), டார்மீக்ஸ் (Dormieux), ப்ளேக் (Blake), ப்ரௌன் (Brown) முதலியோர் கூடியிருந்தனர்.

அதேபோலக் கட்டபொம்முவின் பக்கத்தில் சிவத்தையா நாயக்கன், தாணுபதிப் பிள்ளையின் தம்பி வீரபத்திர பிள்ளை, சம்பிரதி பொன்னப்ப பிள்ளை, பாதர் வெள்ளை எனப்படும் வெள்ளையத்தேவன் முதலியோர் கூடினர்.

மேஜர் பானர்மன் தம்முடைய துபாஷியான ராமலிங்க முதலியாரை ஹவில்தார் இப்ராஹிம்கான், அரிக்கூாரன் சாமி ஆகியவர்களுடன் கோட்டைக்குள் அனுப்பி வைத்தார். அவர்கள் மெல்ல கட்டபொம்முவைச் சமாதானம் செய்து வெளியில் அழைத்து வந்துவிடவேண்டும் என்பது உத்தரவு, அவர்களும் கட்டபொம்முவைக்

கண்டு, கும்பினியார் உத்தரவுப்படி மேஜர் பட்டாளத்துடன் வந்திருக்கும் செய்தியைத் தெரிவித்தார்கள். அன்றி, பாளையக்காரர் கும்பினியாரை முற்றிலும் நம்பி அவர்களிடம் தம்மை ஒப்புக்கொடுத்தால் அவர்கள் உரிய நியாயத்தைக் கட்டாயம் வழங்குவர் என்றும், இல்லாவிட்டால் மேஜர் கோட்டைக்குள் புகுந்து அவரைப் பிடித்துக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்றும் நயமாக எடுத்துரைத்தார்கள்.

அந்தச் சமயத்தில் கட்டபொம்முவின் தாய்வழி மாமனை கெடிவேட்டூர் நாயக்கர் என்பவரும் உடன் இருந்தார்.

கும்பினியாரின் உத்தரவுப்படியே அவர்கள் மேஜர் பானர்மனைப் பார்க்கப் பாளையங்கோட்டைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும், அதற்காக நகராக்கூட அடிக்கப்பட்டுவிட்டது என்றும், அதற்கிடையில் மேஜரே பட்டாளத்துடன் பாஞ்சாலங் குறிச்சிக்கு வந்துவிட்டார் என்றும் பதில் சொன்னார்கள். பாளையக்காரர்கள் எந்தத் தேதி புறப்பட்டு வரப்போகிறார்கள் என்பதை மேஜருக்குத் தெரிவித்தார்களா என்று ராமலிங்க முதலியார் கேட்டபொழுது தாங்கள் அவ்விதம் தெரிவிக்கவில்லை என்று கூறினார்கள். ஏனெனில் முதலில் நிச்சயிக்கப்பட்ட தேதி நல்லதாக இராததால் வேறு நாள் நிச்சயிக்க வேண்டியிருந்ததாம்.

பாளையக்காரர் எப்பொழுது புறப்பட்டு வருவார் என்பது தெரியாமையால், மேஜர் பானர்மனே நேரில் புறப்பட்டு வந்திருக்கிறார் என்று ராமலிங்க முதலியார் சொன்னார். ஆனால் பாளையக்காரர் அதனை நம்பவில்லை. தம்மைப்பார்க்க வருவதாயிருந்தால் பெரும்படையுடன் புறப்பட்டு வந்து கோட்டையை வளைந்துகொள்ள வேண்டியிருக்காதே என்று எண்ணினார்.

கட்டபொம்முவும் கெடிவேட்டூர் நாயக்கரும் மேஜர் பானர்மனைப் பேட்டி காண வருவதற்குத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்கள். ஆனால் அவர்கள் வழக்கப்படி 'கவுல்' கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். கும்பினியார் 'கவுல்' வழங்க இஷ்டப்படவில்லை. 'கவுல்' வழங்கிவிட்டால், பேட்டி முடிந்ததும் அவர்களைத் திருப்பி அனுப்பிவிடவேண்டும்; தாங்கள் முன்னமேயே தீர்மானித்துள்ளபடி அவரைப் பிடித்துச் சென்னைக்கு அனுப்ப முடியாது என்று எண்ணினர் போலும். அதனால் பாளையக்காரர் கவுலை எதிர்பார்க்காது தங்கள் வார்த்தையில் நம்பிக்கை வைத்து வரவேண்டும் என்று கேட்டார் துபாஷ் முதலியார்.

கெடிவேட்டூர் நாயக்கர் 'கவுல்' வழங்காவிட்டாலும், நம்பிக்கைக்கு ஆதாரமாகப் பட்டாக் கத்தியையாவது வேறு ஏதாவது ஒன்றையாவது கொடுக்கும்படிக் கேட்டுக் கொண்டார். ஆனால் முதலியார் அது விஷயமாக ஒன்றும் பிடிகொடுத்துப் பேசவில்லை.

ஒருவித உறுதிமொழியும் இல்லாமல் வெளியில் வருவதற்குப் பாளையக்காரர் சம்மதிக்காததால் மேஜர் கோட்டையைத் தாக்கிக் கட்டபொம்முவைப் பிடிக்க நேரிடுமென்று துபாஷ் தெரிவித்ததற்குப் பாளையக்காரர் தாம் எப்படியாவது தப்பித்துக்கொண்டு ஓடிவிடுவதாகக் கூறிவிட்டார்.

அப்பால் பாளையக்காரரும் அவரைச் சேர்ந்தவர்களும் ஒன்றுகூடி ஆலோசனைசெய்து சமாதானம் பேசுவதற்காகக் கெடிவேட்டூர்நாயக்கரை மேஜரிடம் அனுப்பினார்கள். ஆயினும் அவருடைய பேச்சுப் பலிக்கவில்லை. இன்னும் அரை மணி நேரத்திற்குள் தம்மிடம் சரண் புகாவிட்டால் கோட்டையை இடிக்க நேரிடும்

என்று மேஜர் இறுதியாகத் தெரிவித்துவிட்டார். பாளையக்காரர் பதில் வரும் வரை மேஜர் காலத்தை வீண்போக்கவில்லை. கோட்டையைத் தாக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வந்தார். கோட்டையின் தெற்கு வாயிலும் அதன் இடது பக்கமுமே முதலில் தாக்குவதற்குத் தகுதியான இடம் என்று நிர்ணயித்தார். அவருக்கு உதவியாகவிருந்த காப்டன் ஓரீலி, புரூஸ் முதலியோரும் அவ்விதமே எண்ணினர்.

பத்து மணிக்குப்பாளையக்காரர் தாம்மேஜரைக் காண வருவதற்குத் தயாராயிருப்பதாகவும், வழக்கப்படி 'கவுல்' அனுப்பவேண்டுமென்றும் மறுபடியும் கேட்டுக்கொண்டார். மேஜர் அதனை லட்சியம் செய்யவில்லை. கோட்டையை இடிக்க ஆரம்பித்தார். தெற்கு வாயிலை நோக்கிப் பீரங்கிகள் குண்டு மழை பெய்தன. அதே சமயத்தில் டல்லாசு சிப்பாய்ப் படையுடன் சென்று வடக்கு வாயிலையும் தாக்கினார். படைகள் ஒழுங்காகப் போர் புரிந்தன. கும்பினியாரின் பீரங்கி கோட்டை வாயிலைத் திறந்துவிட்டது.

சிந்து முதலிய பாட்டுக்களில் இந்த இடம் மிக்க அழகாக வருணிக்கப்பட்டுள்ளது.

பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையின் தெற்கு வாயிலைத் தாக்கிய கும்பினிப் படையின் மேலதிகாரியாக இருந்தவர் லெப்டினன்ட் காலின்ஸ் (Lieut. Collins) என்பவர். அவர் காலன் துரை என்று பொதுவாக வழங்கப்பெறுவர்.

தெற்குக் கோட்டை வாயிலை இடித்துத் தகர்த்ததற்கு அவரே பொறுப்பாளி. கோட்டை வாயிலைத் திறந்த பிறகு உள்ளே செல்ல முயன்ற பொழுது அவர் ஈட்டியால் குத்தப்பட்டார். முன்புறமாகப் பாய்ந்த ஈட்டி பின்புறமாக வெளிவந்தது. அவ்விதம் அவரைக் குத்திய

வன் வெள்ளையத் தேவன் என்னும் பாதர் வெள்ளை என்று சரித்திரங்கள் கூறுகின்றன. தாம் இனி உயிர் வாழமுடியாது என்பதை அறிந்த காலன் துரை ஈட்டியி லேயே வழுக்கி முன்சென்று தம் கை வாளால் ஈட்டியி யைப் பிடித்திருந்தவனைக் கொன்ருராம். அவ்விருவரும் ஒருங்கே இறந்தார்கள் என்று தமிழ்ப் பாடல்கள் கூறு கின்றன.

ஆனல் பாதர்வெள்ளை அப்பொழுது இறந்ததாகத் தெரியவில்லை. காலன் துரை இறந்து பட்டதற்கு வெள்ளை பொறுப்பாளியாக இருக்கலாம். ஆயினும் அவ னும் மற்றப் பாளையக்காரர்களுடன் பின்னல் கோட்டை யினின்றும் தப்பித்துக் கொண்டான். கும்பினியார் அவனை ராஜாங்கத் துரோகி என்று அறிவித்து அவனைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் ரூபாய் இனம் வழங்குவதாகப் பிரகடனம் செய்தார்கள். பணத்துக்கு ஆசைப்பட்ட அவனுடைய மாமனே, தன் பெண் வாழ்க் கையையும் கவனியாமல், வெள்ளையைக் காட்டிக் கொடுத் துவிட்டான். கும்பினியாரும் வெள்ளையைப் பின்னல் தூக்குப் போட்டுவிட்டார்கள்.

ஆனல், சிப்பாய்கள் கோட்டைக்குள் நுழைய இஷ்டப்படவில்லை. பாளையக்காரர்களைச் சேர்ந்தவர் கள் உள்ளிருந்து கும்பினிப் படையைத் தீவிரமாக எதிர்த் தார்கள். இருதரத்தாருக்கும் அதிகச் சேதம் உண்டா யிற்று. கும்பினியாருக்கு நேர்ந்த சேதத்தைப் பார்த்து மேஜரே பயப்பட்டுவிட்டார். கோட்டை பிடிபடவில்லை. ஐரோப்பியப் படை இல்லாததே அதற்குக் காரணம் என்று மேஜர் நினைத்தார். சிப்பாய்ப் படை உரிய உத் ஸாகத்துடன் போர் புரியவில்லையென்றும் எண்ணினர்.

உடனே பாளையங்கோட்டையிலுள்ள பெரிய பீரங்கி களை வரவழைக்க ஏற்பாடு செய்தார். அவை வந்து

சேரும் வரையில் கோட்டையைச் சுற்றி வளைந்து உள்ளிருப்பவர் வெளியே போகாமல் மேஜர் பாதுகாத்துவந்தார்.

பாளையக்காரர் 6-ஆம் தேதி காலையில் மறுபடியும் தம்முடைய வக்கீல்களை மேஜரிடம் அனுப்பிவைத்தார். தாம் எவ்விதத்திலும் கைதி யென்று கருதப்படாமல் உரிய பரிவாரங்கள் பின்தொடர, காப்டன் டேவிஸன் கூடச் சென்னைக்குச் சென்றுவிடுவதாகவும், அதற்கு அனுமதியளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். மேஜர் மிகுந்த ஆலோசனையின்பேரில் அதற்குச் சம்மதிக்கவில்லை. பாளையக்காரர் உடனே தம்மை ஒப்புக்கொடுக்க வேண்டுமென்றும், அதற்குப் பிறகு கும்பினியாரின் உத்தரவுப்படி நடத்தப்படுவாரென்றும் தெரிவித்துவிட்டார்.

பாளையக்காரர் இதனைப் போதுமான பாதுகாப்பாகக் கருதவில்லை. மேலே சண்டையை நடத்துவதற்கும் சௌகரியமில்லை. சண்டையால் இருத்தரத்தாருக்கும் அதிகச் சேதமே ஏற்படும். ஆகவே அவர் அன்றிரவு கும்பினிப் படை அயர்ந்திருக்கும் சமயம் பார்த்துக் கோட்டையிலிருந்து வெளியேறித் தப்பித்துக்கொண்டார். இதனை அறிந்த மேஜர் பானர்மன் அவர் நேராகச் சென்னைக்குச் சென்று தம்மைக் கவர்னரிடம் ஒப்புக்கொடுப்பாரென்று எண்ணினர்.

பானர்மன் பாளையங்கோட்டையிலிருந்து புறப்படுவதற்கு முன்பு, பாஞ்சாலங் குறிச்சியின் தானபதி சுப்பிரமணிய பிள்ளையைப் பிடித்துவர நூறு வீரர் அடங்கிய ஒரு சிறு படையை ஆற்றூருக்கு அனுப்பிவைத்தார். கும்பினிப் படையால் அவரைப் பிடிக்க முடியவில்லை. ஆயினும் அவருடைய மனைவி மக்கள் முதலியோரைச் சிறை பிடித்தனர். அவருடைய தம்பி பாண்டியப் பிள்ளை யென்பவர் அக்காலத்தில் சென்னைக்குச் சென்றிருந்தார். அவர் சென்னையில் பாஞ்சாலங் குறிச்சியாரின் காரியஸ்தராக

இருந்துவந்தார். அப்பொழுது சென்னையில் கும்பினியாருக்குத் துபாஷாக இருந்த அவதானம் பாப்பையா அவருக்கு வேண்டியவர். பானர்மன் இச்செய்திகளைச் சென்னை சர்க்காருக்குத் தெரிவித்து, பாண்டியப் பிள்ளையைச் சென்னையிலேயே கைது செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

பாளையக்காரர் தப்பிவிட்டார் என்ற செய்தியை அறிந்தவுடனேயே பானர்மன் அவர் சென்றிருக்கக் கூடிய வழியிலுள்ள பாளையக்காரர் பலருக்கும் கடிதங்கள் எழுதினார். ஒவ்வொரு பாளையக்காரரும் கட்டபொம்முவிடம் கொண்டிருந்த நேசப்பான்மைக்குத் தக்கபடி கடிதங்களின் வாசகத்தை அமைத்து எழுதினார். பாளையக்காரரால் காலி செய்யப்பட்ட கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டு சண்டையில் காயமடைந்தோரை அவ்விடத்தில் விட்டு அவர்களுக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்தினார். அப்பால், அவர் படையுடன் நாகலாபுரத்தை நோக்கிச் சென்று கட்டபொம்முவைப் பின்தொடர்ந்தார்.

போகும்பொழுது லெப்டினன்ட் டல்லாசு, காப்டன் ஓரீலி ஆகியோர்களை மேல் படாகையைப் பார்த்துக்கொள்ளும்படி திட்டம் செய்தார். ஆனால், அதற்குள்ளாக எட்டையபுரத்திலிருந்து கடிதம் வந்தது. எட்டையபுரத்தார் தாம் கட்டபொம்முவைத் தேடிப் பிடிக்கக் காத்துக்கொண்டிருப்பதாகவும் அதற்கு உதவியாகச் சிப்பாய்கள் சிலரை அனுப்பவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருந்தார். அதனால் பானர்மன் உடனே டல்லாசு எட்டையபுரத்தாருடன் சேர்ந்து கொண்டு கட்டபொம்முவைத் தேடவேண்டுமென்று உத்தரவிட்டார். எட்டையபுரத்தார் கட்டபொம்முவைப் பின்தொடர்ந்தே தேடிச் சென்றனர். கடைசியில் அவரைக் கோலார்பட்டிக் கோட்டையில் கண்டனர். கும்பினியாரின் குதிரைப் படை உதவிக்கு வந்து சேரவில்லை. அது வரும் வரைக்கும் காத்துக்

கொண்டிருக்க எட்டையபுரத்தாருக்கு மனமில்லை. இரு தரத்தாருக்கும் சிறு கலகங்கள் நடந்தன. சேதமும் ஏற்பட்டது. ஆயினும் முடிவில் கட்டபொம்மு அவருக்கு அந்தரங்கமான ஆறு பேர்களுடன் தப்பிக்கொண்டு விட்டார். அவர்கள் குதிரை மீது ஏறிப் பறந்து சென்றனர்.

கட்டபொம்முவைச் சேர்ந்த படை கலைக்கப்பட்டது. அவரைச் சேர்ந்தவர்களில் முக்கியமானவர்களான முப்பத்துநான்கு பேர்கள் பிடிபட்டார்கள். அவர்களுள் தானபதி சுப்பிரமணிய பிள்ளையும் அவருடைய சகோதரரும் இருந்தனர். அவ்விருவரும் பிடிபட்டது கும்பினியாருக்கு எல்லையில்லாத சந்தோஷத்தைக் கொடுத்தது. கட்டபொம்முவே பிடிபட்டிருந்தாலும் அவர்கள் இவ்வளவு ஆனந்தம் அடைந்திருக்கமாட்டார்கள். ஏனெனில், கட்டபொம்முவைப் பின்னின்று ஆட்டிவைத்த சூத்திரதாரியாகவே அவர்கள் தானபதியை மதித்துவந்தார்கள். தானபதி இல்லாவிட்டால் நிலைமை அவ்வளவு தூரம் மோசமாகி யிராது என்றும் எண்ணினர்.

சுப்பிரமணிய பிள்ளை கைதியாக மேஜர் முன் கொணர்ந்து நிறுத்தப்பட்டார். அவரைப்பிடித்துவந்த எட்டையபுரத்தாருக்குத் தகுந்த சம்மானம் வழங்கப்பட்டது. தானபதியை நாகலாபுரத்தில் தூக்கிட்டு அவருடைய தலையை வெட்டிப் பாஞ்சாலங் குறிச்சிக்குக் கொண்டு போய் வல்லயத்திற் கோத்து நாட்டிவிட மேஜர் உத்தரவிட்டார். அது உடனே நடைபெறவில்லை; சிறிது நேரத்திற்கெல்லாம் மேஜரே அந்த உத்தரவை மாற்றி அவரை மற்றவர்களுடன் கைதியாகச் சிறையில் வைத்தார்.

பானர்மன் நாகலாபுரத்தை அடைந்தவுடன் அவ்வூர்ப் பாளையக்காரர் அவரிடம் சரண்புகுந்தார். மேஜரும் கட்டபொம்மு பிடிபடும்வரை மேல் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள விரும்பாமல் அவரையும் காவலில் வைத்தார்.

நாகலாபுரத்தார் விளைவித்த அட்டூழியங்களுக்கெல்லாம் அவருடைய தம்பியான சௌந்தரபாண்டிய நாயக்கரே காரணபூதர். அவர் அப்போது பிடிபடவில்லை. மேஜர் எப்படியும் அவரைப்பிடித்துவிடுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டார். பாஞ்சாலங் குறிச்சியாருக்குத் தானுபதிப்பிள்ளையும், நாகலாபுரத்தாருக்குச் சௌந்தர பாண்டியரும். அவ்விருவரையும் தனித் தனியே தூக்குப் போடுவதைவிட, ஓரே சமயத்தில் தூக்கிவிட்டால் அது நாட்டு மக்களுக்கு ஒரு அறிவுறுத்தலாக இருக்குமென்று எண்ணினார். இக்காரணங்கொண்டே முன்பு உத்தரவிட்டபடி தானுபதியைத் தூக்கில் இடவில்லை.

12-ஆம் தேதி மாலையில் சௌந்தரபாண்டியர் பிடிக்கப்பட்டார். அன்றிரவு முழுவதும் அவர் மற்றவர்களுடன் கோட்டையில் சிறைவைக்கப்பட்டிருந்தார். 13-ஆம் தேதி காலையில் பானர்மன் தென்னாட்டுப் பாளையக்காரர்களின் வக்கீல்களையெல்லாம் வரவழைத்து ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார். அவர்களுக்கு இந்தக் கலகத்தின் ஆதிகாரணத்தையும், அதை அடக்கவேண்டிக் கும்பினியாருக்கு ஏற்பட்ட அவசியத்தையும் எடுத்துக்கூறினார். கலகத்தில் சம்பந்தப்பட்டுக் கும்பினியாரின் வெறுப்புக்குப் பாத்திரமானவர்களை அடக்குவதற்குத் தமக்கு எவ்வித மான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்பதையும் எடுத்துரைத்தார். இப்படிபட்ட நிலைமை மறுபடியும் ஏற்படாதபடி பார்த்துக்கொள்ளவேண்டிய அவசியத்தையும், அப்படி ஏற்படுமாயின் அதில் சம்பந்தப்பட்டவர்களுக்குக் கிடைக்கக்கூடிய முடிவைக் கண்கூடாக அப்பொழுது பார்த்துக்கொள்ளலாம் என்பதையும் தெரிவித்துவிட்டு, நாட்டின் சீரழிவிற்குக் காரணபூதர்களான தானுபதிக்கும் சௌந்தர பாண்டியருக்கும் தாம் விதித்துள்ள தீர்ப்பைச் சொன்னார்.

அதற்கப்பால் சுப்பிரமணிய பிள்ளை கைதியாகக் கொணர்ந்து நிறுத்தப்பட்டார். மேஜர் தானுபதியின் அக்கிரமங்களை எடுத்துரைத்து அவற்றிற்கு அவரைச் சமாதானம் கூறுமாறு கேட்டார். சுப்பிரமணிய பிள்ளை ஒன்றையும் மறுக்கவில்லை. அதற்குப் பதிலாகத் தமக்கும் கட்டபொம்முவுக்கும் இந்த விஷயத்தில் மன ஒற்றுமை இல்லையென்றும் தாம் அவரிடத்திலிருந்து விலகிக் கொள்ளச் சமயம் பார்த்திருந்ததாகவும் தெரிவித்தார். மேஜர் அப்பதிலைக் கேட்டுத் திருப்தியடையாமல் அவருக்குத் தாம் விதித்துள்ள தண்டனையைக் கூறி மறுபடியும் சிறைக்கு அனுப்பிவிட்டுச் சௌந்தர பாண்டியனைக் கொணரச் செய்தார். தானுபதியைப் போலவே சௌந்தர பாண்டியரையும் அவர் செய்த அட்டூழியங்களுக்குச் சமாதானம் கூறும்படி கேட்டார். சௌந்தர பாண்டியர் தாம் செய்தனவாகக் கூறப்பட்ட எல்லாவற்றையும் ஒப்புக் கொண்டு ஒருவித சமாதானமும் கூறுவதற்கில்லை யென்று தெரிவித்து விட்டார். அதனால் அவரை ராமநாதபுரம் சீமையிற் புகுந்து கொள்ளை கொலை முதலியன நடத்திய இடமாகிய கோபாலபுரம் என்னும் இடத்திற்கு அழைத்துச் சென்று அவ்விடத்தில் அவரைத் தூக்கிலிட வேண்டுமென்று தீர்ப்பளித்தார் மேஜர் சௌந்தரபாண்டிய நாயக்கரைக் கோபாலபுரத்திற்குத் தகுந்த பந்தோபஸ்துடன் ஓர் ஐரோப்பிய உத்தியோகஸ்தர் அழைத்துச் சென்றார். இவ்விரு கைதிகளையும் அனுப்பிய பிறகு மேஜர் பானர்மன் அங்கே கூடியிருந்த பாளையக்காரர்களின் வக்கீல்களிடம் அந்தக் கூட்டத்தின் நடவடிக்கைகளைத் தத்தம் யஜமானர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அப்பால் கூட்டம் கலைக்கப்பட்டது.

மேஜர் பானர்மன் இவ்விதம் நடத்திய நாடகம் பாளை யக்காரர்களின் மனத்தில் பெரும் பீதியை யுண்டாக்கியது.

சுப்பிரமணிய பிள்ளையும் சௌந்தர பாண்டியரும் தீர்ப்பின்படித் தூக்கிலிடப்பட்டார்கள். அவர்களுடைய சொத்து சுதந்திரங்கள் யாவற்றையும் சர்க்கார் பறிமுதல் செய்துவிட்டனர். அவ்வாறே பாஞ்சாலங் குறிச்சி நாக லாபுரம் பாளையங்களையும் சர்க்கார் பறிமுதல் செய்தனர். ஓடிப்போன கட்டபொம்முவை ராஜத்துரோகி யென்று விளம்பரம் செய்து ஒருவரும் அவருக்குப் புகலிடம் அளிக் க்க் கூடாது என்றும் அறிவித்தனர்.

மேஜர் பானர்மன் பாஞ்சாலங் குறிச்சியிலிருந்து கட்டபொம்முவைத் துரத்திச் செல்வதற்கு முன்பாக அவ் விடம் நடந்த விவரங்களைத் தூத்துக்குடியிலிருந்த காப் டன் டேவிஸனுக்குத் தெரிவித்து அவ்விடத்தில் அடைக் கலம் புகும் பாஞ்சாலங்குறிச்சியைச் சார்ந்தவர்களைப் பிடித்து வைத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். பக்கத்தில் யாராவது ஒளிந்துகொண்டிருந்தாலும அவர் களையும் பிடித்துக்கொள்ளும்படியும் வேண்டிக் கொண்டார்.

# அத்தியாயம் 16

## விசாரணையும் தீர்ப்பும்

'வடக்கும், கிழக்கும், தென் மேற்கும்,
திகாந்தமும் மன்னர்குறும்
படக்கும்தென் பாஞ்சைச் செகவீர
பாண்டியன் ஆணைஎன்றால்
கடக்கும் அரிதென்று எறும்பா
னதுநின்று கால்பதறிக்
கிடக்கும் நடக்கும்பின் உத்தர
வானகிள் ளாக்குக்கண்டே.'

—பாஞ்சைக்கோவை.

---

நாகலாபுரத்திலிருந்து வடக்கு நோக்கிச் சென்ற கட்டபொம்மு நேராகச் சென்னைக்குச் செல்வார் என்று எதிர்பார்த்தார் மேஜர் பானர்மன். 'ஒருகால் அவர் அவ்விடம் செல்லாமல் சிவகங்கைப் பக்கத்துக் காடுகளில் ஒளிந்துகொண்டு மற்றப் பாளையக்காரர்களைத் தம் பக்கம் சேர்த்து மறுபடியும் கலகம் உண்டாக்கவும் கூடும்; அதனால் அவரை எப்படியாவது பிடித்து விடவேண்டும்' என்று எண்ணிய மேஜர் கலெக்டரைக் கொண்டு புதுக்கோட்டைத் தொண்டைமானுக்கு ஒரு கடிதம் எழுதச் செய்தார். கட்டபொம்முவைப் பிடித்துக் கொடுத்துக் கும்பினியாருக்கு உதவி செய்யும்படி வேண்டிக்கொண்ட அந்தக் கடிதம் ஸெப்டம்பர் மாதம் 8-ஆம் தேதி எழுதப்பட்டது.

அதற்கிடையில் மேஜர் திருநெல்வேலிச் சீமையின் நிலைமையை ஒழுங்குபடுத்த முற்பட்டார். இந்தக் கல

கத்தில் பாஞ்சாலங் குறிச்சியாருக்கு உதவியாக இருந்தவர்கள் நாகலாபுரம், கோலார்பட்டி, ஏழாயிரம் பண்ணை, காடல்குடி, குளத்தூர் ஆகிய ஐந்து பாளையக்காரர்களுமாவர். அவர்களுள் பாஞ்சாலங் குறிச்சியாரைப் போலவே காடல்குடியாரும் தப்பிக்கொண்டு ஓடிப்போய் விட்டார். மற்ற நான்கு பாளையக்காரர்களும் கும்பினியாரிடம் சரண்புகுந்தனர்.

கோலார்பட்டிப் பாளையக்காரருக்குக் கண் குருடு; அவரும் நோஞ்சல் இளைஞர். குளத்தூர் பாளையக்காரர் வயது சென்ற கிழவர். அறுபது எழுபது வயது இருக்கும். குளத்தூராருக்கு அவருடைய பிள்ளை சின்னவேட்டூர் நாயக்கரும், கோலார்பட்டியாருக்கு அவருடைய மைத்துனர் சௌந்தரலிங்க நாயக்கரும் மந்திரிகள். அவ்விருவர்தாம் எல்லாக் காரியங்களையும் நிர்வகித்து வந்தார்கள். அவர்களைப்போலவே ஏழாயிரம் பண்ணைக்கும் நாகலாபுரத்துக்கும் தானாபதிகள் வேறு இருந்தனர். அவர்கள் எல்லோரும் கும்பினியாரிடம் விரோத பாவம் கொண்டார்கள்

அவ்வறுவருடைய பாளையங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. பாளையக்காரருக்கு வேண்டியவர்கள் அந்தப் பாளையங்களுள் சிறு கலகங்கள் விளைவிக்காதபடி பார்த்துக்கொள்ளவும் கும்பினியாரின் அதிகாரத்தை நிலைநிறுத்தவும் பாஞ்சாலங் குறிச்சியில் லெப்டினன்ட் போவன் (Lieut. Bowen) என்பவரும் நாகலாபுரத்தில் லெப்டினன்ட் டிச்பர்ண் (Lieut. Tichborne) என்பவரும் சிறு படைகளுடன் நிறுத்தப்பட்டனர்.

பறிமுதல் செய்யப்பட்ட பாளையங்களின் அதிபதிகள் திருநெல்வேலிச் சீமையில் இருக்கும் வரையில் அமைதி நன்கு ஏற்படாது என்று எண்ணிய மேஜர் அவர்களை நாடு கடத்த எண்ணங்கொண்டார். அவர்களுடன் சிவகிரி

MADURA TAMIL

யாரின் பிள்ளையையும், மாப்பிள்ளை வன்னியரையும் வெளியேற்றிவிட விரும்பினர். சிவகிரியாரின் பிள்ளை மட்டும் தப்பித்துக்கொண்டுவிட்டார்.

சிறை செய்யப்பட்ட பாளையக்காரர்களுக்கு அவர் அவர் அந்தஸ்துக்குத் தக்கபடிக் கும்பினியார் ஜீவனும்சம் அளிக்கும் வரை அவர்களுடைய ஜீவனத்துக்கு நித்தியப்படி அளந்து வந்தார் மேஜர். வேறிடங்களுக்குச் செல்பவர்களுடன் அவர்களுடைய உறவினர்களில் இஷ்டப்பட்டவர்கள் செல்லலாம் என்றும் ஆனால் அவர்களுடைய செலவைக் கும்பினியார் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்றும் தெரிவித்துவிட்டார்.

தப்பி ஓடிய பாஞ்சாலங் குறிச்சி, காடல்குடி ஆகிய இரண்டு பாளையக்காரர்களும் பிடிபடாமல் இருந்தார்கள். அதனைக் கண்டு கவலைகொண்ட மேஜர் அவர்களை எப்படியாவது பிடித்துவிடவேண்டி, அவ்விருவரையும் உயிருடனே பிணமாகவோ கொணர்வோருக்குத் தலைக்கு இரண்டாயிரம் சக்கரம் வீதம் பரிசு வழங்கப் பெறும் என்று விளம்பரம் செய்தார்.

ஏற்கெனவே கும்பினியார் வெளியிட்டிருந்த விளம்பரத்தின்படி பாஞ்சாலங் குறிச்சியாரின் உறவினர் பலர் தூத்துக்குடியிலிருந்த காப்டன் டேவிஸனிடம் அடைக்கலம் புகுந்தார்கள். அவரும் அவ்வுறவினர்களை ஏற்றுப் பந்தோபஸ்தான இடத்தில் அமர்த்தினர். டேவிஸன் பின்னல் அவர்களை மேஜர் பானர்மனிடம் அனுப்பிவிட்டார்.

ராஜத்துரோகிகளாகக் கருதப்பட்ட பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக்காரர், தானபதி சுப்பிரமணிய பிள்ளை ஆகிய இருவருடைய சொந்தச் சொத்துக்களையும் கும்பினியார் பறிமுதல் செய்துவிட்டனர். அவற்றைக் கைப்பற்

றிச் சரிபார்த்துக் கணக்கு எடுத்துக்கொள்ளும்படி மேஜர் கலெக்டரைக் கேட்டுக்கொண்டார். அந்தச் சொத்துக்களின் தகவல்களைத் தெரிவிப்பதற்குக் கைது செய்யப்பட்ட உறவினர்களின் உதவி தேவையாக இருந்தபடியால் அவர்கள் பின்பு தக்க பந்தோபஸ்துடன் ராமநாதபுரம் அனுப்பப்பட்டார்கள்.

அவ்விதம் அனுப்பப்பட்டவர்கள் பின்வருமாறு:

கட்டபொம்மு உறவினர்:—

| | |
|---|---|
| தம்பி | குமாரசாமி நாயக்கர். |
| தாயாதி | வீரபாண்டிய நாயக்கர், சின்ன பொம்மு நாயக்கர், தளவாய் சாமி நாயக்கர், அதே பேர் உள்ள மற்றொருவர். |
| மைத்துனர் | தளவாய் குமாரசாமி நாயக்கர், வீரபாண்டிய சாமி நாயக்கர், சின்ன பொம்மு நாயக்கர் தளவாய் சாமி நாயக்கர். |
| மாமன் | கெடிவேட்டூர் நாயக்கர். |
| தாய் | ஆறுமுகம் அம்மாள். |
| மனைவி | சக்கம்மாள். |
| மைத்துனி | ஞானமுத்து அம்மாள். |
| மைத்துனர் மனைவி | சோசலை அம்மாள். |
| தம்பி மனைவி | சௌந்தரவடிவு அம்மாள். |
| மாமன் மனைவி | சிக்கம்மாள். |

ஆக மொத்தம் 16 பேர்கள்.

தானபதி உறவினர்:—

| | |
|---|---|
| தம்பி | வீரபத்திர பிள்ளை. |
| மைத்துனர் | ராமநாத பிள்ளை, அனவரதம் பிள்ளை. |

மகன் — வேலாயுதம் பிள்ளை என்கிற வெள்ளைச்சாமி.

மனைவி — முத்து வடிவு.

மருமகள் — ...........

ஆக மொத்தம் 6 பேர்கள்.

கட்டபொம்மு கோட்டையினின்றும் வெளியேறிய காலத்தில், அவருடைய சிற்றப்பன் மனைவி ஒருத்தியும் உடன் சென்றாள். அந்த அம்மாள் தன்னுடைய நகை நட்டுக்கள் அடங்கிய ஒரு பெட்டியைச் செல்லும் வழியில் தனக்கு வேண்டிய ஒருவரிடம் சேர்ப்பித்துப் பத்திரமாகப் பாதுகாத்துத் திருப்பிக் கொடுக்கும்படித் திட்டம் செய்து சென்றாள். அந்தச் செய்தி மேஜருக்குத் தெரிந்தவுடன் அவர் அதனைத் தேடிப் பிடித்துக் கைப்பற்றினார்.

கோட்டைக்குள் அகப்பட்ட யானை, குதிரை, மாடு முதலியவற்றையும், நகைகளையும் மற்ற விலையுயர்ந்த பொருள்களையும் விற்று வந்த பணத்தைப் படையெழுச்சியில் சம்பந்தப்பட்ட பட்டாளங்களுக்குக் கொடுக்க விரும்பினார் மேஜர். அந்த விதமே உத்தரவு அளிக்கச் சென்னைக்கு எழுதிக் கேட்டபொழுது கவர்னர் அதை அங்கீகரித்து, படையெடுப்பில் சுதேசச் சிப்பாய்கள் நன்கு நடந்துகொள்ளவில்லை யாதலால் அவர்களுக்குக் கொடுக்கவேண்டாம் என்ற தம் அபிப்பிராயத்தையும் தெரிவித்தார்.

கட்டபொம்முவின் உறவினர் தூத்துக்குடியில் காப்டன் டேவிஸன் பாதுகாப்பில் இருந்த காலத்தில் பாளையக்காரர் சார்பாக அவர்கள் சில கோரிக்கைகளை அனுப்பினர். ஆனால் மேஜர் பாளையக்காரர் சரண் அடைந்து தம்மைக் கும்பினியாரிடம் ஒப்புக்கொடுக்கும் வரையில் எவ்

வித மத்தியஸ்தமும் பேசமுடியாது என்று மறுத்து விட்டார்.

தென்னாட்டிலே பாளையக்காரர்கள் கலகம் விளைவிப்பதற்குக் காரணமாக இருப்பவை அவர்களுடைய கோட்டைகளும், அவர்கள் தாங்கியிருந்த ஆயுதங்களும் ஆகும். துஷ்கிருத்தியங்கள் செய்தவர்கள் தங்கள் கோட்டைகளுக்குள் ஒளிந்து ஆயுத பலத்தால் காத்து வந்தனர். ஆதலின் கோட்டைகளைத் தகர்த்து ஆயுதங்களைப் பிடுங்கிவிட்டால் அவர்களுடைய கொட்டம் அடங்கி விடும் என்று எண்ணினார் மேஜர்.

அதனால் அவர் ஸெப்டம்பர் மாதம் 18-ஆம் தேதி ஒரு பிரகடனம் வெளியிட்டார். அதில் நாட்டு மக்களின் க்ஷேமத்தைக் கும்பினியார் ஏற்றுக்கொண்டு விட்டபடியால், அவர்களுக்குத் தீங்கு ஒன்றும் வராமல் பாதுகாத்து வருவார்கள் என்றும், மக்கள் தற்காப்புக்காகவேனும் ஆயுதம் வைத்திருக்கவேண்டிய அவசியம் இனி இல்லை என்றும், அதனால் அவர்கள் தங்கள் ஆயுதங்களைக் கும்பினியாரிடம் உடனே சேர்த்துவிட வேண்டும் என்றும், ஆயுதம் தாங்கியிருப்பவர்களுக்கும் ஆயுதத்தை மறைத்து வைத்திருப்பவர்களுக்கும் சிரச்சேத தண்டனை விதிக்கப்படுமென்றும், ஒவ்வொரு கிராமத்தின் நாட்டாண்மைக்காரனும் அதற்குப் பொறுப்பாளி ஆவன் என்றும் குறிக்கப்பட்டிருந்தது.

கும்பினியாரிடமிருந்து தப்பி வடக்கே ஓடிய கட்டபொம்முவும் அவரைச் சார்ந்தவர்களும் திருச்சிராப்பள்ளியை அடைவதாக எண்ணியிருந்தனர். அவ்விடத்தில் இருந்த நவாபினிடமும் கும்பினி அதிகாரிகளிடமும் சரண் புகுந்து முன்னம் வெற்றி யடைந்தது போலவே இப்பொழுதும் தங்கள் காரியத்தைச் சாதித்துக்கொண்டு நாடு

திரும்பலாம் என்று எண்ணினர் போலும். ஆனல் அது நடைபெறவில்லை. அவர்கள் ஏறிச்சென்ற குதிரைகள் வழிநடை வேகம் தாங்காமல் இறந்து விழுந்தன. பாளை யக்காரர்களும் பகிரங்கமாக நடந்து செல்லப் பயந்து மறைவாக மெள்ள மெள்ளச் சென்று சிவகங்கைச் சீமை யைச் சார்ந்த ஆனியூர் என்னும் இடத்தை அடைந்தனர்.

இச்செய்தியை அறிந்த கும்பினியார் மறுபடியும் புதுக்கோட்டைத் தொண்டைமானுக்குக் கடிதம் எழுதி னர். அதற்குள் பாளையக்காரர்கள் ஆனியூரை விடுத்துக் கலியபுரத்தை அடைந்தனர். அவ்வூர் புதுக்கோட்டைச் சீமையில் திருக்களம்பூர் என்னும் இடத்துக்கு மேற்கில் உள்ள காட்டின் மத்தியில் உள்ள இடமாகும். அவர்கள் அவ்விடம் தங்கியிருக்கும் செய்தியை அறிந்த தொண்டை மான் தம்முடைய படைத்தலைவர்களை அனுப்பிக் காட் டைச் சூழ்ந்து அவர்களைப் பிடிக்கச் செய்தார். கட்ட பொம்மு உள்பட மொத்தம் ஏழு பேர்கள் பிடிபட்டனர். அவர்கள் முறையே கட்டபொம்மு, ஊமைத்துரை, மைத் துனர்கள் முத்தையா நாயக்கர், குமாரசாமி நாயக்கர், முத்துக்குமாரசாமி நாயக்கர், அந்தரங்க ஊழியர்களான வீரண்ண மணியக்காரன், அண்ணன் என்போர்கள். அவர்களிடம், ஐந்து பட்டாக் கத்திகள், நான்கு பிச்சுவாக் கள், ஒரு கத்தி, ஒரு பாக்குவெட்டி ஆகியவை இருந்தன.

அவர்களைப் பிடித்த பெருமை அக்காலத்தில் புதுக் கோட்டையில் அரசராக வீற்றிருந்து போஜராஜன் என்று கீர்த்தி பெற்ற ராஜா விஜய ரகுநாதத் தொண் டைமான் பகதூர் அவர்களைச் சார்ந்தது. அவர்களைச் சூழ்ந்து பிடித்த சர்தார் திருக்களம்பூர் முத்து வைரவ அம்பலக்காரர் எனப்படுபவர். அந்த அம்பலக்காரர் வீரத்தைப் பாராட்டி அவர்மீது ஒரு கும்மி இயற்றப்பட்

டுள்ளது. கும்பினியார் விளம்பரம் செய்தபடி இரண்டாயிரம் சக்கரங்களைத் தவிர, ஒரு குதிரை, இல்லத் ஆகிய பரிசுகளையும் மன்னர் பெற்றார். அவர்கள் பிடிபட்டது 1799-ஆம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 23-ஆம் தேதி இரவு ஆகும். தொண்டைமான் மறுநாள் காலையில் உடனே ஒரு கடிதம் எழுதினார். அதில் பாளையக்காரர்களைப் பிடித்த செய்தியைத் தெரிவித்து மேலே நடக்க வேண்டியவற்றை அறிவிக்கும்படி கேட்டிருந்தார். கட்டபொம்மு உய்யும் வழி தோன்றாமல் திகைத்து நிற்கிறார் என்றும், பிடிபட்ட அவமானத்தால் தற்கொலை செய்து கொள்ளவும் கூடும் என்றும், அவரை வைத்துக் காப்பாற்றுவது மிகவும் கஷ்டமான காரிம் என்றும் கூறியிருந்தார் தொண்டைமான்.

இச்செய்தி மேஜர் பானர்மனுக்கு 29-ஆம் தேதி கிடைத்தது. அவர் கட்டபொம்முவையும் அவரைச் சேர்ந்தவர்களையும் உடனே தக்க பந்தோபஸ்துடன் மதுரைக்கு அனுப்பி அவ்விடம் உள்ள படைத்தலைவரிடம் ஒப்பித்து விடும்படி பதில் எழுதிவிட்டார். அத்துடன் தாமும் ஓர் அதிகாரியை மதுரைக்கு அனுப்பி அவர்களைப் பெற்று அழைத்து வந்து தம்மிடம் ஆஜர் செய்யவும் ஏற்பாடு செய்தார்.

கட்டபொம்மு பிடிபட்டதைப்பற்றிக் கர்ண பரம்பரையான செய்தி வேறுவிதமாகக் கூறுகிறது:

‘கட்டபொம்மு திருச்சிராப்பள்ளி செல்வதற்காகப் புறப்பட்டவர் வழியில்உள்ள புதுக்கோட்டை மன்னரிடம் தாமாகவே வந்து சேர்ந்தார். தொண்டைமானும் கட்டபொம்முவும் பழைய நண்பர்கள். தொண்டைமானுக்குக் கும்பினியாரிடம் கொஞ்சம் செல்வாக்கு அதிகம். அதனால் புதுக்கோட்டையில் சிறிது காலம் தங்கி அவரைக்

கொண்டு கும்பினியாரிடம் சமாதானம் பேசலாம் என்று எண்ணினர். தம்மிடம் வந்து அடைக்கலம் புகுந்த கட்ட பொம்முவைத் தொண்டைமான் நயவஞ்சகமாகக் காட்டிக் கொடுத்துவிட்டார்; அவரைப் பிடித்துத் திருமயத்தில் சிறையிலிட்டுக் கும்பினியாருக்குத் தகவல் கொடுத்தார். தாமாகவே வந்து சேர்ந்தவரைக் கஷ்டப்பட்டுப் பிடித்த தாகக் கூறிப் புகழ் சம்பாதித்தார்.' இவ்விதம் உள்ளது அந்தக் கதை. சரித்திர ஆசிரியர்களால் இந்தக் கதை நம் பப்படவில்லை. திருமயத்தில் கட்டபொம்மு சிறைவைக்கப் பட்டிருந்தது உண்மையாக இருக்கலாம். அவர்கள் பிடி பட்ட பிறகு மதுரைக்கு அனுப்பப்படும் வரையில் அவர் கள் திருமயத்தில் வைக்கப்பட்டிருந்தனர் போலும்.

பிடிபட்ட பாளையக்காரர்கள் அக்டோபர் மாதம் 5-ஆம் தேதி கயத்தாறு வந்துசேர்ந்தனர். மேஜர் பானர் மன் அப்பொழுது அவ்விடத்தில் பாடி யிறங்கியிருந்தார். அவர்களை உடனே ஒன்றும் செய்யாமல் பத்து நாட்கள் அங்கேயே வைத்திருந்தார்.

இடையில் பானர்மன் திருநெல்வேலிப் பாளையக்காரர் கள் எல்லோரையும் வரவழைத்து ஒரு கூட்டம் கூட்டினர். பாளையக்காரரில் பெரும்பாலோரும் எல்லோருடைய வக் கீல்களும் அந்தக் காலங்களில் எல்லாம் மேஜர் உடனேயே இருந்தனர்.

இரண்டு பாளையக்காரர்களைத் தவிர மற்ற எல்லோ ரும் வந்திருந்தனர். அவர்களிடம் கும்பினியாரின் பிரதா பங்களையும் கலகக்காரர்களை அவர்கள் எப்படித் தண்டிப் பர் என்பன போன்றவற்றையும் எடுத்துக் கூறிவிட்டு ஒவ்வொருவரையும் தனியாகச் சில தகவல்களைக் கொடுக் கும்படி கேட்டுக்கொண்டார். அவர்கள் பாளையங்களின் வரும்படி, சர்க்காருக்குச் செலுத்தும் பேஷ்குஷ்—கப்பம்

பாக்கி விழுந்துள்ள தொகை, பாளையங்களில் உள்ள கோட்டைகள், அவற்றைக் காக்க வைத்திருக்கும் படை, அவர்களுடைய ஆயுதங்கள், கோட்டைகளையும் படையை யும் வைத்திருப்பதற்கு ஏற்படும் நிர்வாகச் செலவு ஆகிய வற்றுக்கு விவரமான பதில்களைக் கொடுக்கும்படிக் கேட்டார். எதற்காகக் கேட்கிறார் என்பதைப் பாளையக்காரர்கள் அறிந்துகொள்ளக் கூடாது என்பதற்காக இந்தக் கேள்விகளை முன்னும் பின்னுமாக மாற்றி மாற்றி அமைத் திருந்தார்,

அவற்றிற்கு உரிய பதில்களை அவர்கள் கொடுத்த வுடன் அந்தப் பதில்களைக் கொண்டு தொகுத்து ஒரு பட்டியல் தயாரித்தார் மேஜர். ஆயுதங்களைப் பற்றிய தகவல் உண்மையாக இருக்க முடியும் என்று மேஜர் நம்பவில்லை. எனினும் தற்காலிகமான குறிப்பு கிடைத்த தாகவே அதனை எண்ணினார்.

மேஜர் அதன்மீது மறுநாள் எல்லோரையும் ஒருங்கே சேர்த்து அவர்கள் பாளையங்களில் உள்ள கோட்டைகளை இடித்து ஆயுதங்களைக் கும்பினி அதிகாரிகளிடம் சேர்த்துவிடவேண்டும் என்று உத்தரவிட்டார். 'அதனை நிறைவேற்றுவதற்கு இருவழிகள் உண்டு. அதனை நிறை வேற்றிவிடும்படி அவர்களே உத்தரவிடுவது ஒன்று. கும்பினியாரே நேரில் சென்று அதனை நிறைவேற்றுவது மற்றொன்று. இவ்விரண்டிற்குள் எதை வேண்டுமானா லும் பாளையக்காரர்கள் பின்பற்றலாம். ஆனால் கும்பினி யாரே நிறைவேற்ற வேண்டுமானால் பாளையக்காரர்கள் கும்பினிப் படையுடன் ஊர் ஊராகச் சென்று வரவேண் டும். அல்லது அவர்களே உத்தரவு கொடுப்பார்களானால், அவர்களுக்குக் கீழ்ப்பட்டவர்கள் அதனை நிறைவேற்றும் வரையில் பாளையக்காரர்கள் கயத்தாற்றில் தங்கியிருக்க

வேண்டும். அந்த அந்தப் பாளையங்களில் நிறைவேற்றி வைக்கப்பட்ட அறிக்கை வந்தவுடன் அவர் அவர் திரும்பிச் செல்ல அனுமதிக்கப்படுவர்.'

பாளையக்காரர்கள் தங்கள் காரியஸ்தர்களைக் கூப்பிட்டுக் கும்பினியார் விருப்பப்படிக் கோட்டைகளை இடித்துத் தள்ளிவிட ஆணையிட்டுக் கயத்தாற்றிலேயே பானர்மனுடன் தங்கிவிட்டனர்.

ஆனால் அவர்கள் ஆயுதங்களைக் கொடுப்பதைப் பற்றித்தான் சம்மதிக்கவில்லை. தாங்கள் நிராயுதபாணிகளாக ஆகிவிட்டால் பக்கத்துப் பாளையக்காரர், கள்ளர் ஆகியோர்களுடைய உபத்திரவத்தைத் தடுக்க வழி இல்லாமல் போய்விடும் என்றும், தங்களுடைய அந்தஸ்துக்குத் தக்க பரிவாரம் வேண்டியது அவசியம் என்றும் வற்புறுத்தினர். ஆனால் மேஜர் அவற்றிற்கெல்லாம் செவி சாய்க்காமல் சமாதானம் கூறிவிட்டார்.

இந்த உத்தரவுகள் நிறைவேற்றப் பெறுவதற்குக் கும்பினிப் படை சிறுசிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாளையத்துக்கும் சென்றது. மேல் படாகைக்குக் காப்டன் ப்ரூஸும் கீழ்ப் படாகைக்கு லெப்டினன்ட் பாக்ஷா (Lieut. Bagshaw)வும் நியமிக்கப்பட்டிருந்தனர் அவர்கள் பதினைந்து தினங்களுக்குக்குள் தங்கள் வேலையை முடித்துவிட்டனர். அவ்விதம் இடிக்கப்பட்ட பாளையங்களுள் பாஞ்சாலங் குறிச்சியும் முக்கியமானது. அது தரை மட்டமாக்கப்பட்டது.

அழிவு வேலையின் பெரும்பகுதி முடிந்துவிட்டது. அக்டோபர் மாதம் 16-ஆம் தேதியன்று கட்டபொம்முவை விசாரணை செய்து அவர் செய்துள்ள குற்றங்களுக்காக முன்னமே. முடிவு செய்யப்பட்டிருந்த தீர்ப்பை அளிக்க ஏற்பாடு செய்தார் பானர்மன். அதனை எவ்

வளவு பகிரங்கமாகச் செய்ய முடியுமோ அவ்வளவு பகிரங்கப்படுத்தி மக்களின் மனத்தில் அச்சத்தை விளைவிக்க விரும்பினார் அவர்.

அன்றைத் தினம் காலையில் 10 மணிக்கு எல்லாப் பாளையக்காரர்களும் வந்து கூடினர். முதலில் மேஜர் பானர்மன் அவர்களைத் தாம் அழைத்த காரணத்தைக் கூறினார். பின்னர், கட்டபொம்மு கும்பினியாரை அவமதித்துக் கலகம் செய்து நாட்டு மக்களுக்கு இழைத்த கொடுமைகளுக்குத் தக்க நீதி வழங்கிக் கும்பினியாரின் கௌரவத்தையும் மதிப்பையும் நிலைநிறுத்தவேண்டிச் சர்க்கார் கட்டபொம்முவின்மீது முடிவு செய்துள்ள தீர்ப்பை அவருக்கு அளிக்கும்பொழுது மற்றப் பாளையக்காரர்கள் எல்லோரும் உடனிருந்து பார்க்கத் தாம் விருப்பப்படுவதாகச் சொன்னார்.

அதற்குப் பிறகு கட்டபொம்மு கைதியாகக் கூட்டத்தின் முன்பு கொணர்ந்து நிறுத்தப்பட்டார். விசாரணையும் உடனே ஆரம்பமாயிற்று. பானர்மன், கட்டபொம்மு மற்றப் பாளையக்காரர்கள் முன்னிலையில் அவமானம் அடையும்படிக் கைதியாக அப்பொழுது வந்து நின்று தம் மீது சாட்டப்பெற்றுள்ள குற்றங்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய நிலைமைக்கு அவர் தம்மைத் தாமாகவே செய்து கொண்டார் என்றும், கும்பினியாரின் உத்தரவுப்படியே தாம் அவரை விசாரிக்க நேர்ந்திருக்கிறது என்றும் தெரிவித்துக் கொண்டார்.

அதற்கப்பால் பானர்மன் கட்டபொம்முவின்மீது பின்வரும் குற்றங்களைச் சாட்டி அவற்றிற்குச் சமாதானம் கூறும்படி அவரைக் கேட்டார்.

(1) கட்டபொம்மு சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய கிஸ்திப் பணத்தைக் கொடுக்காமல் பிடித்து வைத்துப் பல வகையான தொந்தரவு கொடுத்து வந்திருக்கிறார்.

(2) கலெக்டர் லூஷிங்டன் துரை தம்மைப் பேட்டி காணும்படி அனுப்பிய உத்தரவுக்குக் கட்டபொம்மு படையுடன் சர்வபரிவாரங்களும் பின் தொடராமல் வர மறுதளித்துவிட்டார்.

(3) ஜூலை ஆகஸ்டு மாதங்களில் கும்பினியாருடன் பகைத்து நின்ற சிவகிரிப் பாளையக்காரர் மகன், மாப்பிள்ளை வன்னியர் ஆகியவர்களுக்கு (கும்பினியார் ஆதிக்கத்தைக் காப்பாற்றுவதற்கு மாருக அதனை அவமதித்து) உதவி செய்ய ஒரு பெரும்படை அனுப்பியிருக்கிறார்.

(4) கடைசியாக அவரை வென்று அடிப்படுத்துவதற்குக் கும்பினியார் பட்டாளத்தை அனுப்பிய பொழுது கட்டபொம்மு கீழ்ப்படியாமல், எதிர்த்து நின்று தம் ஆட்களைக்கொண்டு போர் செய்து கும்பினிப் படையினர் பலரைக் கொன்றிருக்கிறார்.

அதற்கப்பால் மேஜர் பானர்மன் பாளையங்கோட்டையில் தம்மைச் சுப்பிரமணிய பிள்ளையுடன் வந்து பேட்டி காணும்படிக் கட்டபொம்முவுக்கு ஸெப்டம்பர் மாதம் முதல் தேதி எழுதிய கடிதத்தை வாசித்துக் காண்பித்து, அது வந்து சேர்ந்ததா என்று கேட்டார். அது வந்து சேர்ந்ததைக் கட்டபொம்முவும் ஒப்புக்கொண்டார்.

பிறகு, முன்னம் பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டைக்குள் சென்று வந்த துபாஷ் ராமலிங்க முதலியார் மேஜர் பானர்மன் முன்பு எழுதி வைத்திருந்த வாக்குமூலம் வாசிக்கப்பட்டது. அது சரியாகத்தான் எழுதப்பட்டிருக்கிறது என்பதையும் கட்டபொம்மு ஒப்புக்கொண்டார்.

அதற்குப் பிறகு துபாஷ் ராமலிங்க முதலியாரும், அவருடன் கோட்டைக்குள் சென்ற ஹவில்தார் இப்ராஹீம்கானும், அரிக்காரன் சாமியும் விசாரிக்கப்பட்டார்கள். அவர்கள் பழைய வரலாற்றைத் திரும்பக் கூறினார்கள்.

கடைசியாகக் கட்டபொம்முவின் மாமன் கொடிவேட்டூர் நாயக்கரையும் ஒரு சாட்சியாகக் கொணர்ந்து விசாரித்தார்கள். சாட்சி விசாரணை முடிந்த பிறகு மேஜர், கட்டபொம்மு தம்மீது சாட்டப்பெற்றுள்ள குற்றங்களை மறுத்துத் தம்முடைய நடத்தைக்கு ஏதாவது சமாதானம் கூற முடியுமா என்று அவரைக் கேட்டார்.

கட்டபொம்மு தம்மீது சாட்டப்பெற்ற குற்றங்களில் ஒன்றையும் மறுக்க முயலவில்லை. அவற்றை ஒருவிதமாக ஒப்புக்கொண்டார். ஆனால் அவர் அவற்றைக் குற்றங்களாகக் கருதவில்லை. கும்பினியாரின் ஊழியர்களைத் தாம் எப்பொழுதும் கவுல் பெற்று கொள்ளாது பேட்டி காணுவது வழக்கமில்லை என்றும், சிவகிரிக்குத் தம்முடைய படையை அனுப்பியது அவ்விடத்துப் பாளையக்காரருக்கும் அவருடைய மகனுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த மனவேற்றுமையை அகற்றி அவர்களை ஒன்றுசேர்த்து வைப்பதற்காகவே என்றும், அதனால் அது ஒரு குற்றமாகாது என்றும் சமாதானம் கூறினார்.

இன்னம் அவர் கூறவேண்டியது ஏதாவது உண்டா என்று மேஜர் கேட்டபொழுது கட்டபொம்மு அலட்சியமாகவே ஒன்றும் கிடையாது என்று பதில் அளித்தார்.

இந்தச் சமாதானங்கள் மேஜர் பானர்மனுக்குத் திருப்தியளிக்கவில்லை. அவர் தீர்ப்பு முன்னமேயே முடிவு செய்யப்பட்டிருந்தது. அவர் அதனைக் கட்டபொம்முவுக்குக் கூறினார். உடனே அதை நிறைவேற்றப் பட்டாளத்

தார் முற்பட்டு அவரைத் தூக்கிச் சென்றனர். கட்ட பொம்மு போனபிறகு மேஜர் அங்கு கூடியிருந்த பாளையக் காரர்களுக்கு நற்புத்தி புகட்டி அனுப்பினூர்.

விசாரணை நடக்கும்பொழுதெல்லாம் கட்டபொம்மு தாம் பிடிபட்டதற்குக் காரணபூதராக இருந்த எட்டைய புரம் பாளையக்காரரை முறைத்துப் பார்த்து வந்தார். அதேபோலச் சிவகிரிப் பாளையக்காரரையும் வெறுப்புடன் நோக்கினூர். அங்கு கூடியிருந்தவர்களில் எவரையும் அவர் மதிக்கவில்லை. தம்மீது குற்றம் சாட்டும் மேஜரே தம்மை விசாரிக்க உரிமை பெற்றவர் அல்லர் என்று அவர் கருதினூர்போலும். அவர் அவ்விதமே கூறித் தம்மை விசாரிக்கக் கும்பினி மேலதிகாரிகளிடம் அனுப்பும்படி கேட்டுக் கொண்டார் என்றும் மேஜர் அதற்குச் செவிசாய்க்க வில்லை என்றும் கூறுவர்.

விசாரணைக் கூட்டத்திலிருந்து தூக்குமேடைக்கு அழைத்துச் செல்லும்பொழுது அவர் சிறிதும் கலங்காமல், நடுக்கமுறுமல், கம்பீரமாகப் பார்த்துக்கொண்டு நிதான மாகச் சென்றூர்; இருமருங்கிலும் உள்ள பாளையக்காரர் களை இகழ்ச்சி தோன்றும் பார்வையால் பார்த்துக் கொண்டு ஸ்திரமாக அடிமேல் அடிவைத்துச் சென்றூர்.

தூக்குமேடை ஊருக்குப் பக்கத்தே அமைந்திருந்த பழைய கோட்டைக்குச் சமீபமாக நிறுவப்பட்டிருந்த பெருவழியின் ஓரத்தில் நின்ற கட்டைப் புளியமரம்தான். அவர் உலகத்தில் எதைப்பற்றியும் கவலை கொள்ளவில்லை. தூக்குமேடைக்குச் சமீபமாகச் சென்றபொழுது மட்டும் சிறிது மனக்கலக்கம் உண்டாயிற்று. அது அவர் தம்பி ஊமைத் துரையைப் பற்றியது. அவர் ஊமைத் துரை யைப்பற்றி மட்டும்தான் கவலைகொண்டார்.

மரத்தின் அடியை அடைந்தவுடன், அவர் தம்முடைய நிலைமையைக் குறித்துக் கொஞ்சம் வருந்தினர். அவர் இறப்பதற்கு அஞ்சவில்லை. ஆனால் அவர் அப்படிப்பட்ட மரணத்தை விரும்பவில்லை. தூக்குப் போட்டு இறப்பது வீரனுக்கு அழகல்ல. கோழை, பயங்கொள்ளிக்கு ஏற்படவேண்டிய சாவு அது. பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையைத் துறந்து வெளிப்பட்டது தவறு என்றும், அவ்விதம் செய்யாமல் கோட்டையைப் பாதுகாத்து நடத்திய போரில் அவர் இறந்துபட்டிருந்தால் இப்படிப்பட்ட இழி மரணம் கிட்டியிருக்காதே என்றும் வருந்தினர்.

அங்ஙனம் அவர் தூக்குப் போடப்பட்டது 1799-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் 16-ஆம் தேதி ஆகும்.

அதே மாதம் 21-ஆம் தேதி மேஜர் பாளையக்காரர்களைக் கூப்பிட்டு மறுபடியும் ஒரு பிரகடனம் வெளியிட்டு அவர்களைத் திரும்பத் தங்கள் பாளையங்களுக்குப் போகும்படி உத்தரவிட்டார். அந்தப் பிரகடனம் ஒவ்வொரு பாளையத்திலும் பித்தளைத் தகட்டில் பொறிக்கப்பட்டு இப்பொழுதும் காணப்படுகின்றது.

அப்பால், பானர்மன் பாளையக்காரர்களுக்கு நாட்டில் உள்ள செல்வாக்கைக் குறைக்கவும் வழி தேடினர். காவல் வரி வசூல் செய்யும் பாத்தியதையை அவர்கள் கொண்டிருப்பதால் அல்லவோ அவ்வளவு பெருமை உண்டாகிறது என்று நினைத்து அதனைப் பிடுங்கிவிடவும் கவர்னருக்கு யோசனை சொன்னர்.

நாடு சீர்ப்படும் வரையில் இரண்டு சிப்பந்திப் பட்டாளங்களை அந்தச் சீமையில் நிறுவவேண்டும் என்றும், அவர்களுக்காக ஏற்படும் செலவைப் பறிமுதல் செய்யப்பட்ட பாஞ்சாலங் குறிச்சிப் பாளையத்தின்

வருமானத்திலிருந்து ஈடு செய்யலாம் என்றும் சிபார்சு செய்தார்.

கும்பினியாரும் மேஜருடைய சிபார்சுகளில் பெரும்பாலானவற்றை ஆமோதித்தார்கள். நாட்டில் அமைதியும் நிலவ ஆரம்பித்தது. அதனால் கும்பினியார் தாங்கள் சிறை செய்த பாஞ்சாலங் குறிச்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர்களைப் பாளையங்கோட்டையில் சிறைவைத்துப் பாதுகாத்து வந்தார்கள்.

## அத்தியாயம் 17

# ஊமைத் துரை சிறை மீண்டது

'ஞாயி றன்ன வெந்திறல் ஆண்மையும்
திங்க ளன்ன தண்பெருஞ் சாயலும்.'

— புறநானூறு

கறுத்தையா கயத்தாற்றில் தூக்கில் இடப்பட்டுப் பதினாறு மாதங்கள் ஓடிவிட்டன. அவருடைய சகோதரர்கள் இருவரும் பாளையங்கோட்டைச் சிறையில் அடைபட்டிருந்தனர். பாஞ்சாலங் குறிச்சிப் பாளையத்தைக் கும்பினியார் பறிமுதல் செய்யாமலும், அவ்விருவரையும் பிடித்துச் சிறையிடாமலும் இருந்திருந்தால், அவ்விருவருள் மூத்தவர் கட்டபொம்முவாக ஆண்டிருப்பார்.

துரைசிங்கமோ பிறவிச் செவிட்டு ஊமை. காதும் கேட்காது; பேசவும் முடியாது. பார்வைக்கும் நோஞ்சலாக இருப்பார். சிவத்தையா குமாரசாமியும் மெலிந்து கச்சலான சரீரம் வாய்ந்தவர்; நோயால் பீடிக்கப்பட்டவர் போலே காணுவார்.

ஊமைத் துரைசிங்கம் மகா சாமர்த்தியசாலி; காரியவாதி; எதையும் நிர்வகித்துக்கொள்ளும் சக்தி பெற்றவர். ஆழ்ந்த யோசனையுடனேயே எதையும் செய்வார். அவர் இல்லாமல் எந்த ஆலோசனையும் கூட்டமும் நடவா. எப்படிப்பட்ட சாகஸமான காரியத்தையும் சுலபமாகச் செய்து முடிக்கும் திறமை வாய்ந்தவர் அவர்.

மக்களும் அவரைத் தெய்விக அம்சம் கொண்டவ ராகவே பாவித்துக் கொண்டாடினர். பெரிய ஜனக்கூட் டத்தின் மத்தியில் நின்றுகொண்டு அவர் கண் ஜாடை ஒன்றை மட்டும் காட்டுவாராகில், அதனைத் தெய்விக ஆணையாகக் கொண்டு அந்தக் கூட்டமே புரண்டு அவர் விரும்பிய காரியத்தைச் சாதித்துவிடும்.

ஊமைத்துரை கும்பினியாரிடம் விரோதம் பாராட்டி வந்தார். ஐரோப்பியர்களைக் கண்டால் அவருக்குப் பிடிக் காது. அவர்களை அவர் வெகு எளிதில் தோல்வியுறச் செய்து விடுவதாகவே தெரிவித்துவந்தார். அவர் வாய் பேசாது கை ஜாடையாலேயே அவ்விதம் குறிப்பது வேடிக் கையாக இருக்கும்.

அவர் இடது உள்ளங்கையில் வைக்கோல் துரும்பு கள் சிலவற்றைப் பரப்பி, வலது கை ஆள்காட்டி விரலால் ஒரு சுற்றுச் சுற்றி ஜாடை காண்பித்து, வாயினால் 'உச்' என்று சப்தம் செய்து ஊதி இடது கைத் துரும்புகளை வலது கையால் தட்டிவிடுவாராம். அதற்கிடையில் வலது கையை உயர்த்தித் தலையின் மீது தொப்பி போலக் குவித் தும் காட்டுவாராம்.

தொப்பி தரித்துள்ள ஐரோப்பியரை அவர் ஒரு நொடிப் பொழுதில் வென்றுவிடுவார் என்பதையே அவர் அவ்விதம் குறித்து வந்தார். ஐரோப்பியப் பட்டாளத் தைத் துரும்பு போலவே அவர் மதித்துக் காண்பித்து வந் தார் என்பதும் அதனால் ஏற்படுகிறது. கும்பினியார்கள் அவரை 'டம்பி' 'டம் பிரதர்' (Dumby - ஊமையன்; Dumb Brother - ஊமைத் தம்பி) என்று குறிப்பிட்டுள் ளார்கள். நவாபு சேனையைச் சேர்ந்தவர்கள் 'மூகா' என்று கூறுவார்கள். தமிழ் மக்கள் அவரை ஊமையென் றும் ஊமைத் துரை யென்றும் சொல்லுவார்கள். அவர்

பெயரை அநேகர் அறியார். பொதுவாக அவரை ஊமைத் துரை என்றே வழங்கி வந்தனர்.

சிவத்தையா என்னும் குமாரசாமி நாயக்கரும் மெலிந்த சரீரியாக இருந்தாலும், ஊமையைப் போன்ற ஆற்றல் வாய்ந்தவரே. அந்தக் காலத்தில் நடந்த கலகங்களுக்கெல்லாம் அவரே காரணபூதர், சூத்திரதாரி என்றும் சொல்வார்கள்.

இவ்விதம் செல்வாக்கு மிகுந்த ராஜகுமாரர்கள் இருவரும் அவர்களுடைய நெருங்கிய உறவினர்களும் சிறையில் உழல்வதை அவர்களுக்கு வேண்டியவர்கள் வெளியில் இருந்து பார்த்துக்கொண்டு சும்மா இருப்பார்களா? அவர்களைச் சிறைமீட்கச் சூழ்ச்சிகள் செய்து வந்தார்கள்.

* * *

1801-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் 2-ஆம் தேதி, மாலை வேளை; பொழுது அஸ்தமித்து விட்டது. பாளையங்கோட்டைச் சிறையிலிருந்த முக்கியமான கைதிகள், பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக்காரர்கள் தப்பி ஓடி விட்டார்கள். அவர்கள் வெளிப்பட்ட செய்தி உடனே வெளியில் எட்டவில்லை. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் பரவியது. அவர்கள் மிகுந்த முன் ஜாக்கிரதையும் ஏற்பாடுகளும் செய்துகொண்ட பிறகுதான் வெளியேறினர்.

அந்தச் சமயத்தில் சிறைக்குள்ளிருந்தவர்கள் சிலருக்கு வைசூரி கண்டிருந்தது. அப்பொழுது விலங்கிட்டு இருந்தால் அவர்களுக்கு அது அதிகமான தொந்தரவைக் கொடுக்கும் என்று அவற்றை எடுத்திருந்தார் சிறையதிகாரி. அந்தச் சந்தர்ப்பத்தைப் பாளையக்காரர்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ளவேண்டும்; இல்லாவிட்டால் பின்னால் அதைப் போன்ற சந்தர்ப்பம் நேரிடுவது கஷ்டம்.

இதை முன் கூட்டியே யோசனை செய்து பாளையப்பட்டின் ஜனங்களில் பலர் அன்றைத் தினம் கோட்டைக்குள் வந்து சேர்ந்தனர். மற்றவர் சந்தேகமுற இடம் கொடுக்காதபடி அவர்கள் மாறுவேடம் அணிந்து வந்திருந்தனர். விறகு விற்பவர் போல வந்தவர் சிலர்; புற்கட்டுச் சுமந்து வந்தவர் சிலர்; வழிப்போக்கர் போல வந்தவர் சிலர்; பிச்சைக்காரர் போல வந்தவர் சிலர். விறகுக் கட்டு, புற்கட்டு முதலிய ஒவ்வொன்றிலும் அவர்கள் தங்கள் தங்கள் ஆயுதங்களை மறைத்துவைத்துக் கொணர்ந்திருந்தனர். இவ்விதம் வந்தவர்களே ஊமைத் துரை முதலியோரை விடுவித்தார்கள்.

பாளையக்காரர்கள் பாளையங்கோட்டைச் சிறையினின்றும் வெளியேறிய விதம் நாட்டுச் சரிதங்களில் பின்வருமாறு கூறப்படுகின்றது:

விறகு, புற்கட்டு முதலியவற்றைச் சுமந்து பாளையங்கோட்டைக்கு வந்திருந்த பாளையப்பட்டார் எல்லோரும் பகல் முழுவதும் சந்தைப் பக்கத்திலேயே தங்கியிருந்தனர். அவர்கள் சாமான்களுக்கு அதிக விலை கூறிவந்தபடியால் யாரும் அவற்றை வாங்கவில்லை. பொழுது சாயும் வரையில் காத்திருந்து வேறு வழியின்றி இரவுப் பொழுதை அங்கேயே கழிப்பவர் போலத் தங்க ஏற்பாடு செய்தார்கள். தெற்கு வாசலில் தங்கினர் சிலர்; சிறைச்சாலைப் பக்கத்தே தங்கினர் வேறு சிலர். இவ்விதம் அவர்கள் நகரின் முக்கியமான பாகங்களில் தங்கியிருந்தனர்.

சிறைச்சாலைப் பக்கத்தே தங்கியவர்களுள் நாலைந்து பேர்கள் சிறையின் அதிகாரியான 'கில்லேதா'ரிடம் தங்கள் விறகுக் கட்டுகளை விலை பேசினர். வரப்போகும் வருஷப் பிறப்பைத் தங்களுடன் கொண்டாடப் பாளையக்காரர்களைக் கில்லேதார் வெளியில் விடுவாரானால் விறகுக்

கட்டுகளை அவர்கள் விலையின்றிக் கொடுப்பதாகக் கூறினார்கள் என்று சொல்லப்படுகின்றது. கில்லேதார் அதற்குச் சம்மதிக்கவில்லை. விறகை விலைகொடுத்தே வாங்கினார்.

விறகை விற்றவன் கட்டில் தான் ஒளித்து வைத்திருந்த துப்பாக்கியை உருவிக்கொண்டான். அது அவ்விடத்தில் இருந்தவர்களிடையே கலக்கத்தை உண்டுபண்ணியது. அவன் அந்தத் துப்பாக்கியால் சிறைக் காவலாளியைச் சுட்டுவிட்டான்.

அவ்வளவுதான்; பெரிய கலவரம் ஏற்பட்டுவிட்டது. பாளையப்பட்டார் பலரும், தங்கள் ஆயுதங்களுடன் தயாராகக் கிளம்பிவிட்டனர்.

ஒரு குறிப்பிட்ட சமிஞ்ஞை கண்டவுடன் அவ்வளவு பேரும் சிறைச்சாலையின் வாயிற் கதவைத் தாக்கினார்கள். உள்ளிருந்த கைதிகள் முன்புறம் இருந்த இரண்டு காவலையும் எதிர்த்தார்கள். காவற்காரருள் சிலருக்குக் காயம் ஏற்பட்டது; ஒரு நொடியில் எல்லோரும் நிராயுதபாணிகள் ஆகிவிட்டனர். கைதிகளாக இருந்தவர்கள் காவற்காரர்களுடைய துப்பாக்கி, கத்தி முதலியவற்றைப் பிடுங்கிக்கொண்டு வெளிவாசலை நோக்கி ஓடினர். வெளியில் காவல் செய்தவர்களால் நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை. கைதிகள் தப்பித்துக் கொண்டனர்.

சிறையினின்றும் வெளிப்பட்ட அவர்களுக்குப் புகலிடம் சரியானதாக இல்லை. பாளையங்கோட்டையில் தங்கினாலும் ஆபத்து. ஒருகால் அவர்கள் பிடிபட்டால், முன்பு இருந்ததைவிட அதிகமான காவலும் நிர்ப்பந்தங்களும் ஏற்பட்டுவிடும். தங்களுக்குப் பழக்கமான, சொந்த ஊரான, பாஞ்சாலங் குறிச்சி அல்லது வல்லநாட்டுச் சிமையை அடைந்துவிட்டால் எந்த விதமான நிலைமையை

யும் சமாளித்துக் கொள்ளலாம் என்று நினைத்தார்கள். அதனால் அவர்கள் நேராகப் பாஞ்சாலங் குறிச்சியை நோக்கிப் புறப்பட்டார்கள். இரவு, நல்ல இருட்டு; ஒன்றையும் லட்சியம் செய்யாமல், ஓட்டமும் நடையுமாக முப்பது மைல் வழி நடந்து பொழுது விடிவதற்குள் ஊரை அடைந்துவிட்டார்கள்.

மறுநாள் காலையில் பாளையக்காரர்கள் தங்களுக்கு வேண்டியவர்களுள் முக்கியமானவர்களை ஓட்டப்பிடாரத்துக்கு வரவழைத்துக் கூட்டம் கூட்டி மேற்கொண்டு செய்யவேண்டியது என்ன என்பதைப்பற்றி ஆலோசித்தார்கள். அழிந்துபோன கோட்டையை உடனே கட்டி விடுவதென்றும், கும்பினியார் போருக்கு வந்தால் எதிர்த்து நின்று சண்டைபோடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. சின்னப்பேந்திரன் என்பவர் கோட்டையைக் கட்டுவதற்கு வேண்டிய பொருள் உதவி செய்வதாக வாக்களித்தார். அவ்விதமே வேலை துவக்கப்பட்டது.

அவ்விதம் அவர்கள் அவசரப்பட்டு ஓடாமல், பாளையங்கோட்டையைத் தாக்கியிருந்தால் பின் நிகழ்ச்சி வேறு விதமாகப் போயிருக்கக்கூடும் என்று அக்காலத்திலிருந்த ராணுவ அதிகாரி அபிப்பிராயப்படுகிறார்.

பாளையக்காரர்களுடன் போர் புரிந்து கறுத்தையாவைப் பிடித்துத் தூக்கிலிட்ட மேஜர் பானர்மன் 1800-ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ஐரோப்பாவுக்குத் திரும்பி விட்டார். அவருக்குப் பின் வந்த மேஜர் ராபர்ட் டூரிங்கும் வேறு உத்தியோகமேற்றுப் போய்விட்டார். அதற்குப் பிறகு மேஜர் காலின் மெக்காலே ராணுவ அதிகாரியாக வந்து சேர்ந்தார். அவருக்குத் திருவாங்கூர் ரெஸிடெண்டு உத்தியோகமும் கூட உண்டு. (இவர் பெயர் நாட்டுச் சரித்திரங்களில் மக்காளி துரை என்று வழங்கப்படுகின்

றது). கலகம் செய்யும் பாளையக்காரர்களைச் சிறையிலிட்டு அவர்களைச் சேர்ந்தவர்களையும் நசுக்கிக் கலகத்தை அடக்கி விட்டதால் நாட்டில் அமைதி ஏற்பட்டதாகவே விளங்கியது. அதனால் பட்டாளத்தின் பெரும்பகுதி திருச்சிராப்பள்ளி திரும்பிவிட்டது. மற்றப் பகுதியும் சிறு சிறு பாகங்களாக வகுக்கப்பட்டு, சங்கரநயினர் கோயிலில் ஒன்று, கயத்தாற்றில் மற்றொன்று, பாளையங்கோட்டையில் மூன்றாவது என வைக்கப்பட்டிருந்தன.

அந்தச் சமயத்தில் பாளையங்கோட்டையில் இருந்த பட்டாளத்தில் ஐரோப்பியர்கள் ஆணும் பெண்ணுமாக இருபது பேர்களே இருந்தார்கள். அவர்கள் அன்றைத் தினம் மேஜர் மெக்காலே ஜாகையில் நடந்த விருந்துக்குப் போயிருந்தார்கள். விருந்து நடக்கும் சமயத்தில்தான் பாளையக்காரர்கள் தப்பித்துக்கொண்டது.

பாளையங்கோட்டையிலிருந்து பாஞ்சாலங் குறிச்சிக்கு அவர்கள் சென்ற வழியிலிருந்து ஒருமைல் தூரத்தில் தான் மெக்காலேயின் ஜாகை இருந்தது. அவர்கள் ஓடுவதற்குப் பதிலாக அந்த ஜாகையை நோக்கிச் சென்றிருந்தால், பாளையங்கோட்டையிலிருந்த ஐரோப்பியர்கள் யாவரும் பிடிபட்டிருப்பார்கள். அந்த விருந்துக்குப் பட்டாளத்தின் முக்கிய உத்தியோகஸ்தர்களும் வேறு பல பிரமுகர்களும் வந்திருந்தார்கள். ஒருவரிடமும் ஆயுதம் இல்லை. அந்த இடத்திற்கும் ஒரே ஒரு காவல்தான் உண்டு. பாஞ்சாலங் குறிச்சியாரோ நூற்றுக் கணக்காக இருந்தார்கள். அதனால் அவர்களால் பாஞ்சாலங் குறிச்சியாரை எதிர்த்திருக்க முடியாது. எதிர்த்திருந்தாலும் பிரயோஜனம் இருந்திருக்காது.

உண்மை நிலையை அறிந்துகொள்ளாமல் கும்பினியார் அவர்களைத் தேடிப் பிடிக்க ஆட்களைச் சேர்த்துச் சிறு சிறு

பிரிவுகளாக அங்கங்கே அனுப்பினார்கள். அவர்கள் காரியம் சித்தி பெறாமல் திரும்பினர்; அது நல்லதாகவே போயிற்று. பாளையங்கோட்டையில் இருந்த சிப்பாய்கள் எல்லோரும் சேர்ந்து ஓடியவர்களை வழிமறித்து நிறுத்தப் பிரயாசை எடுத்திருந்தாலும் அது முடிந்திருக்காது என்று கும்பினி அதிகாரி ஒருவர் பிற்காலத்தில் தெரிவித்திருக்கிறார்.

# அத்தியாயம் 18

## மெக்காலே படையெடுப்பு

*'வீர நகரெனும் பாஞ்சைப் பதிதனை*
*வெல்லலாம் என்று விரைந் தடைந்தார்.'*

—கும்மி

---

தப்பி ஓடிய கைதிகளைப் பிடிக்கத் திருநெல்வேலி ஸேனாநாயகர் மேஜர் மெக்காலே துரை வேண்டிய முஸ்தீப்புகளை உடனே செய்தார். பாளையங்கோட்டையிலிருந்த பட்டாளத்தில் மிகுதிப் பேரை உடனே கயத்தாற்றுக்கு அனுப்பினார். சிவலப்பேரியிலிருந்த நவாபு குதிரைப் படையைச் சேர்ந்தவர்களும், சங்கரநயினார் கோயிலில் இருந்த கும்பினிப் பட்டாளத்தாரும் கயத்தாற்றுக்குப் புறப்பட்டனர். நவாபின் குதிரைப் படையினருக்குச் சரியான குதிரைகள் இல்லை. வெள்ளைக்காரர்கள் வைத்திருந்த குதிரைகள் எல்லாம் திரட்டப்பட்டு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன.

இங்ஙனம் பிப்ரவரி மாதம் 6-ஆம் தேதி எல்லோரும் கயத்தாற்றை அடைந்தனர். அப்படித் திரட்டப்பட்ட படையும் அதிகமாக இல்லை. வங்காள பீரங்கிப் படையின் ஒரு பகுதியும், தொள்ளாயிரம் துப்பாக்கி வீரர்களும், இரண்டு இரண்டு-பவுண்டர்களும், இரண்டு நான்கு-பவுண்டர்களுமான நான்கு பீரங்கிகளுமேயாம். துப்பாக்கி வீரர்கள் யாவரும் இந்நாட்டு மக்களே.

கயத்தாற்றிலிருந்து அவர்கள் மறுநாள் புறப்பட்டு எட்டாம் தேதி காலையில் பதினெட்டு மைல்களுக்கு அப்

பால் உள்ள குலையநல்லூரை (குலைய நேரியை) அடைந்தனர். அங்கே பாடி இறங்கிச் சதுரமான ஒரு சிறிய கூடாரத்தில் தங்கினார்கள். பட்டாளத்தார் அனைவரும் பசியைப் போக்கிக்கொள்ள உணவு தயாரித்துச் சாப்பிடப் போகும் நேரத்தில் எங்கிருந்தோ பாளையக்காரர் படை திடீரென்று எதிர்புறத்திலிருந்த ஒரு மேட்டின்மீது தென்பட்டது. அவர்கள் ஆயிரம் அல்லது ஆயிரத்து இருநூறு பேர்களுக்கு மேல் இருந்தார்கள். வலது இடது சிறகுகளையும் கவ்விக் கும்பினிப் படையை மூன்று புறங்களிலும் தாக்கினார்கள்.

கும்பினிப் படை பாடி இறங்கியிருந்த இடத்திற்குப் பின்னால் ஒரு மைல் தூரத்தில் இருந்தது அந்தக் குக்கிராமம். படையினர் முதல் நாளே அந்தக் கிராமத்தைக் கைப்பற்றியிருந்தனர். எனினும் பாளையப்பட்டாரில் ஒரு பகுதியினர், மறைவாகச் சென்று கிராமத்தை அடைந்து அதையும் தாக்கினார்கள். கும்பினிப் படையில் நூதனமாகச் சேர்ந்தவர்களே அதிகமாக இருந்தாலும் அவர்கள் அனைவரும் தைரியமாகவே போர் புரிந்தனர். ஆனால் நவாபின் ஆட்களோ ஒன்றும் செய்யவில்லை. கும்பினிப் படைத் தலைவர்கள், 'அவர்களுக்குக் கொண்டுபோய்க் குதிரைகளைக் கொடுத்தோமே!' என்று வருத்தப்படும் நிலையில் கொண்டுவந்து விட்டார்கள்.

இருதரத்தாருக்கும் சுமார் ஒரு மணி நேரம் சண்டை நடந்தது. பாளையக்காரர்கள் தங்கள் பக்கம் விழுந்த நாற்பது பேரையும் போர்க்களத்திலேயே போட்டுவிட்டுக் காயப்பட்டோரைத் தூக்கிக்கொண்டு போய்விட்டனர். கும்பினிப் பக்கத்தில் இறந்தவர் அறுவரேயாவர். எதிரிகளில் குறி பார்த்துச் சுடக்கூடியவர் அதிகம் இல்லை என்பது இதனால் நன்கு விளங்கியது.

அதற்கு அப்பால் மாலைப் பொழுதில் ஒன்றும் நடைபெறவில்லை. சண்டை ஓய்ந்துவிட்டதென்று கும்பினிப் பட்டாளம் படுத்துக்கொண்டது. இரவு ஒன்பது மணிக்கு மறுபடியும் திடீரென்று அந்தக் கிராமத்தை நோக்கி வெடி மாரி பொழிந்தது. அது சந்தடியையும் குழப்பத்தையும் உண்டுபண்ணியதைத் தவிர வேறு ஒன்றையும் சாதிக்கவில்லை. குலையநேரியைப் பாளையக்காரராற் கைக்கொள்ள முடியவில்லை. கும்பினியார் அங்குள்ள காவலைப் பகற்பொழுதிலேயே பலப்படுத்தியிருந்தனர். இதன் விளைவாகக் கும்பினிப் படைக்கு அன்றிரவு முழுவதும் தூக்கமே இல்லாமற் போய்விட்டது. கண்கொட்டாமல் காவல் புரிந்து வந்தனர். மறுநாள் காலையில் கும்பினிச் சைனியம் புறப்பட்டு ஒன்பது மணிக்குப் பாஞ்சாலங் குறிச்சிக்குப் பக்கத்தில் உள்ள ஒரு மைதானத்தை அடைந்தது. அங்கு அவர்கள் கண்ட காட்சி அவர்களைப் பிரமிக்கச் செய்துவிட்டது. முன்பு தரைமட்டம் ஆக்கப்பட்ட சுவர்கள் மறுபடியும் புத்துயிர் பெற்று எழுந்து நின்றன. மந்திரக் கோலால் நிர்மாணம் செய்யப்பட்டதைப் போல் ஒரு பெருத்த கோட்டை கொத்தளங்களுடன் விளங்கியது. அதனை ஆயிரத்தைந்நூறு வீரர்கள் காத்து நின்றனர்.

அந்தக் கோட்டை மிகுந்த வேகத்தில் கட்டப்பட்டது. என்றைத் தினம் பாளையக்காரர்கள் சிறையிலிருந்து தப்பித்துக்கொள்வது என்பது நிச்சயமானதோ அன்றைத் தினமே கட்டிடவேலை தொடங்கப்பட்டது போலும். ஆட்கள் இரவு பகலாக வேலை செய்தார்கள். திருநெல்வேலிக்குத் தென்புறத்திலிருந்து அந்தக் கோட்டை நிர்மாண வேலைக்கென்று இரண்டாயிரம் பேர்களுக்கு மேல் ஆட்கள் வந்தார்கள் என்று கூறுவர். முன்பு கட்டப்பட்டிருந்தவற்றைக் காட்டிலும் இப்பொழுது கட்டியது மிகவும்

வலுவுள்ளதாகும். கோட்டைக்கு வேண்டிய மண் முழுதும் பனஞ்சாறு கலந்து உபயோகிக்கப்பட்டதாம். கர்ணபரம்பரையாகக் கோட்டை இரண்டு வாரங்களுக்குள் கட்டி முடிக்கப் பெற்றது என்று கூறுகிறார்கள்.

கோட்டை இவ்விதம் எழுந்து நிற்கும் என்பதைக் கும்பினியார் எதிர்பார்க்கவில்லை. கோட்டை மதில்களை இடித்துத் தள்ளக்கூடிய முட்டுப் பீரங்கிகள் அவர்களிடம் இல்லை. கோட்டை கட்டியாகிவிட்டது என்பதை அறிந்திருந்தாலும், அல்லது இவ்விதம் நடக்கக்கூடும் என்பதை எதிர்பார்த்திருந்தாலும் அவர்கள் அவற்றைக் கொணர்ந்திருப்பர்.

கோட்டையைத் தாக்கி அழிக்கும் வேலையை நடத்தும் படைக்குத் தலைமை பூணக்கூடிய ஐரோப்பிய உத்தியோகஸ்தர் எவரும் அவ்விடம் இல்லை. இந்நாட்டு மக்களுள் ஒருவருக்கு அந்த வேலையைக் கொடுத்தால் அவர் அதனைச் செவ்வனே செய்து முடிப்பாரோ என்ற ஐயமும் உண்டாயிற்று.

வலிமை மிக்க அக்கோட்டையைப் பட்டப்பகலில், வெளிச்சத்தில் தாக்கிப் பிடிக்கச் செல்வது பைத்தியக்காரத்தனம் என்பதை உணர்ந்து பொழுது போவதை நோக்கிக் காத்திருக்கலாயினர் கும்பினியார். ஓட்டப்பிடாரத்துக்குப் பக்கத்தில், கோட்டையிலிருந்து ஒரு மைல் தூரத்தில், ஓர் இடத்தைப் பொறுக்கி அதில் கூடாரம் அடித்தார்கள். அந்த இடத்திற்குத் தென்புறத்தில் ஓர் ஏரிக் கரை உயர்ந்து நின்று மறைவு அளித்தது. கீழ்புறத்தில் கிராமமும் நேர் மேற்கே பாஞ்சாலங்குறிச்சியும் இருந்தன.

கும்பினிச் சைனியம் சிறிது இளைப்பாறியது. அதற்கப்பால் பொழுது சாய்ந்து இருட்டும் சமயத்தில், அதனை

இரண்டு பிரிவுகளாகப் பிரித்து, இருபக்கத்தாலும் கோட்டையைத் தாக்கிச் சுவரேறிக் குதித்து உள்ளே சென்று கைப்பற்றுவது என்று படைத்தலைவர்கள் முடிவு செய்தார்கள். ஆனால் அவர்கள் முடிவு செய்தபடி நடைபெறவில்லை. பாளையப்பட்டாரைப்பற்றிய உளவுகளை அறிந்துவரக் கும்பினியார் அனுப்பியிருந்த ஒற்றர்கள் வந்து அவ்விடத்து நிலையை விளக்கினர்.

கோட்டையில் ஐயாயிரம் போர் வீரர்கள் குழுமியிருக்கிறார்கள் என்பதையும், பொழுது சாய்ந்ததும் அவர்கள் கும்பினிச் சைனியத்தைத் தாக்க எண்ணம் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அறிந்தனர். ஆம்; அவர்கள் எதிர்பாராதவை ஒன்றன்பின் ஒன்றாக முளைத்தன. முதலில் தரையோடு தரையாக அழிக்கப்பட்ட கோட்டை மந்திரத்தால் உண்டானது போல ஆறே நாட்களில் தோன்றிவிட்டது. இரண்டாவதாகக் கும்பினியாரின் பீரங்கிகளுக்குப் பயந்து கோட்டைக்குள் ஒளிந்துகொண்டு தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டிய பாளையப்பட்டார் முன்வந்து கும்பினிப் படையைத் தாக்கத் தயாராக இருந்தார்கள்.

பட்டாளம் பாளையங்கோட்டையிலிருந்து பாஞ்சாலங் குறிச்சிக்கு இரண்டு நாட்களில் நடந்து வந்தது. இரவுகளில் தூக்கம் இல்லை. அதனால் அனைவரும் அயர்ந்து சோர்வுற்று இருந்தனர். அன்றை இரவுப் பொழுது முழுவதும் பாளையப்பட்டார் எப்பொழுது தங்களைத் தாக்குவரோ என்ற திகிலுடன் விழித்திருந்து பாதுகாக்கவேண்டும்.

இவற்றை அவர்கள் நன்கு கவனித்து ஆலோசனை செய்து, 'இனி இங்கே தங்கினால் ஆபத்து நேரிடக்கூடும். ஆதலால் திரும்பப் போய்விடுவது உசிதம்' என்று ஏக

மனதாக முடிவு செய்தார்கள். இது படையினர் எல்லோருக்கும் அறிவிக்கப்பட்டது. அவர்கள் ஒன்றுகூடித் தயாராயினர்.

பட்டாளம் ஒரு நீண்ட சதுரமாக அணிவகுக்கப்பட்டது. முன் வரிசையிலும் பின் வரிசையிலும் உள்ள சைனியங்களின் பாதுகாப்பில் யுத்த தளவாடங்கள் வைக்கப்பட்டன. பீரங்கிகள் முன்னும் பின்னும் நிறுத்தப்பட்டன. மூட்டை முடிச்சுக்கள் மத்தியில் உள்ளவர்களிடம் கொடுக்கப்பட்டன. இப்படி யுத்தசன்னத்தராக அவர்கள் அன்றைப் பகல் இரண்டு மணிக்கே புறப்படத் தயாராயினர்.

பட்டாளமும் புறப்பட்டது; கோட்டையை நோக்கி அன்று, பாளையங்கோட்டைக்கு. அவர்கள் கோட்டையைத்தான் தாக்க வருகிறார்களோ என்று பாளையத்தார் எதிர்பார்த்திருந்தார்கள். ஊருக்குப் புறப்படும் பட்டாளம் கோட்டையைத் திரும்பிப் பார்த்தபொழுது அதன் ஒவ்வொரு பாகத்தையும் வீரர்கள் காத்து நிற்பது நன்கு தெரிந்தது. ஆயிரத்தைந்நூறு அல்லது இரண்டாயிரம் போர்வீரர் வேலியைத் தாண்டி வெளியேறி நின்றனர். அவர்களுடைய ஈட்டிகளும் கத்திகளும் சூரிய வெளிச்சத்தில் பளிச்சென்று மின்னல் போலப் பிரகாசித்தன.

ஊருக்குப் போகும் சைனியத்தையும் பாளையப்பட்டார் சும்மா போக விடவில்லை. துரத்திச் சென்று சண்டையிட்டனர். பாதி வழியைக் கடப்பதற்கு முன்பு பாஞ்சாலங்குறிச்சியார் பின்னல் வந்து கும்பினிப் படையைத் தாக்கினர். சைனியம் போர்க்களத்தில் நிற்பது போல வியூகங்களாக அமையவில்லை. அணிவகுத்து நடந்துகொண்டிருந்தது. அதற்கு நல்ல வேளையாகப் பின்னணியில் இரண்டு ஆறு-பவுண்டர் பீரங்கிகள் இருந்

தன. அந்தப் பாகத்தை மேற்பார்வையிட்ட தளபதியும் அனுபவம் வாய்ந்தவர். பாளையப்பட்டார் சமீபத்தில் வரும்வரை அவர் ஒன்றும் செய்யவில்லை. சாதாரணமாகப் பிரயாணம் நடந்துகொண்டிருந்தது. அவர்கள் பக்கத்தில் வந்துவிட்டார்கள் என்று தெரிந்ததும் படையைத் திருப்பிப் பீரங்கிகளிலிருந்தும் துப்பாக்கிகளிலிருந்தும் குண்டுகளைப் பொழிந்தார். இவ்விதம் திடீரென்று குண்டுகளால் தாக்குவார் என்று பாளையத்தார் எதிர் பார்க்கவில்லை. அதனால் அவர்களிடையே சேதம் ஏற்பட்டது; நூறு பேர்களுக்கு மேல் இறந்தனர். இனி அவர்களைத் தாக்குவதில் பிரயோசனமில்லை என்று கண்ட பாளையத்தார் பின்னடைந்தனர்.

கும்பினிப் பட்டாளமோ சிறிதும் தாமதிக்கவில்லை; ஓர் இடத்திலும் நிற்கவில்லை. மேலே சென்றுகொண்டே இருந்தது. இரவுப் பொழுதையும் பயணத்திலேயே செலவழித்தது. ஒரே இருட்டு. சாலையின் இருபுறங்களிலும் அடர்ந்த புதர்களும் பெரிய மரங்களும் போர்வீரர்களை மறைத்து வைத்திருப்பது போலவே அவர்களுக்குத் தோன்றின. நெஞ்சு படபடக்க அவர்கள் ஓட்டமும் நடையுமாகக் கூட்டி மறுநாள், 10-ஆம் தேதி, இரவு ஒன்பது மணிக்குப் பாளையங்கோட்டையை அடைந்தனர்.

# அத்தியாயம் 19

## ஆக்னியூ படையெடுப்பு

' சேனை தலையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி
ஆனை மிதித்த அருஞ்சேறு......'

—தனிப்பாடல்

பாளையங்கோட்டையை அடைந்த கும்பினிப் படையினர் பாஞ்சாலங் குறிச்சியையும் பாளையக்காரர்களையும் எப்படியாவது பிடித்துவிட வேண்டும் என்று தீர்மானித்தனர். அதற்கு வேண்டிய தளவாடங்களையும் சைனியத்தையும் உடனே அனுப்பி வைக்கும்படித் திருச்சிராப்பள்ளிக்கு எழுதினார்கள். அவ்விடத்திலிருந்து தக்க உதவி வரும் வரையில் வேறொன்றும் செய்ய முடியாமல் சும்மா இருந்தனர். அவ்விதம் உதவி வருவதற்குச் சுமார் ஒன்றரை மாத காலம் சென்றது. அது மார்ச்சு மாதம் 21–ஆம் தேதி தான் வந்தது.

அதற்குள்ளாகப் பாளையக்காரர்களும் தங்கள் பக்கத்தைப் பலப்படுத்திக்கொண்டனர். கும்பினிப் படை கோட்டையைப் பிடிக்க முடியாமல் திரும்பிச் சென்றது அவர்களுக்கு அதிகத் துணிச்சலையும் தைரியத்தையும் ஊட்டியது. அவர்கள் தங்கள் பாளையத்திற்கு அப்பால் இருந்த கும்பினிக் கோட்டைகளையும் தங்களுக்கு விரோதமான பாளையக்காரர்களுடைய நாடுகளையும் கைக்கொள்ள முனைந்தனர்.

பாஞ்சாலங் குறிச்சியார் முதலில் தூத்துக்குடியைப் பிடித்துக்கொண்டனர். அக்காலத்தில் அது ஆங்கிலேயர்

வசம் இருந்தது. அதனைக் காக்க ஒரு சிறு சிப்பாய்ப் படையும் அதன் தலைமையில் ஒரு சின்னப் படையதிகாரி யும் இருந்தனர். அந்த அதிகாரி கோட்டையை ஒரு பக் கத்தில் காத்திருக்கும் பொழுது பாளையக்காரர்கள் மற் றொருபுறமாக அதனுள் நுழைந்துவிட்டனர். அவருக்குக் கீழிருந்த உத்தியோகஸ்தன் ஒருவன் பாளையக்காரர் களுக்கு உதவியாக இருந்து கோட்டையைத் திறந்துவிட் டான் என்று கூறுவர். பாஞ்சாலங் குறிச்சியார் கோட் டைக்குள்ளிருந்த சிப்பாய்கள் வைத்திருந்த ஆயுதங்கள் யாவற்றையும் கைக்கொண்டு சிப்பாய்களை விட்டுவிட்ட னர். அவ்வாறே சேனாதிபதியையும் ஒரு படகில் ஏறிப் பக்கத்தில் கும்பினியார் தங்கியிருக்கும் இடத்திற்குச் சென்று பிழைத்துப்போக அனுமதித்தனர்.

அவ்விடத்தில் பாக்கட் (Baggott) என்ற மற்றோர் ஆங்கிலேயர் இருந்தார். பாளையக்காரர்கள் அவரைச் சிறைசெய்து கொண்டுபோயினர். ஆயினும் அவருடைய மனைவி கூடவே வந்து கோட்டையை அடைந்து கட்ட பொம்முவிடம் முறையிட்டுக்கொண்டாள். கட்டபொம்மு வும் மனமிரங்கி அவரை விடுவித்ததுடன் அவருடைய சொத்துக்களையும் திருப்பிக் கொடுத்து விட்டார்.

அக்காலத்தில் தூத்துக்குடியில் டச்சுக்காரர்கள் பலர் இருந்தனர். பாளையப்பட்டார் அவர்களை ஒன்றும் செய்யவில்லை. அவர்கள் டச்சுக்காரர்களைத் தங்களுக்கு உதவி செய்பவர்களாகவே பாவித்தனர் போலும்.

பாஞ்சாலங் குறிச்சியாருக்குக் காடல்குடிப் பாளையக் காரரும் உதவியாக இருந்துவந்தார். அவருடைய கோட்டை அவ்வளவு பலமுள்ளதாக இல்லை. அதனைக் காத்துவந்த சைனியமும் போதாது. இதனை யறிந்த கும் பினியார் பிப்ரவரி மாதக் கடைசியிலே புறப்பட்டுக் காடல்

குடியைப் பிடித்துக்கொள்ளச் சென்றனர். ஆனால் இச் செய்தியை அறிந்த பாஞ்சாலங் குறிச்சியார் அவர்களுக்கு உதவி அனுப்பிவைத்தார். அது கும்பினிப்படை காடல் குடியை அடைவதற்கு முன்னமேயே போய்ச் சேர்ந்துவிட்டது. அதனால் கும்பினியார் அதனைப் பிடிக்க முடியாமல் பின்னடைந்து ஊர் வந்து சேர நேர்ந்தது.

இவ்விதம் சிறு சிறு கோட்டைகளெல்லாம் பாளையக்காரர் வசமாயின. ஸ்ரீவைகுண்டம் கும்பினியார் கையில் இருந்தது. அது சீக்கிரம் பணியவில்லை. அங்கே உள்ள விஷ்ணு கோயிலே கோட்டை போன்ற வலியுள்ளது பாளையக்காரர்கள் கும்பினியாரிடமிருந்து அதனைக் கவர்ந்துகொள்ள நினைந்து முற்றுகையிட்டனர்.

தங்களுக்குப் புனிதமான கோயிலாதலால் அவர்கள் அதனை உடைத்து இடிக்க விரும்பவில்லை போலும். அதனால் அதனைப் பிடித்துக்கொள்ள நான்கு புறங்களிலும் சூழ்ந்துக் கொண்டனர். கோபுரத்தையும்விட உயரமாகப் பக்கத்தில் மணலை மேடாகக் குவித்து வைத்தனர். சுவரேறிக் குதித்து உள்ளே நுழைந்துவிட முயன்றுகொண்டிருக்கும் பொழுது உள்ளிருப்பவர்களுக்கு உதவியாகப் பாளையங்கோட்டையிலிருந்து கும்பினிப் படை ஒன்று வந்தது. அதனை நடத்திவந்தவர் முன்பு பாஞ்சாலங் குறிச்சிக்குச் சென்றிருந்த மேஜர் ஷெப்பர்டு என்பவரே.

வெளியில் இருந்த பாளையக்காரர்கள் கும்பினிப் படை உள்ளே செல்லாதவாறு வழிமறித்துத் தாக்கினர்கள். ஆயினும் அவர்கள் புகுந்து உள்ளே சென்று அவ்விடத்தில் இருந்த மற்றவர்களை அழைத்துக்கொண்டு திரும்பிப் பாளையங்கோட்டையை அடைந்தனர். ஸ்ரீவைகுண்டமும் பாளையக்காரர் வசம் ஆகியது.

திருச்சிராப்பள்ளியிலிருந்து உதவிப் படை புறப்பட்டு வருகிறது என்ற செய்தியைக் கேள்விப்பட்டவுடன் மேஜர்

ஷெப்பர்டு பாளையங்கோட்டையிலிருந்து தம்முடைய சைனியத்துடன் புறப்பட்டுச் சென்று கயத்தாற்றில் பாடி இறங்கியிருந்தார். படை வந்து சேர்ந்தவுடன் எல்லோரும் சேர்ந்து மார்ச் மாதம் 27-ஆம் தேதி பாஞ்சாலங்குறிச்சிக்குப் புறப்பட்டார்கள். அந்தப் படை மூவாயிரம் போர் வீரர்களும் ஒன்பது பீரங்கிகளும் கொண்டது.

முதல் நாள் எட்டு மைல் நடந்து ஓட்டரம்பட்டியை அடைந்தார்கள். மறுநாள் பசுவந்தனைக்குச் சென்றார்கள். அவ்விடத்தில் பாளையக்காரர்கள் ஐந்நூறு அறுநூறுபேர்கள் வந்து கும்பினியாரைத் தாக்கினார்கள். பாளையக்காரர்கள் நெருங்கியவுடன் கும்பினிப் படையினர் தங்கள் பீரங்கியால் குண்டுமாரி பொழிந்தனர். அதைக் கண்ட பாளையக்காரர்கள் பின்னடைவதாகக் காண்பித்தனர். அவசரப்பட்டுத் திரும்பி ஓடாமல் சண்டை போட்டுக் கொண்டே பின்னடைந்தனர்; துப்பாக்கி கொண்டு சுடவேயில்லை. இருதரத்தாருக்கும் இடையில் உள்ள தூரம் குறைந்தவுடன், கும்பினியாரின் குதிரைப் படையை நடத்திச் சென்ற லெப்டினன்ட் கிராண்டு (Lieut. Grant) என்பவர் 'ஸெயிண்டு ஜார்ஜ்' தாக்குங்கள்!' (Saint Gorge, Charge!) என்ற கூச்சலுடன் தாக்க உத்தரவிட்டார். குதிரைப் படையும் தாக்கியது. பாளையக்காரர்கள் பின்னடைவதை விட்டுத் திரும்பி எதிர்த்து நின்றனர். அவர்கள் தங்கள் கையில் வல்லயம் தாங்கி நின்றனர். குதிரைகள் வல்லயத்தைக் கண்டு மிரண்டன. இரண்டு படைகளும் கை கலந்தன ஆனால் அதற்குள் அவர்கள் ஒரு காட்டிற்குச் சமீபம் வந்தனர். பாளையக்காரர்கள் காட்டிற்குள் மறைந்தனர். கும்பினிப் படையில் லெப்டினன்ட் கிராண்டும் மற்றும் பலரும் வீழ்ந்தனர். பாளையக்காரர்களிலும் பலர் மாண்டனர். கரிசல் மணற்காட்டினிடையே கும்பினிப் படை அவதிப்பட்டது.

அதற்கு மறுநாள், அதாவது மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி கும்பினியார் பாஞ்சாலங் குறிச்சியை அடைந்தனர். காலையில் எட்டு மணிக்கு அவர்கள் கோட்டையைச் சூழ்ந்துகொண்டு, சுவர்களை இடிக்க ஏற்பாடு செய்தார்கள். தொள்ளாயிரம் கஜ தூரத்தில் ஒரு கரையைக் கட்டி, இரண்டு பீரங்கிகளை ஏற்றிக் கோட்டையின் வட மேற்குமூலைக் கொத்தளத்தை இடிக்கக் குண்டுகள் போட்டார்கள். உச்சிப் பொழுது வந்தும் ஒன்றும் செய்ய முடியாமையால், கோட்டைக்கு நானூறு கஜ தூரத்திற்குச் சமீபத்தில் வந்து மறுபடியும் குண்டுகள் போட ஆரம்பித்தனர்.

மூன்றரை மணிக்குக் கோட்டைச் சுவர் உடைக்கப் பட்டு விட்டதாகத் தோன்றியதால், பீரங்கிகளை நிறுத்தி விட்டுக்கோட்டைக்குள் நுழைய முன்னேறினர். உடைப்பு நன்றாக ஏற்படவில்லை. அதை உடனே உணரக் கூட வில்லை. கோட்டைக் கொத்தளங்களிலும் அலங்கங்களி லும் வீரர்கள் மறைந்துகொண்டு சுட்டு வந்தனர். கும்பி னிப் படையில் உள்ளவர்கள் ஒருவர் மேல் ஒருவராக வீழ்ந்து மடிந்தனர். வேலியைத் தாண்டி உள் நுழைந்தும், சுவரின் உச்சியை அடைய முடியவில்லை.

சுவர்மீது ஏற முயன்றவர்களில் ஒவ்வொருவரும் ஈட்டியால் குத்துண்டோ துப்பாக்கி ரவையால் அடியுண்டோ கீழே உருண்டு விழுந்தனர். சுவரில் பிடிப்பும் இல்லை. கடைசியாகக் கும்பினிப் படை பின்னடைந்தது. அவர்கள் ஓடிய பொழுது ஒரு பெரிய பீரங்கியை விட்டு விட்டுப் போய்விட்டார்கள். எனினும் அது பின்னுல் கைப் பற்றப்பட்டது. பாளையக்காரர்கள் உடைப்பை நன்கு பாதுகாத்தனர்.

கும்பினியாருக்கு உதவியாக எட்டையபுரம் பாளையக்காரரும் தம்முடைய படையை அனுப்பியிருந்தார். அப்

படை மற்ருெரு புறமாகச் சுவரேறி உள்ளே குதித்துக் கோட்டையைப் பிடித்துவிடலாம் என்று எண்ணி முயன்று பார்த்தது. முடியவில்லே. அந்தப் படைக்கும் பெருத்த சேதம் ஏற்பட்டது.

தாங்கள் படுதோல்வி அடைய நேர்ந்தது கும்பினியாருக்கு ஆச்சரியமாகவே இருந்தது. உடைப்போ நன்கு பாதுகாக்கப்பட்டு வந்தது. கோட்டைக்குள் இருப்பவர்கள் பச்சை மண்ணேப் பிசைந்து தயாராக வைத்துக் காத்துக்கொண்டிருந்தனர்; உடைப்புக் கண்ட இடங்களில் எல்லாம் வைத்து அடைத்து வந்தனர். கோட்டைக்குள் இருப்பவர்கள் எவ்வளவு பேர்கள் என்பது தெரியவில்லே. அவர்கள் தலேகூட வெளியில் தெரியவில்லே. தப்பித் தவறி வெளியில் தெரிந்துவிட்டால் கும்பினியார் சுட்டு வீழ்த்திவந்தனர். அலங்கங்களின் கைபிடிச் சுவர்கள் இடிப்பட்டுப் போயின. ஆயினும் எங்கிருந்தோ வெளியில் உள்ளவர்கள் மீது வல்லயங்கள் பாணம் போல் பாய்ந்து வந்தன.

பின்னடைந்த கும்பினியார் கோட்டைக்குச் சுமார் ஒரு மைலுக்கு அப்பால் சென்று பாடி யிறங்கினர். முன் புறமாக மண்ணேக் குவித்துக் கரையை அமைத்து அதன் மறைவில் பீரங்கிகளேயும் மருந்துகளேயும் சேமித்தனர். அதற்குள் நன்கு இருட்டிவிட்டது. பகலில் அவர்கள் அடைந்த அயர்ச்சியால் இரவுப் பொழுது முழுவதும் நிசப்தம் குடிகொண்டிருந்தது.

மறுநாள் ஏப்ரல் மாதம் முதல் தேதி. பொழுது விடிந்தது. கோட்டையைச் சுற்றி ஒரே பிணக் குவியல். உடைப்பில் இறந்துபட்ட கும்பினிப் போர் வீரர்கள் புதைக்கப்படாமல் கிடந்தனர். கும்பினியார் உடனே கோட்டைக்குள் சமாதானக் கொடியை அனுப்பி இறந்த

வர்களை எடுத்துவந்து அடக்கம் செய்ய அனுமதி கேட்டனர். பாளையக்காரர் அக்கோரிக்கைக்குச் சம்மதித்து விட்டார்; நிபந்தனைகள் ஏதும் விதிக்கவில்லை. அதன் மேல் கும்பினியார் கால் போனவை, குத்துண்டவை, வெட்டுண்டவை போன்ற தங்கள் போர்வீரர் உடலங்களைச் சேர்த்து மரியாதையுடன் அன்று மாலை அடக்கம் செய்தார்கள். பாளையக்காரர்கள் அவர்களைச் சிறிதும் தொந்தரவு செய்யவில்லை. கும்பினியாரும் அவர்களுடைய பெருந்தன்மையை மெச்சிக் கொண்டாடினர்.

கோட்டையைத் தாக்கப் போதிய முஸ்தீப்புகள் இல்லை என்பதைக் கண்ட மேஜர் மறுபடியும் அதனைத் தாக்க எண்ணம் கொள்ளவில்லை. புதிய படைகளை உடனே அனுப்பிவைக்கும்படி மேலதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளுவதென்றும் அவை வரும் வரையில் கோட்டையைச் சூழ்ந்துகொண்டு உள்ளிருப்பவர்களுக்கு ஒன்றும் கிட்டாதபடி செய்து அவர்களைப் பணியவைப்பது என்றும் தீர்மானித்தார்.

அரசாங்கத்தாரும் நிலைமை முற்றி வருவதை உணர்ந்தனர். வலிமை வாய்ந்த பீரங்கிகளையும் வேறு படையையும் உதவினர். அந்தப் படையின் நிர்வாகத்தைக் கர்னல் ஆக்னியூ (Col. Peter Agnew) என்னும் அதிகாரியிடம் ஒப்பித்தனர். அவர் மிகவும் அனுபவம் வாய்ந்தவர். மகா சாமர்த்தியசாலி.

இதற்கிடையில் திருநெல்வேலிக் கலெக்டர் இலங்கைக்குச் சொல்லி அனுப்பி அவ்விடத்தில் இருந்தவர்களுடைய உதவியைக் கோரினர். இலங்கை அரசாங்கமும் ஒரு படையை அனுப்பி உதவியது. அது சென்னையைக் கலக்காமல் கேட்டதாகும். சென்னைச் சர்க்கார் அதனைப் பின்னால் அங்கீகரிக்கவில்லை.

கானல் ஆக்னியூ தலைமை பூண்ட இவ்வுதவிப் படைகள் வந்து சேர மறுபடியும் இரண்டு மாதங்கள் பிடித்தன. இதற்கிடையில் இருதரத்தாருக்கும் தினமும் ஏதாவது சில்லறைச் சண்டைகள் நடந்து கொண்டே யிருந்தன.

கும்பினியார் தங்கள் ஆகாராதிகளைச் சேகரிப்பதற்காகப் பகற்பொழுதில் பக்கத்துக் கிராமங்களுக்குச் செல்லவேண்டி யிருந்தது. அப்போது பாளையக்காரர்களில் சிலர் வெளியே வந்து அவர்களை வழிமறித்துச் சண்டையிட்டும் கொள்ளையடித்தும் செல்வர். பாளையப்பட்டார் பொதுவாகக் கும்பினியாரை இராக் காலங்களில் தான் வந்து தாக்கினர். இச் சிறு சண்டைகளில் இரண்டு கட்சிகளிலும் சேதம் ஏற்பட்டது. பாளையக்காரர்கள் முக்கியமாகத் தளவாடங்களைக் கைப்பற்றுவதில் நோக்கம் கொண்டிருந்தார்களே ஒழியச் சிப்பாய்களைக் கொல்ல எண்ணவில்லை.

காலம் கடுங் கோடை; வெயில் நெருப்பாகக் கொளுத்தியது. இடையிடையே கோடை மழையும் பொழிந்துவந்தது. இவ்விதமாகக் காலமும் கும்பினிப் படையிலிருந்த ஐரோப்பியர்களுக்குக் கஷ்டத்தை விளைவித்துவந்தது. மழை பெய்துவிட்டால், துப்பாக்கி மருந்து சரியாக வேலை செய்யாது. அதுதான் சமயம் என்று பாளையக்காரர்கள் தங்கள் வல்லயங்களுடன் வெளியில் வந்து கும்பினிப் படையைத் தாக்குவர். சுற்றுப்புறங்களில் தனித் தனியாகக் காவல் புரியும் பகுதிகளைத் தாக்கி அவர்களிடம் உள்ள மருந்துகளையும் துப்பாக்கிகளையும் கைப்பற்றிச் செல்வர்.

இச்சிறு சண்டைகளெல்லாம் எவ்வளவு திடீரென வேகமாக ஆரம்பித்தனவோ அவ்வளவு வேகமாகவே அடங்கிவிடும்.

மே மாதம் 21-ஆம் தேதி கர்னல் ஆக்னியூ வந்து படைத் தலைமையை ஏற்றுக்கொண்டார்.

கோட்டைக்கு மேற்குப் புறத்தில் அறுநூறு கஜ தூரத்தில் ஒரு பீரங்கி மேடை எழுப்பினார்கள். அது நாற்பது அடி நீளம், பதினைந்து அடி அகலம், பதினாறு அடி உயரம் உள்ளது. அதனை எழுப்பவொட்டாதபடி பாளையக்காரர்கள் தடுத்துப் பார்த்தார்கள்; முடியவில்லை.

இருபத்துமூன்றும் தேதி காலையில் கோட்டையின் தென்மேற்கு மூலைக் கொத்தளத்தை நோக்கி இரண்டு பீரங்கிகளால் சுட ஆரம்பித்தனர். உச்சிப் பொழுதிற்குள் உடைப்பு ஏற்பட்டுவிட்டது என்று தாக்கப் புறப்படத் தயாராயினர். ஆயினும் மேஜர் ஷெப்பர்டு கூறியதன் மீது அன்றைத் தினம் புறப்பட்டுச் செல்லவில்லை. தாக்குவதை மறுநாள் வரையில் ஒத்திவைத்தனர்.

இரவு முழுவதும் பாளையக்காரர் உடைப்பைப் பழுது பார்க்காமல் இருப்பதற்காகப் பீரங்கிகள் குண்டு போட்டுக்கொண்டே இருந்தன. மறுநாட் காலையில் பீரங்கிகளைக் கொண்டு கொத்தளங்களை இடித்தனர். அந்த வேலை முழுவதும் பகல் ஒரு மணிக்குள் முடிந்தது. அதன்மீது கும்பினிப் படை கோட்டையைப் பிடிக்கப் புறப்பட்டது.

பாளையக்காரர்களும் சும்மா இருக்கவில்லை. பச்சை மரங்களை வெட்டி வழியில் போட்டிருந்தனர். அவற்றின் முட்களைக் கழித்து வாரி இறைத்திருந்தனர். கோட்டையைச் சுற்றியிருந்த வேலிக்கும் கோட்டைச் சுவருக்கும் இடையில் உள்ள இடத்தில் வெகு ஆழமாக அகழி தோண்டினர். நான்கு புறங்களிலும் கும்பினியார் சூழ்ந்து கொண்டு சுட்டு வரும்பொழுது அவர்கள் அந்த வேலைகளை எப்படிச் செய்து முடித்தார்கள் என்பது ஆச்சரியமாகவே இருந்தது. பாளைய வீரர்கள் அந்த அகழிகளில் ஒளிந்து

கொண்டு, உள்ளிருப்பவர்களைச் சுட எட்டிப் பார்க்கும் கும்பினிச் சிப்பாய்களை வல்லயத்தால் குத்திக் கொன்றனர்.

கும்பினியார் வேலி வரையில் கஷ்டமில்லாமல் வந்து விட்டாலும் அதனைத் தாண்டிக் கோட்டைக்குள் நுழைவதற்கு எளிதில் முடியவில்லை. பாளையக்காரர்களும் தைரியமாக எதிர்த்து நின்று போர்புரிந்தனர். எனினும் கடைசியில் முடியாமல் கோட்டையைக் கை விட்டனர்.

# அத்தியாயம் 20

## ஊமைத் துரையின் முடிவு

'கட்டுப்பாடில்லாத வீரம் விளைவிக்கக்கூடிய பயன் முழுவதும் அவன் தோன்றிய இடங்களிலெல்லாம் ஏற்படும் என்பது நிச்சயம்; சிறிதும் சுயநலமில்லாத மகா பரிசுத்தமான தேசாபிமானத்திற்குப் பரிசாக ஏழை ஊமை தூக்குமேடை ஏறவேண்டிய கதி ஏற்பட்டது.'

— கர்னல் வெல்ஷ்

---

1801-ஆம் வருஷம் மேமாதம் 24-ஆம் தேதி பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையைக் கும்பினியாரின் சைனியங்கள் பிடித்துவிட்டன. உள்ளிருந்த பாளையக்காரரும் அவரைச் சேர்ந்தாரும் இனியும் தாமதிப்பதில் பயனில்லை என்பதை உணர்ந்து வெளியேறினர்.

சிவத்தையாவும் ஊமைத் துரையும் வெளியேறியவர்களில் இருந்தார்கள். ஸ்திரீகள், காயம்பட்டவர்கள், மற்றும் ஆயுதமில்லாதவர்கள், சண்டைக்கு லாயக்கற்றவர்கள் ஆகியவர்களைப் பந்தோபஸ்தான இடத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தனர். மறுபடியும் கும்பினிப் படை வந்து தாக்குமென்பதை எதிர்பார்த்துத் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள முற்படவில்லை.

கோட்டையிலிருந்து வெளியேறினவர்களைத் தப்பித்துக்கொள்ள விடவில்லை கும்பினிப் பட்டாளம். குதிரைப் படை ஒன்று அவர்களைத் துரத்திச் சென்று போர் தொடுத்தது. கோட்டைக்கு மூன்று மைல் தூரத்தில் உள்ள ஒரு

சிறு கிராமத்தின் அருகில் இருதரத்தாருக்கும் மறுபடியும் பெரும் போர் மூண்டது. பலர் மாண்டர். அந்தச் சண்டையில் ஊமைத் துரை மிக்க வீரத்துடன் போர் புரிந்தார். எனினும் கடைசியில் படு காயப்பட்டு ரணகளத்தில் விழுந்துவிட்டார். அதற்கப்பால் அவருக்குச் சுயஉணர்வு இல்லாமற் போயிற்று; சுற்றிலும் என்ன நடந்தது என்பதை அறிய முடியவில்லை.

தலைவனை இழந்த படை எவ்வளவு நாழிகை சண்டை செய்யும்? கும்பினிப் பட்டாளமும் விரோதிகளில் பலரை அழித்த வெற்றியால் சந்தோஷம் அடைந்து திரும்பிவிட்டது. ஆனால் அது வெற்றியுடன் திரும்பியும், போருக்குத் தலைமை வகித்திருந்த கும்பினி அதிகாரி கர்னல் ஆக்னியூவுக்கு அமைதி ஏற்படவில்லை. பாளையப்பட்டைச் சார்ந்தவர்களில் முக்கியமானவர்களைப் பிடித்துவிட விரும்பினார் அவர். அவர்களால் பின்னால் தொந்தரவு ஏற்பட முடியாதபடி முடித்துவிட எண்ணம் கொண்டார். அப்படிப்பட்டவர்கள் உயிருடன் இருந்தால் சிறைப்படுத்தவும் இறந்துவிட்டால் அதனை நிச்சயப்படுத்திக் கொள்ளவும் தீர்மானித்தார். அதனால் பாளையக்காரர்களில் முக்கியமானவர்களை உயிருடனோ பிணமாகவோ கொணர்ந்து சேர்ப்பவர்களுக்குத் தக்க சம்மானம் அளிப்பதாக வெளியிட்டார். அவ்விதம் தேடிப் பார்த்துத் தமக்கு உதவியளிக்கும்படி எட்டையபுரத்தாரை வேண்டிக் கொண்டார். அவர்களும் அவ்வாறே புறப்பட்டுப் பல பகுதிகளாகப் பிரிந்து சென்று அன்று பகல் முழுவதும் தேடினார்கள்.

இதற்கிடையில், பக்கத்துக் கிராமத்தில் இருந்த பெண்களில் பலர் போர்க்களத்தில் புகுந்து இறந்து கிடந்த பிணங்களையும், குற்றுயிராய்க் கிடந்தவர்களையும் புரட்டித் தேடிப் பார்த்து வந்தார்கள். போருக்குச் சென்றிருந்த தங்களுடைய புருஷன் பிள்ளை ஆகியவர்களையே அவர்கள்

தேடினர். அவர்கள் போரிலிருந்து தப்பிக்கொண்டிருந்தால் எங்காவது தலை மறைந்திருந்து பிறகு வந்து சேருவார்கள். அல்லாமல் போரில் காயப்பட்டிருந்தால் அவர்களை எடுத்து வந்து சிகிச்சை செய்து பிழைப்பு மூட்டலாம் அல்லவா? இறந்து விட்டாலோ அவர் பிணங்களை நாயும் நரியும் கழுகும் பிடுங்கித் தின்னவிடலாமா? எடுத்து வந்து அடக்கம்செய்ய வேண்டாமா? இத்தகைய காரணங்களைக் கொண்டுதான் அவர்கள் பிணங்களையும் குற்றுயிராகக் கிடந்தவர்களையும் புரட்டிப் பார்த்துத் தேடினார்கள்.

அங்கே கிடந்த குவியல்களின் மத்தியில், தேடிச் சென்ற பெண்களுள் ஒருத்தியின் மகன் கிடந்தான். அவன் இறந்துவிடவில்லை. தாய்க்குத் தன் மகனைக் கண்டவுடன் அழுகை வந்துவிட்டது. அவள் அழுவதைக் கேட்ட மற்றவர்களும் ஓடி வந்தார்கள். வீரன் குற்றுயிராகக் கிடந்தான். அவர்கள் எல்லோரும் சேர்ந்து அவன் உடலை வெளியில் எடுக்க முயன்றார்கள்.

அந்த வீரனுக்குக் கை கால்களை அசைக்கச் சக்தியில்லாமல் இருந்தும், உணர்வு இருந்தது. பக்கத்தில் நடப்பவற்றைக் கவனித்து வந்தான். தனக்குச் சிறிது தூரத்தில் ஊமைத் துரை அடிபட்டுக் கிடப்பதையும் பார்த்தான். தான் ஒருவன் பிழைத்தால் தன் தாய்க்கும் உறவினர்களுக்குமே சந்தோஷம். அவர்களைத் தவிர, தனக்காக அழக்கூடியவர்கள் வேறு இல்லை. ஆனால், பக்கத்தில் கிடக்கும் ஊமைத் துரை பிழைத்தாலோ தங்கள் சீமையே ஆனந்தம் அடையும். பழைய பெருமையை மறுபடியும் நிலைநிறுத்த அவர் முயலுவார். அவர் இறந்துவிட்டாலோ தான் பிழைத்தும் என்ன பயன்? இவ்விதம் பரந்த நோக்கத்துடன் யோசனை செய்தது அவன் உள்ளம்.

தன் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு தாயை நோக்கிப் பேசலுற்றான் : 'அம்மா! என்னைப்பற்றிக் கவ

லப்படாதே, சாமியைக் காப்பாற்று. அவர் அதோ அடி பட்டுக் கிடக்கிறார்!' என்று மூச்சுத் திணறச் சொன்னான். ஊமைத் துரைக்கு உயிர்ப்பிச்சை அளித்துக் காப்பாற்றும் பாக்கியம் தனக்குக் கிட்டுகிற சந்தோஷத்தில் அந்தத் தாய் தன் மகனைப்பற்றிக் கவனிக்கவில்லை. அந்தச் சாமியை, ஊமைத் துரையைத் தேடிப் புறப்பட்டாள்.

அவள் தன் மகன் கட்டளையைச் சிரமேற்கொண்டு தேடினாள். ஊமைத்துரை ரத்த வெள்ளத்தில் குற்றுயிராகக் கிடப்பதைக் கண்டாள். மற்றவர்களுடைய உதவியால் உடனே அவரை எடுத்து வெகு ஜாக்கிரதையாகத் தன் வீட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்த்தாள். அவர்கள் எல்லோரும் சேர்ந்து அவர் காயங்களைக் கழுவித் தங்களுக்குத் தெரிந்த பச்சிலைகளையும் மருந்துகளையும் வைத்துக் கட்டினார்கள்.

அச்சமயத்தில் சண்டையில் தப்பியவர்களைத் தேடி எட்டையபுரத்தார் வருவதை அறிந்தார்கள். அவர்கள் அந்தக் குடிசைக்குச் சமீபத்தில் வரும் சப்தம் அந்தப் பெண்களைத் திடுக்கிடச் செய்தது. பாஞ்சாலங் குறிச்சியாரை அந்த நிலையில் கண்டால் எட்டையபுரத்தார் சும்மா விடுவார்களா? இந்த ஆபத்தினின்றும் தப்பித்துக் கொள்ள வேண்டுமே?

அவர்களுக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. அதுவே ஊமைத்துரையையும், அவர்களையும், மற்றும் பலரையும் காப்பாற்றியது. ஒரு வெள்ளைத் துணியைக் கொணர்ந்து துரையின் உடலை நன்கு போர்த்தினார்கள். உடலின் எந்தப் பாகமும் வெளியில் தெரியாதபடி காலோடு தலை நன்கு மூடினார்கள். எல்லோருமாகச் சுற்றிலும் உட்கார்ந்துகொண்டு ஒப்பாரி வைத்துப் பலாக்கணம் பாடி அழ ஆரம்பித்து விட்டார்கள்.

எதிரிகளைத் தேடி வந்த எட்டையபுரத்தார் நெருங்கி வந்து விஷயம் என்னவென்பதை விசாரித்தார்கள். அந்தப் பெண்கள் சொன்ன பதில் அவர்களைத் திடுக்கிடச் செய்தது. அந்த வீட்டுப் பிள்ளை ஒன்று அப்பொழுதுதான் வைசூரி கண்டு இறந்து விட்டது என்பதுதான் அவர்கள் தெரிவித்தது. அதற்குப் பிறகு ஏன் எட்டையபுரத்தார் அங்கே நிற்கிறார்கள்? திரும்பிக்கூடப் பாராமல் ஓட்டம் எடுத்தனர். அந்தப் பெண்கள் கூறியது உண்மையா என்பதைக்கூட அவர்கள் நிச்சயம் செய்துகொள்ளவில்லை.

ஊமைத் துரையும் அவ்விடம் அதிக நாள் தங்கவில்லை. தம் உடலை ஒருவாறு தேற்றிக்கொண்டு மற்றவர்களுடன் சேர்ந்துகொள்ள வடக்கு நோக்கிப் புறப்பட்டார்.

கும்பினியாருக்கு மேலே நடக்கவேண்டியதைப் பற்றிய கவலை உண்டாயிற்று. 'பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையைப் பிடித்தாகிவிட்டது. ஆயினும், பாளையக்காரர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும் தப்பி ஓடி விட்டார்கள். அவர்களைப் பிடிக்கவில்லை. அஞ்சா நெஞ்சம் படைத்த அவர்கள் வெளியில் உள்ள வரையில் நாட்டில் அமைதியை நிலைநிறுத்த முடியாது. எப்பொழுதும் அவர்களால் தொல்லைகள் விளைந்து கொண்டே இருக்கும்' என்று எண்ணினர்.

பாஞ்சாலங் குறிச்சியை விடுத்த பாளையக்காரர்கள் நேராகச் சிவகங்கைக்குச் சென்றார்கள். அந்தக் காலத்தில் தென்னாடு இருந்த நிலையில் அவர்களுக்கு அது ஒன்றுதான் புகலிடமாக இருந்தது. திருநெல்வேலிச் சீமையில் உள்ள பாளையங்களில் ஒன்றும் அவர்களை ஏற்றுக்கொள்ள கூடிய ஸ்திதியில் இல்லை. புதுக்கோட்டை அரசரும் கும்பினியாருக்கு வேண்டியவர். அங்கேதான் அவர்களுடைய தலைவர் கறுத்தையா பிடிபட்டது. புதுக்கோட்டை மன்னரே அவ

ரைப் பிடித்துக் கும்பினியாரிடம் ஒப்படைத்தவர். அவ்வாறே இவர்களும் அங்கே போனால் எங்கே தங்களையும் பிடித்துக் கொடுத்துவிடுவாரோ என்று பயப்பட்டார்கள் போலும்.

ராமநாதபுரத்தைப் பற்றி எண்ணவே வேண்டியதில்லை. கும்பினியாரின் பிரதிநிதி அவ்விடத்தில் தான் தங்கி இருந்தார். அந்த ஊரில் கும்பினியாருக்குச் செல்வாக்கு அதிகம். தவிர, அக்காலத்தில் ராமநாதபுரம் சேதுபதிகள் வசத்தில் இல்லை. கும்பினியாரே நேரில் மேற்பார்வையிட்டு வந்தனர். இதனை நாம் முன்னமேயே கூறியிருக்கிறோம். 1795-ஆம் ஆண்டில் கும்பினியாரால் நீக்கப்பட்ட முத்துராமலிங்கத் தேவருக்குப் பின் பட்டத்தை அடையக் கூடியவர் என்று முடிவு செய்யப்பட்ட ராணி மங்களேசுவரி நாச்சியார் 1803–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம்தான் ஸம்ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டார். இங்ஙனமாகக் கும்பினியார் ஆதிக்கத்தில் இருந்து வந்த ராமநாதபுரத்துக்கும் போக முடியாது.

எஞ்சி நின்றது சிவகங்கை ஒன்றுதான். அதுதான் கொஞ்சமாவது எதிர்த்து நிற்கும் சக்தி வாய்ந்ததாக இருந்தது. அந்தக் காலத்தில் சிவகங்கை பெரிய மருது, சின்ன மருது என்று கூறப்படும் இரண்டு சகோதரர்களான மருத பாண்டியர் ஆதிக்கியத்தில் இருந்து வந்தது. அவர்களுக்கும் கும்பினியாருக்கும் நட்பு இல்லை. மருது சகோதரர்கள் சிவகங்கை ராஜபரம்பரையைச் சேர்ந்தவர்களல்லர்; சேர்வைக்காரர்கள். அவர்கள் நடுவில் நாட்டைக் கைக்கொண்டவர்கள். கும்பினியார் அவர்களுடைய பாத்தியதையை ஒப்புக் கொள்ளவில்லை. பாஞ்சாலங் குறிச்சியாருக்கும் மருது சகோதரர்கள் ஆதிமுதல் உதவி செய்து வந்திருக்கிறார்கள். அதனாலேதான் பாஞ்சாலங் குறிச்சியார் சிவகங்கையை நோக்கிப் புறப்பட்டார்கள்.

மருது சகோதரர்களிடத்திலும் பெரிய படை இருந்தது. போர்த் தொழிலையே மேற்கொண்ட மறவர்களால் ஆகியது. பாளையக்காரர்களையும் சேர்த்து மொத்தம் அவர்களிடம் இருபதினாயிரம் போர்வீரர்களாவது இருந்திருப்பர் என்று கும்பினியார் கருதினார்கள்.

இங்ஙனமாகப் போர்க்களம் திருநெல்வேலிச் சீமையை விட்டு மறவர் நாட்டுக்கு மாறியது. பாஞ்சாலங் குறிச்சி பிடிபட்ட ஐந்தாம் நாள், அதாவது மே மாதம் 28-ஆம் தேதி பாளையக்காரர்கள் கமுதியை அடைந்தனர். அங்கிருந்து அவர்கள் மறவர் நாட்டில் காளையார் கோவில், சிறுவயல் முதலிய பல இடங்களுக்குச் சென்றனர். கும்பினிப் படையும் அவர்களைப் பின் தொடர்ந்தது.

பாஞ்சாலங் குறிச்சியாரை இரண்டு கைகளாலும் வரவேற்றுப் போரை மருது சகோதரர்களே முன்னின்று நடத்தினர். அந்தச் சண்டையைப் பாஞ்சாலங் குறிச்சிப் போர் என்று சொல்வது அவ்வளவு பொருத்தம் அன்று. மருது சகோதரர்கள் நடத்திய போர் என்றுதான் சொல்ல வேண்டும். ஆதலின் அதனை நாம் இங்கே விவரமாகக் கூறவில்லை.

1801-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் முதல் தேதி கும்பினியார் காளையார் கோவிலைக் கைப்பற்றினர். அதிலிருந்து இந்தச் சண்டையின் வீரியம் குறைந்தது. மருது சகோதரர்களும் பாஞ்சாலங் குறிச்சியாரும், தங்கள் சைனியங்களைக் கலைத்துவிட்டுப் பொறுக்காக இருநூறு பேர்களுடன் பக்கத்துக் காட்டில் ஒளிந்துகொண்டார்கள். எனினும் அதிக நாள் அவர்கள் அங்கே தங்க முடியவில்லை. கும்பினியார் நாலு பக்கங்களிலும் ஆட்களை அனுப்பி அவர்களைத் தேடினார்கள். கடைசியாகச் சில தினங்களில் அவர்கள் பிடிபட்டார்கள். அப்பால் அவர்களால் தப்பி

ஓட முடியவில்லை. கும்பினியாரும் அவர்கள் மீது இரக்கம் கொள்ளவில்லை.

மருது சகோதரர்கள் அவர்கள் ஆண்ட நாட்டிலேயே திருப்பத்தூர்க் கோட்டையில் தூக்கில் இடப்பட்டார்கள். சிவத்தையாவும் அவர் தம்பி ஊமைத்துரையும் பாஞ்சாலங் குறிச்சிக்குக் கொண்டுவரப்பட்டார்கள். அங்கே கோட்டைக்கு வெளியில் இரண்டாவது தடவையாக உண்டாகிய கோட்டையை இடிப்பதற்கான பீரங்கிப் படையை நிறுத்தக், கும்பினியார் ஏற்படுத்திய மேட்டின் மீது இவ்விருவரையும் தூக்கிலிட்டார்கள். அந்த மேடு இன்றைக்கும் இருக்கின்றது. சின்ன மருது குமாரன் துரைசாமி, தளவாய்ப் பிள்ளை, மற்றுமுள்ள பரிவாரத்தார் ஆகிய எழுபது பேர்கள் தீவாந்தர சிட்சை விதிக்கப் பெற்றுச் சிங்கப்பூருக்கு அப்பால் உள்ள பிரின்ஸ் ஆப் வேல்ஸ் தீவுக்குக் கொண்டுபோகப் பட்டார்கள்.

## அத்தியாயம் 21

# வழிபாடு

' தென்னாட்டுப் பாளையக்காரர்கள் முரணுடைய வீர வகுப்பினர் ; போர்ப் பழக்கமும் சுதந்தரமும் உள்ளவர்கள் ; இவர்கள் சமீபத்தில்தான் அடக்கப்பட்டார்கள் ; இவர்கள் அனைவரிலும் பாஞ்சாலங் குறிச்சியாரே ஈடும் எடுப்பும் இல்லாத வீரர்கள். '

—கர்னல் வெல்ஷ்.

---

இனி நாம் கூறவேண்டுவது அதிகம் இல்லை. மே மாதம் 24-ம் தேதி கும்பினியார் பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையைப் பிடித்துக் கொண்டவுடன், அதனை முன்போலவே இடித்துத் தரை மட்டம் ஆக்கிவிட்டனர். அது நிமிர்ந்து நிற்கும்வரையில் விரோதிகள் உள்ளே ஒளிந்து கொண்டு இடையூறு விளைக்க இடம் இருந்தது. அதனால் அதை முழுவதும் இடித்துத் தள்ளினர். அஸ்திவாரங்கள் பாக்கி இருந்தாலும், ஒருகால் அது முன்போலவே மறுபடியும் முளைத்துவிடுமோ என்றெண்ணி வேருடன் அழித்தனர் என்றே கூறவேண்டும்.

பின்னால் ஒரு காலத்தில் அந்த இடத்தில் யாராவது குடியேறி விடுவரோ என்று நினைத்து அதனையும் தடுத்துவிட முற்பட்டனர் கும்பினியார்; அந்த இடத்தை உழுது உப்பையும் காட்டாமணக்கு விதைகளையும் வாரி இறைத்தனர். கொட்டைச் செடிகள் அங்கங்கே ஒன்றிரண்டு முளைத்து மடிந்தன.

இந்த மாதிரியான சமயங்களில் அந்த இடத்திற்கு ஓர் இழிவை உண்டாக்கக் கழுதைகளைக் கட்டி உழுவது

வழக்கம். கும்பினியார் எப்படிச் செய்தனர் என்ற விவரம் தஸ்தவேஜிகளில் காணப்படவில்லை.

பாஞ்சாலங் குறிச்சி என்ற பெயரையே சர்க்கார் தங்கள் கணக்குகளினின்றும் எடுத்துவிட்டார்கள். தேசப் படங்களில் அந்த ஊரின் பெயர் இப்பொழுது காணப் படாது.

கலகத்துக்கு உடந்தையாக இருந்த மற்றவர்களையும் சல்லடை போட்டுச் சலித்துத் தேடிப் பிடித்துவிட்டனர் கும்பினியார். பாஞ்சாலங் குறிச்சியாருக்கு வலக்கையாக இருந்த சிவத்தையா நாயக்கன் என்பானை ஸ்ரீவில்லிபுத்தூருக் கருகில் பிடித்தார்கள். குலசேகரப்பட்டினம் மூப்பனும் பிடிபட்டான். தளவாய்ப் பிள்ளை என்பவருக்கு நான்குநேரிப் பக்கத்து மறவர்கள் புகலிடம் அளித்து வந்தனர். அந்தப் பிள்ளையையும் பிடித்து விட்டார்கள். இவர்கள் யாவரும் நாம் முன்னமே கூறியபடி, சிவகங்கை மருத பாண்டியருடைய குடும்பத்தாருடன், தீவாந்தர சிட்சை விதிக்கப்பட்டார்கள்.

கோட்டையிலிருந்த மரங்களையும் கைப்பற்றிய நகை முதலியவற்றையும் ஏலம் போட்டுக் கிடைத்த தொகையைப் பட்டாளத்தார் பங்கிட்டுக்கொண்டார்கள்.

கும்பினியார் பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக்காரரைச் சார்ந்தவர்களைத் தேடித் திரியும்பொழுது பலர் தலை மறைந்தனர். சிலர் தங்கள் உறவு முறையை மறைத்துச் சம்பந்தம் இல்லாதவர்கள் என்று எழுதிக் கொடுத்தனர். இது சம்பந்தமாகக் கூறப்படும் கர்ண பரம்பரைக் கதைகளுள் பின் வருவதும் ஒன்று:

கோட்டையிலிருந்து வெளியேறியவர்களில் கர்ப்ப ஸ்திரீ ஒருத்தியும் இருந்தாள். அவள் இடுப்பில் ஒரு குழந்தை, கைகளில் இரண்டு குழந்தைகள். தலையில் ஒரு

கூடை ஆகிய கோலத்துடன் புறப்பட்டாள். நல்ல துணி மணிகளின்றிச் சாதாரணமாக அந்தப் பக்கத்தில் வசிக்கும் மக்களுள் ஒருத்தியாகவே காணப்பட்டாள். அவள் குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காகப் பக்கத்து கிராமம் ஏதாவது ஒன்றை அடைந்து கைப்பாடுபட்டுப் பிழைக்கலாம் என்றே சென்ருள்.

அவள் தன் குழந்தைகளுடன் செக்காரக்குடி என்னும் இடத்தை அடைந்து அங்கே ஒருவர் வீட்டில் தங்கினுள். அரண்மனையில் சேவகம் செய்தும் பழக்கப் பட்டும் உள்ளவர் பலர் அந்த ஊரில் வசித்து வந்தார்கள். அவர்கள் அந்தப் பெண்மணியைப் போற்றி வந்தார்கள்.

அரண்மனையார் நல்ல ஸ்திதியில் இருந்த காலத்தில் அவர்களுக்குப் பசுமாடுகள் பல இருந்தன. அவற்றைப் பால் கொடுக்கும் வரையில் வைத்துக்கொண்டிருந்து கறவை மறந்துப்போனவுடன் அடிமைகளிடம் ஒப்படைப்பது வழக்கம். அடிமைகள் அவற்றைப் பாதுகாத்துக் கன்று போட்டவுடன் மறுபடியும் அரண்மனைக்குக் கொணர்ந்து விடுவர். அப்படிப் பசுக்களைப் பாதுகாத்து வந்த அடிமை ஒருவன் செக்காரக்குடிக்குப் பக்கத்தில் இருந்தான். அவனிடமிருந்த பசுக்களில் ஒன்று கன்று போட்டிருந்தது. அந்தச் சமயத்தில் கும்பினியார் கோட்டையை முற்றுகையிட்டிருந்ததால், அவனுல் பசுவை அரண்மனைக்குக் கொணர்ந்துவிட முடியவில்லை. அவனே வைத்திருந்தான். அரண்மனையைச் சேர்ந்த பெண்மணி ஒருத்தி செக்காரக்குடியில் வாழ்ந்துவரும் செய்தி அவனுக்கு எட்டியவுடன், அவன் கன்றுடன் பசுவை ஓட்டிக் கொண்டு செக்காரக்குடி வந்தான். அவனுடன் அவன் மனைவியும் வந்திருந்தாள். அவ்விருவரும் பசுவை அரண்மனை அம்மாளிடம் கொண்டுபோய் விட்டார்கள்.

அந்த அம்மாள் ஒன்றும் தெரியாதவள்போல் பாவித்துப் பசுவைக் கண்டு ஆச்சரியப்பட்டாள். பாஞ்சாலங்குறிச்சியாருடைய பசு தனக்கு வேண்டாம் என்று உதறித் தள்ளினாள். அதைத் தான் வைத்துக்கொண்டால், கும்பினியார் எங்கே பின்னால் அந்த அடையாளத்தைக் கொண்டு தன்னைக் கண்டுபிடித்து விடுவார்களோ என்று பயப்பட்டாள் போலும்.

வேலையாள் விடுபவனாக இல்லை. 'பசுவை உடனே கொண்டுவந்து விடவில்லை என்று அம்மாள் கோபித்துக் கொண்டுவிட்டாள் போலும்' என நினைத்து, அவன் மனைவி அம்மாளைப் பெரிதும் வேண்டிக்கொண்டாள். எவ்வளவு சொல்லியும் போகாததால் அம்மாளுக்குக் கோபம் பொறுக்காமல் வந்தது. அதனால் அண்டையிலிருந்த துடைப்பத்தை எடுத்து வேலையாள் மனைவியை அடித்தாள். அடி முகத்தில் பலமாகப் பட்டதால், இரத்தம் பீறிட்டுக்கொண்டு வந்தது. வேலைக்காரி 'ஓ' வென்று அழுதுகொண்டு தெருவில் வந்து அங்கிருந்தவர்களிடம் 'அரண்மனையார் அடித்துவிட்டார்' என்று முறையிட்டுக்கொண்டிருந்தாள்.

இச்செய்தி பரவிவிட்டது. கும்பினிச் சேவகர்கள் இதனைக் கேட்டு ஓடிவந்து அந்த அம்மாளையும் குழந்தைகளையும் பிடித்துக்கொண்டார்கள். அவர்களை ஜாக்கிரதையாகப் பாளையங்கோட்டைக்குக் கொண்டுபோய்ச் சிறையில் இட்டார்கள்.

பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக்காரரைச் சேர்ந்தவர்களில் தூக்குப் போட்டவர்களையும், தீவாந்தர சிட்சை விதித்தவர்களையும் தவிர, கலகத்தில் சம்பந்தப்பட்டவர்களைக் கும்பினியார் மன்னித்து விட்டார்கள். அவர்கள் தாங்களாகக் கலகத்தில் சேராமல் பிறருடைய தூண்டுதலாலேயே சேர்ந்தனர் என்று தீர்மானித்தே அவ்

விதம் மன்னிப்பு அளித்தனர். அன்றியும், அங்ஙனம் மன்னித்ததால் மக்களுக்குக் கும்பினியார் பெருந்தன்மை விளங்கு மல்லவா ?

பாஞ்சாலங் குறிச்சியாருக்கு விரோதமாகக் கும்பினியாருடன் சேர்ந்துகொண்டு உதவி அளித்தவர்களுக்கும், பாஞ்சாலங் குறிச்சியாருடன் சேராமல் தனியாக நின்றவர்களுக்கும் கும்பினியார் பல வெகுமதிகளை அளித்தனர்.

கும்பினியார் பாஞ்சாலங் குறிச்சியை அழிக்கப் பெரும் படை திரட்டிப் போர் செய்து ஏராளமான பொருளைச் செலவு செய்தும், போரில் கைப்பற்றிய அந்தப் பாளையத்தைத் தாங்களே வைத்துக்கொள்ள விரும்பவில்லை. அவ்விதம் செய்தால், அது நாட்டு மக்களிடையே நல்ல எண்ணத்தை உண்டாக்காது என்று எண்ணினர் போலும்,

இந்தப் போரில் கும்பினியாருக்குப் பக்க பலமாக இருந்த எட்டையபுரத்தாருக்குப் பாஞ்சாலங் குறிச்சிப் பாளையத்தின் பெரும் பகுதியை வழங்கினர் கும்பினியார். பாஞ்சாலங் குறிச்சியாருடைய ஜாதியினரா யிருந்தும் அவருடன் சேராமல் தனித்து நின்ற பக்கத்துப் பாளையக்காரரான மணியாச்சியாருக்கு மற்றப் பகுதியை வழங்கினர். மணியாச்சியார் கலகங்கள் நடக்கும்பொழுது வெளியில் இருந்தால் பாஞ்சாலங் குறிச்சியாரால் உபத்திரவம் நேரிடுமோ வெனப் பயந்து பாளையங்கோட்டையில் கும்பினியாரின் ஆதரவில் இருந்து வந்தனர். அதேபோல மேலமாந்தைப் பாளையக்காரர் கலகக் காலத்தில் நாட்டைத் துறந்து ராமநாதபுரம் சென்று மறைந்திருந்தனர். அவருக்குக் கும்பினியார் பறிமுதல் செய்யப்பட்ட காடல்குடி, குளத்தூர்ப் பாளையங்களின் பகுதிகளை வழங்கினர்.

இதற்கிடையில், 1799-ஆம் ஆண்டில் கும்பினியார் மைசூரில் உள்ள ஸ்ரீரங்கப்பட்டணத்தில் நடத்திய போரில் திப்பு சுல்தான் இறந்த பிறகு அந்தக் கோட்டையைப் பிடித்து உள் நுழைந்து பார்த்த காலத்தில் திப்பு சுல்தானும் ஆர்க்காட்டு நவாபும் ஒன்றுசேர்ந்து கும்பினியாருக்கு விரோதமாகச் செய்துகொண்டிருந்த ஏற்பாடுகள் வெளியாயின. கும்பினியார் அதைப்பற்றிய விசாரணையை நடத்துவதற்குள் நவாபு இறந்துவிட்டார். அவருக்குப் பின் பட்டத்துக்கு வந்தவர் தாங்கள் விதித்த நிபந்தனைகளுக்கு இணங்க மறுத்தமையால், கும்பினியார் அவரை நீக்கி நாட்டை இளைய பரம்பரைக்குக் கொடுத்துவிட்டார்கள். 1801-ஆம் வருஷம் ஜூலை மாதம் 31-ஆம் தேதி புதிய நவாபு கும்பினியாருடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி அவர் கர்நாடகத்தைச் சேர்ந்த நாடுகளின் நிர்வாகத்தைச் சாசுவதமாகக் கும்பினியாருக்கு அளித்துவிட்டார்.

இவ்விதம் பெயரளவிலாவது இருந்த நவாபின் மேலதிகாரம் போய்த் திருநெல்வேலிச் சீமையின் நிர்வாகம் முழுவதும் கும்பினியாரிடம் வந்துவிட்டது. இது சிவத்தையாவும் ஊமைத்துரையும் பிடிபட்டுத் தூக்கில் இடப்படுவதற்கு முன்னமேயே நடந்ததாகும்.

கலகக்காரர்கள் யாவரும் பிடிபட்ட பிறகு நாட்டில் அமைதி ஏற்படுத்தவேண்டிய முயற்சிகளைக் கைக்கொண்டனர் கும்பினியார். பாளையக்காரர்கள் செய்யவேண்டிய காவல் வேலையைச் சர்க்காரே மேற்கொண்டார்கள். அதனால் அவர்கள் தனியாகச் சைனியத்தை வைத்துக் கொள்ள வேண்டியதில்லை யென்றும், ஆகவே கோட்டைகளை இடித்துவிடுவதுடன் தங்கள் ஆயுதங்களையும் மூன்று மாத காலத்திற்குள் சர்க்காரிடம் ஒப்படைத்துவிடவேண்டும் என்றும் பிரகடனம் வெளியிட்டனர். அவ்

விதம் ஆயுதங்களை ஒப்படைப்பவர்களுக்கு நஷ்டம் உண்டாகாதபடி ஆயுதங்களுக்குத் தக்கபடி பணம் கொடுக்கப்படும் என்றும், அப்படிச் செய்யாமல் ஆயுதங்களை மறைத்து வைத்திருப்பவர்களுக்குத் தீவாந்தர சிட்சை உள்படத் தக்க தண்டனை விதிக்கப்படும்என்றும் தெரிவித்தார்கள். மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்களைக் காட்டிக் கொடுப்பவர்களுக்கும் அவற்றிற்கு உள்ள மதிப்புத் தொகை கொடுக்கப்படும் என்றும் வெளியிட்டனர்.

இவ்விதம் ஒரு காலத்தில் பாளையக்காரர்களாக இருந்தவர்கள் இப்பொழுது ஜமீன்தார்களாக மாறிவிட்டார்கள்.

செக்காரக்குடியிலிருந்து கும்பினியார் சிறைபிடித்துச் சென்ற பெண்மணி ஊமைத் துரையின் மனைவி என்பதும் அந்தக் குழந்தைகள் அவருடைய குழந்தைகள் என்பதும் பிறகு தெரியவந்தன. பாளையங் கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த அவர்கள் கொஞ்ச காலம் கழிந்த பிறகு திருச்சிராப்பள்ளிக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். அந்தக் குழந்தைகளுக்குக் கும்பினியாரின் செலவிலேயே கலியாணங்கள் நடந்தன.

அவர்களுடைய வமிசத்தினர் இப்பொழுது செக்காரக்குடியில் தெற்கு அரண்மனை, வடக்கு அரண்மனை எனப்படும் கட்டிடங்களில் வாழ்ந்து வருகின்றனர். சர்க்கார் அவ்வமிசத்தினருக்கு இன்றைக்கும் நன்கொடை (பென்ஷன்) அளித்து வருகிறார்கள். அவர்தாம் தொக்கலவார் வகுப்புக்குத் தலைவராக விளங்குகிறார். அந்த ஜாதியினரும் அவருக்கு அரசருக்குரிய மரியாதையைச் செலுத்தி வருகிறார்கள். அவ்வகுப்பினர் இருக்கும் இடங்களுக்கு அவர் வருஷந்தோறும் பல்லக்கில் ஏறிச் சென்று பார்த்து விட்டு வருவார். அவ்வகுப்பினருக்குள் ஏற்படும் சண்டை

களெல்லாம் அவருடைய மத்தியஸ்தத்துக்கே இன்றைக்கும் செல்கின்றன.

அவ் வமிசத்தவர்களுள் மூத்தவரைக் கட்டபொம்மு என்றும், இளையவரை ஊமைத்துரை என்றும் இன்றைக்கும் வழங்கி வருகிறார்கள்.

கட்டபொம்மு கழுத்தையாவைத் தூக்குப்போட்ட கட்டைப் புளிய மரம் இப்பொழுது இல்லை ; பட்டுப்போய் விட்டது. ஆயினும் மக்கள் அந்த இடத்தை இன்றைக்கும் காட்டி வருகிறார்கள். அந்த இடம் கயத்தாற்றுக்கு வடக்கே முக்கால் மைல் தூரத்தில் சாலைக்கு இடதுகைப் புறமாக இருக்கிறது. அந்தச் சாலை மங்கம்மாள் சாலை என்ற பெயருடன் வழங்கப்பெறும் பெரிய ரஸ்தா. அவ்விடத்தில் பெரியனவும் சிறியனவுமாகக் கற்கள் மலை போலக் குவிந்திருக்கின்றன. அந்த வழியாகப் போவோர் வருவோர் யாவரும் ஒவ்வொரு கல்லை யெடுத்து அந்தக் குவியலில் போட்டு வணங்கிவிட்டுப் போவார்கள். அவ்விதம் சேர்ந்ததே அந்தக் குவியல். இவ்வாறே ஊமைத்துரை தூக்குப்போடப்பட்ட இடத்திலும் கற்குவியல் காணப்படுகின்றது. அது குலையநல்லூருக்கு வடபாரிசமுள்ள பரம்புக்குத் தென்சரிவில் கயத்தாற்றிலிருந்து ஓட்டப் பிடாரத்துக்குப் போகும் வழியிலுள்ளது. எதற்காக மக்கள் அவ்விதம் கல்லைப் பொறுக்கிப் போட்டுவிட்டுப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. ஆயினும் கட்டபொம்முவை அந்நாட்டு ஜனங்கள், மதுரை வீரன், சங்கிலிக் கறுப்பன் என்பவர்களைப் போன்று ஒரு தெய்வமாகவே கருதி வருகிறார்கள் என்பது நன்கு விளங்குகின்றது.

கட்டபொம்முவின் உறவினர் வருஷந்தோறும் அவ்விடம் சென்று வழிபாடு நடத்தி வருகின்றனர் என்றும் தெரிய வருகிறது. சிறு தேவதைகளுக்கு இடப்படுவதைப்போல அந்த இடத்தில் 'படையல்களும்' படைக்கிறார்கள். மக்கள் தங்களுடைய நோய், குழந்தைகளின் அரிஷ்டம் முதலியன நீங்குவதற்கு அவ்விடம் பிரார்த்தனை செலுத்துகிறார்கள்.